


# கே.டானியல்

# நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. டானியல் நினைவு மலர்

**சமர்ப்பணம்**

கடந்த வருடம் தன் இயங்குதலை
நிறுத்திக்கொண்ட தோழர்
கு. சிவராசாவுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு: செப்டம்பர் 2003

**பதிப்பாசிரியர் குழு:**

சி. பாலசுப்பிரமணியம்
மார்க்
தருமராசா
சிவம்

**தொடர்புகட்கு**
99, Gennala Square
Scarborough Ontario
Canada - M1V 5M7
**Tel: 416-724-6169**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே. டானியல்

| | |
|---|---|
| மக்களுக்காக | 1927 பங்குனி 25 |
| மண்ணுடன் | 1986 பங்குனி 23 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்புகுமுன்...

இலங்கை மண்ணின் வட புலத்தில் நிலவிவந்த சாதியக் கொடுமைகளுக்கெதிராகப் பல்வேறு போராட்டங்கள் காலத்துக்குக் காலம் நடைபெற்று வந்துள்ளன.

*1966* ஒக்டோபர் *21*ந் திகதி பொலிஸ் தடையை மீறிய ஊர்வலத்துடனும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் என். சண்முகதாசன் அவர்களின் போராட்ட அறைகூவலுடன் கூடிய பொதுக்கூட்டத்துடனும் ஆரம்பமான வெகுஜன இயக்கப் போராட்டமானது சாதிய அடக்குமுறையின் ஆணிவேரையே ஆட்டம் காண வைத்தது யாவரும் அறிந்ததே.

இப்போராட்ட வரலாற்றை, ஆய்வுகளை முறையான முறையில் ஆவணப்படுத்தலே இம்மலரின் முக்கிய நோக்கமாகும்.

நாம் எண்ணியபடி பேராசிரியர் கா. சிவத்தம்பி டாக்டர் நந்தி, டொமினிக்ஜீவா, பேராசிரியர் நு்.மான், பேராசிரியர்கள் திரு./திருமதி சண்முகதாஸ், திரு./திருமதி மௌனகுரு, சமுத்திரன் போன்றோரிடமும் இந்தியாவில் கே. டானியலின் மிக நெருங்கிய நண்பர்களான பேராசிரியர் அ. மாக்ஸ், பொதுகைவெற்பன் போன்றவர்களிடம் இருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் பெற முடியாததையிட்டு மிகவும் மனவருத்தமடைகின்றோம்.

இத்தொகுப்பினை நாம் தொகுக்கும்போது பல சிக்கல்களை எதிர்நோக்கினோம். தொகுப்பாளரிடையே கருத்தியல் விவாதங்கள் நடைபெற்றன. கே. டானியல் அவர்களின் இலக்கியம் பற்றி ஒரு கட்டுரை வினா தொடுத்தால் மறு கட்டுரை பதில் இறுக்கின்றது.

இவ்வகையான சூழலில் நாம் வாசகர்களையே சரியான ஆய்வாளர்களாகக் கருதிக் கட்டுரைகளை முழுமையாகவே பதிவு செய்துள்ளோம்.

இலங்கையிலிருந்து பல சிரமங்களின் மத்தியில் எமக்குத் தமது ஆய்வுகளை அனுப்பிய அனைவருக்கும், கட்டுரைகளைப் பெற உதவிய நண்பர் வி. தனபாலசிங்கத்திற்கும் எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவிலிருந்து கட்டுரைகள் கவிதைகள் தந்துவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

இம்மலரினை வெளியிட பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த திரு. வி. சிவபாலு M.A. அவர்கட்கும் தட்டச்சுச் செய்து உதவிய க. கௌசலா அவர்கட்கும் தட்டச்சுச் செய்ததுடன் புத்தகத்தை அழகுற வடிவமைத்த நண்பர் சங்கர் அவர்கட்கும் மலரின் அட்டையை வடிவமைத்த சவுந்தர் அவர்கட்கும் அழகுற அச்சிட்ட Blue Line அச்சகத்தார்க்கும் எமது நன்றிகள்.

எமக்குத் தேவைப்பட்ட உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய திரு. பிரேம்ஜி அவர்கட்கும் கே. டானியல் அவர்களின் குட்டிக்கதைகளைத் தொகுத்தும், மலருக்கான நிதி சேகரிப்பிலும், மலர் வடிவமைப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கிய K.P. லிங்கம் அவர்கட்கும் எமது நன்றிகள்.

கடந்த இரு மாதங்களாக எமது செய்திகளை விளம்பரப்படுத்திய முழக்கம் பத்திரிகைக்கும், தனது பல வேலைகளின் மத்தியிலும் எமக்கு அவசியமான பல்வேறு உதவிகளையும் செய்தவரும் உதயன் பத்திரிகையில் எமது செய்திகளை வெளியிட்டவருமான உதயன் ஆசிரியர் R.N. லோகேந்திரலிங்கம் அவர்கட்கும்

எமது செய்திகளை வெளியிட்ட தமிழர் செந்தாமரை, ஈழமுரசு பத்திரிகைகட்கும்

எமக்குத் தேவையான விளம்பரங்களைச் செய்துதவிய T.V.I. வானொலி நிலையத்தவர்க்கும் எமது நன்றிகள்.

எந்தவிதமான விளம்பர இலாபநோக்கமுமின்றி முழுமனதோடு நிதி உதவி செய்த நிறுவனங்கட்கும், நண்பர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இறுதியாக சுதந்திரமாக இயங்க அனுமதித்த கே. டானியல் நினைவு விழாக் குழுவினர்க்கும், கே. டானியலின் குடும்பத்தவர்க்கும் எம்மை உற்சாகப்படுத்தி இம்மலரை வெளியிட ஊக்கப்படுத்திய அனைவருக்கும் எமது நன்றிகள்.

**சிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| இல. | விடயம் | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | புலம்பெயர் வாழ்வில் சாதியம் | சி. சிவசேகரம் | 1 |
| 2. | யாழ்ப்பாணச் சாதியக் கொடுமுடிச் சரித்திரத்தின் கண்ணாடி டானியல் | சூ. மார்க் | 9 |
| 3. | என்னைக் கவர்ந்த மனிதர் டானியல் | எம். ஏ. சி. இக்பால் | 28 |
| 4. | ஆறுமுகநாவலரும் சாதியமும் | செ. கணேசலிங்கம் | 34 |
| 5. | சாதியத்திற்கு எதிரான போராட்டங்களும் அவற்றின் வரலாற்றுப் படிப்பினைகளும் | சி. கா. செந்திவேல் | 40 |
| 6. | பஞ்சகோணங்கள் முன்னுரையில்.. | டானியல் | 55 |
| 7. | ஈழத்துச் சாதிய நூல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள் கானல், அடிமைகள் பற்றிய சில குறிப்புக்கள் | செ. யோகராசா | 65 |
| 8. | கானல் என்னும் நீரோடை | செ. கணேசலிங்கம் | 72 |
| 9. | டானியல் மீதொரு குற்றச்சாட்டு | தெணியான் | 78 |
| 10. | கே. டானியல் | கா. சிவத்தம்பி | 83 |
| 11. | கோவிந்தன் முன்னுரையில் | டானியல் | 86 |
| 12. | நல்ல மனிதத்தின் நாமம் டானியல் | வி.ரி. இளங்கோவன் | 91 |
| 13. | K. Daniel | N. Sanmugathasan | 96 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம் (தொடர்ச்சி)


| இல. | விடயம் | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|---|
| 14. | யதார்த்தம் அழைக்கும் படைப்பாளி டானியல் | கே. பி. லிங்கம் | 97 |
| 15. | எனது நினைவலைகளில் டானியல் | எம். சி. சுப்பிரமணியம் | 106 |
| 16. | சமூக ஒடுக்குமுறையையும் வர்க்கச் சுரண்டலையும் ஒழித்துக்கட்டும் ஒரே குறிக்கோளுடன் போராடிய சமூகப்போராளி, இலக்கியவாதி | பிரேம்ஜி | 109 |
| 17. | பிரபல முற்போக்கு எழுத்தாளர் கே. டானியல் | இ. திருநாவுக்கரசு | 116 |
| 18. | மக்களோடு வாழ்ந்த மாமனிதர் | க. கிருஷ்ணபிள்ளை | 123 |
| 19. | டானியல் ஒரு சமூகத்தின் வரலாறு | செ. திருநாவுக்கரசு | 125 |
| 20. | கே. டானியல் | க. கந்தசாமி | 130 |
| 21. | சாதியமும் கல்வியும் | செல்வா இலங்கையன் | 135 |
| 22. | ஆலய நுழைவுப் போராட்டங்களும் சாதியமும் | த. சிவபாலு | 149 |
| 23. | பறையும் தமிழும் | கே.பி. லிங்கம் | 158 |
| 24. | மாற்றமில்லை | கரு. டானியல் | 163 |
| 25. | சூலமும் காணியும் | கரு. டானியல் | 164 |
| 26. | கலியாணமும் கட்டாடியும் | கரு. டானியல் | 166 |
| 27. | கவிதை - வதிரி | கோவைநேசன் | 168 |
| 28. | மனிதநேயன் கே. டானியல் | த. சிவபாலு | 169 |
| 29. | 1952 முதல் நானறிந்த ஈழத்துச் சிறுகதை நாவல் எழுத்தாளர் கிறகரி டானியல் அவர்களின் எண்ண அலைகள் | ம. செல்வராசா | 171 |
| 30. | தீண்டாமை ஒழிப்பு இயக்கம் (அன்று முதல் இன்று வரை) | கே. டானியல் | 176 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் வாழ்வில் சாதியம்

**சா**தியத்தை நாங்கள் இரண்டு தளத்தில் அடையாளம் காணுகின்றோம். சாதியமைப்பு தென்னாசிய நிலமானிய சமூகத்தினின்று பிரித்துக் காணமுடியாது. அது நிலமானிய சமூகம் உருப்பெறுவதற்கு முன்னர் இருந்த வருணங்களிலிருந்து தோன்றியதா என்ற விடயம் கடுமையான விவாதத்திற்குரியதாகவே இருந்து வந்தது. சாதிமுறையின் மிகக் கொடுமையான அம்சமான தீண்டாமையை நியாயப்படுத்த வருணாச்சிரமக் கோட்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் சாதியமுறை வருணாச்சிரமத்திலிருந்தே தோன்றியதா என்பது இன்னொருவிடயம். தென்னிந்தியச் சாதியமைப்பைப் பிராமணர், ஆரியர் தான் தோற்றுவித்தனர் என்பது பற்றி மிகுந்த ஐயங்கள் உள்ளன. சாதிமுறைக்கும் தீண்டாமைக்கும் மத அடிப்படையிலான நியாயத்தை வழங்குவதிலும் கல்வி, மதம், சடங்குகள் போன்றன சமூக செயற்பாடுகளில் தம்மை உச்ச நிலையில் பேணுவதிலும் பிராமண சாதியினருக்குத் தம் நலன் சார்ந்த தேவைகள் இருந்தன. அதனால் அவர்கள் மூலமே சாதிமுறை தோற்றுவிக்கப்பட்டது என்பது ஒரு ஊகமே ஒழிய உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகாது.

மேற்கூறிய விதமாகச் சாதிமுறையின் தோற்றுவாயை ஆரியர் பிராமணர் எனப்படுவோரிடமே சேர்ப்பிப்பது, குறிப்பிட்ட சமூகங்கள் சிலவற்றில் உள்ள பிற ஒடுக்குகிற வர்க்கங்களினதும் அவை சார்ந்த சாதியினரின் மேல் அடுக்குகளதும் அரசியலுக்குக் குறிப்பாகத் தேசியவாத அரசியலுக்கு வசதியானது. பார்ப்பனியம் என்பதற்குள் சாதியம் முழுவதையும் அடக்க இயலுமா என்ற கேள்வி முக்கியமானது. சாதியம் பிராமணர் இல்லாத சமூகங்களிலும் (உதாரணமாகச் சிங்களத் தேசிய இனம்) பிராமணர் ஆதிக்க நிலையில் இல்லாத சமுதாயங்களிலும் (உதாரணமாக இலங்கைத் தமிழர்) ஆழ வேரூன்றி இருந்தது. இன்னமும் அதன் தொடர்ச்சி உள்ளது. இது பற்றிப் பின்னர் கவனிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமானியச் சமுதாயத்தில் சாதிகள் முற்றாக இல்லாவிடினும் பெருமளவிற்குச் சமுதாயத்தில் ஒருவரது பொருளியல் நிலையையோ உற்பத்திச் சாதனங்களுடன் உள்ள உறவையோ குறித்தன. கொலனியத்தின் வருகை, குறுகிய கால அளவில், நிலவுடைமை அதிகார வர்க்கத்தினதும் அதன் அரசுக்கும் எதிரான ஒரு சக்தியாக இருந்தாலும், காலப்போக்கில் கொலனியம் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டி நிலவுடமை வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டது. இதனாலேயே, ஒரு சமூகமாக தாழ்த்தப்பட்ட மக்களால் உயர்வுகாண முடியவில்லை. எனினும் சில விலக்குகள் இருந்தன. கிறிஸ்துவ மதமாற்றம் நாடார் சமூகத்தின் உயர்விக்கு உதவியது. ஆனாலும் அது சாதியச் சிந்தனையின் வேர்களைத் தொடவில்லை. தனிமனிதர்களாகவும் சமுதாய மேம்பாடு கண்டோர் இருந்தனர். நகரஞ் சார்ந்த வாழ்க்கைச் சூழல், குறிப்பாகப் பல்வேறு தேசிய இனங்களும், மதங்களும், அந்ர சமூக உறவுகளும் கொண்ட பெருநகரச் சூழல், ஒரு சிலரது சாதி அடையாளங்களையேனுங் கரைக்க உதவியது. அதே வேளை தமது சமுதாயத்திலுள்ள சாதியத்துக்கு எதிராகப் போர்க்கொடி ஏந்த இவர்களிற் சிலர் துணிந்தனர்.

குறிப்பிட்ட சிலரதோ, ஒரு சாதிப்பிரிவினரதோ சமுதாய மேம்படுகையால் மட்டுமே சாதியம் ஒழிந்துவிடாது என்பதற்கு இன்றும் பல உதாரணங்களைக் காணலாம். இன்றும் ஒரு சமயம் வசதிக்கு ஏற்பத் தங்கள் சாதியடையாளத்தை மறைக்கவும் இன்னொரு சமயம் அதை முதன்மைப்படுத்தித் 'தலித்தியக்' கொடி உயர்த்தவும் சிலர் முயல்வது. தனிமனிதக் கோளாறு என்பதற்கும் மேலாகச் சாதி வேறுபாடுகள் சமூகத்தில் இன்னமும் ஒரு முக்கியமான பங்கை ஆற்றுவதாலேயே, சமுதாய மேம்பாட்டைக் கெடுத்த தமது சமுதாயக் கீழ் நிலையை, முன்னர் அடையாளப்படுத்திய சாதி அடையாளத்தை மறைக்கும் தேவையைப் பலரிடம் காணலாம். இவ்விடத்து ஈ.வே.ரா சொன்ன ஒரு கருத்து சிந்திக்க உகந்தது. ஒரு பறையன் தன்னைப் பறையன் என்று பெருமையோடு சொல்லக்கூடிய நிலையில் தான் சாதியம் ஒழியமுடியும் என்பது அவர் கூறியதன் சாரம். இதை இன்னொருவிதமாகச் சொன்னால், ஒடுக்கப்பட்ட சாதியினர் பெருளாதார அடிப்படையிலும் உற்பத்தி உறவுகளில் தமது நிலைமை தொடர்பாகவும் மேம்பாடு எய்தும் வரை ஒடுக்குமுறையின் கருவியாகவோ காரணமாகவோ இல்லாவிட்டாலும் சாதி சமூக ஏற்றத் தாழ்வின் அடையாளமாகவேனும் இருந்தே தீரும்.

இலங்கையில் நடந்த சில சமூகச் சீர்திருத்தங்கள் சாதிசார்ந்த சமூக எற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு உதவின. இலவசக் கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழிக்கல்வி, சர்வசன வாக்குரிமை என்பன ஆற்றிய பங்கு புறக்கணிக்கத் தக்கதல்ல. ஆயினும் ஒடுக்கப்பட்ட மக்களது உரிமைப் போராட்டங்களின் பங்கு அனைத்திலும் முக்கியமானது. இவைபோக, முதலாளிய சமுதாய வளர்ச்சியும் நகரமயமாதலும் சாதியத்தின் சில அப்பட்டமான ஒடுக்கு முறை அம்சங்களுக்குக் குழி பறித்தன.

தென்னிலங்கையில் கொவிகம (வேளாளர்) ஆதிக்கம் மட்டுப்படுத்தப்பட்டதற்கு கராவ (மீனவர்), துராவ (கள் இறக்குவோர்), சலாகம் (டச்சுக்காரரால் தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சமூகத்தினர்), இன்னும் ஓரளவுக்கு வம்புர (சர்க்கரை உற்பத்திக்காரர்) போன்றோர் கல்வி, உத்தியோகம் வணிகம் ஆகிய துறைகளில் மேல் நிலை காணக் கொலனிய ஆட்சிச் சூழலில் தென் மேற்குக் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட சக்திகளும் மாற்றங்களும் உதவின. ஒரு சில சமூகங்கள் (குறிப்பாக பத்கம) இன்றும் ஒப்பிடுகையில் பின்தங்கியே உள்ளன.

தென் இலங்கையில் தீண்டாமை என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையில் சமூக ஏற்றத்தாழ்வு இன்று இல்லை எனலாம். (நாடோடிகளும் சமூகத்தின் ஒருபகுதியாக இல்லாத அயலார் போலவே கருதப்படுகின்றனர்). எனினும் இவ்விடயத்தில், முழுத் தென்னிலங்கையிலும் ஒரே வேகத்தில் மாற்றங்கள் நிகழவில்லை.

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை, மட்டக்களப்பில் வேளாளர் ஆதிக்கம் இல்லாமைக்கு அங்கு அவர்கள் பெரும்பான்மையாக இல்லாமை ஒரு காரணம் எனினும் முக்குவ, கரையார் சமூகங்களின் சமூக மேம்பாட்டின் பங்கு பெரியது. யாழ்பாணத்தோடு ஒப்பிடத்தக்க அளவில் இல்லாவிட்டாலும் சாதி ஏற்றத்தாழ்வுகள் அங்கும் உள்ளன. வன்னி நிலவரங்களும் யாழ்ப்பாண நிலைமைகளை விட வேறுபட்டவை. யாழ்ப்பாணத்துச் சாதி அமைப்பின் பண்புகள் காணப்படும் திருகோணமலையில் சாதி உணர்வுகள் இருந்து வந்தாலும் சாதிய ஒடுக்குமுறை பலவீனப்படுவதற்குத் திருகோணமலை நகரம் துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருந்ததும் குடிவரவும் காரணமாகி ஏற்பட்ட மாற்றங்களும் முக்கிய பங்களித்ததாகவே கொள்ளவேண்டும்.

யாழ்பாணச் சாதிமுறையைச் சிதைப்பதற்கு மாறாக அதை மேலும் இறுக்கமாக்குவதற்கே டச்சு, பிரித்தானிய கொலனிய ஆட்சிகள் உதவின. இதை இந்தியாவின் சில மாநிலங்களிற் பிரித்தானிய கொலனிய ஆட்சியாளர் பிராமணரது ஆதிக்கத்திற்கு உதவியதுடன் ஒப்பிடலாம். எனினும், யாழ்ப்பாணத்துச் சமூகப் பொருளாதார அடிப்படை, அரசாங்க உத்தியோகம், குடாநாட்டுக்கு வெளியிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகம் போன்றன சார்ந்து (மணிஓடர் பொருளாதாரம் என்று குறிப்பிடும் நிலையில்) இருந்தபோதும், சாதி ஒடுக்கு முறையின் தீவிரம் தமிழகத்தில் நிலமானிய உற்பத்தி முறையின் கீழ் இயங்கிய விவசாயப் பகுதிகளை ஒத்த நிலையில் இருந்ததை நாம் புறக்கணிக்க முடியாது.

மேற்கூறியவற்றின் பின்னணியில் நோக்கினால் நாம் சில விடயங்களைக் காணலாம்.

1. சாதியமைப்பு தென்னாசிய நிலமானிய சமூகத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாக இருந்து அரை முதலாளிய-அரை நிலமானிய சமுதாயமாக மாறிய சூழலிலும் தொடர்ந்து வந்துள்ளது.
2. சாதி ஒடுக்குமுறையின் உக்கிரம், உற்பத்தி முறையிலும், உற்பத்தி உறவுகளிலும் ஏற்பட்ட மாறுதல்களை ஒட்டி வேறுபடும் அளவுகளில் தளர்ந்துள்ளது.
3. எவ்வாறாயினும் நிலமானிய உற்பத்தி உறவுகள் போன பின்னரும் சாதி ஒரு முக்கியமான சமூக அடையாளமாக இன்னமும் தொடர்கிறது.

சாதி முறையின் தொடர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கும் முக்கிய சமூகக் காரணி அக மணமுறையாகும். உறவுக்குள் திருமணம் என்ற வழமை அகமணமுறையை எளிதாகவே வலுப்படுத்துகிறது. பொருள் சார்ந்த ஏற்றத்தாழ்வுகளும் சாதி ஏற்றத்தாழ்வுகளும் நினைவுக்கு எட்டிய கால எல்லைக்குள் ஏறத்தாழ ஒரே வகையான அடுக்குகளாக இருந்தமை அந்த ஒற்றுமை தளர்ந்த பின்னரும் சாதி கடந்த மண உறவுகட்குப் பாதகமாகவே இருந்தது. சாதிப் பகைமைகள், சமூக ஏற்றத் தாழ்வின் அடிப்படையிலும் அதை மீறியும், சாதிக்கு வெளியே மணமுடிப்பதற்குப் பகைமையாகவே இருந்துள்ளன.

சாதிமுறையைப் பேணுவதற்கு முக்கியமான கருவியாக இருந்த அகமணமுறை, சாதி முறைக்கு நியாயமோ தேவையோ இல்லாத நகரச் சூழலிலும் சாதியை வலிந்து பேணுவதற்கான ஒரு நிர்ப்பந்தமாக இயங்குகிறது. இங்கே சாதி ஒரு அடையாளமாக, மதம், மொழி என்பனவற்றுக்குச் சமதையான நிலையில், சில சமயம் அவற்றை விட முக்கியமாகவும், செயற்படுகிறது எனலாம். மனித அடையாளங்கள் முற்றிலும் தர்க்க ரீதியான அடிப்படையில் பேணப்படுவன அல்ல. அச்சம், பாதுகாப்பின்மை போன்றன சில அடையாளங்களை மிகையாக முக்கியப்படுத்துகின்றன. இதை மதம் தொடர்பாக நாம் ஐரோப்பாவிற் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்லாந்தில் கத்தோலிக்க-புரட்டஸ்தாந்து மோதலில், மத நம்பிகைகளை விடப் பேரளவில் வழங்கப்பட்ட மத அடையாளமே முரண்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது போலவே, முன்னைய யூகோஸ்லாவியாவில் கோவிலுக்கோ பள்ளிவாசலுக்கோ தொழுவதற்குப் போகாத கிறிஸ்துவ, முஸ்லிம் சமூகத்தினர் நடுவே மோதல்கள் நடந்ததை நாம் அறிவோம், சாதி அடையாளத்தையும் இந்த அடிப்படையில் நோக்குவது பயனுள்ளது.

நிலவுடமைச் சமுதாயத்திலும் அரை நிலவுடைமைப் பண்புள்ள சமுதாயத்திலும் சாதியம் சுரண்டல் முறைக்கு அவசிமான ஒரு அம்சமாக இருந்தது. அகமணமுறை சமுதாய ஏற்றத்தாழ்வைப் பேண அவசியமாயிருந்தது. தீண்டாமை சமூக ஒடுக்குமுறையின் இன்னொரு அம்சமாக இருந்தது. அந்தச் சமூகச் சூழலிலிருந்து அந்தச் சாதி அடையாளங்களுக்கு எதுவிதமான பெறுமதியும் அற்ற ஒரு நகரத்துக்குப் பெயர்ந்த பின்பும் சாதி ஒரு அடையாளமாகத் தொடர்கிறது என்றால் அப்பெயர்வு நாட்டுக்கு வெளியே புலப் பெயர்ச்சியாகி, அகதியாகப் புலம்பெயர்ந்தாலும், தொடரமாட்டாது என்று எதிர்பார்க்க நியாயமில்லை. இலங்கை மண்ணில், கொழும்பிலாயினும் யாழ்பாணத்துக் கிராமத்திலாயினும் அகதி முகாமுக்குள் சாதியமும் தீண்டாமையும் பேணுகிற ஒரு மனித நிலை. அதுவே அகதி வாழ்வு ஆறாயிரம் மைலுக்கு அப்பால் நிகழும் போது செயற்படாமல் இருக்குமா? இன்றைவரைக்கும் தமிழ்த் தேசியவாதத்தால் முழுமையாக முகங்கொடுக்க இயலாத பிரச்சினையாகச் சாதியம் இருப்பதற்குக் காரணம், தமிழ்ச் சமூகத்துக்கு உள்ளே இருக்கிற ஒடுக்குமுறைகளை மழுப்பியே இதுவரை தமிழ்த் தேசியம் தன்னை நிலைநிறுத்தி வந்துள்ளது என்பேன்.

புலம் பெயர் சூழல் சாதிக்கு அர்த்தமில்லை என்ற வாதம் தர்க்க ரீதியாக ஏற்கக்கூடியது. அப்படியானால் நாட்டை விட்டு நிரந் தமாகவே புலம்பெயர்ந்தோரிடையே தொடரும் தேசிய உணர்வும் அர்த்தமற்றதாகாதா? அடையாளம் பேணல் என்று வரும்போது நமது புலம் பெயர்ந்த தமிழச் சமூகம் பேணுகிற அடையாளம் எத்தன்மையானது. இன்று சாதி எல்லைகளைக் கடந்து, உண்மையில் நம்முடையதல்லாத, எத்தனை பண்பாட்டு அடையாளங்கள் பேணப்படுகின்றன? இன்று நடக்கின்ற அரங்கேற்றங்கள் முதலாகத் திருமணச்சடங்குகள் வரை எந்தப் பண்பாட்டு அடையாளத்தை வலியுறுத்துகின்றன? கோவில்கள் வணிக நோக்கிலேயே உருவாக்கப்பட்டு வந்தாலும், அவற்றின் பெருக்கம் எதைக்குறிக்கிறது? அங்கு நடக்கும் வழிபாட்டு முறைகளும் சடங்காசாரங்களும் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களை முன் நிறுத்துகின்றன? இந்தக் கேள்வி, உயர் சாதியினர் என்று சொல்லப்பட்ட தமிழரை விடவும், இந்த வழிபாட்டு முறைகளை ஏற்காதோரைக் குறித்துக் கேட்கப்படுவது முக்கியமானது.

சாதி அடையாளத்துடன் ஒட்டி இருந்துவந்த சமய, வழிபாட்டு, சமூக வழக்க அடையாளங்கள் சமூக ஏற்றத்தாழ்வின் அடையாளமாகவுமே, இருந்து வந்தன. தனது சாதி அடையாளத்தைத் 'தாழ்ந்ததாக' எண்ணும் ஒருவர் தனது சமூக மேம்பாட்டுக்கு அந்த அடையாளத்தை அழிப்பது அவசியம் என எண்ணுகிறார். ஒவ்வொரு சமூக எற்றத்தாழ்வு தொடர்பாகவும் இந்த விதமான நடத்தையை நாம் காணலாம். ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமோ சமூகப்பிரிவோ எந்த விழுமியங்ளை வலியுறுத்தி எந்த விதமான சமூக நடத்தைகளை அங்கீகரிக்கின்றனவோ அவை ஆதிக்கத்திற்குட்பட்ட வர்க்கங்களாலும், சமூகப்பிரிவுகளாலும் எவ்வாறோ ஏற்கப்படுகின்றன. இதற்கு மாறான நிலை போராட்டச் சூழலில் மட்டுமே காணக்கூடியது. மாற்றுக் கலாசாரமோ எதிர்ப்புக் கலை இலக்கியங்களோ அவற்றையொட்டிய போராட்டமொன்றின் பகுதியாக அமையலாமல்லாது, அதற்குப் புறம்பானவையாக அமைய இயலாது.

புலம் பெயர்ந்த சூழலில் சாதி அடையாளம் பேணப்படுவதற்கான பொருளியல் அடிப்படை கிடையாது. ஆயினும் புலப்பெயர்வுக்கு முன்னர் தீர்ககப்படாமலிருந்த ஒரு சமூக முரண்பாடு புலப் பெயர்வால் தீர்வதற்கான சூழ்நிலைகள் இருந்தனவா என்பதையே நாம் முதலிற் கவனிக்க வேண்டும். இனவாத வன்முறை காரணமாக அல்லது இராணுவத் தாக்குதலின் பின் விளைவாக உள்ளூர் அகதி முகாம்களில் ஒன்றாகத் தங்கும் நிர்ப்பந்தத்தையே சகித்துக் கொள்ள இயலாத மன நிலை நாம் அறிந்ததே. ஐரோப்பிய நாடுகட்கும் கனடாவுக்கும் கடந்த புலப்பெயர்வில் கணிசமான பகுதி உறவினர் நண்பர்களது ஆதரவின் பேரில் நடைபெற்றது. இன்னமும் அவ்வாறே நடைபெறுகிறது.

புலம் பெயர்ந்து வாழும் சூழலின் பகுதியாகத் தம்மை முற்றாக அடையாளப்படுத்திக்கொள்ள இயலாததன் காரணமாகப் பேணப்படும் சமூக அடையாளம் மொழி, மதம், குறிப்பான சில பண்பாட்டுக் கூறுகள் என்ற வரையறைக்குள் நிற்பதில்லை. அவை சார்ந்த வேறு விழுமியங்களையும் சேர்த்தே அவை இயங்குகின்றன. பண்பாட்டு விழுமியங்களின் ஆதிக்கம், சாதியம், மூடநம்பிக்கைகள் போன்றனவும் சேர்ந்தே இருக்கின்றன.

புலம் பெயர் சூழலில் பெரும்பான்மைச் சமூகத்தால் ஏற்கப்படாத நிலையில் முக்கியமாகும் அடையாளம், ஒரு வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாக மட்டுமன்றி அதற்குள் ஒரு சமூகமேம்பாட்டையும், அது எவ்வளவு வெறுமையானதாகவும் அர்த்தமற்றதாகவும் இருந்தாலும் புகுத்த முற்படுகிறது. இதற்குச் சாதியை விடப் பொருத்தமான ஒன்று இருக்க முடியாது. உழைப்பாலோ, தகுதியாலோ பெற இயலாத ஒரு மேம்பாட்டைச் சாதி அடையாளம் வழங்குகிறது. புலம் பெயர் சூழலில் அதன் பெறுமதி சொந்த மண்ணில் மங்கிக்கொண்டு போகின்ற பெறுமதியின் அற்ப அளவுகூட இல்லாவிட்டாலும் ஒரு தாழ்வு மனப்பான்மையால் நிறைவு செய்ய அது உதவுகிறது. வயிற்றுப் பிழைப்புக்காக விபச்சாரத்தில் ஈடுபடுகிற ஒரு பெண் தான் நல்ல குடும்பத்திற் பிறந்தது பற்றிப் பெருமை பேசுவது போன்ற ஒரு நிலையே இது.

புலம்பெயர்ந்த உயர்சாதியினரின் நடுவே சாதிபார்க்கும் நிலை பரிதாபத்துக்குரிய ஒன்றுதான். அதே வேளை இதைத் தம்மைப் புலம் பெயர்ந்த சமூகத்தின் தன்மைக்கும் ஆதிக்க நிலைக்கும் உயர்த்திக் கொள்ள விரும்புகிறவர்கள் சாதியச் சிந்தனையைப் பல வகைகளிலும் ஊக்குவிக்கின்றனர்.

மறுபுறம் இதே நெருக்கடிக்குப் புலம் பெயர்ந்த சமூகத்தின் தாழ்த்தப்பட்ட நிலை பரிதாபத்திற்குரிய ஒன்று தான். அதே வேளை இதைத் தம்மைப் புலம் பெயர்ந்த சமூகத்தின் தலைமைக்கும் ஆதிக்க நிலைக்கும் உயர்த்திக் கொள்ள விரும்புகிறவர்கள் சாதியச் சிந்தனை யைப் பலவகைகளிலும் ஊக்குவிக்கின்றனர்.

மறுபுறம் இதே நெருக்கடிக்குப் புலம்பெயர்ந்த சமூகத்தின் தாழ்த் தப்பட்ட சாதியினர் இப்பிரச்சனைக்கு எவ்விதம் முகங்கொடுக்க முற்படுகின்றனர் என்பது கவனத்துக்குரியது. எந்த விழுமியங்களின் அடிப்படையில் சாதியமும் சாதி அடிப்படையிலான ஒடுக்கு முறையும் இயலுமானதோ அவற்றை அவர்கள் நாடுகின்றனர். பாரப்பனியச் சமயச் சடங்குகள் மூலமும் 'உயர்சாதியினரது' புதிய சமூக வழக்கங்களைத் தமதாக்குவதிலும் அவர்கள் தமக்குள் மனநிறைவு காணுமளவுக்கு, உயர் சாதியினர் எனப்படுவோரின் பகுதியாக இயலுவதில்லை. அகமணமுறை இன்னொரு தலைமுறைக்காவது தொடரக்கூடிய நிலையில் சாதியச் சுவரைத் தகர்ப்பது உடனடியாக நிகழக் கூடியதல்ல. மேலை நாட்டுப் பண்பாட்டை ஏற்பதால் கறுப்பர்கள் வெள்ளையராகாமல் எது தடுக்கிறதோ அதுவே 'உயர்சாதிப்' பண்பாட்டை ஏற்பதன் மூலம் 'உயர்சாதியினர்' அல்லாதவர்களது அங்கீகாரத்துக்கும் தடையாக உள்ளது. தமிழ்த் தேசியவாதமோ தமிழீழ இன அடையாளமோ சாதிய பிரதேசியச் சுவர்களைத் தகர்க்க முடியாது இருப்பதற்கு கடந்த ஒரு நூற்றாண்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாகவே இருந்து வரும் வர்க்க அடிப்படை முக்கியமான காரணமாகும்.

சமகாலத்தில், தலித்தியமோ தலித் அடையாளமோ தம்மளவில் தாழ்த்தப்பட்ட சாதியினரது சமூக உயர்வுக்கோ தமிழ் இன அடையாளம் ஒன்றில் சாதி வேறுபாடற்ற சமத்துவத்துக்கோ வழி வகுக்கும் என்பது வெறும் கனவேயாகும். தமிழ் இன அடையாளத்துக்குள் மனித சமத்துவச் சிந்தனையும் சமூக நீதி பற்றிய உயர்வும் இல்லாமல் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைச் சமூக விடுதலையுடன் சேர்த்துக் கருதும் தன்மையும் விருத்தியடையாத வரை புலப் பெயர்வினூடும் தமிழ்ச் சமூகம் ஒரு பிளவுபட்ட சமூகமாகவே இருக்கும்.

மறுபுறம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் சாதி ஏற்றத்தாழ்வுகளும் நேரடியான உறவற்றவையாக அமைகிற ஒரு சூழ்நிலையிலும் புலம் பெயர்ந்த சமுதாயத்தைச் சூழ நடக்கின்றவை சாதி அடையாளத்தின் உயர்வு தாழ்வுப் பரிமாணத்தைச் சிதைத்துவிடும். ஆயினும் ஒரு சமூகப்பிரிவு என்ற அடிப்படையிலான வேறுபாடுகள் தொடர்வதும் தொடராததும் தமிழ்ப்பண்பாட்டு அடையாளம் எவ்வாறு பேணப்படுகிறது என்பதிலேயே தங்கியிருக்கும், அதற்கும் மேலாக, அடுத்த தலைமுறை இன்றைய தலைமுறை வலியுறுத்தும் அதே விழுமியங்களை எவ்வளவு தூரத்திற்குப் பேணும் என்பதும் கவனத்துக்குரியது.

புலம் பெயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் முன் உள்ள கேள்வி ஏதெனில் அது விரும்பியோ விரும்பாமலோ அந்நியர், கறுப்பர் என்ற விதமான அடையாளங்களைச் சுமக்கத்தான் போகிறது. ஆயினும் அந்த அடையாள வகைகட்குள் தமிழர் என்ற பொது அடையாளத்தை அது பேணுமா அல்லது சாதிகளாகச் சிதறிக் கிடக்கப் போகிறதா என்பதே.

முன்னைய தெரிவு சாதி வேறுபாடுகளின் தகர்வுடன் நெருங்கிய தொடர்புடையது. அதன் இன்னொரு பயனுள்ள அம்சம், பிற புலம் பெயர்ந்த, நிற அடிப்படையில் ஒடுக்கபட்ட சமூகங்களுடன் ஐக்கியத்தைப் பேணுவதற்குத் தமிழ்ச் சமூகத்தை அது பக்குவப்படுத்தும்.

**பேராசிரியர் சி. சிவசேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சாதியக் கொடுமுடிச் சரித்திரத்தில் கன்னாடி டானியல்

## வரலாற்று உந்து சக்தி- பிரதான முரண்பாடு எது?

மறைந்த கே. டானியல் வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டு சமூக வரலாற்றிலே தடம் பதித்துச் சென்ற பாடங்கள் அளப்பரியது. உலகெங்கிலுமுள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் ஆளும் கொடுங்கோல் சர்வாதிகார வர்க்கத்திற்கு எதிராக சரித்திரமிக்க பல விடுதலைப் போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டனர். நாடுகள் பல காலணி ஆதிக்கத்திலிருந்து தன்னாதிக்கம் பெற்றன. ஆண்டான்-அடிமை, முதலாளி-தொழிலாளி, பணக்காரன்-ஏழை போன்ற ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமுதாயங்கள் பல நாடுகளில் உதித்தன. சுரண்டலற்ற, சமதர்ம, பொதுவுடமைச் சமூக அமைப்புகள் உலகின் மூன்றில் இரண்டு பகுதிகளில் உதயமாகின. அகிலமெங்குமுள்ள அதிகார ஆளும் வர்க்கம், தொழிலாள, விவசாய, பாட்டாளி மக்கள் புதிய சரித்திரம் படைக்கும் எழுச்சிகளையும், விடுதலைப் போராட்டங்களையும் கண்டு அஞ்சியது.

மனித சமூகத்தின் இயற்கையான இவ்வரலாற்றுப் போக்கை பின்னோக்கித் திசை திருப்பிவிட ஆளும் வர்க்கம் பல புதிய யுத்திகளைக் கையாளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். கொள்ளை இலாபமே மூச்சாக, மனிதத்தை காலால் மிதித்து, பாட்டாளி, தொழிலாளி, விவசாயிகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்த மிகச் சிறு எண்ணிக்கையிலுள்ள முதலாளிகளினதும் பல்தேசியக் கம்பனிகளின் நலனிலே மட்டும் அக்கறையுள்ள தனியுடமை முதலாளித்துவ சமுதாயத்தை கட்டிப் பாதுகாக்க உலகிலுள்ள ஆளும் வர்க்கம் வெறிகொண்டு செயல்பட்டது. இக்கொடூரப் போரை வழிநடத்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியமும் இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியமும் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கின. உழைக்கும் தொழிளாள விவசாய, பாட்டாள மக்களே மனித வரலாற்றுச் சக்கரத்தை நகர்த்தும் பிரமாக்கள் என்பதை மீண்டும் மீண்டும் சரித்திரம் நிருபித்தது.

அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து சமத்துவம், சமாதானம், சுதந்திரம் போன்றவற்றை பெரும்பான்மை மக்களுக்கு உறுதிசெய்ய பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்மிக்க பல அரசுகள் மக்கள் புரட்சியின் மூலம் கடந்த நூற்றாண்டில் நிறுவப்பட்டன. 1917ம் ஆண்டு லெனின் தலைமையில் அக்டோபர் புரட்சி உலகின் முதலாவது பொதுவுடமை அரசை நிறுவியது. பின்னர் மறைந்த தலைவர் மா.ஓ வின் வழிநடத்தலால் மக்கள் சீனப்புரட்சியும், தொடர்ந்து அன்வர் கோஷாவின் தலைமையில் அல்போனியாவும், பிடல் காஸ்ரோவின் தலைமையில் கியூபாவும், பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுகள் நிறுவப்பட்டன.

முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கத்தின் இலாபத்தை பெருப்பிப்பதற்காக சந்தையைத் தேடி ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க நாடுகளை காலணிகளாக்கி, அடிமைப்படுத்தி மூலவளங்களையும், மனித உழைப்பையும், மனித வளங்களையும் கொள்ளையிட்டனர். மூன்றாம் உலக நாடுகளை இராணுவ, பொருளாதார, அரசியல் ரீதியில் ஏகாதிபத்திய நாடுகள் நசுக்கி மனித நாகரீகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. உலகச் சந்தையை தங்களுக்குள் முதலாளித்துவ வல்லரசுகள் இணக்கமாக பகிர்ந்து கொள்ள முடியாமல் இருபெரும் உலக மகாயுத்தங்களைக் கட்டவிழ்த்து இலட்சோப இலட்ச மக்களையும் மூலவளங்களையும், செல்வத்தையும் அழித்தொழித்தனர். முதாலாளித்துவ வர்க்கம் தனது இலாபத்துக்காகச் சந்தையை விரிவு படுத்த மூன்றாம் உலகநாடுகளில் கொடும் யுத்தங்களையும் நிர்ப்பந்தங்களையும் தொடுத்தது. ஏகாதிபத்திய வல்லரசுகளின் நலனுக்குச் சாதகமற்ற நாடுகளில் ஜனநாயக மரபில் மக்களால் தெரிவு செய்யப்படட அரசுகள், சதிப்புரட்சிகள், இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மூலம் கவிழ்க்கப்பட்டன. மூன்றாம் உலக நாடுகளைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளையடிப்பதற்காக அந்நாடுகளில் வாழும் வெவ்வேறு இனமக்களை ஒன்றுடன் ஒன்று மோதத்தூண்டிவிட்டு, மேலும் இனங்களுக்கும், நாடுகளுக்கும் ஆயுத, தொழில் நுட்ப உதவிகளை வழங்கி பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் தமது சுரண்டலையும், தன்னிறைவான சுதந்திரமான அரசுகள் உருவாகாமல் ஏகாதிபத்தியத்தையே நம்பி வாழும் நிலைக்கு மூன்றாம் உலக நாடுகளை நிர்ப்பந்தித்தன. ஏகாதிபத்திய நாடுகள் மூன்றாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகநாடுகளில் கொள்ளையடித்த செல்வத்தில் பெரும்பகுதியை மனித இனத்தை அழிக்கும் ஆயுதங்களை உற்பத்தி செய்யச் செலவிட்டன. வல்லரசுக்களிற்கிடையேயான ஆயுதப் போட்டி மனித இனத்தின் அழிவின் விளிம்புக்கு இட்டுச்சென்றது. இன்று வான்வெளியை (Space) அணு ஆயுதமயப்படுத்துவதன் மூலம் இதுகாலவரை பூமியில் நாடுகளுக்கிடையே செய்யப்பட்ட ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள், ஐ. நா. சபை போன்றவற்றின் கட்டுப்பாடுகளை மீறி உலகின் எந்த ஒரு நாட்டின் மீதும் ஏகாதிபத்தியம் குறிப்பாக அமெரிக்கா முன் நிபந்தனை இன்றி தன்னிச்சையாக ஆக்கிரமிப்புச் செய்யமுடியும்.

இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாடற்ற காட்டாட்சியால் சுரண்டி நசுக்கப்படாத இனமோ, நாடுகளோ உலகிலில்லை. நாலு இலட்சத்திற்கும் அதிகமான இராணுவ வீரர்களை 15க்கும் மேற்பட்ட அந்நிய நாடுகளில் நிறுத்தி நேரடியான ஆட்சி செலுத்துவதோடு, வருடத்துக்கு 400 பில்லியன் அமெரிக்க டாலர்களை தனது சொந்த இராணுவத்தைப் பலப்படுத்தச் செலவிட்டு வருகின்றது. வியட்நாம், கொரிய நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பில் ஈடுபட்டபோது, மக்கள், நவீன ஆயுதங்கள் கொண்ட கூலிப்படை இராணுவம் காகிதப்புலி என்ற பாடத்தைக் கற்பித்தனர். உலக வரலாற்றுப் போக்கைத் தீர்மானிப்பது உழைக்கும் மக்களே அன்றி பணபலமும், ஆயுத பலமுள்ள சிறு எண்ணிக்கை யிலான முதாலாளி வர்க்கம் அல்ல என்பதை வரலாறு திரும்பத்திரும்ப உணர்த்தியது. உலகெங்கிலுமுள்ள 99சதவீதமான அடக்கி ஒடுக்கப்பட்டுத் துயருறும் மக்கள் தங்கள் அடிமைச் சங்கிலியை உடைத்தெறிய ஒன்றுபட்டால் தங்கள் முன்னாலுள்ள பெருமலை யாயுள்ள எத்தடைகளையும் தகர்த்தெறியும் சக்தி வாய்ந்தவர்கள். அடக்கப்பட்ட மக்களுக்கு வழிகாட்டியாக சமூக விஞ்ஞானமான வரலாற்றுப் பொருள்முதல்வாத தத்துவமும் தொழிலாள, விவசாய, பாட்டாளி வர்க்கத்தின் தலமையேற்கும் உருக்கு போன்ற இறுக்கமான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்பதே மக்களுக்கு இன்றுள்ள ஒரேவழி.

இவ்வரலாற்றுப் போக்கின் பிரதான முரண்பாட்டை கண்டறிவதன் மூலமே இனங்களோ, நாடுகளோ சுயநிர்ணய உரிமையையும், தனிமனித சுதந்திரத்தையும் பேணிப்பாதுகாக்கலாம். இவ்வெதிரும் புதிருமான இரு அணிகளின் முரண்பட்ட விசையால் உருவாக்கப்படு கின்ற சமூக வரலாறு எமது தாய்நாடான இலங்கையில் பொருளாதார அரசியல், சமூக, கலாச்சார தளங்களில் பெருமாற்றத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற் கெதிரான கொழுந்து விட்டெரிந்த சுதந்திரப் போராட்ட அலை தொளிலாளர்களின் தொழிற்சங்க போராட்டம், நிலமற்ற விவசாயிகள் போராட்டம், இந்திய வம்சாவளியினரின் குடியுரிமைப் போராட்டம் போன்றவற்றை முன்னெடுப்பதற்கு உந்துசக்தியாக இருந்தது. பின்னர் அறுபதகளின் பிற்கூற்றில் யாழ்ப்பாண மக்கள் சாதிய அடக்குமுறைக்கு எதிரான எழுச்சியாக பரிணமித்தது.

யாழ்ப்பாண மக்களின் சாதியத்திற்கெதிரான இவ்வெழுச்சி தற்செயலானதொன்றல்ல. ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சக்திகளுக்கெதிரான மக்கள் புரட்சியின் விடுதலை நோக்கிய பயணத்தில் ஓரங்கமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் கீழ் நிலையிலுள்ள மக்களால் முன்னெடுக்கப்படட சரித்திரம். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளிவர்க்க சர்வாதிகார, அரசை நிறுவு வதற்காக பல தளங்களில் முனைப்புடன் உறுதியாக செயல்பட்டது. சிதைவுற்றிருந்த தொழிலாளர்களை ஒன்றுபடுத்தித் தொழிற் சங்கங்களை அமைத்து அவர்களின் உரிமைக்காகவும் போராடியது. நிலமற்ற விவசாயிகளின் உரிமைகளையும் வென்றெடுக்க இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி குரல் கொடுத்தது. ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்களுக்காக தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக வாழத் தமிழ்த் தலைமையின் பிற்போக்கு வழிகாட்டுதலுக்கு எதிராகவும் உக்கிரமான போராட்டங்களை நடத்தினர்.

இவ்வரலாற்றுப் போக்கை திரு. கே. டானியல் எவ்வாறு இனங் கண்டு தனது அரசியல் கலை இலக்கிய வாழ்வைப் புடம்போட்டார் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். திரு. கே. டானியல் வாழ்ந்த காலத்தின் சாதிக்கொடுமைகளை, கெடுபிடிகளைச் சித்தரிப்ப துடன் மக்களின் எழுச்சியை காலவரிசையில் தர முற்படுகிறேன்.

## தாழ்த்தப்பட்ட மக்களின் ஜனநாயக மனித உரிமை மறுப்பு

உயர் சாதியினரின் மேம்பாட்டுக்குக் குலத்தொழில் வாரியாக, குடிமை அடிமைகளாகக் கூறு போடப்பட்டு, வாழ்வதற்கு நிலமற்று, ஆரம்பக்கல்வி மறுக்கப்பட்டு, சமூக, சமய சடங்குகளில் தடைசெய்யப்பட்டு, பொது இடங்களில் ஒதுக்கப்பட்ட இழிசன மக்கள் பொருளாதார ரீதியில் மிக அடிமட்டத்தில் வாழ்ந்தனர். அவர்களுக்கு எந்தவித உரிமைகளோ, சம அந்தஸ்தோ மறுக்கப்படடது. அமெரிக்க கறுப்பின அடிமைகளை விட கேவலமாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டத்தகாதவர்களின் மரணத்தின் பின்னரும் கூட அவர்களின் சடலங்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனியான, மிகத் தொலைவிலுள்ள இடங்களுக்குத் தகனம் செய்ய அல்லது அடக்கம் செய்ய எடுத்துச் செல்லப்பட்டன. யாழ் நகரிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் பிரேதங்கள் மிகத் தொலைவிலுள்ள காக்கை தீவு மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டன. இவ் அநாகரீகப் பாகுபாட்டைத் தாழ்த்தப்பட்ட மக்கள் சகிக்கமுடியாமல் சமரசமாக தீர்க்க முயன்றனர். இம் முயற்சிகள் வெற்றியளிக்காது போகவே 1944ம் ஆண்டு ஒரு பெண்ணின் சடலத்தை வில்லூன்றி மயானத்தில் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் எரிக்க முயன்றபோது முதலி சின்னத்தம்பியை உயர்சாதி வெறியர்கள் சுட்டுக் கொன்றனர். அடக்கு முறையைக் கண்டு அஞ்சாத மக்கள் முதலி சின்னத்தம்பியை பல எதிர்ப்புக்கு மத்தியில் அதே மயானத்தில் அடக்கம் செய்தனர். அவரின் வழக்கு யாழ் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது கறுப்புச் சட்டை அணிந்த தமிழ்த் தலைவர்கள் நீதியின் பக்கம் வாதாட மறுத்தவேளை இடதுசாரிப் பாசறையில் வளர்ந்த தர்மகுலசிங்கம் (ஜெயம்) எதுவித ஊதியமும் பெறாமல் திறம்பட வாதாடினார். பின்னர் அவ்வழக்கு சுப்பிரிம் கோட்டுக்கு எடுக்கப்பட்ட போது சாதி வெறியர்களுக்காக திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலமும், நீதிக்காக சிங்கள இனத்தைச் சேர்ந்த திரு. பத்திரானாவும் வழக்காடினர். தமிழர் தலைமை எப்பொழுதுமே ஏகாதிபத்திய நாடுகளின் எச்ச சொச்சங்களைக் கையேந்துவதிலும் மேட்டுக்குடி மக்களின் நலன்களைப் பாதுகாப்பதிலுமே செயற்பட்டது என்பதற்கு இது ஒரு ஆரம்ப அறிவித்தலாக இருந்தது. அடக்கப்பட்ட மக்கள் இவர்களை உதறித் தள்ளிவிட்டு தொடர்ந்தும் தமது பிணங்களை வில்லூன்றி மயானத்திலே அடக்கம் செய்து வருகின்றனர். உயர்சாதியினரும் அதே மயானத்திலேயே இப்பொழுதும் தமது சடலங்களையு அடக்கம் செய்கின்றனர்.

பலாத்கார ஆயுத போராட்டம் மூலமே ஒடுக்குமுறையைத் தகர்த்தெறியலாம் என்ற உன்னத பாடத்தை அன்று மக்கள் கற்றனர். இங்குதான் பிற்படுத்தப்பட்டவர்களின் நீதிக்கும், சமத்துவத்திற்குமான முஸ்தீபுகள் முன்வைக்கப்பட்டன. அமரர் பொன். கந்தையாவின் ஊக்குவிப்பினால் பல முற்போக்கு எண்ணம் கொண்ட முன்னணித் தோழர்களினால் 1942ம் ஆண்டு அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர்மகாசபை உருவாக்கப்பட்டது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களான தோழர் எம். சி. சுப்பிரமணியம் போன்றோர் மிகத்துடிப்பாகச் செயல்ப்பட்டதனால் சிறுபான்மைத் தமிழர்களுக்குப் பல உரிமைகள் வென்றெடுத்துத் தரப்பட்டன. யாழ் நகரிலுள்ள சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீர்க்கடைகளும் ஆலயங்களும் சிறுபான்மைத் தமிழர்களுக்காக இவர்களின் முயற்சியால் திறந்து விடப்பட்டிருந்தன.

பல ஆலயங்களும் தேனீர்க்கடைகளும் இன்னும் சிறுபான்மை மக்களைத் தூர நிற்க வைத்தன. 1963ல் கம்யூனிச முகாமில் ஏற்பட்ட பிளவு இலங்கையிலும் பல திருப்பு முனைகளைச் ஏற்படுத்தியது. திரு. எம். சி. சுப்பிரமணியத்தின் தலைமையிலான அகில இலங்கைச் சிறுபான்மைத்தமிழர் மகாசபை பலாத்கார வழியைத் துறந்து சமாதானமும் சகவாழ்வும் என்ற மந்திரத்தைப் பின்பற்றி சோவியத் சார்பு அணியில் செயற்பட்டது. சிறுபான்மை மக்களின் விடுதலைப் போராட்ட வாழ்வில் தேக்க நிலை ஏற்படவே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சீன சார்பு) சிறுபான்மைத் தமிழர் உரிமைப் போராட்டத்தை வீறுடன் முன்னெடுப்பதற்காக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை ஆரம்பித்தனர். இவ் வெகுஜன இயக்கம் அடக்கி ஒடுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர்கள் தலைமையை ஏற்று பரந்து பட்ட முற்போக்கு இளைஞர்களையும் ஓர் அணியில் ஐக்கியப்படுத்தி செயல்பட ஆரம்பித்தது. இவ்வெகுஜன இயக்கம் சுண்ணாகத்தில் 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி எழுச்சி ஊர்வலமாக ஆரம்பித்து பண்டித்தலைச்சி அம்மன், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், செல்வச்சந்நிதி, வல்லிபுரக் கோவில் போன்ற ஆலயப் பிரவேசம் எனப் பரந்து விரிந்தது. பல தேனீர்க்கடைப்பிரவேசங்களையும் வெற்றிகரமாக நடாத்தியது. நிற்சாமப் பகுதியில் நடந்த சாதி வெறியர்களுக்கெதிரான போரில் முன்னணி வீரர்களாகச் சிறுபான்மைத் தமிழர்களுடன் தோளோடு தோழ்நின்று போரிட்டனர். யாழ்மாவட்டத்தில் எங்கு சாதிவெறியர்களின் உக்கிரமான அடக்குமுறை இருந்நதாலும் அவ்விடங்களிலுள்ள சிறுபான்மை மக்களை ஒன்று திரட்டி அணிசேர்த்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தோழர்கள் முன்னணியில் நின்று போராடினர்.

**சுண்ணாக எழுச்சி ஊர்வலம்**

மக்கள் தொழில் அடிப்படையில் கூறு போட்டு பாரபட்சம் காட்டப்படுவதை இல்லாதொழிப்பதற்காக இலங்கைப் பாராளுமன்றத்தில் 1956ம் ஆண்டு தமிழரசுக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராசவதோயம் அவர்களால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட சமூக குறைபாட்டுச் சட்டத்தை எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கும்படி ஒடுக்கப்பட்ட மக்கள் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (சீன சார்பு) தலைமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் உள்ள தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தினூடாக சுண்ணாகத்தில் கிளர்ந்தெழுந்தனர். 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி சிறு பான்மைத் தமிழர்களில் பல முற்போக்கு வாலிபர்களும் இடதுசாரி இயக்கத் தலைவர்களும் சுண்ணாகத்தில் வந்து குவிந்தனர். ஊர்வலம் நடாத்த முன்கூட்டியே அனுமதி பெற்றிருந்த போதும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டால் பொலிசார் ஊர்வலத்தை தடுத்து நிறுத்தினர். மக்கள் தடையையும் மீறி 'சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' 'குறள் கண்ட தமிழனுக்கு கறள் கொண்ட பேணி' 'ஆலயங்களைத் திறந்துவிடு' எனக் கோஷமிட்டவாறு முன்சென்றனர். முன்கூட்டியே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த குண்டாந்தடிப் பொலிஸ்படை மக்கள் மீது மூர்க்கத்தனமாகத் தாக்கியது. இ. கா. சூடாமணி, வீ. ஏ. கந்தசாமி, கே. ஏ. சுப்பிரமணியம், எஸ். ரி. என். நாகரட்ணம், கே. டானியல், டி. டி. பெரேரா போன்றோர் கடுமையாகத் தாக்கப்பட்டு மேலங்கிகள் கிழித்தெறியப்பட்டார்கள். உறுதி கொண்ட மக்கள் துணியால் தங்களது வாயைக் கட்டிக்கொண்டு ஊர்வலமாக யாழ் முற்றவெளி மைதானத்தை அடைந்தனர். யாழ் முற்றவெளியில் சு.வே. சீனிவாசகம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை வெற்றிகரமாக நடாத்தினர். அதில் நா. சண்முகதாசன், கே. டானியல், டி. டி. பெரேரா, வி. ஏ. கந்தசாமி போன்றோர் உரையாற்றினர். இவ் எழுச்சி ஊர்வலமே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடாத்திய பல போராட்டங்களை முன்னெடுப்பதற்குக் கால்கோளாக இருந்தது.

**மாவிட்டபுரக் கந்தசாமி ஆலயப் பிரவேசம்**

சமூகக் குறைபாட்டுச் சட்டம் 1956ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதும் சமூக மாற்றம் என்பது யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. பன்னிரெண்டு வருடங்களாகியும் பல ஆலயங்கள் சிறுபான்மை மக்களுக்குத் திறந்து விடப்படவில்லை. 1968ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மாவிட்டபுர ஆலயப்பிரவேசம் செய்ய தீர்மானித்து திருவிழாக்காலத்தை இதற்கு பொருத்தமானதென தெரிவு செய்தனர். இதையறிந்த பிற்போக்குவாதிகள் 'அடங்காத் தமிழர்' சுந்தரலிங்கம், வடமாகாண பொலிஸ் உயரதிகாரி திரு. சுந்தரலிங்கம், உதவிப் பொலிஸ் அத்தியட்சர் திரு. தவராசா முதலியோர் தலைமையில் சதித் திட்டங்களைத் தீட்டினர். ஆலயத்துக்குள் சிறுபான்மை மக்கள் புகமுடியாதவாறு வாசலில் சப்பறங்கள், தண்டிகைகள் முதலியனவற்றை நிறுத்தி வழி மறித்தனர். மக்களோ பெருவெள்ளமாக கோயிலின் முன் திரண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சுந்தரலிங்கம் கோயில் வாசலில் உள்ள கல்லில் மந்திபோல குந்தியிருந்தவாறு அங்கு திரண்டிருந்த மக்களைப் பார்த்து 'லோக்கிளாஸ் ஆட்கள் நிற்கட்டும் கைகிளாஸ் ஆட்கள் என்னுடன் வாருங்கள்' என அநாகரீகமாகக் கூறினார். உயர்சாதி மக்கள் சென்றபின் எஸ். பி. சுந்தரலிங்கத்தால் அங்கு அழைத்து வரப்பட்ட அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் தலைவர்களான எம்.சி. சுப்பிரமணியம், ஜி. நல்லையா அங்கு திரண்டிருந்த சிறுபான்மை மக்களிடம் 'நாங்கள் சமாதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்கிறோம் நீங்கள் கலைந்து செல்லுங்கள்' என்று வேண்டிக் கொண்டனர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைமை தாங்கள் கடந்த காலத்தில் கடைப்பிடித்த புரட்சிகர மார்க்சிச கொள்கையிலிருந்து நழுவிப் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இவர்களின் செயல் 'சாமாதானம் சகவாழ்வு' என்ற திரிபுவாதக் கோட்பாட்டை அம்பலப்படுததியது. ஆனால் அங்கு குழுமியிந்த மக்கள் ஆலயப்பிரவேசப் போராட்டத்தில் உறுதியாக இருந்தனர். வீடு திரும்பும் நேரம் வந்ததும் எல்லோரும் கலைந்து செல்லத் தொடங்கினர். கூட்டத்தை விட்டு தனியாக சென்ற நாவாந்துறையைச் சேர்ந்த தோழர் குணரத்தினம் குண்டர்களால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டார். மற்றும் அல்வாயைச் சேர்ந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க நிருவாக உறுப்பினர் தோழர் கணேஸ் சாதி வெறியர்களால் மண்டை பிளக்கப்பட்டு குற்றுயிராக விடப்பட்டார். அவர் இறுதிவரை செயலிழந்து, சுயதொழில் செய்யமுடியாது ஊனமுற்று நடைப்பிணமாக வாழ்ந்து மறைந்தார்.

அடுத்த வாரமும் மாவிட்டபுர ஆலயப் பிரவேசம் பல இழப்புக்களுடன் தொடர்ந்தது. தண்ணீரின்றி நாவறண்ட பக்தர்கள் (போராளிகள்) ஆலயத்தின் முன்பாக உள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடித்துக் கொண்டிருந்தபோது சாதி வெறிபிடித்த குண்டர்கள் அவர்களின் வாளிகளைப் பறித்துத் தாக்கினர். ஆலயப் பிரவேசத்துக்கு வந்திருந்த மக்களைக் குண்டாந்தடிகள், பொல்லுகள், வாள்கள் போன்றவற்றால் தாக்கினர். மக்கள் 'அரோகரா' என கோஷமிட்டு கோயிலுக்குள் வழிமறித்து நின்ற குண்டர்களையும் தாண்டி முன்னேறினர். மண்டபத்துள் பதுங்கியிருந்த சாதி வெறியர்கள் நிராயுத பாணியான பாமர மக்களை மிருகத்தனமாக வேளாமுள்ளு, மண்ணடைத்த போத்தல், பொல்லுகள் போன்றவற்றாற் தாக்கினர் மண்டைகள் பிளக்கப்பட்டு, இரத்த ஆறு கோயிலுக்குள் பெருக்கெடுத்தோடியது. அடுத்த வாரமும் பொது மக்களும் போராளிகளும் கோயிலுக்கு முன்னால் கூடினர். குண்டர்களும் நாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலிருந்தும் கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டு இருந்தனர். வழமையாக தேர் அடியிலிருந்து முடிவரை தென்னங் கிடுகளால் சுற்றிவர அடைக்கப்பட்டு இருக்கும். அன்று தேரின் அடிப்பாகத்திலுள்ள கிடுகுகள் வழமைக்கு மாறாக திட்டமிட்டு அகற்றப்பட்டு இருந்தது. சதிகாரர் தேருக்கு தீ வைத்தனர். மக்கள் பீதியுடன் சிதறி நாலா பக்கமும் ஓடினர். பலர் தாக்கப்பட்டனர். மக்களில் சிலர் பீதியில் புகலிடம் தேடி வாசிகசாலையில் அடைக்கலம் புகுந்தனர். வடக்கு வீதியால் காங்கேசந்துறை வீதிக்குச் சென்ற எஸ்.ரி.என் நாகரட்ணத்தை ஒருவர் அசையாது கட்டிப்பிடிக்க இருவர் மூர்க்கமாக தாக்கினர். அவர் போராட்டங்களில் முன்னணியில் தீரமுடன் ஈடுபட்டதால் தருணம் பார்த்து தனிமைப்படுத்தி தாக்கினார்கள். அவரை மறைவிடத்துக்கு இழுத்துச் சென்று கொலை செய்ய எத்தனித்த வேளை சக தோழர்களின் மரணத்துக்கும் அஞ்சாத துணிச்சலான முயற்சியால் அன்று அவர் பாதுகாக்கப்பட்டார். பின்னர் எஸ்.ரி.என். நாகரட்ணம் ஒருவரை தாக்கி காயப்படுத்தியதாகவும் தேரை எரித்ததாகவும் பொய்க் குற்றச் சாட்டின்பேரில் அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

## மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன் ஆலயப் போராட்டம்

மட்டுவில் மகாவித்தியாலய வருடாந்த சரஸ்வதிப் பூசை வழமைபோல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மாணவர்கள் சரஸ்வதி பூசைக்காக பொங்கல், மற்றும் உணவுகளை தயாரித்துக் கொண்டிருந்தனர். திடீரென பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை உணவுகளைத் தயார் செய்யவிடாது பலவந்தமாக தடுத்து நிறுத்தி சாதியின் பெயரால் அவர்களை ஏனைய மாணவர்கள் முன்னிலையில் அவமானப் படுத்தினர். இந்நிகழ்வு மட்டுவிலில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தியது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போராட்டம் மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன் கோயிலிலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. பெருந்திரளான போராளிகள் நாலாபக்கத்திலிருந்தும் அங்கு சென்று குவிந்தனர். மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடந்த சம்பவத்தால் கொதிப்படைந்த மக்கள் தோழர்களைக் கண்டு உற்சாகமடைந்தனர். பண்டித்தலைச்சி அம்மன் கோவிலில் வருடா வருடம் பங்குனித்திங்கள் உற்சவ தினங்களான நான்கு வாரங்களும் மக்கள் கோயில் வீதியில் பொங்குவது வழக்கம். முதல்வாரம் தண்ணியெடுத்துப் பொங்கல் செய்தனர். அடுத்தவாரம் ஆலயப்பிரவேசம் நடைபெற இருந்ததை அறிந்து கோவிலின் முன்பு புதிதாகப் பொலிஸ் நிலையம் அமைக்கப்படடுக் கோவிலைச் சுற்றிவர முட்கம்பியினால் வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடப்பட்டு, கிணற்றுக்குள் உமி கொட்டி நிரவப்பட்டிருந்தது. இருப்பினும் இந்த வாரம் பொங்கல் அதே கிணற்றில் தண்ணீரெடுத்துச் சுமுகமாக நடைபெற்றது. மூன்றாவது வாரம் மக்கள் ஊர்வலமாகக் கோயிலுக்குப் பொங்கலுக்காகச் சென்றனர். அங்கு சென்ற மக்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது வழமையாகத் தண்ணீர் எடுத்துப் பொங்கும் கிணற்றில் நஞ்சு ஊற்றப்பட்டு அதில் உள்ள தவளை, மீன்கள் செத்து மிதந்து கொண்டிருந்தன. துர்நாற்றம் நாலாபக்கமும் வீசியது. இம்முறை தெற்பைக் குளத்தைச் சுற்றியும் முள்வேலி போடப் பட்டிருந்தது. மக்கள் பொங்குவதற்குத் தண்ணீரின்றி தவித்தபோது பொலிசார் உளவு யந்திரத்தில் நீர்த்தாங்கியில் தண்ணீர் கொண்டுவந்து அதை எடுத்துப் பொங்குமாறு பணித்தனர். கிணற்றில் விஷம் போடுவது கழிவுஓயில் ஊற்றுவது, விலங்குகளின் கழிவு, இரசாயனப் பவுடர்களைப் போடுவது எல்லாம் உயர்சாதி வெறியர்களுக்குக் கைவந்த கலை. தாங்கியில் உள்ள நீரிலும் எதுவும் கலந்திருக்கும் என்று பீதியுற்ற மக்கள் பொங்குவற்கு தண்ணீர் எடுப்பதற்காகத் தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள முள்வேலியைக் குறட்டினால் அகற்ற முற்பட்டனர். அப்பொழுது பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். சில தோழர்கள் பொலிசாரை அணுகி சட்டத்துக்கு விரோதமானால் கைது செய்யும்படியும் தடியடிப் பிரயோகத்தை நிறுத்தும் படியும் கேட்டனர். மக்கள் தொடர்ந்தும் முள்வேலியை வெட்டி தண்ணீர் எடுக்க முயன்றனர். மட்டுவிலைச் சேர்ந்த தோழர் சுப்பையாவும் வேறு சிலரும் முன்னணியில் நின்று தடைகளை அகற்ற முயன்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். பொலிஸ், தோழர் எஸ்.ரி.என் நாகரட்ணத்தையும் விட்டுவைக்கவில்லை. கண்ணீர்ப் புகைக்குண்டுகளை மக்களை நோக்கி வீசினர். தோழர் அருளானந்தம் உட்பட பலர் மூர்ச்சையுற்று வீழ்ந்தனர். பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது மக்கள் சிதறியோடினர். அப்பொழுது எழுபது வயது மூதாட்டி அரிசிக் கடகத்துடன் துணிச்சலுடன் சம்பவம் நடந்து கொண்டிருந்த இடத்தை விறுவிறுப்பாக வந்தடைந்தார். கடகத்தை கீழே வைத்தபோது அங்கு நின்ற இரு வாலிபர்கள் கடகத்திலுள்ள கைக்குண்டுகளை பொலிசார் மீது எறிந்தனர். பொலிஸாரும் சாதி வெறியர்களும் ஓடி மறைந்தனர். அந்த பெண் மூதாட்டிதான் சாதி அடக்கு முறைகளுக்கெதிராக துணிச்சலுடன் போராடிய முதல் பெண் போராளியாவார். இச் சம்பவத்தில் சறோசா, செல்லக்கிளி என்னும் இரு மாணவிகளைக் கைக்குண்டு வீசியதாகப் பொலிசார் இலங்கை முழுவதும் வலைவிரித்துத் தேடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நிச்சாமம் எச்சாமமும் தூங்காது'**

பிற்படுத்தப்பட்டோர் யாழ் குடாநாட்டிலே மிக அநாகரிகமாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கென பிரத்தியேகமாக வெளியே தடிகளில் கொழுவி விடப்பட்ட கழுவப்படாத, கறள்படிந்த, அசுத்தமான தகரப்பேணிகளில் தேனீர் வழங்கப்பட்டது. அவர்கள் வெளியே ஓரத்தில் இருந்தே தேனீரோ அல்லது உணவோ அருந்த வேண்டும். மனிதப் பண்பாட்டிற்கு விரோதமான இச்செயலை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்கள் குமுறியெழுந்து தேனீர்க்கடையில் சம உரிமை வேண்டிப் போராட்டங்களை நடத்தினர். சங்கானையில் சாதிப்பாகு பாட்டிற்கு எதிரான போராட்டம் மிகக் கூர்மையடைந்திருந்தது. சங்கானையில் ஒடுக்கப்பட்ட மக்கள் சம உரிமை வேண்டித் தேனீர்க்கடைப் பிரவேசம் செய்ய முற்பட்டபோது அங்கு சாதிய வெறியர்களாலும் அவர்களின் கைக்கூலிகளாலும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். நிச்சாமத்தில் வாழ்ந்த அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் அக்கிராமத்தை விட்டு வெளியே வரமுடியாமல் மறியல் செய்யப்பட்டனர். உணவு வகைகளைக் கொள்வனவு செய்ய சங்கானைச் சந்தைக்கோ அல்லது வெளியிடங்களுக்கோ செல்லவிடாது மறிக்கப்பட்டு பட்டினியுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். உலகெங்கிலுமுள்ள மனித இனங்களின் விலங்குகள் ஒடிக்கப்பட வேண்டும் என்று தம்மைத் தியாகம் செய்யும் கம்யூனிஸ் கட்சித் தோழர்களும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராளிகளும் நிச்சாம மக்களுக்கு அவசரத்தேவையான உணவு, உடை முதலியனவற்றை வழங்கினர். தோழர் மான் முத்தையா, நா. சண்முகதாசன், எம். கார்த்திகேசன், வீ. ஏ. கந்தசாமி, கே. ஏ. சுப்பிரமணியம், எஸ். ரி. என். நாகரத்தினம், கே. டானியல் போன்றோர் நிச்சாம மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு பல உதவிளை வழங்கினர். சங்கானை பட்டினசபைத் தலைவராக இருந்த மான் முத்தையா நிச்சாம மக்களின் உரிமைகளுக்காகத் தீவிரமாகப் போராடியதால் அவரது இனமக்களாலேயே அவர் வீடு தாக்கப்பட்டது. மான் முத்தையா அவர்கள் தமது கிராமத்தை விட்டு அடைக்கலம் தேடி யாழ் நகரில் குடியேறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

**பல கிராமங்களிலும் கொழுந்துவிட்டெரிந்த சாதிப்போர்**

கொடிகாமக் கிராமத்தில் உயர்சாதியினர் குளிக்கும் குளத்தில் நீராடிக் கொண்டிருந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை கண்ட உயர்சாதியினர் அவரைத் தாக்க முற்பட, உயிருக்குப் பயந்த அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை மரம் ஒன்றில் ஏறிவிட்டார். உடனே அவர்கள் அப்பனை மரத்தை கோடாலியால் தறித்து வீழ்த்தி அப்பாவி மகனை அடித்துக் கொன்றனர்.

கரவெட்டியிலும் சாதி வெறியரின் அடாவடித்தனம் சொல்லும் தரமன்று . உயர்சாதிக் காடையர்களால் அப்பாவி இளைஞன் ஒருவன் மறைந்திருந்து கத்தியால் குத்திக் கொல்லப்பட்டான். கன்பொல்லையில் கைக்குண்டு விபத்தில் மூவர் தங்களது உயிரைத் தியாகம் செய்தனர்.

மந்துவில் பகுதியில் இரத்தினம் என அழைக்கப்பட்ட தோழர் ஒருவர் சாதி வெறியர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார். வடபிரதேசத்தில் பிற்படுத்தப்பட்ட மனித உயிர்களின் மரணங்கள் மலிந்தன.

இந்துக் கோயில்களில் மட்டுமன்றி கத்தோலிக்க தேவாலயங் களிலும் சாதி வெறியர்களின் அராஜகம் நிலவியது. சுவாமி ஞானப்பிரகாசரின் கொள்கைக்கு மாறாக தம்மை உயர்சாதி எனக் கூறிக் கொள்வோர் கத்தோலிக்க தேவாலயங்களிலும் சாதியின் பெயரால் மக்களை பிரித்து, ஒதுக்கினர். குறிப்பாக இளவாலை, கரம்பன்போன்ற இடங்களிலும் சாதிப்பாகுபாடு தலைவிரித்தாடியது. இப்பாகுபாட்டை எதிர்த்து மக்களை விழிப்புணர்ச்சியூட்டும் விதத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு பிரதேசங்களில் கவிதை, கட்டுரைப் போட்டிகளும் ஓவியக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. இலங்கைப் பாராளுமன்றத்திலும் சாதி ஒடுக்கமுறைக்கு எதிராகத் தோழர் எஸ். ரி. பண்டாரநாயக்கா குரல் கொடுத்தார். உயர் சாதியினருக்காக வக்காலத்து வாங்கிப் பேசிய அன்றைய எதிர்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கம் அவர்கள் அடக்குமுறைகளை கோவிய சமூகம்தான் கட்டவிழ்த்துவிட்டது. என பாராளுமன்றத்தில் கூச்சமில்லாமல் முழங்கினார். இதற்கு பதிலளித்து உண்மையை வெளிச்சத்துக் கொண்டுவந்த எஸ்.ரி. பண்டாரநாயக்க பாராளுமன்றத்தில் தனது தீவிர எதிர்ப்பை, உயர்சாதிக் காரர்களை வக்காலத்து வாங்கிய தமிழ்த்தலைவர்களுக்கு காட்டியது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் நடந்த பல தீண்டாமை ஒழிப்பு பிரச்சார கூட்டங்களிலும் ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டவர் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

## ஒடுக்கப்பட்ட மக்களும் கல்வியும்

மானுட வாழ்வின் முன்னேற்றத்திற்குக் கல்வி அத்தியாவசியமானது. ஆண்டான்-அடிமைச் சமுதாயத்தில் நலிவடைந்த மக்கள் கல்வி கற்பதற்கு உரிமையற்றவர்களாக, வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். குருகுல முறையில் ஆரம்பத்தில் இருந்த கல்வி சமுதாயத்தில் உயர்சாதியினருக்கு உரியதொன்றாக அமைந்திருந்தது. தாழ்த்தப்பட்ட பெரும்பாலானவர்கள் அடிமை வேலை செய்பவர்களாகவும், ஆரம்பக்கல்விதானும் அற்றவர்களாகக் காணப்பட்டனர்.

அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய காலத்தில் தீண்டத்தகாதவர்களின் கல்வி வாய்ப்புக்களில் முன்னேற்றம் ஏற்பட்டது. அந்நியர்கள் மக்களைத் தங்கள் மதங்களுக்கு மாற்றுவதற்கு இலங்கையைப் பிரித்தாளவும் கல்வியை ஆயுதமாகப் பயன்படுத்தினர். எனினும் சாதியமைப்பில் அடிநிலையிலுள்ள வசதிபடைத்த ஒரு சிலருக்கு அடிப்படைக் கல்வி கற்க இக்காலத்தில் வாய்ப்புண்டானது. பின்னர் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களால் 50களில் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வித்திட்டம் தீண்டத்தகாதவர்கள் பலருக்கு அடிப்படைக் கல்வி பெறும் வாய்ப்பை நல்கியது. இருப்பினும் பாடசாலைகளில் அதிபர்களும், ஆசிரியர்களும் உயர் சாதிக்காரர்களாக இருப்பதால் தீண்டத்தகாதவர்களின் பிள்ளைகள் பாரபட்சம் காட்டப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்தனர்.

தீண்டத்தகாதவர்கள் ஒன்று சேர்ந்து தமக்கென பல பாடசாலைகளை நிறுவினர். இவ்விதம் ஆக்கப்பட்ட பாடசாலைகளில் தேவரையாளி இந்துக் கல்லூரியும் ஒன்று. இது பல திண்ணைப் பள்ளிகளை ஒன்று சேர்த்து ஆக்கப்பட்டது. திரு. சூரன் இப் பாடசாலையை நிறுவுவதற்கு அரும்பாடுபட்டார். இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர் திரு. முருகேசு, கவிஞர் செல்லையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம், திரு ஆ.ம. செல்லத்துரை, திரு. மு.சி. சீனித்தம்பி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவ்விதமே புனித பற்றிக் கல்லூரியை திரு. யேம்ஸ் என்னும் பெரியாரும் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு.யோ.வே.போல் என்னும் பெரியாரும் உருவாக்கினர்.

**சோசலிச யதார்த்தவாதமும், சாதியமும்**

கலை இலக்கிய படைப்புக்கள் ஆளும் அதிகார வர்க்கத்தின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக படைக்கப்பட்டது. சாதாரண மாந்தர்களோ அவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களோ இலக்கியப்படைப்புகளில் காணப்பதரிது. ஆளும் வர்க்க இலக்கிய இலக்கண வரம்புகளை மீறி புதிய களத்தில் அன்றாட பிரச்சினைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடம்போட்டு கலையம்சத்துடன் தந்த சோசலிஸ யதார்த்தவாத படைப்பாளிகளில் முன்னோடி டானியல் என துணிந்து கூறலாம். சிறுகதை, நாவல் துறைகளில் இவர் பதித்துச் சென்ற ஆளுமை பட்டிதொட்டியிலிருந்து பல்கலைக்கழகம் வரை பலர் ஆய்வு செய்துள்ளனர். கே.டானியல் அவர்கள் புனைந்த கதைகளில் உண்மைச் சம்பவங்களையும் தான் கண்ணால் கண்டவற்றையும், நேரில் அனுபவித்து ஆய்வுசெய்தவற்றையும் கருப்பொருளாக எடுத்துக்கொண்டார். கதை மாந்தர்களாக அன்றாடத் தேவைக்கும், உரிமைக்கும் தொடச்சியாக இடைவிடாது போராடும் மனிதர்களையே தெரிந்தெடுத்தார். எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

ஒரு முறை ஒரு வாகனச் சொந்தக்காரர் அவரது ஸ்ரார் வெல்டிங் தொழிற்சாலைக்கு வந்தார். அவர் ஒரு உதிரிப்பாகத்தைக் காட்டி இதனைப்போல் ஒன்று செய்துதர வேண்டும் எனவும் வாகனம் காட்டுக்குள் நிற்கிறது, அதுவும் இன்று செய்து தரவேண்டும் எனவும் கேட்டார். டானியல், அவரிடம் நாளைதான் தரமுடியும் என பதில் சொன்னார். அவருடன் உரையாடியபோது அவரின் ஊரை அறிந்த டானியல் சற்று உசாரடைந்து ஆர்வத்துடன் பல கேள்விகளை அவரிடம் கேட்டார். அவ்வூரில் நடந்த சாதிச் சண்டைகள் பற்றி அறிந்து கொண்டார். மேலும் விபரங்களை சேகரிக்க விரும்பிய டானியல் அவரை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று பெருவிருந்தும் அளித்தார். அவ்வூரில் நடந்த சாதிச் சண்டையில் அப்பெரியார் ஆற்றிய பங்களிப்பைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டதோடு அவரது வேலையை அன்றே முடித்து அவரையும் அன்றே அனுப்பி வைத்தார். மறுநாள் அவருடைய ஊருக்குச் சென்று அவர் கூறிய கூற்றுக்கள், சம்பவங்கள் உண்மையானவையா என அப்போராட்டங்களில் கலந்துகொண்ட மக்களிடம் அறிந்து கொண்டார். அவர்களின் நடை, உடை, பேச்சுவழக்கு போன்றவற்றையும் மிகத் துல்லியமாக அவதானித்தார்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் படும் கொடுமைகளையும், துன்பங்களையும் கண்டு மனம் கொதித்தார். அவைகளை அழியாத இலக்கியமாக்க வேண்டும் என்று அவாக்கொண்டார். அவ்வூர் மக்களின் வாழ்வு இலக்கியமாகப் புத்தகவடிவில் உருப்பெற்றது. இப் புத்தக வெளியீட்டு விழாவுக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரை விமர்சனம் செய்யும்படி அழைத்திருந்தார். யாழ்ப்பாணத்தில் நடந்த அந்நூல் வெளியீட்டு விழாவில் அந்த விரிவுரையாளர் குறிப்பிடும் பொழுது இங்கே குறிப்பிட்ட பெரியவர் யாருமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எனது தந்தைதான். நான் அறியாத பலவிடயங்களை எனது தந்தையிடம் இருந்து பெற்றுக்கொண்டது மட்டுமல்ல அவரைப் பற்றி சரியான கணிப்பீட்டையும் மிகத் துல்லியமாக தந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதே என புகழ்ந்துரைத்தார்.

டானியலின் எழுத்தார்வத்தை எஸ்.பொன்னுத்துரை, என்.கே. ரகுநாதன் யாழ்ப்பாணக் கவிராயர் பசுபதி ஆசிரியர் போன்றோர் உற்சாகமூட்டி வளர்த்தனர். அதேவேளை திரு. தங்கவடிவேல் ஆசிரியர் அவர்கள் டானியலின் ஆக்கங்களை சொற்திருத்தம் பார்ப்பார் என டானியல் அடிக்கடி நினைவு கூருவார்.

தலித்துவ இலக்கியத்தில் குறிப்பாக சிறுகதை நாவல் இலக்கியத்தில் திரு. டானியல் அவர்கள் முன்னோடியாக இருந்தது போல் தனது அனல்கொட்டும் கவிதைமூலம் கவிஞர் சுபத்திரன் அவர்கள் பெரும் வீச்சை உண்டுபண்ணினார். கவிஞர் சுபத்திரனின் கவிதைகள் சாதிவெறியர்களை வெட்கி தலைகுனியவைத்தது. படித்தவர், பாமரர் முதல் எல்லோர் நாவலிலும் ஒலித்தது. சமகாலத்தில் என்.கே.ரகுநாதன் ஆசிரியரால் எழுதப்பட்டு நெல்லியடி அம்பலத் தாடிகளால் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துப் பாணியில் அமைந்த கந்தன் கருணை நாடகம் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. தோழர் இளைய பத்மநாதனால் நெறியாள்கை செய்யப்பட்ட இந்நாடகம் அக்காலகட்டத்தில் நடந்த மாவிட்டபுர ஆலயப் பிரவேசம், தேனீர்க்கடைப் பிரவேசம் போன்றவற்றில் நேரடி அனுபவங்களை மிகைப்படுதல் இன்றிச் சிறந்த கலை அம்சத்துடன் மேடையேற்றப்பட்டதால் மக்கள் நாடகப் பாத்திரத்துடன் இணைந்து மெய்மறந்து இரசித்தனர். டானியலின் ஆக்கங்களும் கவிஞர் சுபத்திரனின் கவிதைகளும் கந்தன் கருணை போன்ற கலைவடிவங்களும் 'மக்களிடம் கற்று மக்களுக்காக கலை இலக்கியம் படைப்பபோம்' என்ற வாசகத்தை உறுதி செய்கிறது. திரு. டானியல், கவிஞர் சுபத்திரன், என். கே.ரகுநாதன், அம்பலத்தாடிகள் எல்லோரும் சாதிய எதிர்ப்புக் களத்தில் முன்னணியில் நின்று போராடியவர்கள். அவர்களின் நேரடி அனுபவங்களாலேயே இப்படியான காலத்தால் அழியாத கலை இலக்கியங்களைப் படைக்க முடிந்தது கந்தன் கருணை நாடகம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் பாடசாலை புதிய கட்டிட திறப்பு விழாவுக்கு மேடையேற்றுவதற்காக பயிற்சிகள் நடைபெறுகிறது. இன்னும் வட இலங்கையில் சாதியத்திற்கெதிரான போராடடங்கள் பல முனைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை இது நிரூபிக்கிறது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்துடன் டானியலுக்கு இருந்த அந்நியமான உறவு தனது படைப்புக்களில் அவர் புதிய உத்திகளை கையாள வழிகோலியது. யதார்த்த இலக்கிய வாதியான டானியல் சோசலிஸ யதார்த்த இலக்கியவாதியாகப் புடம்போடப்பட்டார். அரசியலில் அவர் கொண்ட சரியான தத்துவார்த்த மார்க்கமும் இடைவிடாது தன்னை மக்களின் போராட்ட அனுபவங்களில் இணைத்துக்கொண்டதன் மூலமும் ஆக்க இலக்கியத்தில் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

**செங்கொடியை உயர்த்திப்பிடித்தவர்.**

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஆரம்பித்துச் செயற்படுத்த மறைந்த தோழர் கார்த்திகேசனை 1946ம் ஆண்டளவில் அனுப்பிவைத்தது. தோழர் கார்த்திகேசன் தனது கட்சி வேலைகளை ஸ்தாபித்தபோது டானியலும் புரட்சிகர பாசறையில் சேர்ந்து கொண்டார். யாழ் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையின் ஸ்தாபக உறுப்பினர்களான ஏ.வைத்திலிங்கம், எம்.சி.சுப்பிரமணியம். ராமசாமி ஐயர், டாக்டர் சீனிவாசன், ப. ஜீவானந்தம் ஆகியோருடன் சேர்ந்து புரட்சிகர மார்க்கத்தில் தன்னையும் அர்ப்பணித்துக்கொண்டார். அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாள விவசாய மக்களின் விடிவுக்காகப் போராடிய டானியல் தாழ்த்தப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைப் போராட்டத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். அவர் மார்க்சிய நூல்களை இடைவிடாது கற்றதோடு, கட்சியால் ஒழுங்கு செய்த வகுப்புக்கள், கருத்தரங்கங்களிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். தனியுடைமைச் சமுதாயம் மூச்சுடன் இருக்கும் வரை சாதாரண மக்களுக்குக் கட்டப்பட்டுள்ள விலங்குகள் உடைக்கப்படமுடியாதவை என நம்பியவர். யாழ்ப்பாணத்தில் புரையோடிப்போன சாதிய முறைக்கு எதிராக போர்க்கொடி தூக்கியவர். டானியல் சாதிவெறியர்களின் சிம்ம சொப்பனமாக வாழ்ந்தவர். அதே நேரம் தாழ்ந்த சாதியிலுள்ள பச்சோந்திகள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக தங்கள் இனத்தை, மக்களை, மனித தர்மத்தை குழிதோண்டிப்புதைத்த போது அவர் வெகுண்டெழுந்தார். மதம் மாறுவதாலோ, பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதாலோ, தலித்துக்களுக்கு தனியான பாடசாலைகளையோ, அல்லது அரசியல் கட்சிகளை உருவாக்குவதாலோ சாதியத்தை ஒழிக்க முடியாது என நம்பியவர். இலங்கை முழுவதற்குமான தொழிலாள, விவசாய மக்களின் வர்க்கப் போராட்டத்தை மார்க்சிய, லெனினிய தத்துவார்த்த நெறிப்படி கம்யூனிஸ் கட்சியின் தலைமையில் போராடுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர். ஆயுதப் புரட்சியின்றி தொழிலாள, விவசாயிகளினதோ, அல்லது தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளையோ வென்றெடுக்க முடியாது என்று நம்பியவர்.

ஐம்பது அறுபதுகளில் இலங்கையில் புரட்சிகர கம்யூனிஸ அணியில் பலர் தம்மை இணைத்துக் கொண்டனர். தொழிலாள, விவசாயிகள் தம்மை இலங்கைக் கம்யூனிஸ் கட்சியில் இணைந்து கொண்டு பல போராட்டங்களில் வெற்றிகண்டனர். உலகின் பெரும்பகுதியை (சந்தையை) கம்யூனிஸத்துக்கு இழந்துவிட்ட அமெரிக்க தலைமையிலான முதலாளித்துவ அரசுகள் இலங்கையில் கம்யூனிஸ்ட்டுக்களின் வளர்ச்சியைக் கண்டு மிரண்டன. பொதுவுடமை மார்க்கத்தைக் குழி தோண்டிப் புதைக்கக் கங்கணம் கட்டி சந்தர்ப்பம் பார்த்து சதிசெய்யக் காவல் இருந்தன. 1971ம் ஆண்டு விஜயவீரா தலைமையில் எதிர்ப்புரட்சியை தமக்கு சாதகமாக்கிக்கொண்டு இலங்கையின் உள்நாட்டு விடயத்தில் ஏகாதிபத்திய நாடுகள் தலையிட்டன. உதவி என்ற போர்வையில் லட்சக்கணக்கான சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். காணாமல் போயினர். எதிர்ப்புரட்சியில் பங்கு பற்றாத பல தென் இலங்கை கம்யூனிஸ்ட்டுக்கள் காவலில் வைக்கப்பட்டனர். யாழ்குடாநாட்டிலும் பொலிசார் கம்யூனிஸ்ட்டுக்களை தேடி வலை விரித்தனர்.

1971ம் ஆண்டு கிளர்ச்சியின்பின் யாழ்ப்பாணம், பண்ணைப் பாலத்தில் தூண்டில்போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்த தோழர் டானியலையும் பொலிசார் கைது செய்து காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அவரை அவர்கள் சித்திரைவதை செய்து கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தினர். றப்பர் தோட்டாக்கள் நிரம்பிய துப்பாக்கியால் சுவரின் நாலாபுறமும் சுட்டுப் பயமுறுத்தினர். இரவுவேளை பொலிஸ் சிப்பாய் மேலதிகாரியைச் சந்திக்கசென்ற வேளை டானியல் மெதுவாகத் தப்பித்து யாழ் நகரத்துக்குள் சென்றுவிட்டார். ஒருமாதமாக பொலிஸார் வலைவிரித்தும் டானியலைக் கைது செய்ய முடியவில்லை. இறுதியாக டானியல் சரணடையா விட்டால் அவரின் லேத் தொழிற்சாலையை மூடிச் சீல்வைக்கப் போவதாகவும், உடமைகளையும் சேதப்படுத்தப போவதாகவும் பொலிஸார் பயமுறுத்தினர். டானியல் பொலிஸில் சரணடைந்தபோது ஜே.வி.பி. கிளர்ச்சிக் காரர்களுடன் சேர்ந்து பண்ணைப் பாலத்துக்குக் குண்டுவைத்துத் தகர்க்க முயன்றதாகக் குற்றம் சாட்டபட்டுக் கொழும்புக்குக் கொண்டு சென்று சிறையில் அடைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலையில் ஜே.வி.பி இளைஞர்கள் சித்திரைவதை செய்யப்படுவதையும் சிறையில் கொலை செய்யப்பட்ட பிணங்களையும் நேரில் பார்த்து மெய்சிலிர்த்தார். இருட்டறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைப்படுத்தப்பட்டபோது சிங்கள இளைஞர்களின் ஓலங்களை கேட்டு மனம்புளுங்கினார். நோயின் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டார். அவர் விடுதலையான போது யாழ் வைத்தியசாலையில் பல வாரங்கள் தங்கி வைத்தியம் செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டார்.

திரு.டானியல் இந்தியாவுக்குச் சென்றபோது அங்கு வட ஆர்க்காட்டில் கீழ் வெண்மணிக் கிராமத்தில் நிலச்சுவாந்தார் ஒருவரால் குடிசைக்குள் பூட்டிவைக்கப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட ஒடுக்கப்பட்ட விவசாயக் குடும்பத்தினரின் ஸ்தூபிக்குச் சென்று மலர்வளையம் வைத்து தன்னையும் அவர்களுடன் இணைத்துக் கொண்டவர். நம்மில் பலர் இந்தியாவிலுள்ள மாமல்லபுரத்துச் சிற்பங்கள், தஞ்சை பெரியகோவில், சபரிமலை ஐயப்பன், திருக்கழுங்குன்றம், அன்னை வேளாங்கண்ணி போன்ற திருத்தலங்களுக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுக்கும் அல்லது சாயிபாபாவின் புட்டபத்திக்கும்தான் செல்வதைப் பெருமையாகக் கொள்வர். ஆனால் தோழர் டானியல் சாதிக் கொடுமையால் சேரிகளில் வாழ்ந்த தலித்துக்களைச் சந்தித்து அவர்களின் வரலாற்றை அறிந்து கொண்டார் என்பது அவர் கொண்ட இலட்சியத்திற்காக எவ்வாறு உயர்ந்த மனித நேயத்துடன் வாழ்ந்து காட்டினார் என்பதைப் புலப்படுத்துகிறது.

**புலம்பெயர்ந்தோரும் சாதியமும்**

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தாம் வாழும் நாடுகளில் தம்முடன் கூடவந்த பிற்போக்குச் சிந்தனைகளை உதறிவாழ முடியவில்லை. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்கள் தொழிலால், சொத்துடமையால் கூறுபட்டு வாழவில்லை. பிறப்புரிமையால் மட்டும் அதுவும் சொந்த நாட்டில் கொண்டாடப்பட்ட உறவுமுறையால் தாழ்த்தப்பட்டவன் உயர்ந்தவன் என்று பிரித்து நோக்கப்படுகிறான். புலம் பெயர்ந்த நாடுகிளில் யாரும் குலத் தொழில் செய்வதில்லை. இலங்கையில் தாழ்ந்த தொழில் என ஒதுக்கப்பட்ட தொழிலுக்காகப் புலம்பெயர்ந்த நாடுகளில் உயர் சாதியினர் என மார்தட்டும் மக்கள் போட்டி போட்டு செய்வதை இங்கு காணுகிறோம். சலவைத்தொழில், சுத்திகரிப்பு முதல் மீன் வியாபாரம் என எல்லாம் சமனாகச் செய்கிறோம். ஆனால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தம் பார்த்து கலியாணம் செய்யும் போது குலம், கோத்திரம் விசாரித்து மணமுடித்து வைக்கின்றனர். அந்நிய இனத்தாருடன் கலப்புத் திருமணம் செய்யும் நமது மக்கள் எமது மக்களில் சிலரை ஒதுக்கிவைத்துப் புறக்கணிப்பதில் பெருமை பேசித் தம்பட்டம் அடிக்கின்றனர். காளான்கள் போல் தோன்றும் கோயில்களிலும் சாதியின் பெயரால் உற்சவங்கள், திருவிழாக்கள் நடைபெறுவது எமது சிறுமையைப் பறைசாற்றுகின்றது. புலம் பெயர்ந்த கனடா போன்ற நாடுகளில் சாதிய ஒடுக்குமுறை கொடூரமானதாக இல்லாவிட்டாலும் பெரும்பாலான முதல் தலைமுறையைச் சேர்ந்த புலம்பெயர்ந்த மக்கள் சாதிய சிந்தனையிலிருந்து விடுபடவில்லை என்பதையே காட்டுகிறது. எனவேதான் டானியல் போன்ற விடுதலை விரும்பிகளையும், முற்போக்கு எழுத்தாளர்களையும், அவர்களின் ஆக்கங்களையும் நாம் படிக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

சூ. மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கவர்ந்த மனிதர் டானியல்

எனது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தோழர் கே. டானியல் அவர்களைப்பற்றி இங்கு சில விடயங்களைக் கூறுவதில் நான்பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நான் தோழர் கே. டானியல் அவர்களை முதல் முதலில் 1963ம் ஆண்டு மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்-மாவட்டக் காரியாலயத்தில் சந்தித்தேன். 5அடி 5அங்குலம் உயரமும், மாநிறமும் மிக கவர்ச்சியான அழகான தோற்றமும் கொண்ட மனிதராக அவரைக் கண்டேன். அவருடன் பேசும் பொழுது அவர் தனக்கே உரிய, இயல்பான, கவர்ச்சியான சிரிப்புடன் பேசினார். அவ்வேளை உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குள் பெரும் வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. சகல கட்சி அங்கத்தவர்கள் வாயிலும் இவ் விவாதங்களைப் பற்றிய பேச்சுக்களே பேசப்பட்டுக் கொண்டிருந்தன. அதனால் இளைஞனான நான் அதைப்பற்றி விரிவாகச் சிலவிடயங்களை அறியும் பொருட்டு தோழர் டானியல் அவர்களிடம் மேற்படி விடயம் பற்றிப் பேச்சுக் கொடுத்தேன்.

அவர் புரட்சிகரப் பாதை எது திரிபுவாதப் பாதை எது என்பது பற்றிச் சிறிது விளக்கம் தந்தார். மேலும் கட்சி இரண்டாக பிளவுபடும் நிலைமையும் உள்ளது என்று கூறினார். மேலும் விபரங்களைப் பெறவேண்டுமாகில் தோழர் இளங்கீரனைச் சந்திக்கும்படி கூறினார். அத்துடன் தனது வேலைத்தளம் ஸ்ரான்லி வீதி சந்தியில் உள்ளதாகவும் தேவைப்பட்டால் அங்கு வந்து சந்திக்கலாம் எனவும் கூறிச்சென்றார். கட்சிக்குள் எற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளைச் சரியாக அறிவதில் ஆர்வம் இருந்ததால் யாழ் - முஸ்லீம் வட்டார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிக்கிளைப் பொறுப்பாளரான தோழர் இளங்கீரன் அவர்களிடம் மேற்படி விடயம் பற்றிக் கேள்வி எழுப்பினேன். அவர் வாலிபர் சங்கக் கூட்டத்தைக் கூட்டும்படியும் அதில் விளக்கம் தருவதாகவும் கூறினார். கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபசம்மேளனத்தின் யாழ் - முஸ்லீம் வட்டாரக் கிளையில் நான் உட்பட தோழர்கள் எஸ். றபீக், எம். எம். ஏ. நாசர், எஸ். எச். அமீர், கே. நயீம், எல். றசீன், எம், என், சி. கன்சீர், எம். எம். சலீம், எம்.பி. அஸீஸ், சி.எம். அஸீஸ், எம்.பி ரவூப் போன்றோர் அங்கத்தவர்களாக இருந்தார்கள். யாழ்-மாவட்டக் கட்சித் தலைவர்களை அழைத்து விளக்கம் கேட்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் தோழர்கள் இளங்கீரன், டானியல், வீ.பொன்னம்பலம், ஐ.ஆர். அரியரட்ணம் ஆகியோர் வெவ்வேறு நாட்களில் விளக்கமளித்தார்கள். தோழர்கள் டானியல் இளங்கீரன் ஆகியோர் பாராளுமன்றப் பாதையால் சோஸலிஸத்தை கொண்டு வரமுடியாது என்றும், ஆயுதபலாத்காரத்தால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமாகத்தான் சோஸலிஸத்தைக் உருவாக்க முடியும் எனவும் மிகத் தெளிவாகக் கூறினார்கள், முதலாளித்துவத்துடன் உடனிருந்து வாழும் கொள்கை முதலாளித்துவப் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு பாராளுமன்றத்தைக் கைப்பற்றி சோஸலிஸத்தைக் கொண்டு வருவது போன்ற திரிபுவாதப் பாதையை நிராகரித்தார்கள். மாதங்கள் சில உருண்டோடின. 1964 ஆரம்ப காலத்தில் கட்சி இரண்டாகப் பிளவு பட்டது. தோழர் என். சண்முகதாசன் அவர்களைத் தலைவராக ஏற்றுக் கொண்டு நாடு பூராவும் உள்ள புரட்சிவாதிகள் ஓர் அணியாகவும், பீட்டர் கெனமன், விக்கிரம ிங்கா ஆகியோரை ஏற்றுக் கொண்டு பாராளுமன்ற திரிபுவாதிகள் ஓர் அணியாகவும் பிளவு பட்டார்கள். தோழர்கள் இளங்கீரன், டானியல் ஆகியோரின் விளக்கங்களும் செல்வாக்கும் யாழ் - முஸ்லீம் வட்டார கம்யூனிஸ்ட் வாலிபர்களைத் தோழர் சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கம் அணிசேர்த்தது. அன்று தோழர் டானியல் அவர்கள் மறையும் வரை, முஸ்லீம் வாலிபர்களுக்கும் அவருக்கும் இடையில் பெரும் நட்புறவும், அன்பும் பாசமும் நிலவிவந்தது.

தோழர் கே. டானியல் அவர்களை யாராவது ஒரு முஸ்லீம் தோழர் தினசரி சந்தித்துக்கொண்டே இருந்தார். ஸ்ரான்லி வீதியில் உள்ள அவரது Star Garage - ஸ்ரார் கராஜ்ஜில் முன்பக்கத்தில் ஒரு விறாந்தை உள்ளது. அதில் ஒரு சிறிய காரியாலயம் உள்ளது. அதற்கு பக்கத்தில் வெளியில் ஒரு வாங்கு உள்ளது. அதனுடன் ஒரு கதிரையும் ஒரு சிறிய மேசையும் இருக்கும். அந்தக் கதிரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் டானியல் அவர்கள் அமர்ந்து ஸ்ரான்லி வீதியைப் பார்த்தபடியே இருப்பார். அந்த வாங்கில் யாராவது ஒருவரோ, இருவரோ அவருடன் கதைத்துக் கொண்டிருப்பதைத் தினசரி நாம் காணமுடியும். பிற்பகல் 5 மணியின் பின்பு சாதாரணமாக ஐந்து ஆறு பேர்கள் அந்த வாங்கில் இருப்பார்கள். அதில் ஒருவர் யாழ் முஸ்லிமாக இருப்பார். அந்தக் கதிரையில் இருந்த தோழர் டானியல் அவர்கள் பல திட்டங்களைத் தீட்டி நடைமுறைப் படுத்தியுள்ளார்கள். கே. டானியல் அவர்களின் அறிவும், ஆற்றலும் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான உணர்வின் புரட்சிகர வெளிப்பாடும் வாலிபர்களை கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. அதனால் யாழ்-மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து வாலிபர்கள் பலர் அவரை நாடி வந்தார்கள். அவர்களது கதைகளை மிக அவதானமாகவும் உன்னிப்பாகவும் கேட்பார். அவர் பல அறிவுரைகளை அவர்களுக்குக் கூறுவார். சில சமயங்களில் முகம் சிவந்து கோபத்துடன், அவர்களை வெட்டிப்போட்டு வரலாமே, அவர்களைச் சுட்டுப்போட்டு வரலாமே, அவர்களை உலக்கையால் அடித்துக் கொண்டு போட்டு வரலாமே எனச் சத்தம் போட்டுக்கத்துவார். அவ்வாறு சத்தமிட்டால் வந்த வாலிபர்களுடைய ஊரில் ஏதோ பாரதூரமான விசயங்கள் நடந்திருக்கிறது என்று அர்த்தம். வந்தவர்களின் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் எரிக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது நல்ல தண்ணீர்ப் பொதுக் கிணற்றில் நஞ்சு ஊற்றப்பட்டிருக்க வேண்டும் அல்லது கோவிலுக்குள் கடவுளின் அருகில் சென்று சாமி கும்பிட்டவன் அடித்து நொருக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் படிக்கும் பாடசாலை எரிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது தாழ்த்தப்பட்ட பெண் சில உயர் சாதியினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டிருக்க வேண்டும். இவ்வாறு ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருந்தால் அவர் அவ்வாறு சத்தமிடுவார். சில மனிதர்கள் சத்தமிடுவதுடன் விடயம் முடிந்துவிடும். ஆனால் டானியல் அப்படி இல்லை. அன்று முதல் அவர் ஆத்திரப்பட்டுக் கொண்டே இருப்பார். வரும் வாலிபர்களைக் கராஜ்ஜின் வேறு மூலைக்குக் கூட்டிச் சென்று சில மணிநேரம் கதைப்பார். சில சமயம் சிலரை வெளியாலிருந்து கூட்டிவர ஆள் அனுப்புவார். அவ்வாறு வந்தவர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்பார். அவர்களுடன் சிலநிமிடங்கள் பேசுவார். வந்தவர்கள் ஆட்டோவில் அல்லது காரில் வெளியே போவர்கள் அரைமணி அல்லது ஒரு மணித்தியால இடைவெளியில் மீண்டும் வருவார்கள். இறங்கும் போது ஒரு சாக்குப் பொதியுடன் இறங்குவார்கள். அதை டானியல் அவர்கள் வாங்கி கவனமாக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலையில் வைப்பார். பின்பு கிராமத்தில் இருந்து வந்த வாலிபர்களிடம் அந்தச் சாக்குப் பொதியைக் கொடுப்பார். இனி மீண்டும் இங்கு வருதாக இருந்தால் நான் சொன்ன விஷயங்களை செய்து போட்டுத்தான் வரவேண்டும் என உத்தரவு பிறப்பிப்பார். அவர்களில் ஒருவனை தலைவனாக கண்டறிந்து அவனிடம் சில நோட்டுக்களையும் கொடுப்பார். அவர்களை உற்சாகப்படுத்தி முக மலர்ச்சியுடன் அனுப்பி வைப்பார். பதில் வரும் வரை அதைப்பற்றி யோசித்துக் கொண்டே இருப்பார். எப்படியும் இரண்டு மூன்று நாட்களுக்குள் அக்கிராமத்தில் சில விடயங்கள் நடைபெற்றுவிடும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தீங்கிழைத்த சாதி வெறியர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள், பலர் ஆஸ்பத்திரியில் போடப்பட்டார்கள் என்ற செய்தி வரும். அதன்பின்பே அவரது முகம் மலரும். வாய் திறந்து சிரிப்பார். இவ்வாறான விஷயங்களின் பங்களிப்பையும் டானியல் அவர்கள் சேர்த்துக் கொள்வார்.

போராட்டங்கள் நடந்த கிராமங்களுக்குத் தன்னை யார் என்று இனங்காட்டிக் கொள்ளாமல் தொழில் சம்பந்தமாக ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் பின்னால் ஒரு ஆளை ஏற்றிக் கொண்டு சென்று வருவார். அதன் பின்பு அங்கு கம்யூனிஸ்ட் ஊழியர்கள் தொடர்ந்து சென்று வருவார்கள். அரசியல் வகுப்புக்கள் இடம் பெறும் பின்பு அங்குள்ள பிரசித்த ஆலயங்களில் உள் சென்று கடவுளைக் கும்பிடுவதற்கு உரிமைப் போராட்டம், பொதுக் கிணற்றைச் சகல மக்களும் பாவிப்பதற்கான உரிமைப்போராட்டம், தேனீர்க்கடைகளில் சமபந்திப் போராட்டம் எனப் போராட்டங்கள் பல உருவாகுவதற்குத் தோழர் டானியல் அவர்கள் பெரும் பங்காற்றியுள்ளார். இவ்வாறான போராட்டங்கள் 1966ம் ஆண்டிலிருந்து 1971ம் ஆண்டுவரை பெருமளவில் யாழ்-மாவட்டத்தில் இடம் பெற்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன் கோவில், செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் கோவில், திருநெல்வேலி சிவன்கோவில் போன்ற கோவில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், பெரும் சாதி மக்களுடன் கோவிலுக்குள் சமமாக நின்று சாமி கும்பிட உரிமைகோரி நடத்திய போராட்டங்களாகும். இப்போராட்டங்கள் எல்லாம் வெற்றி பெற டானியல் அவர்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளர். அதே போன்று சங்கானைத் தேனீர்க்கடைப் போராட்டம், நெல்லியடி, சாவகச்சேரி, அச்சுவேலி அகிய இடங்களில் நடைபெற்ற தேனீர்க்கடைப் போராட்டங்கள் வெற்றிபெற அரும்பாடு பட்டார். அவ்வெற்றிகளின் பின்னால் உள்ளவர்களில் டானியலும் ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது செயற்பாட்டைத் தடை செய்வதற்காக அன்று ஆட்சியில் இருந்த அரசியல் வாதிகளும் பொலிஸாரும் இணைந்து இவர்மேல் ஒரு பொய்க்குற்றச் சாட்டைப் புனைந்து இவரைக் கைது செய்து சிலமாதங்கள் சிறையில் அடைத்தார்கள். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட இவர் சிறையில் பல துன்பங்களை அநுபவித்து பின்னர் விடுதலை பெற்று வெளியே வந்தார். வந்தபின்பும் இவர் தனது புரட்சிகர அரசியல் வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தார். மேலும் இலங்கையிலும் இந்தியாவிலும் புகழ்பெற்ற 'பஞ்சமர்' என்ற நாவலை எழுதி வெளியிட்டார். அதைத் தொடர்ந்து 'போராளிகள் காத்திருக்கிறார்கள்', 'தண்ணீர் தண்ணீர்', 'அடிமைகள்', 'கோவிந்தன்', 'கானல்', 'பஞ்ச கோணங்கள்' போன்ற புகழ் மிக்க நாவல்களை வெளியிட்டார். இந் நாவல்களின் வெளியீட்டு விழாக்களை நடத்தவதற்கு யாழ் மாவட்ட முஸ்லீம் வாலிபர்கள் பெருமளவு உதவி செய்துள்ளார்கள். அத்துடன் தோழர் கே. டானியல் அவர்களுடன் வியாபார சம்பந்தமாக பல முஸ்லீம்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். பெரிய இரும்புவியாபாரி அப்துல் காதர் தொடக்கம் கிராமங்களிலிருந்து பழைய இரும்புகளை வாங்கி வியாபாரம் செய்யும் செம்பி என்று அழைக்கப்படும் முகம்மது வரை அவருடன் தொடர்பு உடையவர்களாக இருந்தார்கள். அதனால் வருடம் தோறும் நடைபெறும் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் தினங்களில் தோழர் டானியல் அவர்கள் யாராவது ஒரு முஸ்லீம் தோழரின் வீட்டில் விருந்துண்டு மகிழ்வதை வழக்கமாக்கியிருந்தார்.

அவர் தனது இறுதிக் காலத்தில் புன்னாலைக் கட்டுவன், வசாவிளான் பகுதிகளில் இடம்பெற்ற தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட வாலிபர்களுடன் தொடர்பு வைத்திருந்து அவர்களுக்கு வழிகாட்டி உதவிகள் பலபுரிந்து வந்தார். தோட்டங்களில் வேலை செய்துவந்த கூலி விவசாயிகளுக்குச் சிரட்டையில் தேனீரும், தட்டுவத்தில் சோறும் வழங்கப்பட்டு வந்தது. அத்துடன் குறைந்த கூலியும் வழங்கப்பட்டது. இதற்கு எதிராக கூலி விவசாயிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தார்கள். சாதி வெறியர்களும், தோட்ட முதலாளிகளும் கூலி விவசாயிகளைத் தாக்கி அவர்களது போராட்டத்தை முறியடிக்க முயற்சி செய்தார்கள். விவசாய வாலிபர்கள் தோழர் கே. டானியல் அவர்களை அணுகி உதவி கேட்டார்கள். அவர் பல உதவிகளைச் செய்து கூலி விவசாயிகளின் போராட்டம் வெற்றி பெற உதவினார். கூலி விவசாயிகளுக்கு சம்பள உயர்வும் கிளாஸில் தேனீரும் பீங்கான்களில் உணவும் வழங்கும் புதிய பழக்க வழக்கம் ஆரம்பமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை வழங்குவதன் மூலமே முன்னெடுத்துச் செயற்படவேண்டும் என்பதை ஆணித்தரமாக சகல பொதுமேடைகளிலும் கூறி வந்தார். அவ்வாறு வழங்கப்படாது விட்டால் போராட்டம் வெற்றிக்குச் செல்லாது என்றும் கூறிவைத்தார். தனித் தமிழ் ஈழக்கோரிக்கையை பொறுத்தமட்டில் இது சாத்தியப்படுத்த முடியாத கோரிக்கை என்றும் ஒற்றை ஆட்சியின் கீழ் அல்லது ஒரு சமஷ்டி அமைப்பின்கீழ் சிங்கள மக்களுக்கு உள்ள அதே அளவு உரிமைகள் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துப் போராடுவதன் மூலமே தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்றும் கூறிவந்தார். மரணம் தன்னை வெகு விரைவாக நெருங்கி வருவதை உணர்ந்து கொண்ட டானியல் அவர்கள், தான் எழுதி வந்த 'பஞ்ச கோணங்கள்' என்ற புத்தகத்தை விரைவாக வெளிக்கொணரும் நோக்குடனும் தனது இந்தியத் தோழர்கள் நண்பர்கள் இலக்கிய கர்த்தாக்களைச் சந்திக்கும் நோக்குடனும் இந்தியாவுக்குச் சென்றார். தனது விஜயத்தின் நோக்கங்கள் முழுமை பெறுமுன்பே 1886 மார்ச் 23ல் இயற்கை எய்தினார்.

இள வயதில் பல கஸ்டங்கள், இன்னல்கள் பட்டிருந்த வேளையிலும் இறுதி காலத்தில் கொஞ்சம் பொருளாதார வசதியுடன் வாழ்ந்த போதும் தான் கொண்ட அந்த சோஷலிச கொள்கையில் மனம் தளராது முன்னின்று செயற்பட்டு நாட்டில் பஞ்சப்பட்ட மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், ஏழைத் தொழிலாள, விவசாய மக்களுக்காகவும் தொடர்ந்து போராடிய ஒரு பெரும் போராளியாக வாழ்ந்து மறைந்தார். அன்னாரின் ஆக்கங்கள் உலகம் உள்ளவரை அவரது நாமம் நிலைத்து நிற்கும்

**எம். சி. ஏ. இக்பால்**

தலைவர் யாழ்-மாவட்ட முஸ்லீம் அகதிகள் நலன்புரிச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலரும் சாதியமும்

"ஆறுமுக நாவலர் (1822-1879) யாழ்ப்பாணத்தில் பாண்டி மழவன் பரம்பரையில் பிறந்து வளர்ந்தவர். ஒல்லாந்தர் காலம் முதலாக அரசாங்க உத்தியோகங்கள் வகித்த செல்வாக்குள்ள குடும்பம். பொருள்வளமும் கொண்டு விளங்கிய சுற்றம்" 'ஈழம் தந்த நாவலர்' என்ற நூலில் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் கூறுவார்.

சைவ வேளாள பரம்பரை, பிள்ளை, முதலியார் என அழைக்கப்படுபவரே நில ஆதிக்கமுள்ள உயர்சாதியினராவர். (தமிழ் நாட்டிலும் அவ்வாறே. அத்துடன் கோயமுத்தூர் பகுதியில் தெலுங்குப் பரம்பரை சார்ந்த கவுண்டரும் உளர்).

டானியலின் சிறந்த நாவலாக பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்றோரால் கருதப்படுவது 'கானல் நீர்' இந்நாவல் ஐரோப்பியர் ஆட்சியில் கிறிஸ்தவ மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் நுழைவதன் தாக்கத்தைக் கூறும். பெரும்பாலும் கிறிஸ்தவ மிஷனரிமார் மத மாற்றத்திற்கு ஒடுக்கப்பட்ட சாதியினரையே அணுகுவர். இவர்கள் மிஷனரிமாரால் நலன் பெறுவதை அறிந்ததும் உயர்சாதி எனப் பெருமைப்படும் வேளாளர் நுழைந்து அவ்வாய்ப்புகளை ஆக்கிரமித்துக்கொள்வர். இவ்வாறே உயர் சாதியினரில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறுவதோடு கிறிஸ்தவ ஆலயங்களிலும் முதலிடம் பெற்றனர்.

அத்தோடு கிறிஸ்தவ ஆட்சியாளருடன் இணைந்து அரசாங்க வேலைகளையும் தமதாக்கிக் கொள்வர். ஐரோப்பிய ஆட்சியாளர் களுக்கும் படி நிலைச் சமூகத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர் வாய்ப்பாக அமைந்தனர். இந்தியாவிலும் பிராமணரை ஆங்கிலேயர் உயர் நிலையில் வைத்து ஆட்சி புரிந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது வேளாளரே ஆங்கிலத்தைக் கற்று இலங்கையில் அரசாங்க பதவிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டதை அனைவரும் அறிவர்.

இதே சைவ வேளாளர் பரம்பரையில் பிறந்து வளர்ந்த ஆறுமுக நாவலர் யாழ்ப்பணம் மெதடிஸ்ட் மத்திய பாடசாலையில் 12 வது வயதிலிருந்து 20 வயதுவரை *(1834 - 1842)* ஆங்கிலம் கற்றார். அதன்பின்னர் அதேபாடசாலையில் கீழ்வகுப்பில் ஆங்கிலமும் மேல்வகுப்பில் தமிழும் கற்பித்தார். அவர் தமிழ் மொழிப் பாண்டித்தியத்தை நல்லூர் வேலாயுத முதலியார், இருபாலை சேனாதிராய முதலியார் ஆகியவர்களிடம் கற்றார்.

பின்னர் பேர்சிவல் பாதிரியாருக்கு கட்டுரை, கீர்த்தனை திருத்துவதிலும் ஜெபப்புத்தகம் எழுதுவதிலும் அவருடன் சேர்ந்து பைபிளை மொழிபெயர்ப்பதிலும் உதவினார்.

அதன்பின்னர் கிறிஸ்தவ சமயப் பிடியிலிருந்து விடுபட்டு சைவ சமய மறுமலச்சிக்காக நாவலர் உழைத்தது 35 ஆண்டுகளெனச் சைவப் பெரியார்களால் முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாருக்கு எதிராக நாவலர் நடத்திய போராட்டங்கள், இங்கும் தமிழ் நாட்டிலும் அவர் சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய சேவைகள், ஏராளமான வெளியீடுகள் இன்றும் போற்றப் படுகின்றன. சைவ சமய குரவராக இலங்கையில் கொள்ளப்பட்டு ஆண்டுதோறும் குரு பூசைகளும் நடத்தப்படுகின்றன.

தமிழ் நாட்டில் பாராட்டுக்களுடன் விவாதத்திற்குள்ளவராகவும் கருதப்பட்டார். (இரு ஆண்டுகளின் முன்னர் நாவலரின் சில நூல்களை வாங்குவதற்காக சென்னை ஜோஜ்டவுண் தங்க சாலையில் உள்ள அவரது வெளியீட்டகம் சென்றேன். பாழடைந்த கட்டிடம் செயலிழந்த அச்சகம் அப்படியே இருப்பதைக் கண்டேன். சில வெளியீடுகள் மட்டும் இருந்தன. சிதம்பரத்திலும் அவர் பெயரில் மடம் ஒன்று உள்ளது)

கிறிஸ்தவபாடசாலைக் கல்வி, கிறிஸ்தவ பணியை விட்டு சைவ சமய மறுமலச்சிக்கு என உழைத்ததோடு போராட்டங்களும் நடத்தியதற்குரிய காரணங்களை ஆராயும் போது அவரது யாழ்ப்பாண உயர் சாதியான சைவ வேளாளப் பிடிப்பு தானே தெரியவரும்.

1. 'சுதேசிகள் மத மாற்றம் பெற்று, கிறிஸ்தவர்கள் ஆவதன் மூலம் தமது சாதிய அடையாளங்கள் தகர்க்கப்பட்ட நிலையில் இருந்தார்கள் என்பது உண்மை' என அமெரிக்க வெளிநாட்டு மிஷன் அறிக்கை கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தமிழ் நாட்டில் கிறிஸ்தவ மிஷனரிமாருக்கு இருந்த எதிர்ப்பு நாவலரையும் பாதித்தது. இந்தியாவில், தமிழ் நாட்டில் பிராமணரே இந்த எதிப்ப்பை முன்னின்று நடத்தினர். யாழ்ப்பாணத்தில் மேம்பட்ட சாதியினராக வேளாளரே சைவ சமயத்தையும் கோவில்களையும் பேணுவோராயினர்.
3. சமய தீட்சை பெற்றவரே சைவசமயத்தவராகக் கொள்ளப்படுவர். கோயில்களில் சைவாகமப்படி பூசை செய்யவும் தகுதியுள்ளவர். சிதம்பரம் கோவில் தீட்சதர் சைவாகமப்படி தீட்சை பெறாதவர். பூசை செய்யத் தகாதவர் எனக் கூறி சர்ச்சை மட்டுமல்ல பெரிய கலகமே சிதம்பரத்தில் நடந்தது. நீதிமன்றம் வரை சென்றது. (சிவதீட்சையை கிறிஸ்தவரின் ஞானஸ்தானத்துடன் நாவலர் உள்ளுணர்வுடன் கருதியிருக்கலாம்).
4. யாழ்ப்பாணத்தில் சாதியில் ஒதுக்கப்பட்டவர் சிவதீட்சை பெறத் தகுதியற்றவர் என்பது தெளிவாகும்.
5. தென்னிந்தியாவில் சைவ சமயத்தில் சமரச சன்மார்க்கம் பேசி 'அருட்பா' பாடிய இராமலிங்க சுவாமிகளுக்கு (1823-1874) எதிராக நாவலர் வழக்குத் தொடர்ந்தது வரலாறு.
6. சைவாகம விதிப்படி கோயில்கள் அமைக்கப் படவேண்டும் என்பதிலும் நாவலர் விழிப்பாக இருந்தவர். கோவில்களில் உள்வீதி, வெளிவீதி என அமைக்கப்படும். உள்வீதியில் தாழ்த்தப்பட்டவர் நுழையமுடியாது. இதன் பிரகாரமே தமிழ் நாட்டிலும் கோயில்கள் கட்டப்பட்டன. தாழ்த்தப்பட்ட சாதியினர் கோயில்களில் நுழைய அனுமதிக்கப்படார்.
7. சிவபெருமானே முழுமுதற் கடவுள், (நல்லூர் முருகனையும் நாவலர் தெய்வமாக ஏற்றார்) சிவனை ஏற்பவரே சைவ சமயிகள். அவர்களுக்கல்லாது தேவார, திருவாசக, சிவபக்திப்பாடல்களை கொடுப்பது, கற்பிப்பது பாவம் என நாவலர் கூறுவார்.
8. சைவசமயப் பாடல், தேவார திருவாசகங்களுக்கு சமனானவை அல்லது மேம்பட்டவை என எதையும் கற்பிப்பவர் நரகத்திற்குச் செல்வர். சைவ சமயத்தவர் (கிறிஸ்தவம் உட்பட) பிற மதங்களைப் போற்றி வழிபடுபவருக்கும் இது பொருந்தும்.
9. பிற மதங்களிலிருந்து பக்தியோடு சிவபெருமானை வழிபடுபவரை அவர் ஏற்பார். ஆயினும் அவர்கள் இந்துவாக அடுத்த பிறவியில் பிறந்து வேத, ஆகமங்களைக் கற்று வழிபடுவதன் மூலமே மோட்ச சாம்ராஜ்ஜியத்தை அடைய முடியும். சமண, புத்த, கிறிஸ்தவ சமயத்தவருக்கு இவை பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சிவனே முழுமுதற் கடவுளாக உள்ளபோது சிறு தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டுள்ள பிற சாதியினருக்கு ஈடேற்றத்திற்கு வாய்ப்பில்லை. சிவனை ஏற்று வழிபட்டு அடுத்த பிறவியிலே ஈடேறமுடியும்.

11. சைவர்களை இனங்காண விபூதி அணியச் செய்தார். அத்துடன் அவரே ருத்திராட்ச மாலையும் அணிந்து கொண்டார். கிறிஸ்தவரிலிருந்து சைவரை வேறுபடுத்திக் காட்டவே இவற்றை வற்புறுத்தினார். சிவதீட்சை பெறாதவர் மூன்று குறியாக வீபூதி பூசக்கூடாது.

நாவலர் யாழ்ப்பாணத்தில் சைவ வேளாளர்களை மட்டுமே முதன்மையான சிவபக்தர்காளக ஏற்றுக் கொண்டார். இவர்களே சமூகத்திலும் 65 சதவீதமாக இருந்தனர். 1840களில் கிறிஸ்தவ பாடசாலைகளிலே தாழ்த்தப்படடவர் சேர்க்கப்படுவதற்கு வேளாளர் எதிர்ப்புக்காட்டிய போது நாவலர் மெளனமாக இருப்பதன் மூலம் வேளாளரையே ஆதரித்தார் என்றே கொள்ளவேண்டும். பின்னர் தனியார் சைவப்பாடசாலைகள் ஆரம்பித்த வேளையிலும் தாழ்த்தப் பட்டவர் அனுமதிக்கப் படவில்லை. இவர்களை அனுமதிப்பின் பெரும் பான்மையினரான வேளாளப் பிள்ளைகள் கல்வி கற்கவரமாட்டார்கள் என்பதே காரணமாகும். மேலும் வேளாளப் பிள்ளைகளுடன் சரிசமமாக வாங்குகளில் உட்காருவதும் பிரச்சினை என்பர்.

ஒரு பெண்ணை மதம் மாற்றுவது ஆறு ஆண்களை மதம் மாற்றுவதிலும் முக்கியமானது' என்று கிறிஸ்டியன் டேவிட் என்ற மிஷனரி போதகர் சொன்னார். 1818 வரையிலேயே தாழ்த்தப்பட்ட பெண்கள் உட்பட பாடசாலைகளில் மிஷனரிமார் அனுமதித்தனர். (கன்னியாஸ்திரி மடங்கள் பெண்களுக்காக மட்டும் என பின்னர் விடுதிகளோடு ஆரம்பிக்கப்பட்டன) நாவலர் ஆரம்பித்த பாடசாலைகளில் 1870 வரையிலேயே வெள்ளாள மாணவியரைச் சேர்த்தனர்.

பெரிய புராணத்தில் வரும் 63 நாயன்மாரில் நந்தன், கண்ணப்பன் தவிர பெரும்பாலோர் வேளாள சாதியைச் சேர்ந்தவர்களே. வைசவமயம் ஆவுரித்துத் தின்றுலையும் புலையரையும் சிவன் ஏற்றுக் கொள்வதாக சேக்கிழார் பாடிய போதும் நாவலர் யாழ் புலயரை ஏற்பார் என்று கூறுவதற்கில்லை. (அடுத்த பிறவியில் வேளாளராகப் பிறந்தே இறைவனடி சேர முடியும் என்பார்)

சைவ சமயத்திற்கு வெளியீடுகள், நூல்கள் மட்டுமல்லாது பிரசங்கங்கள் நடத்தியும் சமயத் தொண்டாற்றியவர் நாவலர். நல்ல பேச்சாளர், பிரச்சாரகர். இத்தனை பணிபுரிந்தும் தன்னை சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரவராகக் கொள்ளவில்லை என்ற மனக் கவலையும் அவருக்கு இருந்தது. இந்த உண்மையை பைபிள் அதிர்ந்தது (The bible Trembled 1995) என்ற ஆய்வு நூல் எழுதிய ஆசிரியர்கள் யாங், ஜெபநேசன் கூறியுள்ளனர். நாவலர் ஐந்ததாவது சமயகுரவர் எனக் கூறப்படுவதை விரும்பவில்லை என பொ. பூலோகசிங்கம் தன் நூலில் கூறுவார்.

பைபிளையும் கிறிஸ்தவ மதத்தையும் நன்கு கற்றவர், எதிர்க்கிறார், நாவலர் சைவ சமயத்தைப் போற்றுகிறார் என்பது சைவ வேளாளருக்க நல்ல பிடியாக இருந்தது. அதேவேளை மிஷனரிமாரின் பிரசாரமுறைகள் நாவலரைக் கவர்ந்ததும் உண்மையே. அவற்றை நாவலர் சைவமத பிரசாரத்திற்குக் கையாண்டார்.

கிறிஸ்தவ சமயத்தை எளிமையாக விளக்கும் முறையைக் கையாண்டு நாவலர் சைவ வினாவிடையை எழுதினார். 'உலகத்திற்குக் கர்த்தா யார்? சிவபெருமான். கர்த்தா என்ற வார்த்தையே பைபிளுடன் வந்த வார்த்தையே. தமிழ் மொழி நடையில் வடமொழி, ஆங்கில வர்த்தைகளை நாவலர் பயன்படுத்தினார். நீளமான வசனங்களை கடும் சொற்களுடன் எழுதினார். அதேவேளை ஆரம்பக்கல்விக்குப் பால பாடம் 1-4 பகுதிகளாக எழுதி வெளியிட்டார். இதுவும் கிறிஸ்தவ ஆரம்பக் கல்வியின் தாக்கமே.

கிறிஸ்தவ மிஷனரிமார் கல்வித்தகமை பெற்று, முதலாளித்துவ ஒழுங்கு முறைகளான சீருடை, ஞாயிறு முதல் குறிப்பிட்ட தெழுகைநேரம், கையில் பைபிள், அவற்றின் விளக்கவுரைகள், ஞானஸ்னானம், திருவிழா சம்பிரதாயங்கள் சைவ சமயத்திலும் கடைப்பிடிக்கப்படவேண்டும் எனக் கவலைப்பட்டார். நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தன் பிரசங்கத்தைக் கேட்க பிராமணர்கள் வரத்தவறியமையைக் கண்டித்தார். யாழ்பாணத்தில் பிராமணர் சைவவேளாருக்குக் கீழ்ப்படிந்தே வாழ்ந்தனர்.

நாவலர் பைபிளுக்குச் சமமாக புராண, இதிகாசக் கதைகளை ஒப்பிட்டுப் பிரசங்கம் செய்து வந்தார். சைவாகமங்கள் எனக் கூறப்படும் ஞான, யோக, கிரியா, காரியம் என்னும் நான்கு மார்க்கத்தில் கிறிஸ் தவம் கிரியா, காரியம் எனும் இரண்டையுமே கொண்டது என்பார்.

இத்தனைக்கும் சைவசமயக் கடவுள்கள், சிலைவணக்கம், இருமனைவியர், தேவதாசிகள் பற்றியெல்லாம் மிஷனரிமார் நாவலர் மீது எறிகணை வீசிக்கொண்டிருந்தனர். நாவலர் தன் பிரசங்கங்களில் விளக்கம் கூறி கிறிஸ்தவ சமயத்தைத் தாக்கியே வந்தார். திறனாய்வு, விமர்சனம் என்ற வார்த்தைகள் கிடையா. கண்டனம் என்ற கணையே எதிர்மதத்தவரிடையே வீசப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மதமாற்ற எதிர்ப்பியக்கம் யாழ் குடாவில் 1840 களிலேயே ஆரம்பித்துவிட்டது. சிங்களவரிடை ஓல்கொட் (Oldcott) போன்றோரின் எதிப்பியக்கம் 5, 6 தசாப்தம் கழிந்து 1900 வரையிலேயே ஆரம்பித்தது.

போர்த்துக்கீசர் ஆட்சியில் (1505- 1657) சைவ வேளாளர் கட்டி வணங்கி வந்த கோவில்கள் இடிக்கப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டையும் கிறிஸ்தவாலயங்களும் கட்டப்பட்டன. வேளாளரால் ஒதுக்கப்பட்டு கரையோரத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 'கரையார்' சாதியினரை கிறிஸ்தவத்தில் மதமாற்றம் செய்ததோடு அரசுப்பணிகளிலும் அவர்களை ஊக்கினர். ஒல்லாந்தர் (1658-1795) புரட்டஸ்தாந்து மதத்துடன் வந்துதும் 'கரையாரை' ஒதுக்கி விட்டு சாதிவேளாளரைத் தேர்ந்து ஊக்கினர். ஆரம்பக்கல்வியை கட்டாய இலவசமாக்கி யாழ்ப்பாணத்தில் மட்டும் 47 அரசுப் பாடசாலைகள் ஆரம்பித்தனர். பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியில் மானியம் நிறுத்தப்பட்டு 1840 வரையிலேயே மிஷனரிக் கல்வி விரிவாக்கப்பட்டது. 1850 வரையில் அமெரிக்க, வெஸ்லியன், சேர்ச் மிஷன்களில் 5500 மாணவர் கற்றதாக புள்ளி விபரங்கள் கூறும். அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சில சைவப்பாடசாலைகள், மானியமின்றி, பிடியரிசி பெற்று நடத்தப்பட்டன. அரசிடமிருந்து சைவப்பாடசாலைக் கல்விக்கு நாவலர் மானியம் வேண்டினார். பிறரையும் ஊக்கினார். கிறிஸ்தவ மிஷனரியையே நாவலர் எதிர்த்தார். வெள்ளையர் ஆட்சியை எதிர்க்கவில்லை. இந்தியாவிலும் 1885 இலேயே எதிர்ப்பியக்கமாக காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தனைக்கும் யாழ் குடாநாட்டில் 9 சத வீதமக்களையே கிறிஸ்தவ மதத்தில் மிஷனரியாரால் மாற்ற முடிந்தது.

**செ. கணேசலிங்கம்**

இக்கட்டுரைக்கு உதவிய நூல்கள்:

1. பொ. பூலோகசிங்கம் 'ஈழம் தந்த நாவலர்'
2. Young & Jebanesan "The Bible Trembled 1995".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியத்திற்கு எதிரான போராட்டங்களும் அவற்றின் வரலாற்றுப் படிப்பினைகளும்

தென்னாசிய நாடுகளில் சாதியம் இரண்டாயிரம் ஆண்டுகாலப் பழைய சுமையாக மட்டுமன்றி நீடித்த ஒடுக்குமுறையாகவும் இருந்து வந்துள்ளது. அதன் பிறப்பு வளர்ப்பு இந்தியப் பெருநிலப்பரப்பாகும். சாதியம் ஒரு அமைப்பாக மேலிருந்து கீழ்வரை படிநிலைப் படுத்தப்பட்ட ஒன்றாகவும் இருந்து வருகின்றது. மனிதர்களை மேலானவர்கள்-கீழானவர்கள், புனிதமானவர்கள்-தீண்டத்தகாதவர்கள் எனச் சாதியம் பாகுபடுத்தி நிரந்தரமாக வைத்துக் கொண்டது. சாதியம் பிறப்பின் வழியாக அடையாளம் பெறப்படும் ஒன்றாகி நிலைத்து இறுக்கமும் இருப்பும் கொண்டதாகியது. சாதியக் கருத்தியலும் அதன் வாயிலான சிந்தனா முறையும் தென்னாசிய சமூகங்களிலே வெவ்வேறு அளவுகளில் இருந்து வருகின்றன.

இத்தகைய சாதியமும் அதன் உடன் பிறப்பான தீண்டாமையும் இலங்கையில் இறுக்கமாகவும் முனைப்பாகவும் பின்பற்றப்படுவது தமிழர்கள் மத்தியில் என்பது வெளிப்படை. குறிப்பாக வடபுலத்துத் தமிழர்கள் மத்தியில் சாதியம் ஆழமாக வேர்பிடித்த ஒன்றாக இருந்து வருகின்றது. யுத்த சூழலுக்கும் புலம் பெயர்வுகளுக்கும் மத்தியில் அது நிலைத்து வருகின்றது. யாழ்ப்பாணக் கண்ணோட்டம் அல்லது யாழ்ப்பாணச் சிந்தனா முறை என்று கூறப்படுவதன் சாராம்சமாக விளங்குவது சாதியமேயாகும். தனித்துவமான இச் சாதியச் சிந்தனைப் போக்குக்கு உரிய விஷேட சூழல்பற்றிச் சிந்திக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் முன்னெடுத்த சைவ சமய மறுமலர்ச்சி இயக்கமானது சாதியத்தை மீளமைப்புச் செய்து அரணமைத்துக் கொண்டமையைச் சுட்டிக் காட்டாமல் இருந்து விடமுடியாது. நாவலரது இயக்கமானது மேட்டுக்குடியினர் நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமன்றி கீழ் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியிலும் சைவவேளாள ஆதிக்க சிந்தனா முறையை வலுப்படுத்தி ஆழமாக்கியது. முதல் தமிழ்த் தேசியவாத அரசியலில் சைவ-கிறிஸ்தவ வேளாள ஆதிக்கமாகவும் வெளிப்பாடடைந்ததை அவதானிக்க முடியும்.

இவ்வாறான ஒரு பின்புறத்தில் இருந்தே சாதியத்திற்கு எதிரான போராட்டங்களையும் அப்போராட்டங்களின் போது வர்க்க சக்திகள் வகித்த நிலைப் பாடுகளையும் நோக்குதல் வேண்டும். தமிழ்த் தேசியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்று ரீதியில் காணும்போது ஏறத்தாழ அதே காலப் பகுதியின் வளர்ச்சியோடுதான் சாதியத்திற்கு எதிரான இயக்கப் போக்குகளையும் போராட்டங்களையும் அடையாளம் காண முடிகிறது.

1920 களிலே யாழ்ப்பாண மாணவர்-வாலிபர் காங்கிரசின் தோற்றத்துடன் தீண்டாமைக்கு எதிரான இயக்கம் முளை கொள்ள ஆரம்பிக்கிறது. மேற்படி அமைப்பில் முன்னின்ற கல்வி கற்ற மாணவர்களும் இளைஞர்களுமான நடுத்தர வர்க்கக் குடும்பப் பின்னணி கொண்டவர்கள் தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களை தமது கொள்கைத் திட்டத்தில் ஓரம்சமாகச் சேர்த்திருந்தனர். அன்றைய வாலிபர் காங்கிரசில் கிறிஸ்தவ-சைவ இளைஞர்கள் முன்னணியில் நின்ற அதே வேளை காந்தியின் தலைமையில் இந்தியத் தேசிய காங்கிரஸ் நடாத்தி வந்த சுதந்திரப் போராட்டத்தின் வீச்சினால் கவரப்பட்டு உந்துதல் பெற்றவர்களாகவும் விளங்கினர்.

இவ்வாலிப காங்கிரசினரே காந்தியை யாழ்ப்பாணம் வரவழைத்து வரவேற்புக் கொடுத்தனர். பல இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் காந்தி உரையாற்றினார். இதனால் வாலிபர் காங்கிரஸ் பின்பற்றி நின்ற தேசியவாதக் கருத்துக்களும் தீண்டாமை எதிர்ப்பும் ஓரளவுக்குக் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது.

இவ்விடத்தில் குறிப்பிடக் கூடிய குறிப்பான விடயம் யாதெனில் வாலிபர் காங்கிரஸில் இணைந்து ஊக்கமுடன் செயற்பட்டவர்கள் அனைவரும் உயர்சாதியினர் எனக் கொள்ளப்படும் குடும்பங்களில் இருந்து வந்தவர்களாக இருந்தனர். இவர்களில் பலர் தீண்டாமையை வெறும் சொல்லளவில் அன்றி நடைமுறைச் செயலளவில் எதிர்த்து நிற்பவர்களாகக் காணப்பட்டனர். பிற்காலத்தில் தமிழ்க் காங்கிரஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சி, தமிழர் கூட்டணி போன்ற தமிழ்த் தேசியவாதத் தலைமைகளுடன் ஒப்பிடும்போது வாலிபர் காங்கிரஸ் தலைமையானது தீண்டாமை விடயம் உட்பட பல முனைகளிலும் முற்போக்கானதாகவும் அரசியல் நேர்மையுடையதாகவும் இருந்தது. அவர்கள் அவ்வாறு செயற்பட்டமைக்கு இரண்டு பிரதான அம்சங்கள் காரணமாயின. ஒன்று அவர்களில் தமிழ்த் தேசியத்தின் முற்போக்கான கூறுகள் வலிமை பெற்றிருந்தன. இரண்டாவது, அவர்கள் தேர்தல் அரசியலில் பங்கு கொள்ளும் நோக்கில் செயற்படாது சமூக அக்கறை சார்ந்து செயலாற்றி நின்றமையாகும்.

இவ்வாறு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முன்னெடுத்த தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும் செயற்பாடுகளும் தாழ்த்தப் பட்ட மக்களிடையே கல்வி கற்று நின்ற குறிப்பிடத்தக்க சிலரிடம் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அவ்வாறு கல்வி வாய்ப்பைப் பெற்ற ஒரு சிலர் கிறிஸ்தவர்களாக மாறிய தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் சிறிய அளவில் வசதி வாய்புப் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். அவ்வாறிருந்தும் கூட அவர்கள் சாதிய-தீண்டாமைக் கொடுமைகளை அனுபவித்தவர் களாகவே இருந்தனர்.

இத்தகையவர்களில் ஒருவர் யோவல் போல் ஆவார். இவர் கல்வி கற்ற ஓரளவுக்கு வசதியான கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான முதலா வது அமைப்பான 'ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர் ஆவார். அவரது அன்றைய துணிவான பல நடவடிக்கைகளுக்குத் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் காணப்பட்ட கல்வி கற்று அரசாங்க உத்தியோகங்களில் இருந்த சிலர் பக்கபலமாக இருந்தனர். அத்துடன் கிறிஸ்தவர்களாக இருந்த சில நல்லெண்ணம் கொண்ட உயர் சாதியினர் எனப்படுவோரும் ஆதரவு கொடுத்தனர்.

யோவல் போலும் அவரோடு இணைந்திருந்தவர்களும் இருபதுகளில் முப்பதுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக எடுத்த நடவடிக்கைகள் ஆரம்பப் பொறிகளும் துணிவு கொண்டவை களுமாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் ஆரம்ப விழிப்புணர்வு அரும்பி வந்தமையைத் தமிழ் மேட்டுக்குடியினரும் சாதியத் திமிரில் ஊறித் திளைத்தவர்களும் எதிர்த்து நின்றனர். இவர்களது நோக்கையும் போக்கையும் அவர்களது அரசியல் பிரதிநிதியான சேர். பொன்னம்பலம் இராமநாதன் நன்கு பிரதிபலித்தார். யாழ்பாணத்திற்குப் புகையிரதம் கொண்டு செல்லப்பட்ட வேளை அதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிப்பெட்டி ஒதுக்கப்படல் வேண்டும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத்துரை நிர்வாகத்திடம் வேண்டிக் கொண்ட சீமான் இராமநாதன் ஆவார். இருபதுகளில் பிற்கூறிய அரசியல் சீர்திருத்தம் செய்வதற்கான டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வந்து அபிப்பிராயம் சேகரித்து வந்தது. அவ்வேளை இதே பொன்னம்பலம் இராமநாதன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்பதை வற்புறுத்தியவர் ஆவர். சர்வசன வாக்குரிமையை எதிர்த்தார் என்பதும் வரலாறு.

அவ்வேளை யோவல் போல் தலைமையிலான ஒரு தூதுக் குழுவினர் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக டொனமூர் ஆணைக்குழு முன் தோன்றி சர்வசன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் தேர்தல் முறைமையில் அவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தினர். சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதே தவிர வேறு எந்தச் சலுகையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை.

மேலும் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சாதிய-தீண்டாமைப் புறக்கணிப்புகளுக்கு உள்ளாகி வந்தனர். இதற்கு எதிராக யோவல் போல் தலைமையிலும் வாலிபர் காங்கிரசும் குரல் கொடுத்து சமத்துவம் கோரினர். அரசாங்கம் 1931ல் சமஆசனம் சம போசனம் சட்டத்தைக் கொண்டு வந்து பாடசாலைகளில் அமுல்படுததியது. இச் சட்டம் மிசனரிப் பாடசாலைகளிலே அமுலாக்கப்பட்டது. ஏனைய சைவத் தமிழ்ப்பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படாத நிலையே அன்று நிலவியது. அந்நிலை நாவலர் மரபின் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முப்பதுகளில் நடுக்கூற்றுக்குப் பின் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான மேட்டுக்குடி சைவ வேளாள ஆதிக்கம் கொண்ட தமிழ்த் தேசியவாதத்தால் மூழ்கடிக்கப்பட்டது. வாலிபர் காங்கிரசின் ஒரு பிரிவினர் அந்த அலையின் பின்னால் சென்றனர். வேறு சிலர் ஒதுங்கிக் கொண்டனர். ஹண்டி பேரின்பநாயகம், ஒறேற்றர் ஸி. சுப்பிரமணியம், பி. நாகலிங்கம் போன்ற செயற்பாட்டாளர்கள் இடதுசாரிச் சிந்தனைப் பரப்பிற்குள் வந்து கொண்டனர். தீண்டாமைக்கு எதிரான ஆரம்ப பொறியைப் பற்ற வைத்தலில் வாலிபர் காங்கிரசிற்கும் யோவல் போல் முன்னெடுத்த இயக்கத்திற்கும் உள்ள வரலாற்று முக்கியத்துவத்தை இலகுவில் மறுத்துவிட முடியாது.

சாதிய-தீண்டாமைக்கு எதிரான கருத்து நிலையானது நாற்பதுகளின் ஆரம்பத்துடன் புதிய கட்டத்தினுள் பிரவேசித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. அதுவரை இருந்து வந்த களத்தை விட்டு நடவடிக்கைகளாக முன்னெடுக்க விரும்பியவர்கள் மத்தியில் தனி அமைப்பினூடாகச் சாதியத் தீண்டாமைக்கு எதிரான இயக்கப் போக்கு வெளிப்பாடடைந்து கொண்டது. சிறுபான்மைத் தமிழர் மகாசபை அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களினதும் அமைப்பாக உருவாக்கப்பட்டது. இது முழுக்க முழுக்கத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்தே அதன் தலைமை தோற்றம் பெற்றது. அதிலும் நகரம் சார்ந்தவர்களே முன்னின்றனர். அவர்கள் கல்வி அறிவும் உத்தியோகமும் பெற்றவர்களாக விளங்கினர்.

1944ல் யாழ்-வில்லூன்றி மயானத்தில் தாழ்த்தப்பட்டோரின் பிரேதம் எரிப்பதற்கு அன்றுவரை மறுக்கபட்டு வந்த உரிமையை நிலைநாட்டும் வகையில் துணிவு மிக்க மீறல் நடவடிக்கையாக மேற்படி மயானத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவரின் பிரேதம் எரிக்கப்பட்டது. அதனைப் பொறுக்கமுடியாத சாதி வெறியர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் முதலி சின்னத்தம்பி என்பவர் கொல்லப்பட்டார். இப்படுகொலைச் சம்பவம் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கடுமையான உணர்வலைகளைக் கருத்தளவில் ஏற்படுத்தியது. அத்துடன் மகாசபையின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு தீவிரம் அடைந்து கொண்டது.

அதேவேளை 1945ல் பொதுவுடமைக் கட்சியை தோழர் மு.கார்த்திகேசன் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகம் செய்து வைத்து செயலாற்ற ஆரம்பித்தார். பொதுவுடமைக் கட்சி சாதி-தீண்டாமை காரணமாக ஒடுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் தனது கவனத்தைக் குறித்து வேலைகளை விஸ்தரித்துக் கொண்டது. பொதுவுடமை அரசியலால் கவரப்பட்டு தொழிலாளர்கள் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர், மற்றும் கல்வி கற்ற அறிவு ஜீவிகளும் பொதுவுடமைக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டனர். சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இருந்த முக்கியமானவர்கள் பொதுவுடமைக் கட்சியின் தீவிர செயற்பாட்டாளர்களாக மாற்றம் பெற்றனர். எம்.சி. சுப்பிரமணியம் மகாசபையின் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் நிர்வாகத்தில் பொதுவுடமைக் கட்சியினர் இருந்தனர். அதனால் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அமைப்பாக இருந்த அதேவேளை பொதுவுடமைக் கட்சியின் வழிகாட்டலில் செயற்படும் ஒன்றாகவும் திழ்ந்தது.

ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் சாதியத்திற்கும் எதிரான இயக்கப் போக்கு வேகமடைய ஆரம்பித்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர் நோக்கி நின்ற பொருளாதார சமூக கல்விப் பிரச்சினைகளுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டன. வேலை வாய்ப்பிலும் நியமனங்களிலும் கடைபிடிக்கப்பட்ட பாகுபாடுகளுக்கு எதிராகவும் கல்வித்துறையில் காணப்பட்ட புறக்கணிப்புகளை எதிர்த்தும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிராமப்புறங்களில் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

ஐம்பதுகளின் நடுக்கூறிலே யாழ்ப்பாண நகரப் பகுதியில் அமைந்துள்ள தேனீர்-உணவகங்களில் சமத்துவத்திற்கான போராட்டத்தை மகாசபை பொதுவுடமைக் கட்சியின் வழிகாட்டலில் முன்னெடுத்தது. அதன் தாக்கத்தினால் நகரத்தின் தேனீர்-உண வகங்களும் சில பிரசித்தி பெற்ற ஆலயங்களும் திறந்துவிடப்பட்டன.

அக்கால கட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட இயக்கங்கள் போராட்டங்களில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனி அமைப்பாகவே விளங்கியமை ஒரு வகையான சாதிவாதப் போக்கில் அமைந்திருந்ததையே எடுத்துக் காட்டியது. அவ்வாறே பொதுவுடமைக் கட்சியின் வழிகாட்டலும் தலைமை வழங்கியமையும் பாராளுமன்றக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. வர்க்கப் போராட்டத்தை அக்கட்சி ஏற்றுக் கொண்ட போதிலும் அதன் அடிப்படையில் சாதியத்தையும் தீண்டாமையையும் அணுகி ஆராய்ந்து கொள்ளவில்லை. அதனால் பொதுவுடமைக் கட்சி தனது சொந்தப் போராட்டமாக முன்னெடுப்பதை தவிர்து வந்தது.

இருப்பினும் தமிழ்த் தேசிய வாதக் கட்சிகள் சாதியத்தையும் தீண்டாமையையும் தமது வேலைத்திட்டங்களில் முக்கிய அம்சமாகச் சேர்த்துக் கொள்ளத் தவறிய சூழலில் பொதுவுடமைக் கட்சி ஏனைய இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடன் அதனை முதன்மைப்படுத்தி நின்றமை முக்கியமான கவனத்திற்குரியதொன்றாகும்.

1963ல் இலங்கைப் பொதுவுடமைக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. பாராளுமன்றப் பாதை, புரட்சிப் பாதை என கட்சி இரண்டாகிக் கொண்டது. முன்னையவர்கள் பாராளுமன்றச் சமரசப் பாதையில் தொடர்ந்து சென்றனர். பின்னையவர்கள் தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் புரட்சிகரப் பாதையில் தமது பயணத்தை வேகப்படுத்திக் கொண்டனர்.

அன்றைய யாழ்குடாநாட்டுச் சமூக சூழலில் சாதிய ஒடுக்குமுறை கூர்மையடைந்து பகை முரண்பாடாக வளர்ச்சி பெற்றிருந்தது. அம் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான போராட்டம் தேவைப்பட்டது. தனி மனிதர்களோ அவர்களின் வீரதீரமோ ஒரு சமூக முரண்பாட்டைத் தீர்ப்பதற்குரிய வழிமுறையல்ல. ஒரு புரட்சிகரமான கட்சியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வகுத்துக் கொள்ளும் கொள்கையும் துணிவாற்றல் மிக்க தலைமையும் தேவைப்பட்டது. அத்தகைய கட்சியாலேயே வரலாறு வேண்டி நிற்கும் கடமையைக் கையேற்று வரலாற்றின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

இத்தகைய சூழலிலேயே 1964-65 காலப் பகுதியில் தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான பொதுவுடமைக் கட்சி சாதிய-தீண்டாமைக்கு எதிரான போராட்டத்திற்கான கொள்கையை வரையறை செய்வதில் ஈடுபட்டது. இச் சந்தர்ப்பத்திலேயே அப்போராட்டத்திற்குரிய தலைமைத்துவம் அரசியல் மார்க்கம். வர்க்க சக்திகள் பற்றிய கணிப்பு, அமைப்பு ரீதியான முன்னெடுப்பு, போராட்ட தந்திரோபாயம் போன்றன விவாதிக்கப்பட்டன. இவற்றின் அடிப்படையிலேயே 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சி தோற்றுவிக்கப்பட்டது.

1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சியும் அதனைத் தொடர்ந்து புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களும் தற்செயலானவையோ அன்றித் திடீரென ஏற்பட்ட தன்னிச்சையானவையோ அல்ல. அவை வரலாற்று வளர்ச்சியில் சாதிய ஒடுக்குமுறைக்கும் தாழ்த்தப்பட மக்களுக்குமான முரண்பாட்டின் உச்சநிலையில் வெடித்தெழுந்த போராட்டமாகும். அப்போராட்டங்கள் (1966-1972) தமிழ் மக்களில் மூன்றிலொரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சமூக அந்தஸ்தையும் தேடிக் கொடுத்தது.

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்ற அஹிம்சை நிலைக்குப் பதிலாகச் சாதி வெறி கொண்டு அடித்தால் அதற்குப் பதிலாக திருப்பி அடிப்பதே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னாலுள்ள போராட்டக் கடமை என்பதையே பொதுவுடமைக் கட்சி தனது புரட்சிகர அறைகூவலாக முன்வைத்தது. அதுவே வர்க்க உணர்வு கொண்ட வெகுஜனப் போராட்டப் புயலாக வீறுடன் எழுந்து கொண்டது.

இப்போராட்டம் பாராளுமன்றப் பாதையிலும் அஹிம்சைப் போராட்டத்திலும் முடங்கிக் கிடந்த தமிழர் போராட்டத்தை புதிய கட்டத்திற்கான போராட்டச் சிந்தனைகளுக்கும் வழிவகுத்துக் கொடுத்தது. அதேவேளை சாதியத்தால் பிளவுண்டு கிடந்த தமிழ்த் தேசிய இனம் பேரினவாத ஒடுக்குமுறைக்கு முகம் கொடுப்பதற்கும் குறைந்தபட்ச ஒற்றுமை அடைவதற்கும் வழிவகுத்தது. ஆனால் அவ்வொற்றுமை மிக மேலெழுந்தவாரியானது என்பதை தமிழ்த் தேசியவாதப் போராட்டம் கடந்த இருபது ஆண்டுகளில் நிருபித்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தேசிய சர்வதேசிய சூழல் புரட்சிகரப் போராட்டங்கள் பரவலாக வெடித்தெழுந்த முன்செல்லும் போக்காக அமைந்திருந்தது. அப் போராட்டங்களில் எல்லாம் பொதுவுடமைக் கட்சிகளே புரட்சிகரமான தலைமைப் பாத்திரத்தைத் தாங்கி நின்றன. அதன் வழியில் சாதிய ஒடுக்கு முறைக் கெதிரான போராட்டத்தைப் பொதுவுடமைக் கட்சி நேரடியாகவே தனது கைகளுக்கு எடுத்துக் கொண்டது. கட்சி தானே தலைமை தாங்கி முன்செல்ல முடிவு செய்து கொண்டது.

அதற்குரிய அரசியல் மார்க்கமாகப் புரட்சிகர வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானித்தது. அரசியலை முதன்மைப்படுத்தியும் சகல போராட்ட வடிவங்களையும் (ஆரம்ப நிலை தொட்டு உயர்த்திக் காட்ட வரை வடிவம்) பயன்படுத்தவும் தீர்மானித்தது.

இத்தகைய ஒரு போராட்டத்தில் வர்க்க சக்திகள் பற்றிய கண்ணோட்டம் பிரதானமாகியது. எதிரி யார்? நண்பர்கள் யார்? என்பது நிதானமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. சாதியாலும் தீண்டாமையாலும் ஆண்டாண்டு காலம் ஒடுக்கப்பட்டு வந்த தாழத்தப்பட்ட மக்களே போராட்டத்தின் பிரதான புரட்சிகர சக்தியாக அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் சாதியத்தால் மட்டுமன்றி வர்க்க ரீதியிலும் ஒடுக்கப்பட்டு வந்தமையால் அவர்களிடம் காணப்படட சாதிய-வர்க்க உணர்வுகள் மிக நிதானமான புரட்சிகரப் போராட்ட உணர்வுகளாக ஒருமுகப்படுத்தப்பட்டன. இவ்விடத்திலே சாதிவாதம் தலைதூக்காது தவிர்த்துக் கொள்ளப்பட்டது.

அதன் காரணமாகவே மேட்டுக்குடிச் சாதிய வெறி கொண்டவர்கள் மட்டுமே எதிரி எனச் சுட்டப்பட்டனர். அவர்களுக்குத் துணையாக அரசயந்திரம் நிச்சயம் செயல்படும் என்பதையும் கட்சி தெளிவுபடுத்தியிருந்தது. அதேவேளை சாதியம்-தீண்டாமைக்கு எதிராகக் குரல்தரக்கூடிய அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும் அரவணைக்கப்பட்டன. அப் போராட்டத்தில் நடுநிலை எனக் கூறிக் கொண்ட பிரிவினரைக் கூட போராட்டப் பக்கம் வந்து கொள்வதற்கான நிதானம் மிக்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. தொழிலாளர்கள் விசாயிகள் நடுத்தர வர்கத்தின் நேர்மையான சக்திகள் மற்றும் கல்வியாளர்கள். அறிவுஜீவிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூக அக்கறையாளர்கள் போன்றோர் இப்போராட்டங்களின் நட்பு சக்திகளாக்கப்பட்டனர். இப்போராட்டங்களில் மேட்டுக்குடியினர், மேல் நடுத்தர வர்க்கத்தினர், நடுத்தர வர்க்கத்தினரில் ஒரு பிரிவினர் ஆகியோரைப் பிரதிநிதித்துவம் செய்த தமிழ்த் தேசியவாத அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகள் நேர் விரோதமாகவே இருந்து வந்தன. அவர்கள் அப்போராட்டங்களை அலட்சியப்படுத்திக் கொண்டதுடன் அரசாங்கத்தினதும் அரசு யந்திரமான பொலீசுடனும் இணைந்து நின்றனர். இந்நிலைப்பாடு வெறுமனே பாராளுமன்ற வெற்றியுடன் மட்டும் சம்பந்தமுடையதாக இருக்கவில்லை. அவர்கள் வர்க்க அரசியல் நிலைப்பாட்டுடனும் இணைந்து இருந்தது.

1966ல் முன்னெடுக்கப்பட்ட சாதியம்-தீண்டாமைக்கு எதிரான போராட்டத் தலைமையை மாக்சிச லெனினிஸப் பொதுவுடமைக் கட்சி கையேற்று நின்ற அதேவேளை சகல ஜனநாயக முற்போக்கு நல்லெண்ணம் கொண்ட சக்திகளையும் ஐக்கியப் படுத்திப் பரந்த போராட்டக்களமாக மாற்றும் அவசியத்தைக் கட்சி உணர்ந்து கொண்டது. அதன் காரணமாகவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்னும் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இவ் அமைப்பு முன்னைய அமைப்புகள் போன்று தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் பங்கு கொள்ளக் கூடிய சாதிவாத வரையறை கொண்ட ஒன்றாக இருக்கவில்லை. சாதியம்-தீண்டாமையை எதிர்த்து நின்ற அனைத்து நேர்மையான சக்திகளையும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உள்வாங்கி நின்றது. அதன் முதலாவது மாநாடு 21.10.1967ல் யாழ்-மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. அதன் தலைமைக் குழுவில் எஸ்.ரி. என். நாகரட்ணம், கே. டானியல், எம். சின்னையா, சி.கணேசன் போன்றவர்களுடன் மான் எம். முத்தையா, டாக்டர்.சு.வெ. சீனிவாசகம், கே.ஏ.சுப்பிரமணியம் போன்றவர்கள் இடம்பெற்றிருந்தனர். அவர்களில் யார் 'தாழ்த்தப்பட்டவர்' யார் 'உயர்சாதியனர்' என்ற பிரச்சினையே எழவில்லை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமைக் குழுவில் கட்சியின் பிரதிநிதியாக இருந்து செயற்படுவதற்கு தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தோழர் நா. சண்முகதாசன் அப்போராட்டங் களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் கட்சித் தலைமையினை வகித்து நின்றார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போராட்டங்கள் மிக கவனத்துடன் நிதானமாகவும் திட்டமிடப்பட்ட தந்திரோபாயங்கள் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டன. எந்தவொரு சந்தர்பபத்திலும் அப் போராட்டங்கள் கொள்கை ரீதியில் குறுகிய சாதிவாதப் போக்கில் செல்ல விடாது பார்த்துக் கொள்வதில் கட்சி கண்ணும் கருத்துமாக இருந்தது. போராட்ட உச்சக்கட்டங்களில் ஏற்பட இருந்த பிறழ்வுகள் அடையாளம் காணப்பட்டு உடனுக்குடன் திருத்தப்பட்டன. ஒன்று இரண்டு சம்பவங்கள் தவிர்க்க முடியாதவையாகினபோது அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய கடும் விமர்சனங்களை முன்வைத்ததன் மூலம் சரி செய்யப்பட்டன.

மேலும் இப்போராட்டங்களின் போது பல்வேறு வகையான போராட்ட அணுகு முறைகளும் பயன்படுத்தப்பட்டன. மகஜர் கையளிப்பது, பிரச்சினைகளை அம்பலமாக்குதல், சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், பொதுக்கூட்டம், கருத்தரங்குகள், துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள், கவியரங்குகள், நாடகங்கள் உட்பட பன்முக இயக்கங்கள் ஒரு முனைநோக்கில் செலுத்தப்பட்டன. உயர்ந்த கட்டப் போராட்டமாக ஆயுதம் தாங்கிய போராட்டம் எல்லைக்குட்பட்ட வழிகளில் விட்டுக் கொடுக்காத போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறான ஒரு போராட்டத் தந்திரோபாயத்தின் காரணமாகவே சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்தில் குறைந்தளவு உயிர்த் தியாகங்கள் இழப்புகள் மூலம் தாழ்த்தப்பட்ட 5 லட்சம் தமிழ் மக்கள் அன்றுவரை பெறப்படாது இருந்து வந்த அடிப்படை ஜனநாயக-மனித உரிமைகளை வென்றெடுத்து நிலைநாட்டப்பட முடிந்தமை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய தொன்றாகும். அப் போராட்டங்களின் போது பதினைந்து போராளிகள் தமது இன் உயிர்களைத் தியாகம் செய்தனர். நூறுபேருக்கு மேல் படுகாயங்கள் அடைந்து இப் போராட்டங்களுக்கு தமது இரத்தத்தைச் சொரிந்தனர்.

1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சி எனக் குறிப்பிடப்படும் வரலாற்று நிகழ்வு பொலீஸ் விதித்த தடையை மீறிய ஊர்வலமாகவும் பொதுக் கூட்டமாகவும் அமைந்திருந்தது. அதனை பொதுவுடமைக் கட்சியே ஏற்பாடு செய்திருந்தது. ஊர்வலத்திற்கான செம்பதாகையாக 'சாதியமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்பதாகவே அமைந்திருந்தது. பாராளுமன்றப் பாதையை நிராகரித்து நின்ற காரணத்தினால் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை வர்க்கப் போராட்டத்தின் புரட்சிகரப் பாதையில் முன்னெடுக்க முடிந்தது. அதற்கான கொள்கை வகுப்பில் கட்சிக்குள் பலதரப்பட்ட வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன. சாதியப் போராட்டத்தை கையேற்பதால் உயர் சாதியினர் எனக் கூறப்படும் மக்கள் மத்தியிலிருந்து தனிமைப்பட நேரிடும் என்னும் பாராளுமன்றக் கண்ணோட்டத்திலான கருத்துக்களும் எழவே செய்தன. ஆனால் இறுதியில் சாதிக்கும் வர்க்கத்திற்குமிடையிலான உறவு பற்றியும் பொதுவுடமைக் கட்சியின் வரலாற்றுக் கடமை பற்றியும் கட்சிக்குள் தெளிவான முடிவு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாகவே 'சாதியமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்று உறுதியாக முழக்கமிட முடிந்தது. ஆனால் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுத் தீண்டாமைக்கு எதிரான நடைமுறைப் போராட்டங்களுக்கான முழக்கமாக 'அடிமை குடிமை முறை ஒழியட்டும், ஆலய தேனீர்க்க கடைகள் திறக்கட்டும்' என முன்வைக்கப்பட்டது. இதன் மூலம் பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட முடிந்தது.

இப்போராட்டங்களின் போது வகுக்கப்பட்ட போராட்ட தந்திரோபாயங்கள் கூர்ந்து நோக்கத்தக்கதாகும். இக் காலகட்டத்தில் வெகுஜன இயக்கம் பொதுவுடமைக் கட்சியின் வழிகாட்டலில் முன்னெடுத்த போராட்டங்களைத் திசை திருப்புவதற்கு சில சீர்குலைவு சக்திகள் முயன்றன. அத்தகையோர் தலைமுடி வெட்டும் நிலையங்கள், சலவை நிலையங்கள் போன்றவற்றில் சமத்துவம் கோரிப் போராடப் போவதாகக் கூறி நின்றனர்.

இதனைப் பொதுவுடமைக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. இத்தகைய நடவடிக்கைகள் பிரதான போராட்ட மார்க்கத்தைத் திசை திருப்பி ஒன்றுபடவேண்டிய மக்களைப் பிரித்து அவர்களுக்குள்ளேயே மோதல்களை உருவாக்கிவிடும் எனச் சுட்டிக் காட்டியது. அதேவேளை பெரும் ஆலயங்களில், பிரதான நகரங்களில் உள்ள தேனீர் உணவகங்களில் போராட்டங்கள் மூலம் சமத்துவம் பெறப்பட்டால் ஏனைய இடங்களில் சமத்துவதைப் பெறுவது சுலபமாகிவிடும் என்பதையே போராட்டத் தந்திரோபாயமாகக் கட்சி முன்வைத்தது. அதுவே தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் வெற்றி அடைவதற்கான நடைமுறைகளாகியும் கொண்டன.

1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சி உருவாக்கிய புரட்சிகரப் போராட்டங்கள் வடபகுதி பூராவும் பற்றிப் பரவி நின்றன. அவை குடாநாட்டிற்கு வெளியேயும், தென்னிலங்கையிலும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணின. 1956ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பெயரளவிலான சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் என்பது கூட இப் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் மூலமே பலருக்கு நினைவு படுத்தப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்திக் கொள்ள போராட்டமே தேவைப்பட்டது. வெறும் சட்டங்களால் ஒடுக்கு முறைகளை அகற்ற முடியாது என்பது நடைமுறையில் உறுதியானது. போராட்டங்களின் தீவிரத்தால் பிரசித்தி பெற்ற ஆலயங்களும் சகல நகரங்களிலுமான தேனீர் உணவகங்கள் சமத்துவமாகத் திறந்து விடப்பட வேண்டியதாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போராட்டமானது வடபகுதியின் நிலவுடமைப் பழமை வாதிகளையும் சாதியத் திமிரில் ஊறித் திளைத்தவர்களையும் நிலைகுலையச் செய்தது. அதே வேளை தொழிலாளர்கள். விவசாயிகள் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் ஒருவகை உத்வேகத்தை அளித்தது. ஏகாதிபத்திய எதிப்பாளர்களை உற்சாகமடையச் செய்தது.

இப்போராட்டங்கள் இடம்பெற்ற அதே சமகாலப்பகுதியில் மிகப் பலமுடைய தொழிற்சங்க இயக்கம் கட்டியெழுப்பப்பட்டது. பல வேலை நிறுத்தங்களும் அவை சார்ந்த போராட்டங்களும் இடம்பெற்றன. இவற்றைப் பொதுவுடமைக் கட்சியே தலைமை தாங்கியது. அவ்வாறே ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களுடன் அன்றைய தமிழ்க கட்சி இணைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிரான பல்வேறு போராட்டங்களும் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டன.

இவையனைத்தும் குறுகிய நிலைப்பாடுகளுக்கு அப்பால் வர்க்க சக்திகளின் ஐக்கியத்துடன் ஒன்றுக்கொன்று அனுசரணையுடைய போராட்ட இயக்கங்களாக முன்னெடுக்கப் பட்டன.இக்காலகட்டத்தின் பல்முனைப் போராட்டங்களை நோக்கும் போது அவை பொதுவுடமைக் கட்சியினால் தலைமை தாங்கப்பட்ட புரட்சிகரப் போராட்டங்களாகவே அமைந்திருந்தன. அங்கே சாதிவாதம் மேல் எழும்பவில்லை. அதற்குப் பதிலாக வர்க்கக் கண்ணோட்டமே அரசியல் தளத்தில் மேலோங்கி நின்றது. இதன் காரணமாக சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வானது பரந்த போராட்டங்களின் மூலம் ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தின் காரணமாகவும் பொதுவுடமைக் கட்சியின் தலைமையினாலும் வர்க்க உணர்வாக மாற்றமடைந்து காணப்பட்டது. இதனால் இப் போராட்டங்களின் தலைமைப் பாத்திரங்களில் நின்றவர்கள் தொட்டுப் போராளிகள் வரை எவர் எவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்பது அன்று அடையாளம் பெறாத நிலையே காணப்பட்டது. போராட்டங்களில் உயர்சாதி இளைஞர்கள் மட்டுமன்றி முஸ்லீம்களும் இணைந்திருந்தனர். சில முக்கிய சந்தர்ப்பங்களில் முற்போக்கான பௌத்த பிக்குகள் கூடப் பங்களிப்புச் செய்தனர். சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்கிகளும் அறிவுஜீவிகளும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினர்.

சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் என்பது பரந்த வெகுஜன அடிப்படையில் சரியான கொள்கை, உறுதியான தலைமைத்துவம், வெற்றி பெறக் கூடிய தந்திரோபாயம் போன்றவற்றின் மூலம் முன்னெடுக்கப்பட்டது, சாதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுறைக்கெதிராக எவ்வாறு மக்களைக் கிளர்ந்தெழச் செய்வது என்பதில் பல்வேறுபட்ட வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டன. மக்கள் புரட்சிகரப் பாதையில் வழிநடத்தப்பட்டதால் அவர்களுக்குப் போராட்ட சக்தியின் எல்லை எவ்வளவு விரிவானவை என்பதையும் காண முடிந்தது. நியாயமான கோரிக்கைகளும் அவற்றுக்குரிய நீதியான போராட்டங்களும் வெற்றிகளும் முன்னுதாரணமாகிக் கொண்டன. அதனாலோயே தமிழர்களுடைய வரலாற்றில் அவை பெரும் திருப்பு முனையாகி வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டன.

எழுபதுகளின் நடுக்கூறிலே தமிழ் இளைஞர்கள் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதற்கும் அதனைத் தொடர்ந்து ஆயுதம் ஏந்துவதற்கும் நடைமுறை ரீதியான உந்துதலை வழங்கியது பொதுவுடமைக் கட்சி முன்னெடுத்த சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டத்தில் வகுக்கப்பட்ட கொள்கைகளும் போராட்டத் தந்திரோபாயங்களும் எதிரி யார்? நண்பன் யார்? என்ற வரையறுப்புகளும் உரியவாறு அமைந்திருக்கவில்லை. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் வகுக்கப்பட்ட கொள்கைகளும் போராட்டத் தந்திரோபாயங்களும் எதிரி யார்? நண்பர்கள் யார்? என்ற வரையறுப்புகளும் உரியவாறு அமைந்திருக்கவில்லை. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஆயுதங்கள் தூக்கப்பட்டதையும், அடிக்குப்பதில் அடிதான் சரியான பாதை என்பதனையும் மட்டுமே தமிழ் இளைஞர்கள் தமது கவனத்திற்கு எடுத்துக் கொண்டார்களே தவிர கோட்பாடு, கொள்கை, நடைமுறை, தலைமைத்துவம் என்பவற்றில் முற்று முழுதான சிறு முதலாளித்துவ அதி தீவிர வாதத்தையே கொண்டிருந்தனர். அத்துடன் வெறும் ஆயுத மோகத்தால் அள்ளுண்டவர்களாகவும் ஆகிக் கொண்டனர்.

முன்பு தமிழ்த்தேசியத்தை நிலவுடமை மேட்டுக்குடியினரிடமிருந்து அவர்களின் வழிவந்த நிலவுடமை முதலாளித்துவ தமிழ்த் தலைமைகள் பாராளுமன்ற அரசியல் ஊடாகக் கையேற்றனர். அவர்கள் சிங்கள பெருமுதலாளித்துவ தேசிய முதலாளித்துவ சக்கதிகளோடு இணைந்தும், அகிம்சைப் போராட்டம் என எதிர்த்து வந்த போதிலும் அவர்களால் இன ஒடுக்குமுறையிலிருந்து தமிழ் மக்களை மீட்க முடியவில்லை.

இத்தலைமைகள் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்திற்கு முழுமையான தமது எதிர்ப்பையே கொண்டிருந்தனர். இப் போராட்டங்கள் பற்றிய சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எடுத்தரைத்த போது தமிழ் உறுப்பினர்கள் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்துக் கொச்சைப்படுத்தியே தமது உரைகளை ஆற்றியிருந்தனர்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதங்கள் ஏந்திய பின்பு தமிழ்த் தேசியவாதம் சிறு பெருமுதலாளித்துவ வர்க்க சக்திகளின் தலைமையில் மேலெழுந்தது. அதற்கேயுரிய வர்க்க நிலைப்பாட்டையே அது வகித்து நின்றதே தவிர சாதிய ஒடுக்குமுறை என்பதில் அடிப்படை மாற்றத்தை அதனால் ஏற்படுத்த இயலவில்லை. இந்நிலை தற்செயலான ஒன்றல்ல. அது வர்க்க அடிப்படையைக் கண்டு கொள்ள மறுக்கும் தேசிய வாதத்தின் கோளாறு பாற்பட்டதாகும்.

இவ்விடத்திலேதான் தேசியம், தலித்தியம், பெண்ணியம் பற்றி உரத்துக் கூறி வருவோரின் வர்க்க நிலைப்பாடும் செயற்பாடும் தெளிவடைகின்றது. தேசியம் பேசிக் கொண்டே பெரு முதலாளித்துவத்தோடும் ஏகாதிபத்தியத்தோடும் சமரசம் காண முடியுமாகிறது. தலித்தியம் பேசிக் கொண்டு இந்திய முதலாளித்துவத்துடனும் மட்டுமன்றி இந்துத்துவத்தோடு கூடச் சமரசம் செய்து கொள்ள முடிகிறது. தலித்தியம் பேசி நின்ற தலைமைகள் தமது வர்க்க வளர்ச்சிக்கும் அதன் மூலமான மேல்நிலையாக்கத்திற்கும் உரிய பாதையில் வழி நடந்ததையே காண முடிந்தது.

நமது நாட்டின் சொந்த அனுபவத்திலிருந்து நோக்கும்போது சாதி ஒடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்களின் வரலாற்று வளர்ச்சியில் *1966* ஒக்டோபர் *21* எழுச்சியானது வர்க்கப் போராட்டப் பாதையில் பரந்த வெகுஜனப் புரட்சிகர போராட்டங்களுக்குச் சரியானதோர் திசை காட்டியாகவே அமைந்து கொண்டமையைக் காண முடியும்.

அப் பெரும் போராட்டத்தில் பங்களித்த ஒவ்வொருவரையும் வரலாறு என்றும் நினைவில் வைத்திருக்கும் அத்தகையவர்களில் ஒருவர் தோழர் கே. டானியல். அவரது அரசியல் இலக்கிய பொது வாழ்வு பற்றிய கருத்துக்களில் முரண்பாடுகள் சில இருப்பினும் அவரது பாரிய பங்களிப்பை மறுப்பது அல்லது நிராகரிப்பது மார்க்சிய அணுகுமுறையாக இருக்க முடியாது.

தோழர் கே. டானியல் தனது வாழ்நாள் முழுவதும் சாதிய ஒடுக்குமுறையை எதிர்த்து இறுதிவரை சமரசமற்ற நிலைப் பாட்டிலிருந்து எதிர்த்துப் போராடி வந்தவர். அவர் தனது இளம் பருவத்தில் பொதுவுடமை இயக்கத்தில் இணைந்து அதன் அரசியல் ஊழியராகி வடபிரதேசத்தின் தலைமைக் குழுவில் அங்கம் பெற்று வர்க்கப் போராட்டப் பாதையில் அரசியல் போராளியாகப் போராடி நின்றவர். அதன் காரணமாக அவர் அமைப்பு ரீதியில் செயல்படுபவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகவும், சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நின்ற மக்கள் மத்தியில் அவர்களது அடிநிலை வாழ்க்கை வரை சென்றதன் மூலமே பொதுவுடமைக் கட்சியினால் அம் மக்களை உணர்வுபூர்வமாக ஒன்றிணைத்து அணிதிரட்ட முடிந்தது. இதில் டானியலின் செயற்பாடு சிறந்த முன்னுதாரணமாக இருந்ததைக் காண இயலும். அதன் காரணமாகவே டானியலின் எழுத்துக்களும் அவரது மேடைப் பேச்சுக்களும் மக்களிடமிருந்து பெற்று மக்களுக்கு வழங்குவதாக அமைந்திருந்தது.

டானியலின் முழுமையான பங்களிப்புப் பற்றி ஆய்வுக்கு உட்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமன்று.

ஆனால் இலங்கையில் சாதியத்திற்கு எதிரான போராட்ட வரலாற்றில் டானியல் பொதுவுடமை மார்க்கத்தில் நின்று ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலமாகப் போராடி வந்தவர். அவரது ஆற்றல்கள் பொதுவுடமைக் கட்சியாலும் மக்கள் போராட்டங்களாலும் புடமிடப்பட்டு வளர்ச்சி கண்டன. அதேபோன்ற அவை வெகுஜனப் போராட்டங்களுக்கு வலிமை சேர்த்து நின்றன.

இலங்கைத் தமிழர் மத்தியில் நீடித்து நிலைத்து வந்த சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட வரலாறு மேன்மேலும் விரிவாக நோக்கப்பட வேண்டியதாகும். அவ்வாறே அப்போராட்டங்களின் வரலாற்றுத் திருப்பு முனையாக மார்க்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி முன்னெடுத்த *(1964-1972)* கால கட்டத்தின் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் வரலாற்று படிப்பினைகளை கவனத்தில் கொள்வது சமகாலத்திற்கு மட்டுமன்றி எதிர்காலத்திற்கும் உரியவைகளாகும்.

**சி.கா.செந்திவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகோணங்கள்

## முன்னுரையில்...

என்னுடைய "பஞ்சமர்" நாவல் வரிசையில் ஐந்தாவது படைப்பாக இந்த "பஞ்சகோணங்கள்" பிறந்திருக்கிறது. 1972ஆம் ஆண்டு "பஞ்சமர்" முதல் பகுதி வெளிவந்தபோது "டானியலின் இலக்கியப் பணியின் இது ஒரு தற்கொலை முயற்சி" என்ற மெத்தப் படித்தவர்கள் பலர் விமர்சனம் செய்தனர். ஆனால் பின் தள்ளப்பட்ட மக்களும் - வஞ்சிக்கப்பட்ட மக்களும், நிதானமான புத்திஜீவிகளும் வரவேற்றனர்.

பஞ்சமரின் இரண்டாம் பாகமும் சேர்த்து முழுமை பெற்ற பஞ்சமராக 81ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து வெளிவந்தபோது-அதன் இரண்டாம் பகுதியில் உள்ளடங்கி இருந்த அரசியல், அதன் அந்தஸ்தைத் தமிழ் நாட்டிலும் இங்கும் மேல் உயர்த்தியது.

பஞ்சமர் முழுமை பெற்ற நூலைத் தொடர்ந்து "கோவிந்தன்" என்ற நாவல் அதன் வரிசையில் இரண்டாவதாக இடம் பெற்றது. அதுவும் (தமிழகத்திலிருந்து வெளிவந்ததால்) பெருமளவு பஞ்சமருக்கிருந்தளவு வரவேற்பைத் தமிழகத்திலும் இங்கும் பெற்றது.

இந்தப் 'பஞ்சகோணங்கள்' பஞ்சமர் வரிசையில் ஐந்தாவதாகும்.

சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு இலக்கியக்கூட்டத்தில் "இலங்கையில் இத்தனை கொடுமைகளும், காட்டுமிராண்டித் தனங்களும் நடந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் டானியல் காலம்போன பிரச்சனைகளை மட்டும் எழுதிக் கொண்டிருக்கிறாரே!" என்று சில இலக்கியக்காரர்கள் வருத்தம் தெரிவித்தபோது என் சம்பந்தப்பட்ட பல கருத்துக்கள் விவாதங்களாகப் பரிணமித்தன என்றும் அறியக்கூடியதாக இருந்தது. இதை அறிந்தபோது இந்தப் பிரச்சனையைக் கிளப்பிய தமிழக இலக்கியக்காரர்கள் மேல் எனக்கு வெறுப்பு வரவில்லை; அனுதாபந்தான் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுச் செய்திகளைத் தரும் புதினத் தாள்களிலிருந்து சாதிசம்பந்தமான படுகொலைகள், தீ வைப்புகள், உயிரோடு குளங்களில் தூக்கி வீசுதல் ஆகியவைகளைப் பற்றி நாம் படிக்கும் புதினங்கள் பொய்யானவையா? என்ற கேள்வியும், தமிழ்நாட்டுக்கும் நான் வந்திருந்த காலங்களில் கிராமப்புறங்களில் நான் கண்ணால் பார்த்த சீரழிவு வாழ்க்கையும், பரிதாபக் கோலங்களும், சாதி சம்பந்தமான, நண்பர்களுக்கூடாக நான் அறிந்து கொண்ட தகவல்களும் பொய்யானவைதானா? என்ற கேள்வியும் இப்போது ஒன்று சேர்ந்து எழுகின்றன.

"காந்தியார் கனவு கண்ட ராம ராஜ்யம் பாரதமெங்கும் நடக்கிறது" என்று இங்குள்ள தமிழர்கள் எண்ணிக்கொண்டிருப்பது புதினமல்ல. தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் - அதுவும் சமுதாய வாழ்க்கையையே அவதானிக்க வேண்டிய இலக்கியக்காரர்களே எண்ணிக் கொண்டிருப்பதுதான் புதினமானதாகும்.

81ஆம் ஆண்டு நான் தமிழகம் வந்தபோது தமிழகத்தின் சரித்திரப் பிரசித்தி பெற்ற 'கீழ்வெண்மணி'யைப் பார்த்தேன். பெருமளவு எல்லோராலுமே வஞ்சிக்கப்பட்ட அந்த மக்களுடன் பேசினேன். இன்னும் ஆயிரமாண்டு காலத்திற்கு அந்த மனிதர்களின் மனதில் நிற்கக்கூடியதான அந்தச் சோகச் சம்பவம் தமிழக இலக்கியக்காரர்களால் மறக்கப்பட்டுவிட்டதை என்னால் நம்பமுடியவில்லை. 44 மனித உடல்கள் ஒரே தசைக்கோளமாக அக்கினியில் உருகி மலையாக நின்ற அந்தக் காட்சியை நேரில் கண்டறிந்த இலக்கியக்காரர்கள் தமிழகத்தில் இல்லாமல் போய்விட்டார்களா?" என்று கேட்கத்தான் தோன்றுகிறது. அத்துடன் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பு இன்றுவரையில் தமிழகத்தில் உள்ள ஜாதிவெறிக்கொடுமைகள் நிலைத்திருப்பதற்கான காரண காரியங்களைத் தானும் சொல்லி வைக்கக்கூடாதா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. ஆயினும் நான் அப்படிக் கேட்கக் கூடாது. ஏனெனில் இங்குள்ள நிலைமையை வைத்து அங்குள்ள நடைமுறைகளை நான் கணிப்பது சரியானதல்ல என்பதனால்!

எனக்குத் தெரிந்த இதே ரீதியில் என்மீது பழிசுமத்தும் இலக்கியக்காரர்களை நான் ஒன்று கேட்டேயாக வேண்டும்.

"இலங்கையிலுள்ள தமிழர் கோரிக்கைகளுக்கும், இங்குள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கும் இருக்கும் ஒட்டுறவு பற்றிய கணிப்பை எந்த அளவுகோலைக் கொண்டு முடிவெடுத் திருக்கிறீர்கள்?" என்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலம் பறிக்கப்படுகிறது; உயர் கல்வி வசதி பறிக்கப்படுகிறது; தமிழர் உயர்பதவிகள் ஒழிக்கப்படுகின்றன; அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது; தமிழன் தீண்டப்படாதவன் ஆக்கப்படுகிறான் என்பவைகள் இங்குள்ளவர்களின் கூக்குரல் ஆகும். அரசின் மிலேச்சத்தனத்தை எதிர்த்து அதற்காகவே நாட்டுப் பிரிவினை கோரப்படுகிறது.

இங்குள்ள தாழ்த்தப்பட்டவர்களும் மற்றையவர்களால் இதே ஐந்து மிலேச்சத்தனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இங்கு வாழும் தமிழர்களும் ஐந்து விதக் கருத்துடையவர் களாகவே இருக்கின்றனர்.

"பரம்பரை பரம்பரையாக அடிமை வைத்து ஆண்டு அநுபவித்து வந்த சுகபோகங்களை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாதவர்கள்."

"இன்று இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கைகூடக்கூடும் என்ற நம்பிக்கையில் அவர்களோடு சேர்ந்து ஓடுவது போலப் பாவனை செய்துகொண்டு, நாளைக்கு அவர்களால் கிடைக்கப் போகும் அரசின் அதிகாரத்தில் பங்கெடுத்துத் தங்களையும் தங்கள் உடமைகளையும் காப்பாற்றி விடலாம்" என்று எண்ணுபவர்கள்.

"விடாப்பிடியான ஆயுதப் பிரயோகங்களில் அரச அதிகாரத்தைப் பிடித்துவிட இளைஞர்களின் சக்தி மட்டும் போதுமானது என்று நம்புபவர்கள்."

"பல நூறு வருடங்களாக இவர்கள் காலடியில் கிடந்த இவர்களின் அடிமை குடிமைகளாகச் சேவகஞ் செய்து, இவர்களால் இன்றுவரை ஆடாய்க்கட்டித் தோலாய் உரிக்கப்படும் எமக்கு வாழ்வு கிடைக்க இன்றைய அரசியல் கிளர்ச்சி வழிகாட்டுமா? என்று ஏங்குபவர்கள்."

"நிலச்சொந்தக்காரனையும், நிலமில்லாதவனையும், எஜமானனையும், அடிமைகளையும் இனப்பிரச்சனைச் சுலோகத்தின் கீழ் ஒன்றிணைத்து இறுதியில் தமிழருக்கென மட்டுமே ஒரு தமிழ்ச் சோஷலிச தமிழ் ஈழத்தை உருவாக்கிவிடலாம் என்று முடிவு கட்டுபவர்கள்" ஆகியோர்களே இந்த ஐந்து வகையினராவர்.

இந்த உண்மையைக் கண்டறிவது இலேசுப்பட்ட ஒன்றல்ல. அதிலும் கடலுக்கப்பால் இருந்து ஊகிப்பால் உணரக்கூடியதுமல்ல. எனவேதான் தமிழகத்திலுருந்து இலங்கை சம்பந்தமான அரசியல் இலக்கியக் கருத்துகளைச் சொல்பவர்கள் நிதானப்பட வேண்டியவர்களாகின்றனர்.

சமகாலப் பிரச்சினையிலிருந்து விலகி நான் மிகவும் முற்பட்ட காலக்காரியங்களில் எனது பேனாவைப் பிரயோகிக்கிறேன் என்று சொல்பவர்கள் ஒன்றை மறந்து விடுகின்றனர். சமகாலப் பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தமிழர்களுக்குள்ளேயே இன்றுவரை நடைமுறையில் இருப்பவைகளைச் சமகாலப் பிரச்சினைதான் என்பதை வெளிக்கொண்டுவர இந்தப் பஞ்சகோணங்களுடன் பஞ்சமர் வரிசையில் ஐந்து நாவல்கள் பிறந்துவிட்டன. ஒரு அடிக்கருத்தை வைத்து இதுவரை இப்படிப் பிறப்பிக்கும் என்னிடம் இன்றையத் தமிழர் பிரச்சனையை வைத்து எழுதும்படி, இங்கு வற்புறுத்துபவர்கள் இலங்கையில் உள்ள மற்றைய படைப்பாளிகளைப் பார்த்து இப்படிக் கேட்காதது விந்தையானதல்ல. ஏனெனில் இவர்கள் விரும்புவதெல்லாம். தாழ்ந்தவர்களின் – வஞ்சிக்கப்பட்டவர்களின் – அன்றாடங்காய்ச்சிகளின் – அடிமைப்பட்டவர்களின் – வயிற்றுச் சோற்றுக்காக ஆலாய்ப்பறப்பவர்களின் பக்கம் நின்று எழுதுவதிலிருந்து என்னைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதுதான்.

இவர்கள் சொல்வதுபோல, இன்று காண்பவைகளை இன்றே எழுத்தில் கொடுப்பதற்கு நான் ஒரு பத்திரிகை நிருபர் அல்ல. சரியும், பிழையும் நடைமுறையிலும் தீர்க்கமான பார்வையிலும்தான் தெளிவாகப் புலனாகும்.

இங்குள்ள தமிழர்களுக்கான தீவிர இயக்கம் தோற்றமளிக்கத் தொடங்கி ஏறக்குறைய ஐந்தாண்டுகள் ஆகின்றது. பஞ்சமர் வரிசை நாவல்களில் காட்டப்பட்ட காலத் தொடர்ச்சியிலிருந்து இந்தத் தீவிர இயக்கத் தொடக்க காலம்வரையிலான காலத்தை இந்த நாவல் உள்ளடக்கி நிற்கின்றது. மேலே கூறப்பட்ட பஞ்சகோணக் கொள்கைகளை இது வெளிக்கொண்டு வருகிறது. இன்றைய தமிழர் இயக்கங்களுக்குக் கணிசமான அளவு ஒரு பிரிவு மக்கள் அந்நியப்பட்டு நிற்பதற்கான காரண காரியங்களை உண்மை நிகழ்வுகளுடன் சித்தரிப்பது எனது கடமையாகப் பட்டதால் அதையும் பிசகின்றிச் செய்து, இதில் உலவி வரும் பாத்திரங்களுக்கூடாக – அவ்வப்பாத்திரங்களின் இயல்பான செயல்பாடுகளுக்கூடாக நடைமுறையையும் கொள்கையையும் ஒருமைப்படுத்தி, சமூக மாற்றத்தை வருவிக்க விரும்பும் ஒரு இலக்கியக்காரனின் பங்கினை இந்த நாவலுக்கூடாகச் செய்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

விரும்பப்படாத ஒரு வர்க்க அரசுக்கெதிராக ஆயுதம் தாங்கிய போராட்டம் என்பது மிகச் சரியானதே. ஆனால் தூக்கப்படும் அந்த ஆயுதத்தின் எஜமானர்களாக யார் இருக்க வேண்டும் என்பதுதான் கேள்வி? “சந்தர்ப்பவசத்தால் இந்த ஆயுதம் பின் தள்ளப்பட்ட மக்களின் கைகளில் இருக்கவில்லை” என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டியது. அதனால் ஆயுதம் தாங்கி நிற்பவர்களை எடுத்த எடுப்பிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்போக்காளர் என்றோ, அரசியல் அநுபவமற்றவர்கள் என்றோ ஒதுக்க நினைப்பது தவறானதாகும். இந்த வேளையிலுங்கூடத் தூக்கப்பட்ட அந்த ஆயுதங்களுக்கு உரிமையாளர்களாகவும், அதைத் தங்கள் கரத்தில் தூக்கவேண்டியவர்களாகவும் பின் தள்ளப்பட்ட வர்க்கத்து மக்களை ஆக்கும் பணியில் இளைஞர்களைத் திசை காட்டுவதற்காகவுமே, மாதிரிக்கான சில இளைஞர் பாத்திரங்கள் இதில் வருகின்றன.

இதில் 'வாத்தியார்' பாத்திரம் ஒன்று வருகிறது. ஆசிரியத் தொழில் பார்த்த காலத்தில் அவரது மனப்போக்கு, ஓய்வு பெற்றதன் மேல் அவரது மனப்போக்கு, தமிழ் உணர்வு பெற்றெழுந்த கிராமச் சூழ்நிலையில் அவரது மனப்போக்கு, பின்பு வர்க்க அரசியல் உணர்வு பெற்றபோது அவரது மனப்போக்கு, இறுதியில் இளைஞர் இயக்கத்துக்கு மாறாக ஆயுதப் படைகள் முஸ்தீபுச்செய்தபோது அவரது மனப்போக்கு ஆகிய ஐந்து விதங்களில் அவர் மனம் தியாகத்தை நோக்கி வளர்த்தெடுக்கப்பட்டதைக் காண்பீர்கள்.

பூதி, செல்லி என்ற இரண்டு விவசாயக்கூலிப் பாத்திரங்கள் வருகின்றன. உலக வியாபகமான வர்க்க உணர்வுகள் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களை ஊடுருவி நிற்பது எந்த நிலையிலும் அந்த வர்க்க உணர்வு அவர்களை உந்தித் தள்ளுதல், தொடக்கத்திலிருந்து முடிவுவரை விவசாயக்கூலிகளிடையே அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவ அறிவு, மென்மையான பெண்மை உணர்வுகளுக்கு உட்படுதல், எந்தத் தியாகத்திற்கும் தங்களை உட்படுத்தத் தயாராக இருத்தல்' ஆகிய ஐந்து வகைகளுக்கு அவர்கள் உட்படுவதைக் காண்பீர்கள்.

கிட்டினண்ணர் என்ற ஒரு பாத்திரம்!

மிகக்குறுகிய கல்வி அறிவு பெற்ற பாத்திரம்.

பஞ்சமரில் இறுதிக்கட்டமான ஆலயப் பிரவேசத்தில் நர வேள்வியில் உயிர் தப்பிய ஒருவர். பஞ்சமர் நாவல் நாயகனான ஐயாண்ணரிடம் பெற்றுக்கொண்ட அனுபவங்களைச் சுமந்துகொண்டு அவர் மிகப் பக்குவமாகப் பின்தங்கிய மக்களுடன் வைத்துக்கொள்ளும் அரசியல் உறவுமுறைகள் – வழிகாட்டல்கள் – பேச்சுவார்த்தைகள், வர்க்க ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல், அனுபவத் தீர்க்கதரிசனங்கள் ஆகிய ஐங்குணங்களுடன் இங்கு அவரைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு பருவ காலத்திலும் ஒவ்வொரு பொலிவும் உதிர்வும் பெற்றுக் கிடக்கும் விவசாயப் பிரதேசத்துக் கூலிகள் காலத்துக்குக் காலம் படிப்படியான கோரிக்கைகளைச் சமர்ப்பித்து முன்னேறிச் செல்லும் வழியில் வரும் பின் வாங்கல்களும், அவைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்கல்களாகக் கொண்டு சோர்வடையாமல் இருப்பதையும் காண்பீர்கள்.

'புரட்சி' என்ற சொல் இப்போது மிகவும் மலிவாகி விட்டது. அதிதீவிரவாதத்தையும், அரச பயங்கரவாதத்தையும் தனிநபர் குழு வீரதீர வாதத்தையும் சேர்த்துக் கொட்டிக் கலந்து எல்லாவற்றையுமே பின்பு தனித்தனியாக்கி, ஒவ்வொன்றுக்கும் 'புரட்சி' என்றே பெயரிடுவது சகசமாகிவிட்டது.

கேடுகெட்ட, சீரழிந்த முதலாளித்துவ சமூக அமைப்புக்கு மாறாகத் தொழிலாளிய – விவசாயிய வர்க்கங்கள் ஒன்றிணைந்து, தனக்குப் பின்னால் ஏனைய பின்தள்ளப்பட்ட வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு செய்யும் போரினைத்தான் புரட்சி எனக் கொள்ளலாம். இந்தப் புரட்சியை வருவிப்பதற்கு ஒவ்வொரு இலக்கியக்காரனும் தனது பங்கினைச் செய்ய எழுதுவதுதான் புரட்சிக்கான இலக்கியமாகும். இதைவிடுத்து, வெறும் அதிதீவிரவாதத்திற்கும், தனிநபர் குழு வீரதீர வாதத்திற்கும் பரிந்து எழுதுவதென்பது புரட்சிக்கே துரோகம் செய்யும் எழுத்து வரிசைக்கே அவனைத் தள்ளிவிடும். இதில் நான் மிகவும் அவதானமானவனாகவே இருந்தேன்; இருக்கிறேன்; இருப்பேன்.

இந்த முன்னுரை 12-11-84இல் எழுதப்படுகிறது. இன்று எனது அனுமானத்தின்படி இங்கு நடக்கும் தமிழர் இயக்கங்கள் பெருமளவில் அதிதீவிரவாதத்திலும், தனிநபர் குழு வீரதீரவாதத்திலுமே தங்கிநிற்கின்றன. இந்த நூல் எப்போது அச்சேறும் என்று எனக்கு நிச்சயப்படுத்த முடியவில்லை. இது அச்சேறும் காலத்திலும் இந்தச் செயற்பாடுகளில் தங்கி நிற்கும் நிலையில்தான் தமிழர் இயக்கங்கள் இருக்குமெனில் இந்த நூலை எழுதியதற்காக இவர்களின் ஆத்திரம் என்னை நோக்கித் திரும்பலாம் என்பதும் எனக்குத் தெரியும். ஆயினும் எனது இலக்கிய நெறிப்பாட்டில் நான் உண்மையை எழுதித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது. அதேவேளை ஒன்று என் கண்களுக்குத் தெரிகிறது. இந்தவித அரசியல் நடவடிக்கையிலிருந்து பின்வாங்கி, 'இந்த வாலிபர்கள்' தாங்கள் தூக்கிய இந்த ஆயுதங்களை உயர்த்திக் கொண்டு புரட்சியை நோக்கிச் செல்லும் வர்க்கங்களுக்குப் பின்னால் அணிவகுத்துச் செல்லும் காட்சியும், இலங்கைத் தீவின் இனங்கள் கைகோர்த்துக் கொண்டு குதூகலித்துக் கொண்டாடும் காட்சியும்'....

இந்தவிதமான வர்க்க உணர்வுபற்றிச் சொல்லும் நான் இலக்கியங்களில் சாதிச் சிருட்டிப்புக்களைத்தான் தருகிறேன் என்று பலர் வைக்கும் குரல் தொடர்ந்து எனக்குக் கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில், நிலமில்லாத சொத்தில்லாத. உரிமைகள் இல்லாத, பெரும்படிப்பறிவில்லாத, இழப்பதற்கெதுவும் இல்லாதவர்களாகக் கணக்கெடுப்பின், அது பெரும்பாலும் இந்த மக்கள் கூட்டத்தினரையே சுட்டும். அதனால், நான் இவர்களுக்காக எழுதுவதென்பது வர்க்கத்துக்காகத்தான் எழுதுவதாகிறது. இவர்களோடு ஒத்த வாழ்வுடையவர்களை இந்த வர்க்கத்துடன் சேர்த்துக் கொண்டு செல்ல மறுத்துள்ளதை எனது படைப்புக் களிலிருந்து உதாரணங்காட்ட யாராலும் முடியாதென்பதனை நான் திடமாகக் கூறுவேன். எனவே, நான் வர்க்க சார்பற்ற இலக்கியக்காரன் என்று சொல்லப்படுவதெல்லாவற்றையும் நான் மறுக்கிறேன்.

நிலமானிய சமுதாய அமைப்பு முறையின் பிரதான வர்க்க முரண்பாடு படிப்படியாகக் கட்டப்பட்டுள்ள சாதி அமைப்பு முறைக்குள்ளேயே அடங்கி நிற்கிறது. முதலாளி அமைப்புக்கும் நிலமானிய அமைப்புக்குமிடையே உள் வாழ்க்கை முறை சித்தரிக்கப்படும்போது “சாதி முறையை அகற்றிவிட்டுச் செய்யலாம்” என்று கூறுவதெல்லாம் மிகவும் பிழையானதும், சிறுபிள்ளைத்தன மானதுமாகும். கீழ்மட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ள அந்த அடிமைப்பட்ட வர்க்கத்தை முழுமையான ஒரு வர்க்கப்போருக்கு மேலெடுத்துக் கொண்டு வருவதென்பது இலேசுப்பட்ட காரியமல்ல. அவர்களின் வாழ்க்கையோடு சேர்ந்து, மலைப்பாம்பு போல அவர்களைச் சுற்றிக்கிடக்கும் சாதி முறையிலிருந்து விடுவிக்கும் பயிற்சியை அங்கு வைத்து அளிப்பதன் மூலம்தான் அந்த மலைப்பாம்பை அழிக்கும் உறுதியையும், அதற்கு மேலான பெரும் வர்க்கப்போருக்கு அவர்களைப் போக வைக்கும் நம்பிக்கையையும் அவர்களுக்குக் கொடுக்க முடியும்.

வர்க்கங்களிடையே உள்ள போர் இன்றோ நாளையோ முடிந்துவிடும் என்பது பலரின் நம்பிக்கை. இலக்கியக்காரர்களில் பலரும் இதை நம்புகின்றனர். ஒன்றிலிருந்து அடுத்த ஒன்றுக்கும். அதிலிருந்து அதன் தொடர்ச்சியான வேறொன்றுக்குமாகப் புரட்சிகர வர்க்கங்களை வழிநடத்தி, வழிநடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பெரும் புரட்சியை ஏற்படுத்துவதென்பது இன்றோ, நாளையோ, அல்லது மறுநாளோ, மறுநாளைக்கு மறுநாளோ செய்து முடிக்கக்கூடிய ஒன்றல்ல. இதில் இலக்கியக் காரனின் பங்கு அந்தந்தக் காலகட்டங்களுக்கு உட்பட்டதாகவே அமைய வேண்டும். அதற்குமேல் அவன் தன்னிச்சைக்குப் போவானாகில் அவன் புரட்சிக்கு உதவியனாகமாட்டான். பதிலுக்கு எதிரிக்கு உதவுபவனாகவே ஆவான். அவன் வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனாவாதியே!

"சமூகத்தின் அன்றாட நிகழ்வுகளை அவதானித்தல், அந்த அவதானிப்புகளை மறுநாளைய அவதானங்களோடு ஒப்பிடுதல், சமூகத்தின் பொதுவான நடைமுறைகளோடு இந்த அவதானங்களைச் சேர்த்துப் பார்த்தல், அறியப்பட்ட நீண்ட இறந்த கால நிகழ்வுகளோடு சரியான வேறுபாடு காணுதல், முடிவில் எதிர்காலத்தை நினைவில் வைத்துப் பேனாவில் வடித்தல்."

ஒரு இலக்கியக்காரனுக்கு இந்தப் பொறுப்புகள் இருக்க வேண்டும். இதை விடுத்து, அன்றாட சம்பவங்களினால் உந்தப்பட்டு நிற்கும் மனிதக்கூட்டத்தில் உணர்ச்சிகளைத் தனது தலைமேல் கொண்டு – அதன் வயப்பட்டு எழுத முற்படும் இலக்கியக்காரனால் நிதானமான, சரியானவைகளை எழுதவே முடியாது என்று ஒரு இலக்கணம் வைத்துக் கொண்டு எழுதுபவனாகிய என்னால், என்மேல் பழி சுமத்துபவர்களின் அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

எந்தக் காரியங்களையும் மேலோட்டமாகப் பார்ப்பது ஒரு வகை; அதே காரியத்தை அடியிலிருந்து நுனிவரை ஆய்ந்து பார்ப்பது வேறோர் வகை; மேலோட்டமாகப்பார்க்கும்போது சரியெனப்படும் ஒன்று இரண்டாவது வகையான ஆய்வு முறையில் பார்க்கும்போது தவறாகத் தெரிந்துவிடும்; அல்லது மேலோட்டமாகப் பார்க்கும்போது சரியாகப்படுவதும் உண்மைகளாகும். ஆயினும் இரண்டும் உண்மைகளே. இந்த உண்மைகள் உடனுக்குடன் புரிந்துவிடக் கூடியவை அல்ல என்பது இரண்டுக்கும் மேற்பட்ட பிறிதோர் மேலதிக உண்மையாகும். இந்த மேலதிக உண்மை பிறக்கும்வரை காத்திருந்து அதற்கு எழுத்துருவம் கொடுக்கும்போதுதான் அது உண்மைக்கு விசுவாசமான இலக்கியமாகிறது. இப்படிப்பட்ட இலக்கியங்களைப் பிறப்பிக்கவே முடிந்தவரை நான் முயல்கிறேன்.

இலக்கியங்களின் உருவ அமைப்புகள் பற்றிய நீண்ட சர்ச்சை ஒன்று நடந்து வருகிறது. இதைப்பற்றி நான் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. **ஏனெனில் சராசரி மக்களுக்கு – குறிப்பாகப் –பின்தள்ளப்பட்ட மக்களுக்கு எனது படைப்புகள் இலகுவில் விளங்க வேண்டுமென்பதால், நான் பார்த்துப் பேசிப் பழகிய பாத்திரங்களை ஒரு கருப்பொருளுக்காகச் சேர்த்து விடுகிறேன்;** அவை சுதந்திரமாக உலவி, என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருப்பொருளுக்கு ஏற்ற விதத்தில் உலாவி வரும்போது முடிவில் இயல்பான ஒரு உருவத்தைத் தாங்களாக அமைத்துக் கொள்கின்றன. அந்த விவகாரத்தில் நான் அதிகம் தலையீடு செய்வதில்லை. அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொண்ட உருவத்தையே ஏற்றுக்கொள்கிறேன்.

எனது படைப்புகளுக்குட்பட்ட மொழி ஆளுமை விடயத்தில் நான் அதிகம் சிரமப்படுத்துவதில்லை. என்னால் ஒன்று சேர்க்கப்பட்ட ஒவ்வொரு பாத்திரங்களும், தாங்களாகவே பேசுவதற்கான தங்கள் தங்களுக்கு இயல்பான விதிகளை வரையறுத்துக் கொள்கின்றன. எங்கேயாவது அவைகள் இயல்புக்கப்பால் வழிவிலகிச் செல்லாமல் சற்றுக் கண்காணித்துக்கொள்வது மட்டுந்தான் எனது வேலையே தவிர அதற்குமேல் ஒன்றுமில்லை.

படைப்புக்கான மூலவித்தான கருப்பொருட்களை நான் ஓரிடத்தில் குந்தி இருந்து சிந்தனையைச் சுழலவிட்டு அதன் மூலமாகச் சேகரித்துக் கொண்டதில்லை. படைப்புகளில் சித்தரிக்கப்படும் களங்களில் நின்று, படுத்து, எழுந்து பெற்றுக்கொண்ட நடைமுறை அனுபவங்களுக்கூடாகவே சேகரித்துக் கொள்கிறேன். மேலே காட்டப்பட்ட பஞ்சமர் வரிசையில் வந்த படைப்புக்களிலெல்லாம் ஏதோ ஒரு பாத்திரத்தில் நான் நிற்கிறேன். அதனால்தான் இந்தப் பஞ்சகோணங்களுக்குள்ளும் நான் ஒரு பாத்திரமாக நின்றுகொண்டு குறிப்பிடவேண்டிய கருப்பொருளின் புறப்பாட்டினைப் புலப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்க முடிந்திருக்கிறது.

பஞ்சமர் வரிசையின் மூன்றாவதான 'அடிமை'களை நான் எழுதி முடிக்கும் தறுவாயில் இருந்தபோது, மிகவும் சிரமத்தில் சேகரிக்கப்பட்ட அந்த நாவலுக்குரிய விவகாரங்கள் பயனற்றுப்போகக்கூடாது என்பதனால் அந்தவேளை எனக்கு ஏற்பட்ட சுகயீனத்தின் காரணமாக எழுந்த நினைவினால் அந்த அடிமைகளை முடித்துவைக்க, அந்த வழியில் வரக்கூடிய இரு எழுத்தாளர்களை இனங்காட்டி, இடையிலேயே அதன் முன்னுரையையும் எழுத நேர்ந்தது. அதன்பின்பு என்னை நோக்கி வந்த மரணம் பின்நோக்கிப் போய்விட்டதால் அதை அடுத்து மேலதிக அறுவடையாக 'கானல்' என்ற நாவலையும் எழுதி முடித்துவிட்டு, மேலதிகத்திற்கு மேலதிக அறுவடையாக இந்தப் பஞ்சகோணங்களை எழுதியிருக்கிறேன். இந்தப் பஞ்சமர்களின் பிரச்சினை தீர்க்கப்படும்வரை – ஒரு வர்க்கப்போருக்கு அவர்களைத் தயாராக்கி, அவர்களையும், அவர்களோடொத்த வாழ்வு வாழும் மக்களையும் அரசியல் அதிகாரத்திற்குக் கொண்டு வரும்வரை எழுதுவதற்குப் பலர் தோன்றிவிட்டனர் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

**கே. டானியல்** - *15-11-1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள்: கானல், அடிமைகள் பற்றிய சில குறிப்புக்கள்

ஈழத்துப் புனைகதை ஆசிரியர்களால் நீண்ட காலமாகக் கையாளப்பட்டு வருகின்ற சமூகப் பிரச்சினைகளுள் சாதியம் முக்கியமானதொன்று. குறிப்பாக, நாவல் இலக்கியத்தை எடுப்பின், 1925ல் அதற்கான கால்கோளிடப்பட்டுவிட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை ஈழத்தில் வெளியான சாதியநாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள் குறிப்பாக கானல்(1983), அடிமைகள்(1984) பெறுகின்ற இடம் குறித்துச் சுருக்கமாக நோக்குவதே இக்கட்டுரையின் இலக்காகிறது.

ஏறத்தாழ 75 ஆண்டுகால வரலாறு கொண்ட இத்தகைய நாவல்களின் வளர்ச்சி பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது மூன்றுவிதமான ஓட்டங்களை இனங்காணலாம். அவை பின்வருமாறு:

## 1. இலட்சியநோக்குடன், கலந்த சமூகச் சீர்திருத்தப் போக்கு

சாதியம் பற்றி எழுதிய முதல் நாவலாசிரியரான இடைக்காடரின் 'நீலகண்டன் அல்லது ஒரு சாதி வெள்ளாளன்' (1925) எஸ். முத்துத்தம்பிப்பிள்ளையின் 'அழகவல்லி' (1926). எஸ். நல்லையாவின் 'காந்தாமணி' அல்லது 'தீண்டாமைக்குச் சாவுமணி' (1937), மூத்ததம்பி செல்லப்பாவின் 'சுந்தரவதனா அல்லது இன்பக்காதலர்' (1938), செல்வநாயகத்தின் 'செல்வி சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி' (1938) முதலியன இத்தகைய போக்கின் வெளிப்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் இந்நாவல்கள் சாதியம் பற்றிப் பேசினாலும் அது பற்றி ஆழமாக அணுக முற்படவில்லை. மகாத்மாகாந்தியின் சீர்திருத்தக் கருத்துக்களின் உந்துதலால் ஏற்பட்ட குருட்டுணர்வே சாதியம் பற்றிய இந்நாவல்கள். இவை, ஒருபுறம் அறப்போதனை செய்வனவாகவும் மறுபுறம் வீரதீரச்செயல்கள், மர்மம் என்பன விரவியனவாகவும் விளங்குகின்றன. அன்றையகால இலக்கியச் சூழலும், வாசகர் ரசனையும், பத்திரிகைத்தேவையும் (பெரும்பாலானவை, பத்திரிகைகளில் தொடர் கதையாக வெளியானவை) இதற்குக் காரணமாகலாம். எவ்வாறாயினும், அக்காலகட்ட ஈழத்துப் புலவர்களும் கவிஞர்களும் பேசாப்பொருளை இவர்கள் பேசமுற்பட்டமை மனங்கொள்ளத்தக்கது.

## 2. எழுத்தார்வ நோக்குடனான சமூகசீர்திருத்தப்போக்கு:

இத்தகைய போக்குடைய நாவல்களின் வரவு ஏறத்தாழ 70களிலிருந்து ஆரம்பமாகின்றது. செங்கையாளியானின் 'பிரளயம்'(1975), சொக்கனின் 'சீதா'(1963-1974), தி. ஞானசேகரனின் 'புதியசுவடுகள்'(1977) முதலியன இத்தகைய போக்குடையன. இவை முற்கூறப்பட்ட போக்கினைப் பிரதிபலித்த நாவல்களைவிட சாதியம் பற்றி சற்று உரத்துப்பேசின. இந்நாவல்கள் கொண்டிருந்த முற்குறித்த இயல்புகளிலிருந்து விடுபட்டு, யதார்த்தப்பாங்கில் சாதியப் பிரச்சினையை அணுகின. அது மட்டுமன்றி, சாதியப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு, கலப்புத்திருமணம், மனமாற்றம், அன்புமார்க்கம், கல்விகற்று மாற்றுத்தொழில் புரிதல் முதலானவற்றைத் தீர்வுகளாக முன்வைத்திருந்தன. இவ்விதங்களில் முற்குறிப்பிட்ட நாவல்களின் போக்கிலிருந்து இவை வேறுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும், இத்தகைய தீர்வுகளின் நடைமுறைச் சாத்தியப்பாடு பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டன என்பதனை மறப்பதற்கில்லை.

## 3. மார்க்சிய நோக்குடைய சமூக விமர்சனப்போக்கு:

இப்போக்கினவான நாவல்கள் 1955லிருந்துவெளிவரத்தொடங்கின. இளங்கீரனின் 'தென்றலும் புயலும்'(1955) முன்னோடியாக அமைய, தொடர்ந்து, செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' (1965), 'சடங்கு' (1966), 'போர்க் கோலம்' (1969), 'மண்ணும் மக்களும்' (1970), செ.யோகநாதனின் 'காவியத்தின் மறுபக்கம்' (1977), தெணியானின் 'விடிவை நோக்கி' (1973) முதலியன வருகின்றன. இத்தகைய போக்கின் வழிவந்தவரே டானியலும். இவ்விதத்தில் 'பஞ்சமர்-1'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1972), 'பஞ்சமர்-2' (1982), 'கோவிந்தன்' (1982), 'தண்ணீர்'(1987-2ம்பதிப்பு), 'பஞ்சகோணங்கள்' (1984), 'அடிமைகள' (1984), 'கானல்' (1983) என்பனவற்றின் ஆசிரியர் அவர்.

பொதுவாக, இப்போக்குடைய நாவல்கள் சாதியத்தை ஆழமாகவும் சமூகவிமர்சனக் கண்ணோட்டத்துடனும் பார்த்தன. நடைமுறைச் சாத்தியப்பாடான தீர்வினை முன்வைத்தன. எனினும், இந்நாவல்களுள் பலவும் பிரச்சாரப்பண்பு துருத்தி நிற்பனவாகவும், செயற்கைப் பாங்குடையனவாகவும், கலைத்துவம் குன்றியனவாகவும் கருதப்பட்டமையை மறுப்பதற்கில்லை.

அது எவ்வாறாயினும் டானியல் சாதியம் பற்றி எழுதிய ஏனைய நாவலாசிரியர்களிடமிருந்து வேறுபட்டுள்ளார். டானியலின் நாவல்கள் ஏனைய சாதிய நாவல்களிலிருந்து வேறுபட்டுள்ளன என்பனவே எமது கவனத்திற்குரிய விடயங்களாகின்றன. அதாவது, எனைய நாவலாசிரியர்கள் போலன்றி (தெணியான் தவிர) டானியல் நேரடியான- சொந்த - வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுள்ளவர். இதனால் இவரது நாவல்கள் முற்றுமுழுதான உண்மை அனுபவங்களின் அறுவடைகளாகின்றன. இதனால் இவரது நாவல் பாத்திரங்கள் குருதியும் தசையும் கொண்டு உயிராற்றலுடையன வாகின்றன. பாத்திரங்களின் பேச்சுமொழி உயிர்த்துடிப்புடையன வாகின்றது. இத்தியாதி இயல்புகளை சாதியம் பற்றிய ஏனைய நாவல்களில் காண்பதரிது.

இவ்விடத்தில் கானலின் இன்னொரு சிறப்பையும் குறிப்பிடவேண்டும். மார்க்சிய நோக்குடைய ஏனைய நாவலாசிரியர்களது குறைபாடுகளிலிருந்து டானியலும் விடுபட்டவரல்லர். ஆயினும் டானியலின் நீண்டகால எழுத்துலக அனுபவம், அனுபவ முதிர்ச்சி படைப்பாளிகளின் வளர்ச்சி கானலை கலைத்துவமுடைய படைப்பாக்கியுள்ளமை, விதந்துரைக்கப்பட வேண்டி யுள்ளது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது பின்வரும் விவரணப்பகுதி:

"இளையவன் பாவத்தை முறையிடத் தொடங்கிறான். குருவானவர் இடைமறித்தார்"

"இன்றைக்குத் தேவ நற்கருணை ஏன் பிள்ளாய் வரவில்லை?" குருவானவரின் இந்தக் கேள்விக்கு இளையவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் விக்கித்தான்!

"சொல்லு பிள்ளாய் குருவானவரிடம் மறைப்பது கடவுளிடம் மறைப்பது போன்றதாகும், சொல்லு பிள்ளாய்?"

"நேற்றுக் கோயிலடியிலை குடிச்ச பால் கஞ்சிக்குப் பிறகு நான் ஒண்டும் தின்னவில்லைக் குருவானவரே! இஞ்சை இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி வைச்சிருந்த கஞ்சியை மச்சாள் இரவு பிள்ளையளுக்கும் குடுத்திட்டு எனக்கும் கொஞ்சம் வைச்சா, நான் வேண்டாம் எண்டிட்டு, அவையைக் குடிக்க வைச்சிட்டு படுத்திட்டன்! இஞ்சை பாவ சங்கீர்த்தனம் செய்துபோட்டுப் போனோம் பிறகு தண்ணிகூடக் குடிக்கயில்லை ஆண்டவரே! விடியப்பறம்போலை வயித்தை விறாண்டிச்சுது! உயிர் போயிடும் போலை கிடந்தது ஆண்டவரே! பக்கத்துத் தென்னம் தோட்டத்துக்கை போய் ஒரு சின்ன மரத்திலை களவா இளனி ரெண்டு பிடுங்கிக் குடிச்சிட்டன் ஆண்டவரே! பாவம் செய்திட்டன் தேவரீர்! அதுதான் சற்பிரசாதம் எடுக்க வரேல்லை! களவெடுத்திட்டன் சுவாமி அதுதான் வரேல்லை...!"

இளையவன் பதில் சொல்லி விட்டான். குருவானவர் சிறிதுவேளை ஒன்றும் பேசவில்லை. பின்பு,

"சரி முந்தநாள் பாவமன்னிப்புப் பெற்றுப்போட்டு நேற்று ஏன் சற்பிரசாதம் எடுக்கவராமல் விட்டனிபிள்ளாய்?" குருவானவர் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"முந்தநாள் பிரசங்கத்திலை குருவானவர் சாதி பாத்து எங்கடை ஆக்களை ஒருபக்கத்திலை இருக்கச் சொன்னார்எண்ட கவலையிலை கோவிலில் இருந்து வெளியிலை போய் தம்பண்ணைக்கு முன்னாலை குருவானவரைத் தூஷணத்தாலை பேசிப்போட்டன் சுவாமி! அது தான் பாவம் செய்ததாலை நேற்று சற்பிரசாதம் எடுக்கவரேல்லை ஆண்டவரே!"

இளையவன் இரண்டாவது கேள்விக்கும் துணிந்து பதில் சொல்லிவிட்டான்.

இடைவெளி விடாமலே குருவானவர் மூன்றாவது கேள்வியையும் கேட்டார்.

"போனகிழமை பாவமன்னிப்புப் பெற்றுப்போட்டு அடுத்த நாள் ஏன் சற்பிரசாதம் எடுக்க வரேல்லைப்பிள்ளாய்!"

"அது ஆண்டவரே, அண்டைக்கு மத்தியானம் மச்சாள் கூழ் காச்சினவ! பொழுது படுகிற நேரத்திலை தான் பிள்ளையளுக்குக் குடிக்கக் குடுத்து, எனக்கும் தந்தவ, தானும் குடிச்சவ, இரா ஒண்டு பாதியிலை அண்ணற்றை நடுவிலான் 'பசி, பசி' எண்டு கத்தினான் ஆண்டவரே! நான் சாமத்திலை எழும்பிப் போய் மாக்கண்டற்றை தோட்டத்துக்கை இரண்டு கட்டை மரவள்ளிக் கிழங்கைப் பிடுங்கி வந்து, மச்சாளுக்கும் தெரியாமல் அவிச்சு அவனுக்குக் குடுத்தன் சுவாமி! பாவம் செய்திட்டன் ஆண்டவரே! 'படகினி' சுவாமி"

இளையவன் மூன்றாவது கேள்விக்கும் பதில் கூறிவிட்டான். பசியில் இந்தச் சிங்களச் சொல்லை அவன் கற்றிருக்க வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு அவர் பாவமன்னிப்புக் கொடுக்கவில்லை. அவனின் பாவங்களுக்கு அபராதம் இடவில்லை. இருந்த இரையிலேயே நிலைத்துவிட்டார்.

இளையவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

குருவானவர் கண்ணீர் விட்டார்.

எழுந்தார்

பாடுபட்ட யேசுவின் சொருபத்திற்குச் சென்று அதன் முன்னால் முழம்தாழப் படியிட்டு அழத்தொடங்கிவிட்டார்.

இளையவன் உட்கார்ந்த நிலையிலேயே சிலையாக நிலத்தோடு ஒட்டிவிட்டான்! வெகு நேரத்திற்குப்பின்பு உத்தரீயத்தால் கண்களைத் துடைத்துக்கொண்டு அறையை விட்டு விறாந்தைக்கு வந்தார்.

'விறாந்தையில் போடப்பட்ட கதிரையில் உட்கார்ந்தார்' எதிரே வெட்ட வெளியில் நீண்ட தூரத்திற்குக் கண்களை வீசினார். வீசிய கண்கள் அப்படியே நின்றன!

தொலைவில் தகிக்கும் வெய்யிலின் கானல், நீர் போன்று அலை அலையாகத் தெரிந்தது!

இளையவன் கூறி முடித்தானே அந்தக் கடைசி வார்த்தை! 'படகினி!'

ஞானமுத்துக் குருவானவர் பன்மொழிப் புலவர். இந்தச் சிங்களச்சொற் பிரயோகத்தின் மொழிபெயர்ப்புக் குரல் அவர் நெஞ்சுக்குள்ளே எழுந்து செவிப்புலன்கள் வரை எட்டியது.

"வயிற்றிலே நெருப்பு!"

செவிப்புலனுக்கு இது கேட்க, கட்புலனுக்கு.......

'கானல்' தெரிந்து கொண்டே இருந்தது.

மேற்கோள் நீண்டு விடப்பட்டதாயினும் ஈழத்திலெழுந்த கலைத்துவம் மிகுந்த புதியதோர் உலகம் முதலான ஓரிரு படைப்புகளுள் கானலும் இடம்பெறக் கூடியதென்பது பகுதியூடாக ஓரளவாவது தெரியவரும்!

அண்மைக்காலமாக வரலாறு பற்றி - வரலாற்றெழுதியல் பற்றி - புதிய கண்ணோட்டம் நிலவுகின்ற சூழல் பின்னணியில் விளிம்புநிலை மக்களது கடந்தகால வாழ்க்கையைக் கூறுகின்றன என்ற விதத்திலும் எமது கவனத்தை ஈர்க்கின்றன.

ஈழத்தின், குறிப்பாக யாழ்ப்பாணப்பிரதேசத்தின் சாதியவரலாறு பற்றிய சமூகவியல் ஆய்வுகள் போதியளவு நிகழ்ந்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. இவ்விதத்தில், கடந்த கால யாழ்ப்பாணச் சாதியவரலாறு பற்றி நுணுக்கமான விவரங்களை அறிய முற்படும் சமூகவியலாளர்களுக்கும் இவ்விரு நாவல்கள் பயன்படக்கூடியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கொரு சிறு எடுத்துக்காட்டாகவுள்ளது.

"அவற்றுள் கோவியக் குடிகள் முன்னேயும் மாராயக்குடிகள் பின்னேயும் நளக்குடிகள் அதற்கு அடுத்ததாகவும் சுமார் ஐம்பது பேர்கள் வரை கழியக் கடைசியா பரியாரி வல்லியனும் அவன் மருமகன் குட்டியனும் வருகின்றனர்

பத்துக்கு மேற்பட்ட வில்லு வண்டிகளை வெள்ளை வெளேரென்ற வடக்கன் காளைகள் இழுத்துச்செல்ல, அதையடுத்து நுகத்தடி கட்டப்பட்ட பத்துவண்டிகளை நுகத்திற்கு இருவராக, வடக்கன் நாம்பனுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்ற தோறணையில் அடிமைகள் வடக்கன்களின் வேகத்துக்கு அமைய இழுததுச் செல்ல, அடிமைகளால் இழுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு வண்டியையும் இழுத்துச்செல்லும் நர காளைகள் களைப்புற்றுப் போகும் போது கைமாற்றிக் கொள்ள வண்டிக்கு இருவராகப் பின் தொடர, அதை அடுத்து சற்று இடைவெளி விட்டு, பத்துக்கட்டாடிமார்கள் நிலபாவாடை விரித்துச் செல்ல அதற்குப் பின்னால் நட்டுவ மேளவாத்தியங்கள் கூட்டாக அணிவகுத்து முழங்கிவர, அதற்குப் பின்னால்த்தான் தம்பதிகளின் பல்லக்கு அசைந்து வருகிறது.

இந்த வரிசை முடிந்த பின்னால் இருவர் தோரணங்கள் பொருத்தப்பட்ட கம்பு ஒன்றினைத் தூக்கிப்பிடித்துவர அதற்குப் பின்னால் பல்லக்கு முதலியாரின் மதிப்புக்குரிய அடிமைகள் திரண்டு வருகின்றனர்.

இவ் வர்ணனை நாவலின் பகைப்புலத்தை மட்டுமன்றி சாதியமைப்புமுறைமை, அதன் சமூக அந்தஸ்து முறைமை என்பனபற்றியும் அறியத்தருகின்றது. மறுபுறம் நாவலாசிரியரின் ஆற்றலையும் ஆளுமையையும் உணர்த்தி நிற்கின்றது!

இவ்வாறே யாழ்ப்பாணச் சமூகத்தின் கடந்த காலப் பண்பாட்டு வரலாற்றினை எழுதுவோருக்கும் இவ்விரு நாவல்களும் பயன்தரக்கூடியன. இவ்விடயத்தில், 'அடிமை'களில், யாழ்ப்பாணப் பிரதேச பாரம்பரிய வைத்திய முறைபற்றிக் கூறப்படுகின்றமை (எடு: புக்கை கட்டுதல், நையம் அடித்தல், கொம்புக்கல் உரைத்து நாக்கில் தடவுதல், பெறுமாதப் பிள்ளைத்தாச்சி மருந்து கொடுத்தல், எண்ணெய் முழுக்கு) நினைவுக்கு வருகின்றது. இவ்வாறே, கானலில் இடம் பெறும் கூத்துப் பற்றிய விவரங்களும் அமைகின்றன.

தவிர இவ்விரு நாவல்களிலும் இடம்பெறும் யாழ்பாண மக்களின் கடந்தகால பேச்சு மொழிப்பிரயோகங்கள் பற்றிய விபரங்கள் மொழியியலாளருக்கு பெருவிருந்தாகின்றன. (இத்தொடர்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் விரிவான கட்டுரை யொன்றினை எழுதியிருப்பதும் குறிபபிடத்தக்கதே) அதுவும் கானலினூடாக, கிறிஸ்தவ மக்களின் வித்தியாசமான தனித்துவமான பேச்சுமொழிப் பிரயோகங்கள் பற்றி அறியமுடிவது அழுத்தி யுரைக்கப்பட வேண்டிய விடயமாகின்றது.

அதேவேளையில் 'கானல்', 'அடிமைகள்' என்பன வேறுவகையான சிறப்பம்சங்கள் பெற்றுள்ளன.

மேற்கூறியவிதத்தில், முதலிற் குறிப்பிடத்தக்கது இவ்விரு நாவல்களின் 'காலம்' களம் ஆகும். அதாவது இவை கடந்தகாலத்தைப் பின்னணியாகக் கொண்டவை. 'கானல்' 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியைக் கொண்டதான காலப்பகுதியிலும் அடிமைகள் 1890 தொடக்கம் 1956 வரையான காலப்பகுதியிலும் நிகழ்கின்றன. இவ்வாறு கடந்தகால சமூக வாழ்க்கையைக் களமாகக் கொண்டு தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க பல நாவல்கள் வந்திருப்பினும் ஈழத்தில் அது அபூர்வமே. நானறிந்தவரையில் (செ.யோகநாதன்) 'நேற்றிருந்தோம் அந்தவீட்டினிலே' என்ற ஒரு நாவல் மட்டுமே அத்தகையது. அத்தகைய பகைப்புலத்தில் எழுதுவதென்பது சிரமமானவிடயமாக இருப்பதே அதற்கான காரணமாகும். எனவே இவ்விதத்தில் டானியலின் இவ்விரு நாவல்களும் குறிப்பிடத்தக்கனவாகின்றமை கண்கூடு.

'அடிமைகள்' நாவலைவிடக் 'கானல்' நாவல் மேலும் சிக்கலான விடயம் பற்றிக் கவனஞ்செலுத்துகின்றது. அதாவது கிறிஸ்தவர், சைவர் என்று இருவேறு மதம் சார்ந்து மக்களது வாழ்வியலை எழுதுவதென்பது இருமடங்கு சிரமமானது. டானியல் இத்தகைய சிரமமான பணியினைத் திறம்படக் கையாண்டுள்ளமையை கானல்' வாசிக்கும் வாசகர் நன்குணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

**கலாநிதி செ. யோகராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானல் என்னும் நீரோடை

"பழைய காவியங்களும் இதிகாசங்களும் ஒவ்வொரு காலத்துச் சமுதாயத்திற்கும் பொதுவான ஒழுக்க நெறிகளையும் நியதிகளையும் நீதிகளையும் வகுத்துத் தனி மனிதனுக்கும் அவற்றுக்குமிடையே அமைதி கண்டன... சுருங்கக்கூறின் நாவலானது பழைய காவியம், நாட்டுப்பாடல், இதிகாசம், புராணம் ஆகியவற்றை எல்லாம் தன்னகத்தே கொண்ட புதிய இலக்கிய வடிவமாகும். இதன் காரணமாகவே, இன்றைய நாவல் அரசியல் சார்புள்ளதாகவும் இருத்தல் தவிர்க்க முடியாததாயுள்ளது. முழுமனிதனையும் காட்ட முனையும் நாவல் இலக்கியம் எப்படி அரசியலையும் புறக்கணிக்க முடியும்" - கலாநிதி க. கைலாசபதி - '**தமிழ்நாவல் இலக்கியம்**'.

டானியலின் கானல் நாவலைப்பற்றி எழுத முற்படும்போது கைலாசபதியின் மேற்கண்ட கூற்றே முதலில் நினைவுக்கு வந்தது.

யாழ்ப்பாண சமூகத்தின் ஒரு காலகட்டம், 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம். ஆங்கிலேயர் ஆட்சிக்காலம். அதன்முன்னர் போர்த்துக் கீசரும் ஒல்லாந்தரும் நுழைந்து (150 + 150 = 300 ஆண்டுகள்) ஆட்சி செய்ததோடு தமது கிறிஸ்தவ சமயத்தை விவேகமான, அரசியலாதிக்கத்துடன் நுழைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.

பலநூறு ஆண்டுகளாக சாதியில் ஊறிய சமூகம்; நிலமும் உற்பத்திக்கருவிகளும் உயர்சாதிக்காரனிடம்; துப்பாக்கி வைத்திருக்கும் உரிமையையும் அவர்களாலேயே பெறமுடிந்தது. தாழ்ந்த சாதியரிடம் நிலமில்லை; வேளாளர் நிலங்களிலே குடிமைகள் அவர்களுக்காகக் கள்ளெடுக்கப் பனை சீவும் கத்திமட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

நன்னியன் தம்பாப்பிள்ளையரின் நிலத்திற்கு அடிமையாகி உழைப்பவன் - இருபையன்கள், ஒரு மகள்; எஜமான் வீட்டில் உழைப்பவர்கள்.

நன்னியனிடம் ஊரில் வேதக்கோவில் கட்ட ஒற்றைத்திருக்கல் வில்லுவண்டியில் ஞானமுத்துக் குருவானவர் மதம்மாற்றப்பட்டவருடன் வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரமூட்டும் கிழிந்த வார்த்தை பேசிய தம்பாப்பிள்ளையின் முடியைப் பிடித்ததற்காக விதானையார் நன்னியனைத் தண்டிக்கிறார். அதைக்கண்டு பொறுக்காத நன்னியன் மகன் பாளை சீவுங்கத்தியால் விதானையாரை வெட்டி விடுகின்றான். தம்பாப்பிள்ளையார் துப்பாக்கி எடுப்பதுடன் தாழ்த்தப்பட்டவர் குடிசைகளுக்குத் தீ மூட்டுகிறார்.

ஞானமுத்துக் குருவானவர் நன்னியனின் குடும்பத்திற்கு மட்டுமல்ல கிராமத்தில நடைபெறும் சாதிச்சண்டைகளின்போதும் தாழ்த்தப்பட்டவருக்கு உதவுகிறார்.

தம்பாப்பிள்ளையர் சாதித்திமிருடன் வீட்டில் மனைவியையும் மற்றொரு அடிமையையும் அடித்துக் கொன்றுவிட்டார். தன் கிராமத்து ஆதிக்கம் மூலம் தப்ப முயன்றவேளை கிறிஸ்தவர் ஆதிக்கத்தில் வந்த பொலிஸாரை லஞ்சம் மூலம் வெற்றிகொள்ள முடியவில்லை. ஆங்கில ஏகாதிபத்திய நலனுக்கும், நீதி வழங்கப்படுவதான பிரச்சாரத்திற்கும் கிராமத்து உயர்சாதிக்காரன் ஒருவனும் அவனுக்குச் சாதகமான விதானை, உடையார் பாதிப்புக்கு உள்ளாவது பெரிதல்ல.

கிராமத்துக் காளிகோவில் திருவிழா செய்வதற்கு கட்டாடி, பரியாரி, மூப்பன், பள்ளர், நளவர் யாவருக்கும் ஐயர் காளாஞ்சி கொடுத்துத் திருவிழாவைச் சிறப்பாகச் செய்யும்படி தம்பாப்பிள்ளையர் முன்னிலையில் வேண்டுகிறார். அதேவேளை இவர்கட்கு கோவிலுள்ளே நுழைவதற்கு உரிமையில்லை.

இந்திய வர்ணாச்சிர முறையான சாதி அமைப்பு யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வர்ண படிநிலை அமைப்பு வட இந்தியாவில் நிறுவப்பட்டது. தென்னிந்தியாவில் சில மாற்றங்கள் உள.

எப்படியும் பிராமண ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் கிடையாது. வேளாளருக்காக அவர்களது கோவில் சடங்கு முறைகளைக் கவனிக்கும் பூசாரிகளாகவே பிராமணர் இருந்தனர். அவர்களிடம் நில ஆதிக்கமில்லை. மற்றவர் யாவரும் சூத்திரர் என நாவலரே கூறினார். சத்திரியர், வைசியர் எனப்பிரித்து இனங்காணத் தக்கவர் சிலர்.

யாழ் தீபகற்பத்தில் வேளாளர் 65 சதவீதமாகவும் டானியல் கூறும் பஞ்சமர் 35 சதவீதமாகவும் இருந்ததாகக் கணக்கிடலாம். தமிழகத்தில் மட்டும் 200க்கு மேற்பட்ட சாதிகள் உள்ளன.

ஐரோப்பியர் ஆட்சி 450 வருடங்கள் வரை நீடித்தது. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி 200 வருடங்களே. முதலில் இலங்கை ஆட்சியைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் கத்தோலிக்க மதத்தவர். யாழ். தீபகற்பத்தில் நுழைந்தபோது கரையோரமாக இருந்த 'கரையார்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியினரையே மதமாற்றம் செய்து அரசியல் சலுகைகளும் வழங்கி முன்னேற்றினர். பின்னர் வந்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் புரட்டஸ்தாந்துப் பிரிவினர். இவர்கள் பெரும்பாலும் வேளாளரையே மதமாற்றம் செய்து அரசியல் சலுகைகளும் வழங்கினர். யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ கல்லூரிகள், பள்ளிக்கூடங் களிலிருந்தே கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து பிரிவுகளைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் வேலைப்பிரிவினையுடன் சாதிகள் அமைக்கப பட்டன. பெரும்பான்மை வேளாளரால், வேலைப்பிரிவினையால் பிரிக்கப் பட்ட சிறுபான்மையான சாதியினரை நீண்டகாலம் ஒடுக்க முடிந்தது. சாதிமாறிய கலப்பு, காதல் திருமணம் அனுமதிக்கப் படவில்லை. அதனாலும் சாதிக்குள்ளேயே திருமணம் என்பதும் சாதிப்பிரிவை நிரந்தரமாக்கியது.

தேச வழமை, சீதன முறைகள், வீடு, சொத்துக்கள் பெண்வழியாக நிலைபெற்று வந்ததால் இருதாரம், சின்னவீடு, பெண்சிசுக் கொலை போன்றவை யாழ். தீபகற்பத்தில் கிடையாது. அதனால் பாலியல் சார்ந்த ஒழுக்க வீனம் இல்லை என்று கூறிவிட முடியாது. டானியலின் நாவல், சிறுகதைகளிலும் காணலாம்.

நிலம் துண்டாடப்படும்போதும், ஒரு பரப்பு நிலமில்லாதவர் சிந்தனையிலும் சாதிப்பிடிப்பு அப்படியே இருக்கும். திருமணவேளை சாதி முதன்மை பெறும். போராட்டம், உற்பத்தி உறவுகளின் மாற்றமே சாதிப்பிடிப்பைத் தளர்த்திவருகிறது.

சாதிக்கார விசேஷ விழாப்பங்காளரும் யேக்கப்பும் குருவானவரிடம் கூறுகின்றனர்: "எங்கடை ஊருகளில் கோவிலுக் குள்ளை எல்லாச் சாதியையும் ஒண்டடி மண்டடியாக இருக்க விடுறதில்லை.."

புதுப்பிக்கப்பட்ட மாதா கோவிலில் ஞானமுத்துக் குருவானவர் சாதிக்காரரையும் கிறிஸ்துவத்தில் சேர்த்த களிப்பில் அவ்வாண்டு நோவின எனும் 7 நாள் விசேஷத் திருவிழாக் கொண்டாடும் பொறுப்பை இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை... கிராமத்தவருக்கும் என ஒதுக்கப்பட்டது.

நோவினை தொடங்குமுன் குருவானவர் கூறுவார்: "அன்பான கிறிஸ்தவர்களே! வேஸ்பருக்கு (மாலை வணக்கம்) கோவிலின் நடுவே மாதா சொரூபம் கோவில் வாயில்வரை வந்து திரும்புவதற்கு வசதியாகவும், எல்லோரும் சேர்ந்து வேதம் பரப்புதலான ஒரே நோக்கத்தை நிறைவேற்றவும், நடுவே வழிவிட்டு, இந்த ஊரைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இடது புறமாகவும், வெளியூரைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவரும் அவர்களது உருத்துக்காரரான இந்த ஊரைச் சேர்ந்தவர்களும் வலதுபக்கமாவும் அமர்ந்து கொள்ளும்படி எல்லாம் வல்ல கர்த்தரின் பெயரால் கேட்டுக்கொண்டு உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கின்றேன்..." கோவில் எங்கும் ஒரே அமைதி.

உயர் சாதிக்காரரும் தாழ்ந்தவரும் இடதும் வலதுமாக கிறிஸ்தவ கோவிலில் பிரிக்கப் படுகின்றனர்.

சாதி எவ்வாறு கிறிஸ்தவ மதத்துள்ளேயும் புகுந்தது என்பதை டானியல் மிகவும் அழகாக, நாசூக்காகக் குருவானவர் வார்த்தையாகக் கூறியிருப்பது அவரின் கலைத்துவமான படைப்பாற்றல் வார்த்தை மூலம் காணலாம்.

நன்னியனின் 'இளையவன்', கிறிஸ்தவ மொழியிலேயே குருவானவரை எதிர்க்கின்றான். அவன் கேட்கும் 'பாவமன்னிப்புகள்' குருவானவரைச் சிந்திக்க வைக்கின்றன.

'இன்று தேவநற்கருணை பெற ஏன் வரவில்லை, சொல்லு பிள்ளாய், குருவானவரிடம் மறைப்பது கடவுளிடம் மறைப்பது போன்றது'.

"வயித்தைப் பசி பிடுங்கியது. பக்கத்துத் தென்னை மரத்தில் இளநி இரண்டு பிடுங்கிக் குடிச்சிட்டன். ஆண்டவரே, பாவம் செய்திட்டேன். தேவரே" - இளையவன்.

"முந்தாநாள் பாவமன்னிப்புப்பெற்றுப் போட்டு நேற்று ஏன் சற்பிரசாதம் எடுக்காமல் விட்டனி, பிள்ளாய்"

"பிரசங்கத்தில் குருவானவர் சாதி பார்த்து எங்கடை ஆட்களை ஒரு பக்கத்திலை இருக்கச் சொன்னார். குருவானவரை தூஷணத்தாலை பேசிப் போட்டேன் சாமி."

"போனகிழமை பாவமன்னிப்புப் பெற்று ஏன் சற்பிரசாதம் எடுக்க வரவில்ல பிள்ளாய்".

"ஆண்டவரே பசி பசி என்று பிள்ளைகள் கத்தின. இரவு பூக்கண்டற்றை தோட்டத்திலை இரண்டு மரவள்ளிக் கிழங்கைப் பிடுங்கிவந்து அண்ணரின் பிள்ளைக்கு அவித்துக் கொடுத்தேன். பாவம் செய்து விட்டேன். படகினி (வயிற்றிலே நெருப்பு) சுவாமி."

டானியலும் கத்தோலிக்க சமய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அங்குள்ள சாதி ஒடுக்கு முறையை நன்கு அனுபவப்பட்டிருந்ததால் நாவலரின் வார்த்தைப் பிரயோகங்கள் ஊடாகவும் அம்மதத்தின் தாற்பரியங்களையும் சிறப்பாகச் சித்தரிக்க முடிந்தது.

எல்லாச் சமயங்களுமே மக்களின் மொழியைக் கற்று அதன் மூலமே மதத்தைப் பரப்பின. அதனால் கிறிஸ்தவ மொழி, சேர்ச் இசை என்பனவும் தனித்துவம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கர்த்தரின் கருணை உங்கள்மீது இருக்கட்டும்", பிள்ளைகளே! கர்த்தரின் தீர்ப்பு ஏழைகள் பக்கமாகவே இருக்கக்கடவது".

''பிள்ளைகளே! தம்பாப்பிள்ளை எண்டவன் எங்கட மார்க்கக்காறனில்லை. பிற மார்க்கக்காறன். அஞ்ஞானி."

"பாவிகளை இரட்சிக்கும்படி சர்வத்திற்கும் வல்லவரான தேவனிடம் கண்ணீர்விட்டு பச்சாத்தாபப்பட்டு..."

கிறிஸ்தவ மதம் முதலாளித்துவத்திலிருந்தே வந்த மதம். பல ஒழுங்கு முறைகளைத் தாழ்ந்த மக்களிடமும் கற்பிக்கின்றது. கிறிஸ்தவ கோயில்களின் தூய்மை, ஞாயிறு வழிபாட்டிற்குத் தூய உடையுடன் ஜெபநேரத்திற்குச் செல்லல், மணிமூலம் செய்திகள், ஜேசுவின் பெயரால் பாதிரியார் மூலம் பிணக்குகள் தீர்த்தல், பாவமன்னிப்பால் ஒழுக்கம்... ஆகியனவற்றை நாவல் மூலமும் அறியலாம். அத்துடன் ஆரம்பகாலத்தில் நுழைந்த தீப்பெட்டி, சவர்க்காரத் தொழில்கள், தேநீர் பிரச்சாரத்தையும் ஆசிரியர் கூறியுள்ளார்.

பெண்கள் மேல் சட்டை போட்டுத் தாவணி அணிய முடிந்தது.

"நளத்தி தாவணி போட்டிட்டாள் எண்டு நயினாத்திகளுக்கும் கோபம் வந்திட்டுது..." கிராமிய வழக்கான வார்த்தைகளை டானியல் தாராளமாகக் கையாண்டுள்ளார். 'நயினார், கமக்காரன், கமக்காரிச்சி....'

'நான் நன்னியன் வந்திருக்கிறனாக்கும் கமக்காரன்,' எஜமானனுக் நன்னியன் தன் வருகையைத் தெரிவிக்கிறான்.

தாழ்த்தப்பட்டவர் எனக் கூறப்பட்ட மக்கள் தமது சில நலனுக்காக, தேவைகளுக்காக, மனிதர்களாக இனம் கண்டு மதிக்கப்படுவதற்காக மதம் மாறினார்களே அல்லாது கிறிஸ்தவ மதத்தில் முற்று முழுதாக ஈடுபாடு கொண்டவர்களாக இந்நாவலில் டானியல் எங்கும் காட்டவில்லை. அது தனிச்சிறப்புமாகும். நான்கு நூற்றாண்டு ஐரோப்பியர் ஆட்சியிலும் இன்றைய கணக்கெடுப்பின்படி 9 சதவீத மக்களே கிறிஸ்தவராக உள்ளனர்.

'கானல்' நாவலை மேலெழுந்த வாரியாகப் படித்துவிட்டு 'நல்லது, பரவாயில்லை, கூடாது' என சாதாரண அபிப்பிராயம் கூறாது விமர்சன நோக்கில் அதன் இலக்கணங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கலாம்.

'கானல்' வெறும் கற்பனைப் படைப்பல்ல. இயற்பண்பு வாதமாக நுணுக்க விபரங்களை மட்டும் கூறும் இயற்பண்புவாத நாவலல்ல. ஆழமான கருத்துப் பொதிந்த யதார்த்த நாவலாகவும் கொள்ளலாம். பாதிரியார், நன்னியன், தம்பாப்பிள்ளை ஆகியோர் மாதிரிப் பாத்திரங்கள் கிறிஸ்தவ மதமாற்றம் வெளிவேஷத்தில் தாழ்த்தப்பட்டவர் சார்ந்ததாகக் காட்டியபோதும் அது மேல் சாதியினரையே இறுதியில் சார்ந்து நிற்கும் என்ற அடிப்படை அர்த்தத்தையும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி, சமய, சமூக ஏற்றத்தாழ்வுகளை நாவல் அம்பலப் படுத்துவதாக, கிறிஸ்துவத்துள் நிலவும் வறுமையையும் புட்டுக்காட்டுகிறது. பகுத்தறிவுடன் சாதி, சமயங்களின் வெறுமையைக் காண முடிகிறது. கிறிஸ்தவ சமயத்தோடு இணைந்து ஆங்கிலேய ஆட்சியில் சில சலுகைகள் பெற முடிவதையும் நாவல் சுட்டுகிறது.

'வழமையான நாவல், கதை தலைவன், தலைவி நான் ஏற்பதில்லை' என டானியல் இந்நாவலின் முன்னுரையில் கூறுவார். ஆயினும் தொடர்ந்த கதையாக அவரின் நாவல்களில் அமைந்திருப்பது இந்நாவலேயாகும். புதிய சமூகம் வேண்டும் இயக்கம், அதற்கான போராட்டம் இந்நாவலில் இருக்கவில்லை.

'கானல்' யாழ். தீபகற்பத்தின் ஒரு காலகட்டவரலாற்றைக் கூறிநிற்கும் சிறந்த படைப்பு. வாய்ப்பாடான நாவல் வடிவ அமைப்பில் முதன்மையானது என மதிப்பீடு செய்வர். சமூகவியல் ஆய்வாளருக்கு என்றும் பயன்படக்கூடிய அற்புதநாவல் என்பதில் சந்தேகமில்லை. 'கானல்' என்ற பெயரில் தமிழ் நாவல்களிடை ஒரு நீரோடை.

**செ. கணேசலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டானியல் மீதொரு குற்றச்சாட்டு

வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனைவிட மறைந்துவிட்ட மனிதன் எப்பொழுதும் பெருமை மிக்கவனாகவே கருதப்படுகின்றான். அவன் உயிருடன் வாழ்ந்த காலத்தில் எடுத்துச் சொல்லப்படாத பெருமைகள் பல மறைந்த பின்னர் பேசப்படுகின்றன. புகழ் மாலைகள் சூட்டப் படுகின்றன. அந்த மனிதனிடத்திற் காணப்பட்ட குறைபாடுகள் சாதாரண மனிதப் பலவீனங்கள் எனச் சமாதானம் காணப்பெற்று, அந்தப் பலவீனங்களும் அவனது பலங்களாக வெளியே காட்டப்படுகின்றன.

கே. டானியல் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பல துறைசார்ந்த வர்களின் கவனத்துக்குள்ளான மனிதர், பலராலும் பேசப்பட்டுவந்த ஒருவர். குறிப்பாக இலக்கிய உலகில் டானியல் அவர்களுக்கென்று சிறப்பான ஓர் இடம் உண்டு. டானியல் அவர்கள் வாழ்ந்த காலத்திலும் பார்க்க, இன்று அதிகம் பேசப்படுகின்ற ஒருவராகக் காணப்படுகின்றார். ஆனால் ஏனையவர்கள் போல அல்லாமல், டானியல் அவர்கள் பற்றி மாறுபட்ட குரலில் இன்று பேசுகின்றார்கள். டானியல் அவர்கள் வாழ்ந்த காலத்தில் மௌனமாக இருந்தவர்கள் அவர் மறைவின் பின்னர் அவர் மீது பழி சுமத்துகின்றார்கள். அவர் படைத்த இலக்கியங்களில் குறைபாடுகாண்கிறார்கள். அவரது, மறுபக்கத்தைக் கண்டுவிட்டதாக வேண்டாத குற்றச்சாட்டுக்கள் சுமத்துகின்றார்கள். பழி சுமத்துகின்றவர்களின் இருண்ட பக்கங்களைக் கண்டு அவற்றை இலக்கியங்களாகப் படைத்து மக்கள் மத்தியில் டானியல் அவர்கள் வைத்துள்ளமையே இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இந்த அடிப்படை உண்மையைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு முன்னர் தமிழ் வரலாற்று வழியினை ஒரு தடவை திரும்பிப்பார்க்க வேண்டியது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது காலங்காலமாக அதிகார வர்க்கத்தின் சொத்தாக இருந்து வந்திருக்கின்றது. குருகுலவாசம், திண்ணைப்பள்ளி என்பவைகளின் மூலமாக அதிகாரவர்க்கம் தனக்குரிய கல்வியைப் பெற்று வந்திருக்கின்றது. அதேசமயம் சமூகத்தில் அடிநிலை மக்களாக வாழ்ந்த மக்கள் பக்கம் இந்தக் கல்வி ஒளி பரவாத வண்ணம் இந்த அதிகார வர்க்கம் மிக எச்சரிக்கையாகப் பார்ததுக் கொண்டது. முன்னெச்சரிக்கையான இந்த நடவடிக்கை இன்று நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல. இதிகாச காலத்திலேயே மிக இறுக்கமாக அதிகார வர்க்கம் இருந்து வந்திருக்கின்றது. இந்த நடவடிக்கைகளைப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு ஓர் உதாரணம் உண்டென்றால், அது துரோணர் -ஏகலைவன் கதைதான். ஏடுகளால் எழுதப் பெறாத நாட்டார் இலக்கியங்கள் தவிர்ந்த, ஏடுகளிற் பதிவு செய்யப் பெற்ற ஏனைய இலக்கியங்கள் அனைத்தும் கல்வி அறிவு படைத்த அதிகார வர்க்கத்தினாலேயே படைக்கப்பெற்றன. அவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் அவர்களது வர்க்க நலனைப் பேணுகின்ற வைகளாக அமைந்தமை ஆச்சரியப்படுவதற்கு உரியதல்ல. தமது வர்க்கத்தை மேன்மைப் படுத்துகின்றவைகளாகவே அந்த இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. இலக்கியங்களுக்கூடாக வகுக்கப்பெற்ற-சொல்லப்பெற்ற ஒழுக்க நெறிகள் எல்லாம் தமது வர்க்க நலனைப் பேணுவதற்காக தோற்று விக்கப்பட்டபோதும், சமுதாயம் முழுவதற்கும் பொதுவிதியாகத் திணிக்கப்பட்டன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் மேற்குலகத்தவர்களின் அதிகாரம் இலங்கையில் வலுப்பெற ஆரம்பித்தவேளை சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் தவிர்க்க இயலாது உருவாகத் தொடங்கின. கல்வியைப் பெறுதல் என்பது பொருள் தேடுவதற்கான ஒரு மார்க்கமாக மாறியது. ஆட்சியாளர்கள் தமது அரச நிர்வாகம் முட்டின்றி நடைபெறுவதற்கு விசுவாசமுள்ள பணியாளர்களை உருவாக்க முற்பட்டார்கள். இந்த நாட்டுக்குப் புதிதான கல்வி அமைப்புமுறை ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டது. அந்தக் கல்வியை வழங்கும் நிறுவனங்களாகக் கிறிஸ்தவ பாடசாலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டன ஆங்கிலக் கல்வியுடன் கிறிஸ்தவமும் விசுவாசிகளைத் தோற்றுவிக்கும் நோக்கில் போதிக்கப்பட்டு வந்தது. சமூகத்தில் தமது நலன்களை எப்பொழுதும் பேணிவந்திருக்கும் அதிகாரமுடைய வர்க்கம் இந்தச் சந்தர்ப்பத்தையும் மிகச்சரியாகப் பயன்படுத்திக் கொண்டது. பலர் கிறிஸ்தவர்களாக மாறி ஆங்கிலக் கல்வியைக்கற்றனர். மதம் அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. தமது வர்க்க நலனே முக்கியமான தாகத் தோன்றியது. சைவம் வளர்த்த பெரியார்களென உச்சிமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து இன்று கொள்ளப்படுகின்றவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அரச உத்தியோகங்களைப் பெறுவதற்காக அன்று கிறிஸ்தவர்களாக மதம் மாறினார்கள். உதாரணத்துக்கு எடுத்துச் சொல்வதானால் சின்னத்தம்பி புலவரின் தந்தை நல்லூர் வில்வராய முதலியார் கச்சேரியில் அரச பதவி வகித்து வந்த, சைவப்பாரம் பரியத்தில் வந்த கிறிஸ்தவர். இந்த உண்மையும் இது போன்ற அந்தரங்கங்களும் பெரிதாக வெளியே எடுத்து பேசப்படுவதில்லை.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பெரும்பாலும் நிலைமை இவ்வாறே இருந்து வந்திருக்கின்றது. கல்வி அதிகார வர்க்கத்தின் ஏகபோகச் சொத்தாகவே தொடர்ந்தும் இருந்து வந்திருக்கின்றது. கல்வி அறிவுடைய அதிகாரவர்க்க உயர்சாதியினரின் கைகளிலேயே கலை, இலக்கிய ஆதிக்கமும் இருந்து வந்திருக்கின்றது. அவர்களே இலக்கிய கர்த்தாக்களாகவும் இருந்து வந்தார்கள். தமது வர்க்க நலன், உயர்சாதி நலன் பேணும் இலக்கியங்களையே அவர்கள் படைத்து வந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை மக்களாகக் கருதி அவர்கள் சார்ந்த இலக்கியங்கள் அதிகாரவர்க்கத்து இலக்கிய கர்த்தாக்களால் உருவாக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் இலக்கியங்களில் எடுத்துப் பேசப்படாது ஓரங்கட்டப்பட்டார்கள். எங்காவது எடுத்துச் சொல்லப்பட்டபோது அவர்கள் இழிவு படுத்தப்பட்டார்கள். தண்டிகைக் கனகராயன் பள்ளு, போன்ற நூல்கள் இதற்கு நல்லதொரு உதாரணம். இந்தப் பள்ளுப்பாடலை ஒரு பள்ளன் பாடி இருந்தால் இந்தப் பள்ளு எப்படி அமைந்திருக்கும் என்பதனை ஒருதடவை திருப்பிப்பார்ப்பது மிகவும் சுவாரசியமாக இருக்குமல்லவா.

இந்தச் சூழ்நிலையிலேதான் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பினுள்ளே டானியல் அவர்களின் வருகையை நோக்குதல் வேண்டும். டானியல் அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட அடிநிலை மக்கள் மத்தியில் இருந்து வந்த ஒருவர். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவதுபோல சமூகத்தில் கீழே இருந்து மேலே நிமிர்ந்து பார்த்தவர். அதனால் மேலே இருந்தவர்களிடம் மற்றவர்கள் காணாதவற்றை அவர் கண்டு கொண்டார் என்பது மட்டுமல்லாமல், மற்றவர்கள் காட்ட விரும்பாதவற்றையும் அவர் கண்டுகொண்டார் என்பதே உண்மை. அவர் தாம்கண்டு கொண்டவற்றைத் தமது இலக்கியங்களில் ஒளிவுமறைவின்றிச் சொல்லி இருப்பதுதான் இப்பொழுதுள்ள பிரச்சினை அவர்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு.

பாலியல் சம்பந்தமான பிரச்சனைகளை டானியல் அவர்கள் ஒருபக்கப் பார்வையோடு அல்லது வஞ்சம் தீர்க்கும் நோக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகி இருக்கின்றார் என்பது அவர்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுள் ஒன்று. டானியல் அவர்கள் மற்றைய எழுத்தாளர்கள் மறைத்த பலவிடயங்களைத் தமது படைப்புக்கள் மூலம் வெளிக் கொண்டுவந்த ஒருவர். பொய்மையின்றி வாழ்வின் பல கோலங்களை இலக்கியங்களிற் சித்தரித்துக் காட்டியவர். பாலியல் என்பது மனிதனின் அடிப்படைத்தேவைகளில் ஒன்று. இந்த அடிப்படைத்தேவை எவ்வாறு நிறைவு செய்யப்பட்டது என்பதனையே அவரது படைப்புக்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றன.

பாலியல் அந்தரங்கமானது. இன்றய காலகட்டத்தில் பாலியல் விடயங்கள் பல பகிரங்கப்படுத்தப்படுவது என்பது வேறு பிரச்சனை. உறவு கொள்ளல் என்றுவரும்போது இன்றும் அதன் அந்தரங்கம் அழிந்துபோய் விடவில்லை. பேணப்பட்டே வருகிறது. பாலியல் அந்தரங்கங்கள் படைப்பின் மூலம் வெளிக்கொண்டு வந்திருப் பதிலேயே, டானியல் அவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்படுகின்றது. அவற்றை வெளிக்கொண்டுவராது டானியல் அவர்கள் விட்டு வைத்திருந்தால், அவர் சொல்லும் உண்மைகள் இல்லை என்றாகிவிடாது. பொய்யாகிப்போய் விடவும் மாட்டாது.

டானியல் அவர்களின் படைப்புக்களில் உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஆண்கள் தாழ்த்தப் பட்டசாதிப் பெண்களைத் தமது பாலியல் இச்சைக்கு ஆட்படுத்தினார்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அது பற்றி எந்தவிதப் பிரச்சினையும் இப்பொழுது எழுவதாக இல்லை. ஆனால் உயர்ந்த சாதிப் பெண்கள் தாழ்த்தப்பட்ட சாதி ஆண்களைத் தமது பாலியற் தேவைக்குப் பயன்படுத்தினரென டானியல் அவர்கள் தமது நாவல்களிற் சித்தரிப்பதே சிலரை உறுத்துகின்றது.

பாலியல் என்று வரும்போது அது இனம், மதம்,சாதி மொழி என்னும் வரம்புகளைக் கடந்துதான் உறவுகொண்டு திருப்தி கண்டிருக்கின்றது. பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சாதி ஒரு தடையாக இருக்கவில்லை. காதல் என்பதும் அப்படியானதுதான். பாலியலை அடிப்படையாகக் கொண்டே மலர்வது காதல். மெருகுபடுத்தப்பட்ட பாலியல்தான் காதல். நிறைவேறாத காதல் என்றால் என்ன? ஆணும் பெண்ணும் இணைந்து பாலியற் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாதபோது அது நிறைவேறாத காதல் எனப்படுகின்றது. டானியல் அவர்கள் அதற்குக் காதல் முலாம் பூசாது பாலியல் தேவை நிறைவேற்றமாகவே காட்டுகின்றார்.

உயர்சாதியினரின் குடும்பங்களில் அவர்களது குடும்பப் பணிகளைச் செய்து முடிப்பதற்கென உள் வீட்டுப் பிள்ளைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர்களைத் தமது பாலியற் தேவைகளுக்கு அந்த உயர்சாதியினர் பயன்படுத்தி இருக்கின்றனர். சமையல் அறையில் பணிபுரிந்த தமது குடிமகளை உயர்சாதி ஆண் தனது பாலியல் இச்சைக்குப் பலியிட்டிருக்கின்றான். நடைமுறையிலும் இது சாத்தியமாக இருந்திருக்கின்றது. இந்த யதார்த்தம் டானியல் அவர்களின் படைப்புக்களுக்கூடாக வெளிப்படும் போது பெரிதாக அலட்டிக் கொள்ளாதவர்கள் இதன் மறுபக்க யதார்த்தம் கண்டு டானியல் அவர்கள் மீது ஏன்தான் பழிசுமத்த வேண்டும்.

உயர்சாதியினரின் உள்வீட்டுப் பண்ணையாக இருந்தவன் தோட்டம் துரவுகளில் வேலை செய்தவன். பதநீர், கள்ளு இறக்கிக் கொடுத்தவன் அவனை எசமானியான உயர்சாதிக்காரி தனது பாலியல் இச்சைக்காகப் பயன்படுத்துவதற்ககான வாய்ப்பு நிறையவே இருந்தது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி அவள் தனது இச்சையைத் தீர்த்துக் கொண்டாள். இதுவே யதார்த்தமான உண்மை. இதனையே டானியல் அவர்கள் தமது நாவல்களில் வெளிக் கொண்டு வந்திருக்கின்றார். உயர்சாதி ஆண் சோரம் போவதை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுகின்றவர்களால், உயர்சாதிப் பெண் சோரம் போவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதுவும் தாழ்ந்தசாதி ஆணுடன் உறவு கொள்வதை அங்கீகரிக்க முடியவில்லை. இதுவும் பெண் ஒடுக்குமுறையின் ஓரம்சம் என்றே கொள்ள வேண்டும். உயர்சாதிப் பெண்கள் அனைவரும் சோரம் போகின்றவர்கள் என்றோ அல்லது தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் எல்லோரும் சோரம் போகின்றவர்கள் என்றோ கூறிவிட முடியாது. அப்படிக் குற்றஞ் சாட்டுவது மிகப்பெரிய தவறு. டானியல் அவர்கள் தமது நாவலில் எடுத்துக் கொண்ட பாத்திரங்களுக் கேற்ப குறிப்பிட்ட நடவடிக்கை இடம் பெறுகின்றது. அதனால் உயர்சாதி பெண்கள் எல்லோரும் சோரம் போனவர்களென டானியல் அவர்கள் தமது நாவல்களில் குறிப்பிடுவதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு தவறானது. அப்படி ஒரு நோக்கம் அவருக்கு இருந்திருப்பதாக அவர் படைப்புக்களில் வரும் பாத்திரங்களை விளங்கிக் கொள்பவர்கள் ஒரு போதும் சொல்ல மாட்டார்கள்.

இலக்கியம் படைப்பது என்பது ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்த உயர்சாதியினர் பேசாப்பொருளாக மறைத்து வைத்திருந்த பொருள் பற்றி டானியல் அவர்கள் பேசுவதுதான் இவர்களுக்கு இன்றுள்ள பிரச்சினையே அல்லாமல் வேறொன்றல்ல.

**- தெணியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. டானியல்

**1950**களில் இலங்கைத் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட ஓர் அபிவிருத்தி' தமிழிலக்கிய வரலாற்றின் திருப்புமுனைகளில் ஒன்றாக அமைந்தது.

சமூகத்தின் அடிநிலை மக்களாக அமைந்தவர்களைப் பற்றி அவர்களுக்கு தூரத்திலேயுள்ளவர்களும் அனுதாபமுள்ளவர்களும் எழுதிய நிலைபோய், அந்த அடிநிலை மக்களிடையேயிருந்து வந்து, அந்த அடிநிலை வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு, அதன் துக்கங்களை, அது வழங்கும் ஏலாமைகளை ஏற்றுக்கொண்டு, ஆனால் சமூக தத்துவக் கருத்து நிலைக்காகப் போராடும் இயக்கங்களின் அங்கத்தவர்களாக இலட்சிய நெறியுடன் வாழும் சிலர் தம்மைப் பற்றித் தாமே எழுதும் நிலை ஏற்பட்டது.

இலக்கிய ஆசிரியர் பற்றிய பாரம்பரிய தராதரங்கள் யாவும் அந்தக் கணத்திலே பறந்தன எனலாம். இலக்கியத்தின் உற்பத்தியிலும் நுகர்விலும் பெருமாறுதல்கள் ஏற்பட்டன.

இந்த இலக்கியக் குரல் தமிழிலக்கியத்தின் உயிரிப்பை விளங்கிக்கொண்ட அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது.

இந்த இலக்கியத்தில் ஒரு புதிய மரபு ஏற்பட்டது. இந்தப் புதிய மரபின் எடுத்துக்காட்டாக, இம்மரபைப் பிரதிநிதித்துவப்படுத்து பவர்களாக இருவரது பெயர்கள் இலக்கிய உலகில் அடிபடத் தொடங்கின. இந்தப் புதிய இலக்கிய மாற்றத்தை விரும்பியோர் பெருமை சார்ந்த பரித்தவ்வியத்துடனும், அம்மாற்றத்தை எதிர்த்தோர் திரிகரண சுத்தியான வெறுப்புடனும் அப்பெயர்களை உச்சரித்தனர். 'டானியல்', 'டொமினிக் ஜீவா' என்பதே அவ்விரு பெயர்களுமாகும்.

இருவரும் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள். இருவரும் பொதுவுடமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் இயக்கச்செயற்பாடு உடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தின் சமூக ஏற்றத்தாழ்வுகளை, சாதிவழி வரும் தீண்டாமையை, அது ஏற்படுத்தும் மனிதாயச் சிதைவுகளை, அவற்றால் பாதிக்கப்பட்டவர்களாய், பாதிக்கப்பட்டவர் களிலிருந்து அந்நியப்படாதவர்களாய், எழுதினர். தோழர்களின் பெருமையாகவும் இலக்கியச் சநாதன வாதத்தின் தாக்குமையங் களாகவும் அமைந்தனர். இந்தப்பொறாமையுணர்வும். தூக்கலும் காரண காரியத்தொடர்புடன் வளர்ந்தன. அரசியற் கருத்து வேறுபாடுகள் பிரித்தாலும் இலக்கியச் சாதனைகளில் இவர்கள் இரட்டையர்களாகவே கருதப்பட்டனர்.

டானியலை நான் கடந்த முப்பது வருடங்களாக அறிவேன். டானியல் என்ற மனிதனையும் அவரது எழுத்தையும் இணைத்துப்பார்க்கும் பொழுது ஒரு உண்மை புலனாகின்றது. சமூக முற்போக்கு இலக்கியத்தின் பல்வேறு அமிசங்களுள் ஒன்றான தீண்டாமை எதிர்ப்பியக்கத்தில் டானியலின் ஈடுபாடு பூரணமானது. யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் பிரதான முரண்பாடாகச் சாதிக்கொடூரத்தையே டானியல் கருத்திற் கொண்டு வந்துள்ளார். டானியலின் அரசியற் போக்கினை இப்பண்பே தீர்மானித்துள்ளது எனலாம்.

டானியலின் இன்னொரு முக்கிய பண்பு அவர் நிறைய எழுதியுள்ளமையாகும். இது தரப் பிரச்சினைகளைப் பல தடவைகளில் கிளப்பியுள்ளதெனிலும், சாதிக் கொடூரத்தைச் சித்திரிப்பதையே தனது முக்கிய இலக்கியப் பணியாகக் கொண்டுள்ள டானியல், இக் குற்றச் சாட்டுப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

இந்தப் பிரச்சினையைத் தனது உணர்வு வட்டமாகவும் இயக்கத் தன்மையாகவும் கொண்ட டானியல், தனது எழுத்துக்களில், இந்தச் சமூகக் கொடூரங்களைத் தானே காண்பவராக'எழுதுகிறார். இதனால் டானியலின் எழுத்தில் சம்பவக் கோர்வைகளையும், கட்புலத் தெளிவுடைய சித்தரிப்பையும் காணலாம். டானியலின் நடையில் விவாதத்திலும் பார்க்க விவரணம்தான் அதிகமாக இருக்கும்.

இதனாலேதான் டானியலின் எழுத்துக்கள் இப்பிரச்சினை பற்றி எழுதிய மற்றைய எந்த எழுத்தாளர்களிலும் பார்க்க சமூக வரலாற்றுக்கான சான்றாக அமைந்துள்ளன. இவ் வகையில் அண்மையில் வெளிவரவுள்ள 'அடிமைகள்' மிக முக்கியமான ஒரு படைப்பாகும்.

டானியலின் எழுத்துக்கள் கிளப்பும் பல்வேறு பிரச்சினைகளுள் ஒன்று, அவரது எழுத்துக்கள் வழியாக வரும் யாழ்ப்பாண உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தினர் பற்றிய அடிநிலை மக்களின் பார்வையேயாகும்.

நான் முன்னர் ஒருமுறை கூறியது போன்று, டானியல், டொமினிக் ஜீவாவின் எழுத்துக்கள் சைவத் தமிழ் பாரம்பரியம் மிக்க கவனத்துடன் கட்டியெழுப்பிய சமூகப் பாரம்பரியத்தின் இருண்ட பகுதியின் சித்திரிப்புக்களாக அமைந்துள்ளன.

இதனாலேதான் ஒவ்வொரு முறையும் டானியல் எழுத சில 'மன அசௌகரியங்கள்' ஏற்படுகின்றன.

ஆனால் நாம் ஒரு விடயத்தை மறந்து விடுகிறோம். ஆக்க இலக்கிய கர்த்தா தனது சமூகப் பிரக்ஞையிலே உள்ளவற்றையே எழுத முடியும். அவை தவறாகவோ, அல்லது அசௌகரியமான தொன்றாகவோ இருக்கலாம். ஆனால் அவன் அதைத் தவிர வேறொன்றையும் எழுத முடியாது. கஃப்பாவென்றால் என்ன? ஜானகிராமன் என்றால் என்ன? டானியல், டொமினிக் ஜீவா என்றால் என்ன? இது பொது விதி.

இதில் முக்கியமான வினா என்னவெனில், இந்தப் பிரக்ஞை அவர்களது படைப்பாற்றலுக்கும் முற்போக்கான சமூகவிளக்கத்துக்கும் இடையூறாக இருக்கின்றாதா என்பதே.

டானியலின் எழுத்துக்களுக்கான ஒரு நியாயப்பாடு உண்டு. யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி காரணமாக சமூக ஒடுக்குமுறை இருக்கும்வரை டானியல்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். இந்தப் பிரச்சினையை மறைத்துக் கொண்டு இப்படி எழுதலாமா என்று கேட்பது நியாயமற்றது.

டானியல், டொமினிக் ஜீவா எமது சமூக வரலாற்றின் ஒரு கட்டமாக அமைபவர்கள். டானியலிடம் நான் காணும் முக்கிய சிறப்பு, அவரது நட்புணர்வாகும்.

1950-களில் இருந்த டானியல் அன்று. இன்றைய டானியல் பல மாற்றங்கள். ஆனால் இந்த மாற்றங்களிடையே காணப்படும் ஒரு தொடர்புணர்வு.

சமூகக் கொடூரங்களுக்கெதிராகக் குரலெழுப்பும் ஆவேச மனிதாயவாதக் குரல் டானியலுடையது. இந்தக் குரல் நீண்டு நின்று ஒலிக்க வேண்டும் என்பது எனது அவா.

**கார்த்திகேசு சிவத்தம்பி**

(அட்டைப்பட ஓவியங்கள்-1989 என்ற நூலிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிந்தன்

## முன்னுரையில்...

எனது இலக்கியக் கோட்பாட்டினை வாசகர்கள் நன்கறிவர். நூலுருவம் பெற்ற எனது படைப்புகளில் "கோவிந்தன்" என்ற இந்த நாவல் ஐந்தாவதாகும். ஏறக்குறைய அறுபது ஆண்டுகால யாழ்ப்பாணப் பிரதேசத்து வாழ்க்கையின் பொது அம்சங்கள் சிலவற்றை இந்த நாவல் அறிய வைக்கிறது.

கிராமப் பகுதிகளை அப்படியே காணவைத்து, அதைக் குலைக்காமல், நலங்காமல் நகரவும் வைத்து, அந்த நகர்வுகளுக்கேற்றதான கதை ஒன்றினையும் கண்டடைந்து, சாமுத்திரிகா இலட்சணங்களும் பொருந்திய தலைவன், தலைவியையும், "வில்லன்", "வில்லி"களையும், நடுநிலையாளர் களையும் உலாவவிட்டு, அந்தப் படைப்புக்குட்பட்ட கதாமாந்தர்கள் பாரம்பரிய சம்பிரதாய உறவு முறைகளை மீறி விடாமல் பக்குவமாகப் பாதுகாத்து சுபம் சொல்லி முடிக்கும் 'சோலி சுறட்டற்ற' இலக்கியக்காரனாக என்னால் இருக்க முடியவில்லை.

கோவிந்தனில் கிராமப்புறங்களைப் பார்ப்பதுடன் கிராமப்புறங்களின் இயல்பான பேச்சுக்களையும் வாசகர்கள் கேட்பார்கள். அத்துடன், **சாதியால் - மதத்தால், வேறு பல சிக்கல்களால் முரண்பட்டுப் பிளவுபட்டு நிற்கும் சாதாரண மக்கள் உலக வியாபகமான வர்க்க ஐக்கியத்துள் தங்களையும் அறியாமலே இணைத்து வழிநடக்கும் வரலாற்று உண்மையினையும் காண்பார்கள்.**

இந்த நாவலைப் படிக்கும்போது வழமைக்கும் அதிகமாகச் சிலர் முகம் சுளித்துக் கொள்வார்கள் என்பதும், பெருவாரியான கிராமப்புற மக்களும், பின்தங்கியவர்களும், பின் தள்ளப்பட்டவர்களும் தங்கள் வாழ்க்கையினைத் தாங்களே காண்பது போன்ற உணர்வினைப் பெறுவார்களென்பதும் எனக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தேயிருந்து மனதால் மேலோட்டமாகக் கிராமத்தைப் பார்த்து, பேச்சுவாக்கில் அறிந்தவைகளையும், ஊகிப்பவைகளையும் வைத்துக் கொண்டு புனைந்த கதைகளையும், நாடோடிப் பாடல்களையும் தேடிப்பிடித்து, தேடியவற்றுள் காமரசம் சொட்டும் பகுதிகளை மட்டுமே தெரிவு செய்து தரப்பட்ட நாடோடிப் பாடல் திரட்டுக்களைத்தான் கிராமிய இலக்கியங்கள் என்று தமிழ் வாசகர்கள் கண்டிருக்கின்றனர். இந்த மட்டங்களில் நின்றுகொண்டேதான் இவைகளுக்கான விமர்சனங்களும் தரப்பட்டுள்ளன. இதனால் கிராமிய இலக்கியங்கள் எனப்பட்டவை கிராமப்புற வாசகர்களாலேயே விரும்பப்படாதவை ஆகியிருந்தன.

நாட்டின் பெரும்பான்மையினர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இந்த மக்கள் அன்றாடம் சந்திப்பவைகள், சமூக அமைப்பு, சமூக அமைப்பு முறையினால் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பளுக்களைத் தூக்கி வீச அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், கிராமிய இயல்புளோடு ஒட்டிய போராட்டங்கள், அப்போராட்டங்கள் ஒரு தனி மனிதனுக்கு மேலாக அல்லாமல் அவன் உள்ளடங்கி நிற்கும் வர்க்கத்திற்கெதிராகப் பரிணமித்து வருதல் ஆகிய உண்மைகள் புறக்கணிக்கப்பட்டுப் படைக்கப்படும் எந்த இலக்கியமும் உண்மையான கிராமிய இலக்கியம் ஆகிவிட முடியாது.

எமது நாட்டில் இதுவரை வெளியான சிருட்டி இலக்கியங்களுள் விரல்விட்டு எண்ணக்கூடிய சில, கிராமப்புற மக்களின் வாழ்வினைப் பிரதிபலித்துள்ளன. அவ்வப்போது அவைகள் கிராமப்புற மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டும் உள்ளன. அந்த வேளைகளில் மௌனம் சாதித்த மெத்தப்படித்தவர்கள் சிலர் இப்போது அந்தச் சிருட்டிகள் மீளாய்வு செய்யப்படவேண்டுமென்று குரல் எழுப்புவதற்கான காரணங்கள் என்ன? இந்தக் குரலை வைப்பவர்கள் திடுதிப்பென்று கிராமங்களில் குதித்து, அங்கு செவ்வனே காலூன்றி நின்று, கிராமங்களையும், கிராமிய மக்களையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் படித்திருக்க வேண்டும். அல்லது கிராமப்புற மக்களைத் தங்கள் விருப்பப்படியெல்லாம் பிரித்து வைத்து, வேண்டிய போதெல்லாம் அவர்களை 'ஆடாய்க் கட்டித் தோலாயுரித்து' அவர்களில் குருதி, தசை, நீர், நிணம் ஆகியவைகளைச் சுவைத்துப் பெருவாழ்வு கண்டு மடிந்து போய்விட்டவர்களின் மண்டை ஓடுகளைத் தேடி எடுத்து விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்தி, அவர்களின் அந்த அசுர வாழ்க்கை நடப்புக்கான காரண, காரியங்களைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அப்படி எதுவும் நடந்திருப்பதாகத் தெரியவில்லை. பதிலுக்கு இந்தக் குரலை எழுப்புபவர்கள் கிராமப்புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை விட்டுத் தூரத்தூரப் போவதையே காணக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் இப்போது நேருக்கு நேராகவே கோவிந்தனுக்கு மேலாக ஒரு போர் தொடுப்பர் என்பது தெரிந்ததே.

நலிந்தவர்களின் வாழ்க்கையோ, அந்த நலிவிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளோ இதுவரை தமிழ் இலக்கியத்தில் நவீனகால வரலாற்று அந்தஸ்தினைப் பெற்றதில்லை. ஆனால், கோவிந்தனைப் படிக்கும் மக்கள் அந்த அந்தஸ்தினை இதற்குத் தருவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்த நாவலில் வரும் கதாபாத்திரங்களோடு பாத்திரங்களாக இரண்டு நாய்களை வாசகர்கள் பார்ப்பார்கள். அவைகளின் நடவடிக்கைகளைக் கூர்மையாக அவதானிப்பவர்கள் உலக வியாபக மாகிவிட்ட வர்க்கம் சார்ந்த ஒரு உண்மையினை இந்த இரண்டு ஜீவன்களும் வெளிப்படுத்தி, மனதைத் தொடும் மானிட அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டதைக் காண்பார்கள்.

"உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அந்த உயிரினங்களில் உயர்ந்ததான மனித இனத்தோடு சேர்ந்தாப்போல் வளர்ச்சி அடைந்து வந்த ஒன்றே ஒன்று காதல் மட்டுந்தான். அதனால் "காதல் இல்லாத இலக்கியங்கள் - முதன்மைப்படுத்தாத படைப்புக்கள் - மனித நாகரீகத்தை வளப்படுத்தத் தகுதியற்ற முண்டங்கள்" என்ற விதத்தல் இந்தக் காதலுக்கு தெய்வீக அந்தஸ்துக் கொடுப்பது மரபாகி விட்டது. இந்த நாவலில் இந்த மரபு மீறப்படுகிறது. இந்தக் காதல் என்ற 'இது' மனிதனின் வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்ப நீண்டும் நெளிந்தும், வளைந்தும், கூனியும், குறுகியும் வரக்கூடிய ஒன்றே அன்றி, அதற்குமேல் அந்த 'இது'வுக்கு எந்தவித தனி அந்தஸ்தும் இருந்ததில்லை' இருக்கப்போதுமில்லை என்பதனை இந்த நாவலைப் படிக்கும்போது தங்களைச் சூழ உள்ள இயல்பான நடைமுறைகளோடு வாசகர்கள் இதனை ஒப்பிட்டுப்பார்த்தால் ஒப்புக்கொள்வர்.

இந்த நாவலுக்குள்ளே இருப்பவை நான் அறிந்தவை, பார்த்தவை, அனுபவித்தவைகளே! இதைப்படிக்கும் வாசகர்களாலும் இவைகள் அறியப்பட்டவை, பார்க்கப்பட்டவை, அனுபவிக்கப்பட்டவை களாகவே இருக்கும் என்பது நிச்சயம் இவைகளை எனது இலக்கிய ஆளுகைக் குட்படுத்தி மக்களுக்குத் தந்ததில் எனக்கு எந்தவிதச் சிரமமுமிருக்கவில்லை.

பேனாவைக் கையில் வைத்துக்கொண்டு அந்தப் பேனாவுக்குத் தீனி போட சமூகத்தை மேலாக நோட்டமிட்டு தசை உணர்வுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனா வசப்படுத்தி எழுதுவது ஒருவகை.

சமூகத்தில நடமாடும்போது தற்செயலாக அகப்படும் ஒரு சம்பவத்தை, வெறிமாடொன்றைப் பிடிப்பது போன்று பாய்ந்து பிடித்து ஒரு கைக்குள் அடக்கிக்கொண்டு, கால்களை இடறி நிலத்தைத் தடவி பக்கத்தே கிடக்கும் கயிற்றினை எடுத்து அந்த வெறிமாட்டினைக் கட்டிப்போடுவது போன்ற விதத்தில் கையிலிருக்கும் கதையும் கதைப் பின்னலும் மனதிலிருந்து கலைந்து போய் விடுமோ என்ற ஏக்கத்தில் பேனாவை அவசரத்துடனும், ஆவேசத்துடனும் நகர்த்திச் செல்வது இன்னொரு வகை.

**சமூகத்தோடு சேர்ந்து மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, அவர்களைப் படித்து, அவர்களிடமிருந்து படித்தவைகளை இலக்கிய ஆளுகைக்குட்படுத்தித் தங்கள் சுமைளைத் தாங்களாகவே எடுத்தெறியும் போதத்தை அவர்களுக்கு அளித்து இயல்பான முறையில் அவர்களை நகர்த்திச் செல்ல நிதானமாகப் பேனாவை ஓடவிடல் வேறோரு வகை.**

இந்த மூன்று வகைகளுக்கு உட்பட்டவர்களே விமர்சகர்களுமாவார்கள்.

“நாங்கள் விருப்பு வெறுப்புக்கு உட்படாதவர்கள்’ நடுநிலையாளர்கள்” என்று விமர்சகர்கள் கூறுவதெல்லாம் வெறும் பொய்யானவை. அரசியலிலோ, இலக்கியத்திலோ, வேறெந்த விவகாரங்களிலோ நடுநிலைமை என்பது ஒன்றில்லை. நீதி, அநீதி என்ற இரண்டு புள்ளிகள் ஒன்றோடொன்று முட்டி நெருங்கிக்கொண்டு நிற்கின்றன. இடையே மூன்றாவது ஒரு புள்ளிக்கு இடமேயில்லை. இதனால் கோவிந்தனை விமர்சிக்கப் புகுபவர்கள் ஏதாவது ஒரு பக்கத்தில் நின்று தங்களை வெளிப்படுத்தியே ஆகவேண்டும் (அல்லது இனங்காட்டிக் கொள்ள மனது இடந்தராத பட்சத்தில்) ஒதுங்கிவிட வேண்டும்.

**கே. டானியல்**
*ஜூலை, 1995.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனிதத்தின் நாமம் டானியல்

தலித் இலக்கியம் என்பது இன்று தமிழ் இலக்கியப் பரப்பில் எல்லோராலும் பரபரப்பாகப் பேசப்படுகிறது, விவாதிக்கப்படுகிறது. புலம் பெயர்ந்த நாடுகளிலும் நம்மவர் மத்தியில் இது குறித்த சர்ச்சைகள், நோக்குக்கள் கூர்மையடைந்தே வருகின்றன. பல நூறு ஆண்டுகாலம் தீண்டாமைக் கொடுமைகளுக்குட்பட்டு வருந்திய, போராடிய ஒடுக்கப்பட்ட மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் பார்வையில், பரந்த சமுதாயத்தை நுணுகிக் காணும் இலக்கியங் களைத் தலித் இலக்கியம் என அழைக்கலாம்.

இந்தியாவில் மராத்திய, குஜராத்திய மொழிகளில் எழுதிவரும் தலித் எழுத்தாளர்களும் விமர்சகர்களும்தான் முதலில் தலித் இலக்கியங்கள் குறித்து விவாதித்து வந்துள்ளார்களென அறிய முடிகிறது. இந்த எதிர்ப்பிலக்கியத்தின் தாரதம்மியங்கள் குறித்துப் பரந்த கண்ணோட்டமும் கவனிப்பும் தமிழகத்தில் அண்மைக் காலமாகத்தான் இடம்பெறுகிறது.

ஆனால், வட இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் ஒருவனாகப் பிறந்து, நசியுண்டு, துவண்டு, நிமிர்ந்து போராடி, அமைப்புக்களை நிறுவி, இறுதிவரை அந்த மக்களது உரிமைகளுக்காக உழைத்து, அந்த அனுபவங்களைப் புடமிட்டு இலக்கியமாகத் தந்த கே. டானியல் தமிழில் தலித் இலக்கிய முன்னோடியாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரைப் 'பஞ்சமரின்' படைப்பிலக்கிய முன்னோடியாகக் காணலாம்.

தனது போராட்ட வாழ்க்கைக்கான பாதையாக மாக்ஸிச, லெனிஸச, மாவோயிச சித்தாந்த வழியினை ஏற்றுக்கொண்டவர். இதில் இறுதிவரை நம்பிக்கையுடன் நடந்தவர்.

டானியல் என் கண்களில் மோட்டார் சைக்கிளில் ஓடிக்கொண்டே இருக்கிறார். அவர் மோட்டார் சைக்கிளில் ஒருபக்கம் சரிந்திருந்தே ஓடுவார். 'என்ன... டானியல் உது இடப்பக்கச் சரிவோ' என்று ஒரு நாள் அவரிடம் கேட்டேன். 'இடப்பக்கம் சரிந்திரிந்து ஓடுவதில் ஒரு சக்தி பிறக்கிறது' எனச் சிரித்துக்கொண்டே கூறினார். ஆம். . அவர் வாழ்க்கையை இடது சாரியாகவே ஓட்டி முடித்தார்...' எனச் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் எழுதியது ஞாபகத்திலுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக்கல்வி மட்டுமே பெற்ற டானியல் அனுபவக்கல்வி நிரம்பப் பெற்றவர். கல்லூரிப் படிப்பையோ, பல்கலைக்கழகப் படிப்பையோ படித்துச் சான்றிதழ்பெற, வறுமை அவரை விடவில்லை. வாய்ப்பு வசதி அவருக்குக் கிட்டவில்லை. ஆனால் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் பலவும் அவரது எழுத்துக்களை ஆய்வு செய்கின்றன, விமர்சனத்துக்கு எடுத்துக்கொள்கின்றன.

தனது 16வது வயதில் பொதுவேலைகளில் ஈடுபடத்தொடங்கிய டானியல் 21ஆவது வயதில் பொதுவுடமை அரசியல் இயக்கவாதி யாகிவிட்டார். தீண்டாமை ஒழிப்புப் போராட்ட களங்களின் முன்னணிச் செயல்வீரனாக இயங்கினார்.

கொடுமை கண்ட இடங்களில் கொதித்தெழுவார். உடன் விரைந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவார். ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளம் எல்லாம் நிறைந்தார். வட இலங்கையில் எந்தக் குச்சுக் கிராமத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மகனும் தனக்கு ஓர் இன்னல், கொடுமை, அவமானம் நேர்ந்தால் டானியலிடம் வந்தால், அழுதால், உதவி, ஒத்துழைப்புக் கிடைக்கும் எனத்தெரிந்து வைத்திருந்தான்.

தினசரி அவரது வேலைத் தலத்திற்கு இப்படிப்பட்ட மக்கள் பலர் வருவதை யான் பல வருடங்களாகக் கண்டு வந்துள்ளேன். அந்தளவு மக்கள் அவர்மீது நம்பிக்கையும், பாசமும், மதிப்பும் வைத்திருந்தனர். அவர் எளிமையான தோற்றம், வாழ்க்கை நடைமுறைகளைக் கொண்டவர்.

ஒடுக்கு முறைக்கு ஆட்பட்டுத் துன்பப்படும் மக்களின் துன்பத்தில் உடனடியாகப் பங்குகொள்பவர். நண்பர்களை நேசிப்பவர். உதவுபவர்.

கண்பார்வை மங்கிவந்த இறுதிக்காலத்திலும், நண்பர்கள் நலன் விசாரிக்க பல ஊர்களுக்கும் அவரோடு போய் வந்ததை யான் மறக்கவில்லை.

தனிமனிதனாக வாழாமல், இயக்கபூர்வ தெளிந்த பார்வையுடனும், பரந்துபட்ட சாதாரண மக்கள் கூட்டத்தினர் அன்புடனும், நெஞ்சினிய நண்பர்களின் தொடர்புடனும் வாழ்வைத் தொடர்ந்தவர். நேர்மையும், துணிவும் அதேவேளை பணிவும் அவரது இயல்புகள். அவரது இலக்கியங்கள் யாவும் சாதாரண மக்களின் துன்ப துயரங்கள், அவர்கள் அனுபவித்த கொடுமைகள், அதற்கெதிராக அவர்களது நிமிர்வு, ஒன்றிணைவு, போராட்டங்கள் பற்றியதே. மக்களிடம் போய்ப்பழகுதல், படித்தல், தேடல், சிந்தித்தல், புடமிட்டு எழுதுதல், இதுதான் அவரது இலக்கிய வழி!

டானியல் என்ற மனிதனின் இலக்கியம் அவரிலிருந்து வேறுபட்டதல்ல. அவர் வாழ்க்கை வேறு. அவரது இலக்கியம் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. அவரது பார்வை, எண்ணம், எழுத்து எல்லாம் ஒரே பாதை தான். டானியல் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் சுயநலன்களுக்காக விலைபோனவரல்ல. தன் கருத்துக்களை விட்டுக்கொடுத்தவரல்ல. மாற்றிக் கொண்டவருமல்ல.

'டானியல்... நீ என்றுமே உனது கருத்துக்களை விட்டுக்கொடுத்தவன் அல்ல. அரசியலில் நாங்கள் இருவரும் ஒரே வண்ணத்தின் இரு கோடுகள். எது கெட்டியானது என்பதுபற்றி எத்தனை தடவை சண்டையிட்டிருப்போம். ஆனால் அந்தச் சண்டைகள் எம்மை மேலும் நெருங்கிய நண்பர்களாக்கிவிட்டதே தவிர பகைமையை வளர்க்கவில்லை. உனது இலக்கிய நேர்மையை உணர்ந்தவர்கள் என்றுமே உன்னோடு பகைக்க முடியாது. நீ ஒரு நல்ல நண்பன். அற்புதமான பாடைப்பாளி... ' எனப் பேராசிரியர் சிவத்தம்பி எழுதியமை நோக்கத்தக்கது.

டானியலின் நூல்கள் வெளிவந்த காலத்தில், அன்று அவற்றின் வெளியீட்டு விழாக்கள் அறிமுக-விமர்சனக் கூட்டங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் நடைபெற்றன. யாழ்ப்பாண நகர் முதல் வடபகுதிக் கிராமங்கள், திருமலை, கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு என பல்வேறு பகுதிகளிலும் அவரது நூல்கள் அறிமுகஞ் செய்யப்பட்டன. அவரை அழைத்து மக்கள் கலந்துரையாடினர். இன்றுவரை, டானியல் நூல்களுக்கான வெளியீட்டு விழாக்கள்-அறிமுக விழாக்கள் போன்று வேறு எழுத்தாளர்களது நூல்கள் கிராமம் முதல் பட்டினங்கள் வரை விழாக் கண்டதில்லை எனக் கூறலாம். இதற்கு டானியலது மக்கள் பணியும், தொடர்பும்தான் காரணமாகும்.

டானியலது வேலைத்தலமான 'ஸ்ரார் கராஜ்' பலவிதமான மனிதர்களைச் சந்தித்திருக்கின்றது. பலதரப்பட்டவர்கள் டானியலை நாடி வருவர். அங்குள்ள வாங்குகளும் இரும்புக்கதிரைகளும் எத்தனையோ சர்ச்சைகளைக் கேட்டிருக்கும். டானியலுடன் உரையாடிவிட்டு, உள்ளம் திறந்து கொட்டிவிட்டு, ஆலோசனை கேட்டுவிட்டு, உதவிகளும் பெற்றுவிட்டுப் போவோர் தினம் ஏராளம்.

டானியல் கலந்துகொண்ட அரசியல், இலக்கிய நிகழ்ச்சிகள், களங்கள் பலவற்றையும் திட்டமிடும் இடமாக 'ஸ்ரார் கராஜ்' அமைந்தது எனலாம். தனது தொழிற்துறைகளிலும் பார்க்க அரசியலுக்கும், இலக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர் டானியல். இதேபோன்று பலதரப்பட்ட இனிய நண்பர்களைப் பெற்றுக்கொண்ட டானியல், கோட்பாடு, கொள்கை - இலட்சியம் என்று நோக்கும்போது நட்பிலும் பார்க்கக் கொண்ட கொள்கைக்கே முதலிடம் கொடுத்தவர் என்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் முக்கிய பங்களிப்புச் செய்து முன்னின்று நடத்திய இலக்கிய போராட்டங்களிலும், அரசியல் - தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களிலும் அவருடைய தாக்குதலுக்கு இலக்காகியவர்கள் பலர், அவருடன் நன்கு பழகியவர்களும், அவரது நண்பர்களுமாக இருந்திருக்கின்றனர்.

டானியல் ஒரு நடுநிலை வாதியல்ல. ஒரு பக்கச் சார்புடையவர். ஒரு வர்க்கச் சார்புடையவர். உலகின் அடக்கி ஒடுக்கபட்ட மக்களின் பக்கத்தை எடுத்த டானியல் அந்த மக்களின் நலனுக்கு உகந்த விடயங்களிலேயே ஈடுபட்டார். தான் ஆதரிக்கும் மக்களின் நலனுக்குப் பாதகம் என்று அறிந்த கணமே அவர் எந்த விடயத்தையும், எந்த மனிதனையும் எதிர்க்கத் தயங்கியதேயில்லை.

தமிழில் தலித் இலக்கியம் படைத்த சிறந்த நாவலாசிரியர் என்று டானியலைக் கூறமுடியும். இவரது மார்க்சிஸப் பார்வையும், சாதியப் பார்வையும் முரண்படுவதாகத் தெரியவில்லை. மார்க்சிஸத்திற்குள் சாதியப் பார்வை ஒத்து இயங்குகிறது... 'என்கிறார் கோவை ஞானி. இதுதான் டானியலின் தெளிவு, பார்வை, அனுபவத்தேடல் எனலாம்.

டானியலின் நாவல்களில், யாழ்ப்பாணத்தின் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட பகுதியின் வரலாற்று ஓட்டத்தைக் கவனிக்கலாம். குடாநாட்டின், யாரும் காட்டியிராத இருண்ட பகுதிகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் டானியல்.

இதனால் அவரைச் சிலர் அறவே விரும்புவதில்லை. டானியலை ஒழித்துக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுமுண்டு. மக்கள் பணிகளில் ஈடுபட்ட 'குற்றத்திற்காக' சிறைவாசமும் கண்டவர். பல தடவை தலைமறைவு வாழ்க்கைக்கும் உள்ளானவர் டானியல்.

அன்றைய குடாநாட்டின் கோலங்களை, யாழ்ப்பாணத்திற்கு முதல் ரயில் வருகை, கார் வந்தமை, ஆங்கில மருத்துவ அறிமுகம், மாந்திரீகம், பேயாட்டம், தேங்காயடி, சேவற் சண்டை, வீடுகளின் அமைப்பு, திருவிழாக்கள், திருமணம், இழவு வீடு, கள்ளுக் கொட்டில், பத்திரிகை, வலை விரிப்பு, மீன் பிடிப்பு, சமயச் சடங்குகள், பறை முழக்கம், தீப்பெட்டித் தொழிற்சாலை ஆகியவற்றோடு வேளாள நிலச் சொந்தக்காரர் பலரின் ஆதிக்கக் கொடுமை, ஆடம்பரம், பெருமிதங்கள், சின்னத்தனங்கள், அடக்குமுறைகள், நிலப்பறிப்பு, கோவில்களில், பாடசாலைகளில், தேநீர்க் கடைகளில் உரிமை மறுப்பு, குளங்களிலும் குளிக்கத் தடை, பாலியல் ஏகபோகம் ஆகியனவும், இவற்றிற்கு எதிராக ஆங்காங்கே பஞ்சம மக்களின் நிமிர்வு, ஒன்றிணைவு, போராட்டம், முற்போக்காளரின் ஆதரவு என்பனவெல்லாம் டானியலின் நாவல்களில் வரலாற்றோடு ஒட்டியதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தீண்டாமைக் கொடுமை சமகாலப் பிரச்சனை தான்' என்பதனை டானியல் பேச்சில் மாத்திரமல்ல, எழுத்திலும் உறுதிபடக் கூறியுள்ளார்.

'மனிதன் என்னே அற்புதமானவன்' என்ற மார்க்ஸிம் கார்கியின் வார்த்தைக்கேற்ப அற்புதமான மனிதன் டானியல்.

**டானியல் ..**
**நல்ல மனிதத்தின் நாமம்**
**உலகத்தை**
**வெல்லப் புறப்பட்டு வெண்சிறகு அசைத்திட்டுத்**
**தூரப்பறக்கத் துடித்த புறா ஒன்று.**
**கார எழுத்தின் கரங்கள்**
**யாருக்கும்**
**பாரவிலங்கின் பழுவென்றால்... ஓடிப்போய்**
**அந்த விலங்கை அகற்றத் துடித்தவொரு**
**பந்தத்தின் நாமம்**
**டானியல்**
**பண்டிதரும்**
**வித்துவான் பரம்பரையும்,**
**பேனாவைக்**
**கொண்டிருந்த காலத்தில்**
**கொடிபிடித்த கலைஞனிவன்.**
**சாதிக்கெதிரான சமர்க்களத்தில்**
**முன்னின்று**
**நீதிக்கே என்றும் நிழல் விரித்த ஆலமரம்.**
**நாடெல்லாம் சுற்றி நடந்த புயற்காற்று.**
**கூடுடைத்து நின்று கூவத் துடித்த குயில்.**
**தீண்டாமை யென்ற சிறுமைக்கு எதிராகப்**
**புண்டோடதை அழிக்கப் புறப்பட்ட போராளி... ...**

என எழுதிய கவிஞர் புதுவை இரத்தினதுரையின் வரிகளும் நினைவில் கொள்ளத்தக்கன.

சாதாரண மக்கள் முதல் கல்வியாளர்கள் வரை கவனத்தில் கொள்ளும் மனிதாபிமானி, மக்கள் எழுத்தாளர், அரசியல் - சமூக விடுதலைப் போராளி டானியலின் எழுத்துக்கள் நீடித்து நிலைக்கும்.

புலம் பெயர்ந்த இளந் தலைமுறை இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் டானியலின் எழுத்துக்களைப் படிப்பதன் மூலம் வரலாற்று ரீதியாக வட இலங்கை வாழ்வின் மறுபக்கத்தையும் அறிந்து கொள்ள முடியும் எனக் கூறலாம்.

இதைத் தெரிந்துகொள்வதும் அவசியமானதே!

**வீ.ரி.இளங்கோவன்** - *10- 05-2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K. Daniel

With the death of K. Daniel, the literary movement of this country has suffered a great loss. I have lost a good comrade and a dear friend.

From his young days, Daniel played an active part in the activities of the Jaffna branch of the Ceylon communist Party. But his greatest contribution was as one of the leaders of the mass movement for the eradication of caste and untouchability during the second half of the nineteen sixties.

It was the movement that rocked in removing some of the disabilities suffered by the so- called depressed castes, including the ban on temple entry to Harjans.

A well- known and respected Tamil novelist, his novels skilfully exposed the rottenness of the feudal caste system that is still prevalent in the North. He won the Sri Lanka Sahitya Mandalaya prize for his novel 'panchamar' which exposed cast slavery. His fame as a novelist was not confined to Sri lanka. He was well known in Tamil Nadu where he had many admirers- many of whom were present at his funeral at Tanjore.

Daniel was a firm supporter of the Communist Party to the last. I derive some comfort from the fact that he stayed with me in Colombo just prior to his departure for medical treatment to Tamil Nadu where, unfortunately, he died and now lies buried.

I pay my last respects to a courageous fighter and a loyal comrade.

**N. Sanmugathasan**

*'Daily News'*
March 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம் இழைக்கும் படைப்பாளி டானியல்....

உயிரோடு வாழ்ந்த காலம் தொடங்கி இறந்து இன்று வரைக்கும் இலக்கிய உலகில் விவாதம் செய்யப்பட்டு விமர்சனம் செய்யப்பட்டு வரும் இலக்கிய கர்த்தா திரு. கே. டானியல் அவர்களே. இலங்கையில் உரிமைகள் மறுக்கப்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்து வந்த இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் சமுதாயத்தில் அடிமட்டத்தில் குடிமைத் தொழில் செய்து வாழ்ந்து வந்த இந்த பஞ்சம மக்களில் ஒருவர்தான் ஈழத்து இந்த முற்போக்கு எழுத்தாளர் திரு. கே. டானியல். அறிவறிந்த நாள் தொடக்கம் தன் இறுதிக்காலம் வரைக்கும் ஈழத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர்களின் அணியில் நின்று போராடியவர். ஈழத்து எழுத்தாளர் எவருக்கும் கிட்ட முடியாத பெரு வாய்ப்புக்கள் இந்த எழுத்தாளனுக்குக் கிடைத்து ஈழத்து எழுத்தாளன் என்ற எல்லையைத் தாண்டித் தமிழ்ப் படைப்பிலக்கியத்திலே அவரின் பங்களிப்பு முன்னதாய் அமைந்துள்ளது. இப்போது பேசப்படுகின்ற "தலித் இலக்கியத்திற்கு முதன் முதலில் இவரின் பஞ்சமரே அடியெடுத்துக் கொடுத்தது என்பதில் யாருக்கும் சந்தேகமேயில்லை.

யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் மத்தியில் விரிந்து பரந்து பட்டுக்கிடக்கின்ற சமூகத்தின் ஜாதிக் கொடுமைகளைத் தெட்டத் தெளிவாக அதன் ஆணிவேர் தொடக்கம் பக்கவேர்கள், கிளைகள் வரைக்கும் விரிந்து சென்ற ஜாதிகளின் விருட்சத்தைத் தனது எழுத்து வடிவத்தில் வெளியே கொண்டு வந்த இலக்கிய கர்த்தாவும் டானியலே.

தனது சிறுகதை நாவல்களை வெறும் கற்பனைக் கதாபாத்திரங்களாக்கி அதை வெளியே உலா வரச்செய்தவருமல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் எழுதப்பட்ட பஞ்சமர், கோவிந்தன், கானல், தண்ணீர், அடிமைகள், பஞ்சகோணங்கள் போன்ற நாவல்கள் யாவும் யாழ்ப்பாணத்து சமூகத்தில் ஜாதியின் அடி வேர்களைத் தொட்டு நிற்கும் கிராமத்து ஒடுக்கப்பட்ட மக்களின் காலத்தைக் காட்டும் நாவல்களே. இப்படைப்புக்களில் வரும் கதாபாத்திரங்கள் யாவும் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்களல்ல. அந்த, கிராமத்து உண்மையான மனிதர்களே இவர்கள்.

டானியல் எழுத வேண்டும் என்பதற்காகவோ அல்லது தன்னை எழுத்தாளன் என்று முன்நிலைப்படுத்தவோ அவர் எந்தக் காலத்திலும் எண்ணியதும் இல்லை, சிந்தித்ததும் இல்லை. ஜாதியத்தின் பெயரால் அடக்கப்பட்ட ஒரு தமிழ்ச் சமூகத்தின் சக்தியாகவே, தன்னை அகவயப்படுத்திய அத்தனையையும், யாழ்ப்பாணத்து சமூக அமைப்பின் நாற்றங்களை வெளியே கொண்டு வந்தது மாத்திரமின்றி காலத்துக்குக் காலம் இடத்திற்கு இடம் ஜாதி வெறிகள் எப்படி இறுக்கி ஆட்டிப்படைத்து நின்றதென்று அவரின் நாவல்களையும், சிறுகதைகளையும் வாசிக்கும் போது புரிந்து கொள்ள முடிகின்றது.

ஜாதிப்போராட்டங்கள் நடந்த இடங்களில் அந்தக் கிராமத்துப் போராளிகளுடன் போராளியாக, மக்களோடு மக்களாக முன்நின்று போராட்டங்களை நடத்தியது மாத்திரமன்றி போர் வியூகங்களையும் வகுத்துக் கொடுப்பதில் வல்லவராகவே திகழ்ந்தார். "மக்களிடம் படித்தவற்றை மக்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்'' என்பதற்கிணங்க அம்மக்களுக்காகத் தான் படித்து வாழ்ந்து அனுபவித்த இன்ப துன்பங்களை எல்லாம் இந்த நாவல்கள் மூலம் தன்னைச் சார்ந்த சமூகத்திற்குக் கல்வெட்டுக்களாக விட்டுச் சென்ற பெருமை இந்த எழுத்தாளனுக்குக் கிடைத்த பெருவெற்றியே.

ஜாதிக்கொடுமைக்கு ஆளான ஒடுக்கப்பட்ட மக்கள்மீது மட்டுமன்றி வேசிகள், அலிகள், மாமாவேலை செய்பவர்கள் ஆகிய ஒருநிலைப் படுத்தப்பட்டவர்கள்மீதும் டானியலுக்கு ஈர்ப்பு இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் ஆதாரமாகவேயுள்ளது.

டானியலுக்கு ஜாதியை விட்டால் வேறு ஒன்றும் எழுத வராது. உயர் சமூகத்தை ஒருவகையில் பழிவாங்கும் நோக்கில்தான் அவர் எழுதுகின்றார். எந்தக் கட்டத்திலும் தனது சமூகத்தை விட்டுக்கொடுத்து எழுதியதில்லை என்று மெத்தப்படித்த இலக்கிய கலாநிதிகளால் அடிக்கடி விமர்சிக்கப்பட்டு வரும் அவர் ஜாதியை ஏன் முதன்மைப்படுத்தி எழுதினார்...? அவர் தன்னை எழுத்தாளனாகக் காட்டிக் கொள்ளத் தொடங்கிய காலம் முதல் யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது புலம் பெயர்ந்த நாடுகளில் ஜாதி மறைந்து விட்டதா...? அல்லது அழிந்து விட்டதா...? இரண்டுமே இல்லைத்தான். அதற்கு 1986ல் எழுதப்பட்ட "தண்ணீர்" என்ற நாவலின் முகவுரையில் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்.

"தாழ்ந்த சாதிப்பெண்களின் கற்புகள் சூறையாடப்பட்டமைக்குப் பழிதீர்க்கும் நோக்குடன் உயர்சாதிப் பெண்களைத் தாழ்ந்த சாதி ஆண்களுக்குச் சோரம் போகச் செய்யும் விதத்தில் எழுதி எழுதிப் பழி தீர்ததுக் கொள்கின்றேன் என்பது என்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டில் பிரதானமாகும். இதை நான் மறுத்து வருகின்றேன். உயர்சாதிப் பெண்கள் தாழ்ந்த சாதி ஆண்களையும் தங்கள் போகப்பொருள்களாகக் கொள்கின்றார்கள் என்ற நடைமுறை உண்மையைச் சுட்டிக்காட்டுவதே எனது நோக்கமாகும். அத்துடன் உங்கள் நாவல்களில் அத்தியாயத்துக்கு அத்தியாயம் உயர்சாதியினரால் செய்யப்படும் இரணியத் தனங்களைச் சித்தரித்து வந்தீர்கள். அப்படியெல்லாம் செய்தும் உங்கள் வெறி அடங்கவில்லையா...? என்ற கேள்வி கேட்பவர்களுக்கு" -

"எனது கடைசி மூச்சுப்போகும் வரைக்கும் எனது பேனாவுக்கு வலுவிருக்கும்வரை நான் காண எண்ணும் சமூக நீதி அதிகார பூர்வமாக பஞ்சப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும்வரை நான் இதைச்செய்து கொண்டே இருப்பேன். உடை நலங்காத - உடல் வாடாத நாட்டுப்புற மண்ணை மிதித்தும் அறியாத எந்த விமர்சனப் புலிக்குட்டிகளாலும் என்னைத் தடுத்து நிறுத்தி விடமுடியாது என்பதனை இந்த வேளை சொல்வதோடு எங்கே முடிந்தால் செய்து பாருங்கள் என்ற சபதமும் எடுத்துக் கொள்கின்றேன்".

இந்த முன்னுரை வாசிக்கும்போது எழுத்தாளர் ஜாதியின் பெயரால் அம்மக்கள் எவ்வாறு ஒடுங்கி வாழ்ந்தார்கள், வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

பிள்ளை வயிற்றோடு செத்துப்போன இளம் பெண்ணின் வயிற்றைக் கிழித்து அக்குழந்தையின் சடலத்தைத் தாயின் சடலத்தோடு வைத்துக் கொழுத்தும் காட்டு மிராண்டி வழக்கம் இங்குள்ள பெருந்தமிழன் சிறப்பு நிகழ்ச்சியாக செய்து வந்திருக்கின்றான். அது மாத்திரமின்றி "தாழ்த்தப்பட்ட மகன் கடல்மீன் தின்னக்கூடாது, குளமீன்தான் தின்ன வேண்டும்" என்று எழுத்தில் இல்லாத தேசவழமைச் சட்டம் வைத்திருக்கின்றான்.

பள்ளரோ, நளவரோ பறைய வீட்டில் தின்று விட்டால் தனது சாதிக்கு வந்தது இழுக்கென்று கருதி அதற்கேற்ற தண்டனைகளை வழங்கித் தங்கள் சாதியின் கௌரவத்தை நிலை நாட்டியிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் ஒரு நூறு வருடங்களில் யாழ்ப்பாணத்து மண்ணில் நடந்திருக்கின்றது.

இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரைகுறையுமாக கள்ளத்தனமாக உறங்கிக் கொண்டு அதேவேளை புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் நவீன மயப்படுத்தப்படுகின்றது. அழகாக வீதிவலம் வருகின்றது. யாழப்பாணத்து தமிழர்கள் தமது தாயகத்தில் கட்டிக்காத்து பேணி வந்த அத்தனை நாற்றங்களையும் தாம் புலம்பெயர்ந்த நாடுகளுக்கும் எடுத்து வந்துள்ளார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. கோவில்கள், ஊர் ஒன்றுகூடல், பழைய மாணவர் சங்கம், விளையாட்டுக் கழகங்கள் பொது நிகழ்ச்சிகளில் கௌரவிக்கப்படுதல் என்று இந்த தமிழர்களின் பட்டியல்கள் நீண்டு கொண்டே போகின்றது.

கிராம, பாடசாலை ஒன்று கூடல்கள் என்று தொடங்கி சிலர் இந்நாட்டில் ஒதுக்கப்பட்ட (சமூகரீதியாக) சம்பவங்களை சந்தித்தவர்கள் நிறையப்பேரை கண்டுள்ளேன். "உங்கள் பெயர் ஞாபகத்தில் வரவில்லை" அடுத்த முறை பார்ப்போம் என்று அந்த நேரத்தில் தப்பித்துக் கொள்கின்றார்கள்.

திருமணம், பிறந்தநாள் போன்ற நிகழ்வுகளுக்கு அழைப்பு விடும்போது சிலர் தனியே வருவதும், வந்தவர்கள் மது எடுத்துக் கொள்வதோடு, இன்று சனி, ஞாயிறு விரதம் என்று தப்பித்துக் கொள்வதும் நான் உங்கள் வீட்டில் வாய் நனைக்க விருப்பம் இல்லை என்பதை நாகரீகமாகச் சொல்லிக் காட்டிச் செல்வது இன்று யாழ்ப்பாணத்து "உயர்குடிகள்" பலரிடம் தெளிவாகக் காணப்படுகின்றது.

புலம் பெயர்ந்த நாடுகளில் வெளிவரும் அநேகமான தினசரிப் பத்திரிகைகளில் வரும் திருமண விளம்பரங்களைப் பார்த்தால் சமூகத்தின் உயர்வைக் குறிப்பிடும் விளம்பரங்களையும் மரண அறிவித்தல்களில் "உயர் குலத்தை" குறிப்பிட்டு விளம்பரப் படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவையெல்லாம் எவற்றை எடுத்துக் காட்டுகின்றது? தமிழர் இன்னமும் ஜாதியை விட்டு வெளியே வரவில்லை, வரவும் மாட்டான் என்பதைத் தெட்டத் தெளிவாக முத்திரை குத்திக் காட்டி நிற்கின்றது.

காதலும் வீரமும் தமிழர்களின் இரண்டு கண்கள் என்று இலக்கியம் பேசும் தமிழர்கள் இரண்டு பேர் காதல் கொண்டால் போதும் யார் இவர்கள்? எந்த ஊர்? எந்த இடம்? என்ன சாதி? என்று மோப்பம் பிடித்து விடுவதும் (அதில் ஒருவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தவரானால் யாழ்ப்பாணத்து கலாச்சாரம் தானாகவே வந்து விடும். பலர் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் பிரிக்கப்பட்ட சம்பவங்கள் நிறையவே நடந்துள்ளன) ஆனால் வெள்ளை இனத்தவரையோ அல்லது கறுப்பினத்தவரையோ திருமணம் செய்வதை சில உயர்குடிப் பெற்றோர்கள் பெருமை கொள்வது அவர்களின் வரட்டுக் கௌரவத்தையே காட்டுகின்றது. தமிழர்களுக்கிடையே நிகழும் காதலுக்குச் சாதி, மதம் பார்க்கப்படுகின்றது.

அது மாத்திரமன்றி பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களும் இந்த ஜாதியின் பெயரால் அறிவூட்டப்பட்டு பெற்றோர்களால் வளர்க்கப்படுகின்றார்கள். (இங்கே பிறந்து வளர்ந்து கொண்டிருக்கின்ற, ஆங்கிலம் - பிரஞ்சு மொழி படிக்கும் மாணவர்களுக்குக் கூட இதை ஊட்டி வளர்க்கின்றார்கள். குழந்தைகளுக்கு ஏற்றத் தாழ்வுகளைப் புகட்டும்போது அவனும் ஏதோ ஒருவகையில் விளங்க முடியாத மனநிலைக்குத் தள்ளப்படுகின்றான். தங்களது நாறிய கலாச்சாரங்களை இந்தக் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்ப்பதன் மூலம் இவர்கள் தங்களை உயர் சமூகம் என்று நிலை நிறுத்திக் கொள்ள நினைப்பது புலம் பெயர்ந்த நாடுகளில் எங்களை நாங்களே தாழ்த்திக் கொள்வதற்கு ஒப்பாகும்.

தமிழ் மக்களாகிய நாம் தாயகத்தை விட்டுப் புலம் பெயர்வு பெற்ற நாட்டில் வாழும்போது எம்மில் சில மாற்றங்கள் ஏற்றபட்டுள்ளனவா? இல்லை. எமது தாயக மண்ணில் என்ன என்னவற்றைக் கடைப்பிடித்து வந்தோமோ குறைந்த பட்சம் அதைக்கூட கைவிட முடியாத மன நிலையில் இறுக்கிப்பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஜாதியம் என்பது தமிழ் மக்களின் இரத்தத்தோடு கலந்து விட்டதையும் அதை எந்த காலத்தாலோ அல்லது வேறு வழிகள் மூலமாகவோ அழித்துவிட முடியாதென்பதையும் டானியல் பல தடவைகளில் தனது சிறு கதைகள் மூலமாகவும் நாவல்கள் மூலமாகவும் தெளிவாகக் கூறியிருப்பது வாசித்தவர்களால் புரிந்து கொள்ள முடியும். டானியல் காலத்திற்கு முற்பட்டு இன்றுவரைக்கும் ஜாதி அமைப்பு மாற்றப்படாமல் விரிந்து பரந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எதை விட்டுக் கொடுத்தாலும் ஜாதியை விட்டுக் கொடுக்கத் தமிழன் முன்வரமாட்டான். மிருகத்திற்கும், ஏன் பறவைகளுக்கும் கூட "நல்ல ஜாதியை" வைத்து ஜாதி பார்த்த தமிழன் ஜாதியை விடுவானா? இல்லை. ஜாதியின் நாற்றங்களையும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகள், அவர்களின் உணவுகள், வீட்டு வசதிகள் எப்படி எப்படி கிராமங்ளில் காட்சிதந்ததென்பதைத் தனது படைப்புக்கள் மூலம் வெளிக்கொண்டு வந்தவர் டானியலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த போராட்ட சூழலில் உயிர்தப்பி வாழ்ந்து கொண்டிருக்கும் இச்சாதி ஆசாரமுறை காலம் வரும்போது தனது வேலையை கச்சிதமாகச் செய்யும் என்பதில் சிறிதும் ஐயமே இல்லை. அவரின் கதைகளிலே வரும் கதாபாத்திரங்கள் இன்னும் நிஜமாக வாழ்பவை, தான் எதைச்சொல்ல வருகின்றாரோ அதை ஒரு கதாபாத்திரமாக்கிச் சொல்ல வைப்பது ஆசிரியரின் காலத்தின் அனுபவம். அவரின் அத்தனை நாவல்களும் காலத்தால் அழியாத யாழ்ப்பாணத்து சமூக காவியங்களாகும்.

டானியலின் நாவல்களையோ, சிறுகதைகளையோ வாசிக்கும்போது யாழ்ப்பாணத்து கிராமங்களுக்குப் போய் வருவது போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன. கிராமத்துக்குக் கிராமம், இடத்துக்கு இடம், ஊருக்கு ஊர் என்று பேச்சு வழக்குகள் மாறிக்கொண்டுதான் செல்கின்றன. வடமராட்சிக் கிராமத்து கதையானாலும் சரி, தென்மராட்சிக் கிராமத்துக் கதையானாலும் சரி அந்தந்தக் கிராமத்து மக்களின் பேச்சு வழக்குகளை அப்படியே தனது கதைகளிலே புகுத்திக் கொள்வது அவரது வட்டார வழக்குத் தேர்ச்சியின் நிறையம்சமாகும்.

'எணை அப்பு', 'சும்மா கிடவணை', 'ஒப்பேத்திப் போட்டன்', 'பஞ்சை', 'அப்பு சோத்தை தின்னணை', 'மோனை', 'ராமுழுவதும் ஒரே அலுப்பு', 'இஞ்சார்', 'அங்காலை', 'உங்காலை', 'இயனக்கூடு', 'கட்டாடி', 'பிளா', 'புலுடா', 'பேந்து', 'விசர்', 'விண்ணன்', 'எப்பன்', 'உலை', 'இஞ்சாலை', 'கூத்தி' போன்ற இழிசனர் பேச்சு வழக்குத் தமிழைத் தனது கதைகளிலே உரையாட விட்டிருப்பது யாழ்ப்பாணக் கிராமங்களுக்குப் போய் நின்று பழகி, பேசி உறவாடியவர்களால்தான் அந்த கிராமத்துப் பேச்சு வழக்குத் தமிழ் அழகியலை எழுதமுடியும். அந்த வகையில் டானியல் கதைகளை எழுத முன்னர் அந்த கிராம மக்களுடன் ஒருவராகி ஒட்டி உறவாடி கலந்து மக்களுடன் ஒன்றாகி நின்றார் என்று புலனாகின்றது. டானியலுடன் சமகாலத்து எழுத்தாளர்கள் சாதி முறைக்கு எதிராகப் பல கதைகள் எழுதினாலும் கூட அவரது கதைகளிலே வரும் கதாபாத்திரம் போல பலரது பாத்திரங்கள் மனதைத் தொட்டு நிற்கவில்லை. காரணம் பலர் கேட்டுத்தான் எழுதியிருந்தார்கள். இவரோ நேரே சென்று பார்த்து, பழகித்தான் எழுதினார். 'இழிசனர்' பேச்சுத்தமிழ் ஒன்றும் பல கிராமங்களில் அழிந்து விடவில்லை. வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இழிசனர் தமிழரால் பேசப்பட்டு வந்த தமிழை மெத்தப் படித்த இலக்கிய வாதிகள், பல்கலை மேதாவிகள், 'புத்திஜீவிகள்' கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தமிழை எழுதிக் கொள்வது அசிங்கம் என்று எண்ணி நாகரீகத்தமிழை (சினிமா தமிழ்) கதைகளிலே புகுத்தியபோது, இதுதான் இந்தப் பஞ்சப்பட்ட மக்களின் 'பேச்சுவழக்குத் தமிழ்' என்று துணிந்து 'பஞ்சமர்' நாவலிலே இழிசனர் தமிழை முதன்முதல் புகுத்தியவரும் படைப்பாளி டானியலே.

"ஈழத்துத் தமிழறிஞர் சிலரால் நையாண்டி செய்யப்படும் 'இழிசனர் வழக்கு' மொழியிலே இந்த நாவலைச் செய்திருக்கிறேன். தமிழச் சான்றோர் அந்நிய நாகரிகத்தில் மோகம் கொண்டு தமிழைச் சிதைத்த போதும், ஏகாதிபத்திய அடிவருடிகள் தமிழை மறந்து, மறுத்து நையாண்டி செய்த போதும், பண்டிதவித்துவான் பரம்பரையினர் தமிழன்னையை மூடி, முக்காடிட்டு இருள் அறைக்குள் வைத்தபோதும் தமிழ் அன்னையை சிறை மீட்டு தேறுதல் கூறி பாதுகாத்தவர்கள் இந்த 'பஞ்சமர்' கூட்ட மக்களேயாகும். இவர்களே தமிழுக்கும் எசமானர்களுமாவர். அதனால் இந்த எசமானர்கள் பேசிய வழக்கையே தமிழென ஏற்று இதன் பாத்திரங்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து இவர்களைப் பேச வைத்திருக் கின்றேன்" என டானியல் தனது மொழிநடை பற்றி எழுதியுள்ளது கவனிக்கத்தக்கது. அவரால் எழுதப்பட்ட அத்தனை போராட்ட நாவல்களிலும் இழிசனர் கிராமியத் தமிழ்மணம் வீசுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

"போராளிகள் காத்து நிற்கின்றார்கள்" என்ற கரையோர மீனவ சமுதாயத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட அந்த நாவலில் "கரையோரப் பேச்சு வழக்கு"த்தமிழை அந்த கதாபாத்திரங்களுடன் பேச வைத்த டானியலின் "கரையோரத் தமிழ் அழகியலை" பலர் பாராட்டியதோடல்லாமல், இலங்கையிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள் அத்தனையும் பாராட்டத் தவறவில்லை என்பது அவரின் தமிழுக்குக் கிடைத்த வெற்றியே.

கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே என்பதை கொள்கையிலும், நடைமுறையிலும் ஏற்றுக்கொண்டு செயற்பட்ட புரட்சிகர எழுத்தாளரும் டானியலே. ஒடுக்கப்பட்ட இனம் ஆயுதம் ஏந்திப் போராடுவதன் மூலம் விடுதலையைப் பெறமுடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். ஒடுக்கப்பட்ட மக்களையும் அதற்கு ஆதரவான முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்து "தீண்டாமை ஒழிப்பு" வெகுஜன இயக்கத்தை ஆரம்பித்து சாதிக்கெதிரான போராட்டங்களை முன்நிலைப்படுத்தி வெற்றிகண்டார்.

அறுபதுகளிலும் எழுபதுகளிலும் சாதிக் கெதிரான போராட்டங்கள் கூர்மை அடைந்த காலகட்டத்தில் பல கிராமங்களில் சாதிக்கெதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களை நடத்திய இந்த பஞ்சம மக்கள் உயர்சாதி சாதி வெறியர்களால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டனர். சில கிராமங்களில் வீடுகள் கொழுத்தப்பட்டன. கிணற்றில் உமி, தலைமயிர் போன்றன வீசப்பட்டன. பல மக்கள் அகதிகளாக்கப்பட்டு, கிராமங்களை விட்டு வேறு கிராமங்களுக்குப் புலம் பெயர்ந்தார்கள். போராட்டங்களை முன்னின்று நடத்தி உயிர்தப்பிய போராளிகளை உயர்சாதி பொலிசார் வீடு, வீடாகச்சென்று வேட்டையாடினார்கள். பலரைக்கைது செய்து காவல் நிலையங்களில் வைத்து விதைகள் கசக்கியும், தாக்கியும் சித்திரவதை செய்து இன்பங்கண்டனர். இந்த உயர்சாதித் தமிழர்கள் மாத்திரமன்றி சாதியே தெரியாத சிங்களப் பொலிசாரும்கூட இந்த மக்களை சாதி சொல்லித்தாக்கிக் கொடுமைப்படுத்தினார்கள். பலருக்கு தண்ணீருக்குப் பதிலாக சிறுநீர் பருக்கினார்கள். இவையெல்லாம் ஏன் நடந்தன. "தமிழனை தமிழனாக அங்கீகரியுங்கள்" என்று உரிமைக் குரல் எழுப்பியதன் விளைவுதான் இந்தக் கொடுமைகள். கொலையாளிகளாக கூண்டில் நிறுத்தப்பட்ட உயர்சாதி தமிழர்கள் போதிய சாட்சிகள் இல்லாத காரணத்தால் விடுதலை செய்யப்பட்டார்கள். (அரச நிர்வாகம் யாவும் இவர்களின் கைகளிலே தங்கியிருந்தது).

இவையாவும் முப்பது நாற்பது வருடங் களுக்குள் யாழ்ப்பாண மண்ணில் தமிழனுக்குத் தமிழன் செய்த காலத்தால் மறைக்க முடியாத வரலாற்று வடுக்களாகும். இந்த மிருகத்தனமான கொடுமைகள் அந்த மண்ணில் நடந்த போது எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது தலைவர்களோ கண்டனம் தெரிவிக்காமல் மௌனமாகி விட்டனர். இந்தக் கொடுமைகள் தென்னிலங்கைக்குள் உட்புகுந்த பின்னர்தான் தந்தையும், தளபதியும் விழித்துக்கொண்டனர் என்பது வேறு விடயம்.

இந்த பஞ்சமர் வரிசையில் டானியலும் ஒருவராக நிற்கின்றார். அறிவறிந்த பருவம் முதல் இன்றுவரை இந்த மக்கள் கூட்டத்தினரின் பிரச்சனைகளில் பங்கு கொண்டு, இவர்கள் துன்பப்பட்டு கண்ணீர் விட்ட போதெல்லாம் சேர்ந்து கண்ணீர் விட்டு சிறு, சிறு வெற்றிகள் கண்டு மகிழ்ந்த போதெல்லாம் சேர்ந்து மகிழ்ந்து பல்வேறு கால கட்டங்களில் கூட்டாகவும், தனியாகவும் சாதிக்கொடுமைகளை எதிர்த்து நின்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பெற்றுக் கொண்ட அனுபவங்களோ எண்ணிக்கையற்றவை.

ஈழ நாட்டில் எந்தத் தமிழ் எழுத்தாளனுக்கும் கிடைக்க முடியாத பெரு வாய்ப்பைக் கொண்டே இந்த நாவல்களை எழுதி முடித்துள்ளார். இவரின் கதைகள் யாவும் யாழ்ப்பாணத்து சமூக ஒடுக்கு முறையை வெளியே கொண்டு வந்தது மாத்திரமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களை முன்னின்று நடாத்தியவர்களுக்கும் உந்து சக்தியாகவே விளங்கியது. தலித் பண்பாட்டில் மட்டுமல்ல தலித் அரசியலிலும் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெற வேண்டிய நூல்களாகும்.

இவரது நாவல்கள் யாவற்றையும் மானிடவியல் ஆராய்ச்சிக்காக யப்பானிப் பல்கலைக்கழகம் எடுத்துக் கொண்டுள்ளது. அவர் மறைந்து விட்டாலும் எழுதப்பட்ட நாவல்கள் யாவும் போராட்ட வடிவங்களையே காட்டி நிற்கின்றன.

டானியல் மறைந்து ஏறத்தாழ பதினாறு ஆண்டுகள் கழிந்து விட்டன. இந்த இடைப்பட்ட ஆண்டுகள் ஈழத்தமிழினம் போர், புலம்பெயர்வு, பட்டினி, உளச்சிக்கல்கள் போன்ற சொல்லொணாத் துன்பங்களைக் கண்டு நிற்கின்றது. ஆனால் டானியல் தம் வாழ்நாளில் இலட்சியமாகக் கொண்டு எழுதியும் போராடியும் வந்த சாதியச் சிக்கலற்ற சமுதாயத்திற்கான விளைவு கைகூடி இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் அறுதியிடமுடியும்.

கனேடிய பல் கலாச்சாரச் சூழலிலும் பெரும்பான்மையான வெள்ளை இனத்தவர் கீழைத்தேச மக்கள் அனைவரையும் ஒரு வகைப்படுத்தி ஒரேநிலைக் கணிப்பிலேயே வைத்திருக்கின்றனர். ஈழத்துவராகிய எமது மக்களே வாழும் சூழலின் பெரும்பான்மை ஆங்கிலேயர் தம்மை இழிசனர்களாகக் கணிப்பதைப் பொறுத்தும் குனிந்தும் ஏற்றுக் கொண்டும் கூட தமது சொந்த மொழியிலே பேசி, ஒரே கலை கலாச்சாரப் பின்புலங்களைக் கொண்ட சக ஈழத்தவனைத் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த ஒரே காரணத்திற்காக தாழ்ந்தவனாகவும், ஒதுக்கப்பட்டவனாகவும் கணித்தல் நீடிக்கும் போதுதான் டானியலின் இன்றைய தேவை எமக்குப் புலனாகின்றது. ஆகவே இங்ஙனமாக வாழ்ந்து, எழுத்தில் போராடிய டானியலை நினைவு கூருவதுடன் அவரது படைப்புக்களை மக்களிடம் சகயப்படுத்தி "போர்குரலை" எழுப்புவது போற்றப்பட வேண்டியதொன்றேயாம்.

**- கே. பீ. லிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவலைகளில் கே. டானியல்

சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் தலையங்கம் எழுதிய ஒரு ஆற்றல் மிக்க படைப்பாளி எனது கட்டுரைக்கே தலைப்பாகி விட்டதனை நினைக்கும் போது நெஞ்சு துடிக்கின்றது. கரையோரத்துப் பாறையாக உறைந்துவிட்ட எனது உள்ளம் ஓங்கியடிக்கும் நினைவலைகளினால் உருகுகின்றது.

நான் நினைக்கிறேன் அது ஆயிரத்தித் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழு என்று. அப்பொழுது நான் மிக முனைப்புடன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த காலம் எங்கள் கட்சியில் அப்பொழுதுதான் துடிப்புமிக்க அம் மூன்று இளைஞர்களும் சேர்ந்து கொள்ள வந்தனர். அவர்கள்தான் கே.டானியல், டொமினிக்ஜீவா, சண்முகம் இராசையா ஆகியோர் ஆவர். இவர்களை எமது கட்சியில் இணைத்துக் கொள்வதில் என்னுடன் சேர்ந்து அமரர்கள் மு.கார்த்திகேசன், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், ஆகியோரும் உதவினர். இம்மூவரும் வீறுகொண்ட வேங்கைகள். தமது நாட்டை, மொழியை, பண்பாட்டை நேசித்தவர்கள். அதேவேளையில் உலகளாவிய மானிட நேயம் கொண்டு மற்றவர் திறமைக்கு மதிப்பளித்தனர். அடக்கி ஒடுக்கப்படட மக்களுக்காக குரல் கொடுத்தனர். சாதி ஒடுக்குமுறைக்கும், நசுக்குதல்களுக்கும் எதிராகப் போர்க்கொடி ஏந்தினர். சாதி அநீதி ஒழியட்டும் சமத்துவநீதி ஓங்கட்டும் என்றும், இல்லாமை இல்லாமல் போகட்டும், எல்லோரும் எல்லாமே பெறுதல் வேண்டும் எனக்குரல் கொடுத்தனர். அப்படிக் குரல் கொடுத்த ஒலி ஒன்று இன்று ஓய்ந்துவிட்டது. அமைதி கொண்டு உறங்கிவிட்டது. ஆம் அதுதான் கே.டானியலின் குரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் என் நெஞ்சிற்கினிய நண்பன் கே.டானியல் அமரரானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த கவலையைத் தந்தது. என்னைவிட வயதில் இளையவனும் இன்னமும் எத்தனையோ சமூகப்பணியும் இலக்கியப்பணியும் ஆற்றவேண்டியவன் அமரனாகிவிட்டானே என எண்ணும் போது நெஞ்சம் குமுறுகின்றது.

சாதரண குடும்பத்தில் ஓர் தொழிலாளியாக தன் வாழ்வினை ஆரம்பித்த கே. டானியல் பாமரர் முதல் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வரை தனது எழுத்தால் பேச்சால் செயலால் கவர்ந்தான். இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் இவன் கதைகள்,கட்டுரைகள் வெளிவந்தன. இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக்கொண்டான் கல்லூரியிலே பயிலாத போதும் தனது சொந்த முயற்சியினாலும் தான் கொண்ட இலட்சியப் பற்றினாலும் மக்களை நன்கு புரிந்து கொண்டு மக்களிடம் தான் கற்றுக் கொண்டவற்றை மக்களுக்காகவே எழுதினான் பேசினான், செயல்ப்பட்டான்.

கே.டானியல் என்னுடன் எமது கட்சியில் மட்டும் இணைந்ததோடு நில்லாது எமது சமூகத்தாபனமான அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடன் அமரர் யோவேல் போல் தலைவராக இருந்த காலத்தில் இணைந்து அச்சமூகத்தாபனம் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டங்களில் எல்லாம் முன்னின்று கலந்து சொல்லடியும், கல்லடியும், கம்படியும் பட்ட போதிலும்.

‘அடிமை விலங்கறுப்போம்-அதில்
ஆயுதங்கள் செய்திடுவோம்
கொடுமை மிகு மலிந்த - இக்
குவலயத்தை மாற்றிடுவோம’

என்று அஞ்சாது பணியாற்றினான். சம ஆசனம், சமபோசனம், போராட்டத்திலும் சரி, தேனீர்க் கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் போன்ற போராட்டங்களிலும் சரி எந்த எந்தப் பகுதியில் சாதியின் பெயரால் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோது அவர்களின் உறைவிடங்கள் எரிக்கப்பட்டபோது சாதிவெறியர்கள் துப்பாக்கி கொண்டு விலங்கு வேட்டையாடியபோது தோளோடு தோள்கொடுத்துப் போராடிய ஒரு வீரம் செறிந்த போராளி கே. டானியல். ‘யார் யாருக்கு விடுதலை வேண்டுமோ அவர்களுக்கிடையே இருந்துதான் போராடடங்கள் வெடிக்க வேண்டும் அப் போராட்டங்களுக்கு அவர்களே தலைமைதாங்க வேண்டும்’ என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டார். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தாபனமான அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தொண்டனாக மட்டுமல்லாது சில ஆண்டுகள் உப தலைவராகவும் கடமைபுரிந்தார். இது போன்றே எமது கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப சங்கத்திலும் முக்கிய பொறுப்புக்களை வகித்தார்.

1963இன் பின்னர் எமது கட்சியைவிட்டும், சமூகத்தாபனத்தை விட்டும் வெளியேறிய போதிலும் அவரது இலட்சிய வேட்கையில் எதுவித மாற்றமுமின்றித் தீவிர அரசியல் போக்குடைய அரசியல் தாபனத்துடனும், தீண்டாமைஒழிப்பு வெகுஜன இயக்கத்துடனும் இணைந்து தனது பணியினைத் தொடர்ந்தார்.

எமது பக்கத்தை விட்டு வெளியேறிய போதிலும் சமூகரீதியான பொதுப்பிரச்சனைகளின் போதெல்லாம் அவ்வப்போது என்னைச் சந்தித்து ஆலோசனைகள் கலந்துரையாடல் செய்யப் பின்னின்றதில்லை. ஆற்றல் மிக்க படைப்பாளியாக, விடாமுயற்சி உடைய உழைப்பாளியாக, இலட்சியப் பற்றுமிக்க போராளியாக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் கே.டானியல். சாதாரண ஆசிரியர்களிடம் கூட முறையாகக் கல்வியினை முழுமையாகப் பெறமுடியாத கே.டானியல் இன்று பல்கலைக்கழக பேராசிரியர்களால் போற்றிப் புகழப்படுகிறார் என்பதனை நினைக்கும் பொழுது, 'மக்களுக்காக வாழ்பவர்கள் என்றும் மக்களால் மதிக்கப்படுவார்கள்' என்ற உண்மை புலனாகிறது எனது நினைவலைகளில் கே.டானியலின் நினைவுகள் என்றும் பசுமையானவை.

**எம்.சி.சுப்பிரமணியம்**
ஈழநாடு 20.04.1986 வாரமலர்.
(நன்றி ஈழநாடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஒடுக்குமுறையையும் வர்க்கச் சுரண்டலையும் ஒழித்துக்கட்டும் ஒரே குறிக்கோளுடன் போராடிய சமூகப் போராளி, இலக்கியவாதி

ஒரு கம்யூனிஸ்ட்டின், புரட்சிக்காரனின், புதுயுகப் போராளியின் சொந்த - பொது வாழ்வியல் நெறிகள், சித்தாந்த நடைமுறை நேர்த்தி, ஒரு குறிப்பிட்ட சமூகத் தேவையையும் போராட்டத்தையும் மானுடத்தின் பொதுத் தேவையுடனும் போராட்டத்துடனும் ஒத்திசைவாக இணைக்கும் மூலோபாய முதிர்ச்சி, வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றிய தத்துவத்தையும் செயற்பாட்டுப் பாங்குகளையும் புதிய மாற்றங்கள், வளர்ச்சிகள், தேவைகளுக்கு ஏற்ப விஞ்ஞானபூர்வமாகவும் வரலாற்றுரீதியாகவும் வளர்த்து, விருத்திசெய்து முன்னெடுப்புச் செய்யும் சித்தாந்தப் பக்குவம் ஆகிய தத்துவவியல், சமூகவியல், வாழ்வியல் பிரச்சனைகளில் ஒரே அணியைச் சேர்ந்த, ஒரே உலகப் பார்வையை உடைய பலருக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியும், இருந்திருக்கின்றன, இனியும் இருக்கும். இது சமூகவியல் நியதி, மானுடவியல் நியமம்.

இது தோழர் டானியலுக்கும் பொருந்தும். ஒவ்வொரு சமூகச் செயற்பாட்டாளனுக்கும் பொருந்தும்.

ஒரு கம்யூனிஸ்ட், ஒரு சமூகப் போராளி, ஒரு இலக்கியவாதி என்ற வகையில் தோழர் டானியலின் வாழ்வும் செயற்பாடுகளும் இந்தத் தத்துவத் தளத்தில் வைத்தே பார்க்கவும் அணுகவும் விமர்சிக்கப்படவும் வேண்டும்.

தோழர் டானியல் தமிழ்ச் சமுதாயத்தின் மிக மிக கடைக்கோடித் தட்டைச் சேர்ந்தவர். பிரபுத்துவ சமூக அமைப்பினால் மிகக் கொடூரத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஒரு சமூகப்பிரிவைச் சேர்ந்தவர். உயர் சாதியினர் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுபவர்களாலும், அவர்களால் நசுக்கப்பட்ட தாழ்ந்த சாதியினர் என எண்ணப்படுபவர்களாலும் ஏககாலத்தில் ஒடுக்கப்பட்ட பஞ்சமர்களுள் பஞ்சமர்களான பிரிவைச் சேர்ந்தவர். ஆக இரட்டை ஒடுக்குமுறையின் முழுக் கோரத்தையும் அதன் பூரண நிஷ்டூரத்தையும் பிறந்த நாள் முதல் அனுபவித்தவர். பரம்பரை பரம்பரையாக வரும் இந்த அவலங்களையே ஒரே பிதுரார்ஜிதமாகப் பெற்றவர்.

அதனால்தான் அவரது பால்யப் பிராயத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே மெல்லிதாக ஒலித்த சுதந்திர, சமத்துவ, சமதர்மக் குரல்கள் அவரது இளம் ஆத்மாவை ஆகர்ஷித்து ஆட்கொண்டன. அப்போது ஸ்தாபனரீதியாக முகிழ்ந்து வந்த புரட்சிகர அணியுடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விமோசனத்திற்காக நிறுவப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் சேர்ந்து அதன் தீவிர செயற்பாட்டாளரானார்.

அத்துடன் தன் மன ஆவேசங்களை, இதயக் குமுறல்களை, மனச்சாட்சியின் பிரளயங்களை வெளிப்படுத்த எழுத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்த ஆரம்பித்தார். தோழர்கள் ராஜகோபால், எஸ்.பொ., ஜீவா, இளங்கீரன் ஆகிய அப்பொழுது தோற்றம்பெற்று வந்த இலக்கியக்காரர்களுடன் இணைந்து படைப்பிலக்கிய சிருஷ்டியில் அசுர வேகத்தில் ஈடுபட்டார். இந்தக் காலகட்டத்தில் உருவாக்கம் பெற்ற ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் அணியில் - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் (இ.மு.எ.ச.) இணைந்தார். அதன் யாழ் கிளையின் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டார். அந்தக்காலப் பகுதியில் படைப்பு இலக்கியக்காரர்களுக்குப் பரந்த களமாகத் திகழ்ந்த 'சுதந்திரன்' பத்திரிகையில் ஏராளமான சிறுகதைகளை எழுதினார். கட்சிப் பத்திரிகையான 'தேசாபிமானி' யிலும் நிறையவே எழுதினார்.

இ.மு.எ.ச.வின் செயற்பாடுகளில் முனைப்போடு ஒரு காலகட்டம் வரை ஈடுபட்ட போதிலும் பிற்காலப் பகுதியில் இவர் முற்போக்கு எழுத்தாளர் அணியுடன் முரண்பட்டார். இ.மு.எ.ச.வின் தேசிய மாநாடு யாழ் நகர மண்டபத்தில் நடந்தபோது அதிலிருந்து கருத்து வேறுபட்டு வெளிநடப்புச் செய்தார். பின்னர் சாகித்திய விழா யாழ்ப்பாணத்தில் நடந்தபோது நண்பர் இளங்கீரனின் இல்லத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இ.மு.எ.ச. செயற்குழு முன்னர் எடுத்த முடிவின்படி விழாவின் பரிசளிப்பு நிகழ்வின்போது ஆட்சேபம் தெரிவித்து வெளிநடப்புச்செய்வதாக இருந்தது. இந்த வெளிநடப்பை வெற்றிகரமாகச் செய்யவே இந்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இக்கூட்டம் முடிந்தபின்னர் கட்சியின் இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணித் தோழர்களை விழாவுக்கு அழைத்து வரலாமா என தோழர் டானியல் கேட்டார். ஆனால் விழாவிலோ இளம் தோழர்களுடன் இயக்கப் பண்புகளுக்குப் புறம்பானவர்களும் கூட்டி வரப்பட்டிருந்தனர். இருந்தும் தோழர் டானியலும் அவருடன் வந்த இளம் தோழர்களும் நடந்து கொண்ட முறையினால் வெளிநடப்பு முடிவு திசை மாறியது. விழாவே அல்லோல கல்லோலப்பட்டது. இது எமது கூட்டு முடிவுக்குப் புறம்பானது என்ற போதிலும் பின்னர் நடந்த காவல் துறையினரின் விசாரணையின்போது அந்த வெறுக்கத்தக்க அசம்பாவிதத்திற்கான முழுத் தார்மீகப் பொறுப்பையும் இ.மு.எ.ச. ஏற்றுக் கொண்டது.

இதன் பின்னர் இ.மு.எ.ச. இனப் பிரச்சினைக்கு ஒரு ஜனநாயகத் தீர்வு காண்பதற்கான 12 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களின் தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்தபோது அதை எதிர்த்து தோழர் டானியலும் அவரது தோழர்களும் திருமலையில் ஒரு போட்டி மாநாட்டை நடத்தி ஒரு போட்டி அமைப்பையும் நிறுவினர்.

இந்த மூன்று நிகழ்வுகளும் இ.மு.எ.ச.வுக்கும் தோழர் டானியலுக்கும் இடையிலான முரண்பாட்டின் வெளிப்பாடுகளாக இருந்த போதிலும், தோழர் டானியலையும் அவரது தோழர்களையும் என்றுமே ஒரே அணியில் இருக்க வேண்டிய நண்பர்களாகவே இ.மு.எ.ச. கருதியது, செயற்பட்டது. டானியலின் பல தோழர்கள் இ.மு.எ.ச.வில் மீண்டும் சேர்ந்து செயற்பட்டார்கள். தோழர் டானியலையும் இ.மு.எ.ச.வில் திரும்பவும் சேர்க்கும் நோக்குடன் அவரை அவரது தொழிலகத்தில் சந்தித்தேன். தோழமை பூர்வமான, நேசமிக்க சந்திப்பு. தமிழ் நாடு போய்த் திரும்பியதும் தனது முடிவைத் தெரிவிப்பதாக உறுதியளித்தார். ஆனால் அவரது அந்தப் பயணம் அவரது இறுதிப் பயணமாகவே அமைந்தது ஆழ்ந்த வேதனைக்குரியது.

தோழர் டானியலையோ அல்லது வேறெந்தத் தோழரையோ அல்லது வேறெந்த தனி மனிதனையோ நினைக்கும் போது, மதிப்பீடு செய்யும்போது, வரலாற்றில் அவர்களின் பாத்திரத்தை எடைபோடும் போது அவர்களுடனான முரண்பாடுகள், அவர்களது பொது-தனி வாழ்விலான குறை-நிறைகள் பற்றிய கணிப்புகள், ஏன் அவர்களது சித்தாந்த நிலைப்பாடுகளின் சரிகள் அல்லது பிறழ்வுகள் பற்றிய நிர்ணயிப்புகள் ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தப்படாது. மாறாக ஒவ்வொரு மனிதனினதும் முரண்பாடுகள், குறைபாடுகள், பிறழ்வுகள் பற்றிய எதார்த்தமான, மெய்யான கணிப்புகள் இருந்தேயாக வேண்டும் என்ற போதிலும், அதற்கும் அப்பால் அந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதன் சமூகத்திற்கு, புரட்சிகர இயக்கத் திற்கு, மனித சிந்தனைக்கு, இலக்கியத்திற்குச் செய்த பங்களிப்பு முழுமையாகவும் சத்திய நேர்மையுடனும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

தோழர் டானியல் தன்னையும் தனது சமூகத்தையும் ஒடுக்கிய சமூக அநீதியை எதிர்த்து விட்டுக்கொடுப்பற்ற போராட்டத்தை நடத்தினார். முதலாளித்துவச் சுரண்டலை எதிர்த்துச் சுரண்டப்படும் வர்க்கத்துடன் இணைந்து போராடினார். இந்த வர்க்கத்தின் போராட்ட உணர்வையும் போர்க் குணத்தையும் முன்னெடுத்துச் செல்ல முயன்றார். மானுடம் முழுமையையும் சகலவிதமான ஒடுக்கு முறையிலிருந்தும் விடுவித்து மெய்யான விமோசனத்தை அளிக்கவல்ல ஒரு சோஷலிஸப் புத்துலகை சிருஷ்டிக்க வேண்டும் என்ற வேட்கையுடன் செயற்பட்டார். சமூக- வர்க்க ஒடுக்குமுறையை எதிர்த்துத் தனது எழுத்தாற்றலை தர்மாவேசத்துடன் எரிசரமாகப் பாவித்தார்.

இவற்றையெல்லாம் செய்யும்போது அவரதும் அவரது அணியினரதும் செயற்பாடுகளிலும் தத்துவ நிலைப்பாடுகளிலும் சரியும் பிழையுமான வெளிப்பாடுகள் இருக்கலாம். வாழ்வியல் பிசகுகளும் பிறழ்வுகளும் இருக்கலாம். ஆனால் அவரது சிந்தனைகள், செயற்பாடுகள், உணர்வோட்டங்கள் எல்லாமே ஒரே குறிக்கோளை, சமூக ஒடுக்குமுறையை, வர்க்கச் சுரண்டலை ஒழித்துக்கட்டும் ஒரே குறிக்கோளையே அடிநாதமாகக் கொண்டிருந்தன என்பதில் டானியலைப் பற்றி எதிர்மறை நிலைப்பாடுகளைக் கொண்டவர்களுக்குக் கூட மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இதுதான் டானியலின் தனிச் சிறப்பு. தனிப்பலம்.

எனினும் டானியலின் அரசியல் செயற்பாடுகள், தத்துவ நிலைப்பாடுகள் விமர்சிக்கப்படுவதுண்டு. அவரதும் அவர் சார்ந்த அரசியல் அணியினதும் எதிரிகள் மட்டுமல்ல, மார்க்ஸிஸ - லெனினிஸத்தையும், மாவோயிஸத்தையும் ஏற்றுக்கொண்ட அவரது இயக்க - இலக்கியத் தோழர்களாலும் இந்த விமர்சிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சித்தாந்த நிலைப்பாடுகளைப் பொறுத்தவரை அவர் ஒரு உலகப் பேரியக்கத்தின் அல்லது பின்னர் அதன் ஒரு பிரிவின் அங்கமாகவே இருந்தவர். "ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் சுதந்திரமாகவும் ஆக்கபூர்வமாகவும் சிந்திக்க வேண்டும்" என்று மாமேதை லெனின் வலியுறுத்தியது ஒவ்வொரு மார்க்ஸிஸ்ட்டுக்கும் என்றென்றைக்கும் பொருந்தும் என்ற போதிலும், லெனினுக்குப் பின்னரான தனிநபர் வழிபாட்டுப் பகைப்புலத்தில் தனிநபரான தோழர்களோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சோப லட்சம் தோழர்களோ சித்தாந்த நிலைப்பாடுகளை நிர்ணயிக்கும் உயிர்ப்புச் சக்தியாகச் செயற்பட்டிருக்க முடியாத சூழலில் அவ்வப்போது தோன்றிய அரசியல் தவறுகள், சித்தாந்தப் பிறழ்வுகளுக்கான பொறுப்பு தனிநபர்களை அல்ல முழு இயக்கத்தையுமே சாரும். தோழர் டானியலும் இதற்கு விதிவிலக்கல்ல. எந்த ஒரு தோழரும் இந்தப் பொது நியதிக்குப் புறம்பல்ல.

தோழர் டானியல் ஒரு மார்க்ஸிஸ்ட்டாக இருந்தபோதிலும் தனது இலக்கியப் படைப்புகளை பிசகற்ற வர்க்க நிலைப்பாட்டிலிருந்து மேற்கொள்ளாது பெரும்பாலும் சாதி உணர்வுடனும், அந்த சாதி அமைப்பில் மேலாதிக்கம் செலுத்தும் சமூகத்தினரைப் பழிதீர்க்கும் முற்றிலுமான பகைமை உணர்வுடனுமே படைத்தார் என்ற குற்றச்சாட்டும் அவரது தோழர்களால் கூட முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதில் அடிப்படை உண்மை இல்லாமலில்லை என்பது வாஸ்தவம்தான். என்ற போதிலும் இலக்கியம் என்பது வெறும் அரசியல் ஆய்வறிக்கை அல்ல மாறாக அது அரசியல் உள்ளோட்டத்தையும் உள்ளடக்கும் அதே வேளையில், அது மனிதனின், மானுடத்தின் ஒட்டுமொத்த உணர்வுகளை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை, அபிலாஷைகளை, நம்பிக்கைகளை தத்ரூபமாகவும், கலாபூர்வமாகவும் சித்திரிக்கும் ஒரு கலைத்துவ வெளிப்பாடே.

இலக்கியத்தின் இந்த உள்ளுறையையும் உயிர்த்துவத்தையும் தோழர் டானி அற்புதமாகச் சாதித்துள்ளார். தமிழை துறைபோகக் கற்றிருக்காத போதிலும் அதை வெகு அழகாக, நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். தமிழுக்கு கனதியை மட்டுமல்ல, சுந்தரத்துவத்தையும் வழங்கியுள்ளார். அத்துடன் இலக்கிய சிருஷ்டிப்பின் நுட்பங்களில் எல்லாம் மிக நேர்த்தியான, நுணுக்கமான, விசாலமானதும் ஆழமானதுமான பாண்டித்தியத்தை வெளிக் காட்டியுள்ளார். அவர் ஐயப்பாட்டிற்கிடமற்ற 'மாஸ்டர் ஓ.்.ப் கிரா.். ப்ட்மன்ஷிப்'. தனது பாத்திரங்களுக்கு எதார்த்த முழுமைத்துவத்தை ஊட்டுவதற்காகக் கிராமம் கிராமமாகச் சென்று அந்தப் பாத்திரங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வாழும் மாந்தர்களுடன் வாரக்கணக்காக, சில சமயங்களில் மாதக்கணக்காக வாழ்ந்தும் பழகியும் இருக்கிறார். இது அவரது இலக்கிய நேசிப்பின், உண்மைத் தேடலின் வெளிப்பாடே.

சாதி ரீதியான அவரது வீச்சான உணர்வை, கொதிப்பான பகைமையைப் பொறுத்தவரை இதற்கு அவருக்கு தார்மீக நியாயமும் உரிமையும் இருக்கிறது. ஏனென்றால் ஒரு மிலேச்சத்தனமான, மூர்க்கத்தனமான அமைப்பின் முழுக் கொடூரத்தையும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தவர். அந்த அனாச்சாரத்தின் மிருகத்தனமான தாக்குதல்களின் ரணங்கள், விழுப் புண்கள் அவரது ஆழ்மனம் முழுவதையும், அடியாத்மா பூராவையும் ஆக்கிரமித்து நிற்கின்றன. ஆக அந்த அக்கிரமத்தை அவர் தனது படைப்புகளில் ஆவேசத்துடனும் ஆக்கிரோஷத்துடனும் வெஞ்சீற்றத்துடனும் சாடியது ஒன்றும் விசனத்துக்குரியதல்ல. இதன் மூலம் பின்னர் தமிழகத்தில் முகிழ்ந்த தலித் இலக்கியத்தின் தோற்றத்திற்குக் கால்கோள் அமைத்தார்.

என்றாலும் ஒரு முன்னூறு ஆண்டுக் கால நிஜ நிகழ்வுகளை ஒரு முன்னூறு பக்க நாவலில் குவிமையப்படுத்தும் போது ஒரு விகாரமான காட்சி தோன்றுவது இயல்பே. யாழ்ப்பாணச் சமூகம் சாதிக் கொடுமையைத் தன்னகத்தே கொண்டிருந்த போதிலும்; தமிழ் இனம் மனித நேயமிக்க, முற்போக்கான, ஜனநாயகச் சிந்தனைகளின், கருவூலங்களின், பாரம்பரிய விழுமியங்களின் உன்னதமான பிதுரார்ஜிதத்தையும் கொண்டுள்ளது என்ற உண்மையை இந்தத் திரிபுத் தோற்றம் சிதைக்கவே செய்கிறது என்பதை அவதானியாமல் இருக்க முடியாது.

ஒரு மாக்ஸிஸ்ட் என்ற வகையில் சாதி அமைப்பின் நிஷ்டூரத்திற்கு ஒரு குழாம் மக்கள் மீதல்ல, மாறாக அந்தக் கொடிய முறைமையின் தோற்றத்திற்குக் காரணமான சமூக அமைப்பின் மீதே முழுத் தாக்குதலையும் தொடுத்திருக்க வேண்டும். அந்த சமூக அமைப்பை அதன் கோரங்கள் முழுவதுடனும் சுட்டெரிக்கவும் அதன் சாம்பல் மேட்டில் புத்துலகம் ஒன்றைப் படைக்கவும் அனைத்து மக்களையும் திரட்டிச் செயற்பட வைப்பதற்கான அரசியல் பக்குவத்தைத் தவறாது வெளிக்காட்டியிருக்க வேண்டும்.

ஈழத்து இனப்பிரச்சினையில் தோழர் டானியல் சரியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. இதற்கும் அவர் அல்ல, அவர் சார்ந்த அரசியல் இயக்கமே பொறுப்பாகும். இடதுசாரிகள் தமிழ்த் தேசியத்தைப் பொறுத்து சரியான, ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்பது வாஸ்தவமே. வர்க்க ஒடுக்குமுறையை மட்டுமல்ல, அதற்குத் தன்னியல்பாகவே முதல் முதன்மை அளிக்கும் அதே வேளையில் இன ஒடுக்குமுறை, ஆணாதிக்கம், சாதி அடக்குமுறை ஆகிய அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக திரிகரணசுத்தியுடன் மார்க்ஸிஸ்ட்டுகள் போராடியிருக்க வேண்டுந்தான். இந்த ஒடுக்கு முறைகளை எதிர்த்த போராட்டங்கள் அனைத்தையும் ஜனநாயகத்திற்கான, மனித உரிமைகளுக்கான பொதுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தில் சுளுவாக இணைத்து ஆற்றுப்படுத்தியிருக்க வேண்டும். தமிழ்த் தேசியத்தை பொது தேசியத்துடன் சங்கமப்படுத்தியிருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்தைப் பொறுத்து டானியல் உட்பட முழு இடதுசாரிகளும் விட்ட இந்தத் தவறுக்கு அவர்கள் மட்டும் முழுப் பொறுப்புதாரிகள் அல்ல என்ற வரலாற்றுச் சத்தியம் நேர்மையுடன் கிரகிக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலித்தவர்கள், குறிப்பாக அதன் தலைமைப்பீடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்க மறுத்தது. தேசிய சுதந்திரத்திற்கான தேசிய இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்வதைத் தவிர்த்தது. மாறாக ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தளங்கள் அகற்றப்படுவதை எதிர்த்தது. ஜனநாயக மாற்றங்களை மறுத்தது. இடைக்கிடை சமபந்தி போஜன வைபவங்களை நடத்திய போதிலும் சாதி ஒடுக்குமுறையை ஒழிப்பதற்கான திடவுறுதியான போராட்டத்தையோ இயக்கத்தையோ தனது நிகழ்ச்சி நிரலின் ஒரு துணை அம்சமாகத்தானும் சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்தே வந்தது. உழைக்கும் மக்களின் போராட்டங்களுடன் இணைய அல்ல ஆதரிக்கவே தயங்கியது. இன உரிமைப் போராட்டத்தை இனவாதத்தைத் தூண்டும் இயக்கமாகவே பெரும்பாலும் நடத்தியது. தேசிய, ஜனநாயக நீரோட்டத்துடன் சேர (ஒரு சிலரைத் தவிர) மறுத்தே வந்தது.

இந்த நிலையில் இவர்கள் மூர்த்திகரித்து நின்ற தமிழ்த் தேசியத்தை ஆதரிக்க இடதுசாரிகள் முன்வராதது ஒன்றும் வியப்புக்குரியதல்ல என்ற போதிலும், தமிழ்த் தேசியம் குறித்து ஆரோக்கியமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்காதிருந்ததையும் தமிழ்த் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளுக்கும் நியாயமான அபிலாஷைகளுக்குமான இயக்கத்தை இடைவிடாது முன்னெடுப்புச் செய்யாததையும் இந்தக் காரணிகள் எதுவுமே நியாயப்படுத்திவிடாது. டானியல் உட்பட எல்லோருமே அந்தத் தவறுக்கான அரசியல் - தார்மீகப் பொறுப்பை ஏற்றேயாக வேண்டும்.

டானி என்ற தனி மனிதனின் குறை -நிறைகளை விடுத்து, டானியல் எனும் போராளியின் - படைப்பாளியின் பங்களிப்பும் வரலாற்றுப் பாத்திரமும் விருப்பு வெறுப்பின்றி ஆய்வுசெய்வது அவசியம். இதை சமூகவியலாளர்கள், இலக்கிய ஆய்வாளர்கள் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

**பிரேம்ஜி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல முற்போக்கு எழுத்தாளர் தோழர் கே. டானியல்

முற்போக்கு எழுத்தாளரும், பொதுவுடமை வாதியுமான தோழர் கே. டானியல் அவர்களின் ஞாபகம் எமது நெஞ்சைவிட்டு அகலாத அளவிற்கு அவர் எங்கள் மனதில் ஆழப் பதியும் வகையில் எம்முடன் பழகியது மட்டுமல்ல, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் மனங்களில் ஒரு மனிதநேயம் மிக்கவராக, அனைவரையும் நேசிப்பவராக இடம் பிடித்துக்கொண்டார். அவரது எழுத்துக்கள் சாதாரணநடையில் உள்ளன, படித்தவர்கள் மாத்திரமன்றிப் படிக்காத பாமர மக்களும் இலகுவில் வாசித்து விளங்கக்கூடிய வகையில் அதாவது டானியல் அவர்கள் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளர். தான் நேரில்கண்டு, கேட்டு அனுபவித்தவற்றை அதே கிராமியச் சூழலில் அதே வசன நடையில் அந்தந்தச் சமூகத்தின் தன்மைகள், பண்புகள், பேச்சு நடைமுறைகளைக் கொண்டு எழுதும் ஆற்றல் படைத்தவர். "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதற்கேற்ப அவர் மக்களின் நண்பனாகத் திகழ்ந்து மக்கள் மத்தியில் நடந்தவற்றை, நடப்பனவற்றைக் கண்டும் கேட்டும் விசாரித்தறிந்தும் அவ்வித உண்மைச் சப்பவங்களை ஆதாரமாகக் கொண்டு கதைகளை உண்மைச் சம்பவங்களின் கோர்வையாகத் தருகின்ற தன்மை அவரிடம் இயல்பாக அமைந்துவிட்ட ஒன்று. இதுவே அவரின் எழுத்துக்களை ஏனைய எழுத்தாளர்களிலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கின்ற அம்சமாக அமைகிறது.

தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் கே. டானியல் அவர்கள். பிற்பட்ட சமூகத்தில் ஆனைக்கோட்டை - உயரப்புலம் கிராமத்தில் தோன்றிய அவர் தனது கல்வியைத் தொடர முடியாத அளவிற்கு ஏழ்மை நிலை அவரது குடும்பத்தில் நிலவியது. கல்வியை இடைநிறுத்தித் தனது தந்தைக்கு உதவவேண்டிய கடப்பாடு அவரை உந்தித்தள்ளியது. தனது இளமைப் பருவத்தில் மிகவும் கஸ்டங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் அவர் தனது வாழ்க்கையை ஓட்டியுள்ளார் என்பது அவருடன் மிக நெருக்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும். சாதியத்தின் கொடுமைக்கும், ஏழ்மைக்கும் ஆட்பட்டுத் தான் பட்ட மனவேதனைகள், துன்பங்கள், அவலங்களை அவர் அடிக்கடி நினைவு கூருவார். குடும்பத்தில் ஆண்மகவாகப் பிறந்த அவருக்குக் குடும்பப் பொறுப்புக்கள் பெரும் சுமையாக இருந்துள்ளன. தனது தாய், தந்தை சகோதரங்களைப் பேணிக் காக்கவேண்டிய பாரிய பொறுப்பைச் சுமக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவரின் தலையில் வீழ்ந்தது.

வாழ்க்கையை ஓட்டுவதற்காக அவர் தனது பரம்பரைத் தொழிலைக் கைவிட்டதோடு மட்டுமல்லாது தூண்டில் இட்டு மீன்பிடித்து அதனை விற்பனைசெய்ததோடு, மீன்வியாபாரம், சோடா வியாபாரம் போன்றவற்றோடு மட்டுமன்றி கழிவு இரும்புகளைச் சேகரித்து விற்பனைசெய்தும் தமது வாழ்க்கைச் செலவை ஈடுசெய்து வந்துள்ளார்.

விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் நேர்மையும் நிதானமும் தான் அவரை அவரது வாழ்வில் முன்னுக்குக்கொண்டு வரக் காரணிகளாயின. இரும்பு வியாபாரத்தோடு நின்று விடாமல் அதனைச் சிறுகச்சிறுகப் பெரிதாக்கி அதன் மூலம் தனது பொருளாதார நிலையையும் வளர்த்துக்கொண்ட அவர் பின்னர் ஒரு இரும்புக் கடைச்சல் பட்டடை ஒன்றையும் நிர்மாணித்துத் தொழிலைத் தொடங்கினார். இத்தொழிற்சாலையை ஆரம்பிக்கும் போது அவருக்குப் பல உயர் குலத்தைச் சேர்ந்தவர்கள் உதவிகளை நல்கி வந்தனர் என்பதையும் அவர் நன்றிப் பெருக்கோடு நினைவுகூருவார். எனினும் இந்த தொழிற்சாலையை இல்லாமற் செய்வதில் பலர் சாதியத்தின் பெயரால் முனைப்புக்கொண்டு நின்றமையையும் மறுப்பதற்கில்லை. தாழ்த்த சாதியைச் சேர்ந்த ஒருவன் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதா என்னும் ஆதங்கமும் வைராக்கியமும் சாதித்திமிர் பிடித்த சிலரிடம் காணப்பட்டமையால் இவர் இந்தத் தொழிற்சாலைக்கான உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை ஏற்படுத்தின எனலாம். தன்னிடம் தொழில் நிமித்தம் வருபவர்களிடம் எல்லாம் அவர்களைப் பற்றி விசாரித்து அந்தந்த இடத்தில் காணப்பட்ட அல்லது காணப்படும் பிரச்சினைகளைப் பற்றி அறிந்துகொள்வதில் மிகுந்த விருப்புக் கொண்டவர் டானியல்.

எங்கெங்கு அடக்குமுறைகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் தோழ்கொடுத்து அந்த நலிவுற்ற நண்பர்களுக்கெல்லாம் உதவிக்கரம் நீட்ட ஒருபோதும் பின்நின்றதில்லை. நலிவுற்ற மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனாக அவர் அளப்பரிய சேவைகளைச் செய்தமையை நாம் அறிவோம். சங்கானையில் இடம்பெற்ற சாதிக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினருக்குத் தன்னாலான சேவைகளைச் செய்துள்ளார்.

இங்கு நடந்த சாதிக்கலவரத்தில் உயர்ந்த சாதியைச்சேர்ந்த முற்போக்காளர்கள் சிலர் இந்தச் சண்டைக்கெதிராகக் குரல்கொடுத்தும் தாழ்த்தப்பட்ட வர்கள் என அழைக்கப்படும் மக்களுக்கு உதவிகள் நல்கியும் ஆதரவுக்கரம் கொடுத்தும் வந்துள்ளனர். எடுத்துக்காட்டாக டானியல் அவர்களுடன் மிக நெருக்கமாக பழகியவர்களில் மான் முத்தையா அவர்கள் குறிப்பிடத்தக்கவர். தமது சமூகத்தினருக்கு எதிராக பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக வாதாடியதோடு அவர்களுக்கு உதவி செய்தும் வந்துள்ளார் மான் முத்தையா அவர்கள். முத்தையா அவர்களின் இத்தகைய நேர்மை, மனிதநேயம் நிறைந்த பண்புகள் டானியலை அவர்பால் கவர்ந்திழுத்தது. 1966-67ம் ஆண்டுகளில் சங்கானையிலும் ஏனைய இடங்களிலும் இடம்பெற்ற தேனீர்கடைப் பிரவேசத்தில் முன்னின்று செயற்பட்டதோடு, ஏனைய மக்களைப் போன்று சிறுபான்மையினருக்கும் தேனீர்க்கடைகள் சமத்துவமாக நடத்தப்படுதல் வேண்டும் எனப் போராட்டங்கள் செய்தனர். சமத்துவமாக நடத்தப்படாத தோட்டச் சொந்தக்காரர்களின் தோட்டங்களில் வேலைசெய்ய சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள் மறுத்துவந்ததால் அது சாதிக்கலவரமாக வெடித்தது. நியாயம் கோரிய சமூகத்தினரை ஒடுக்குவதில் சங்கானையில் இருந்த ஏனைய சாதியினர் இணைந்து செயற்பட்டனர். கைகலப்பில் ஈடுபட்டுக் காயமடைந்தவர்கள் இருதரப்பினராக இருந்த போதிலும் உயர்குலத்தவர்களே நீதி மன்றங்களில் வழக்குக்களுக்கு வழக்கறிஞர்களாகப் பணிபுரிந்து வந்தனால் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு அவர்கள் வழக்கில் ஏற்படவோ அன்றி உதவிசெய்யவோ வழக்காடி நியாயப்படுத்தவோ மறுத்து விட்டார்கள். இதனால் கைதுசெய்யப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு பிணை எடுப்பதற்கே யாரும் இல்லாத நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் சங்கானை நகரசபையின் தலைவராக இருந்த மான் முத்தையா அவர்கள், மனிதநேயனாக நியாயம் சரியாகக்கிடைக்கவேண்டும் என்னும் நோக்கோடு தனது சாதியினரின் விருப்புக்கு மாறாகச் செயற்பட்டு சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்களைப் பிணையில் வெளியே கொண்டுவந்ததோடு மட்டுமன்றி அவர்களுக்காக வாதாட நியாயவாதிகளையும் ஒழுங்குசெய்து கொடுத்தார். இதனால் எமது இனத்தவர்கள் கோபங்கொண்டு அவரின் வீட்டுக்குக் கல் எறிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கல்லெறி நடந்தபோது எனது கணவர் துணிச்சலோடு வெளியே வந்து எறிபவர்களுக்குக் அண்மையில் சென்றபோது அவர்கள் அவரைக் கண்டதும் எறிவதை நிறுத்தி விட்டு ஓடிவிட்டார்கள். அத்தோடு அவர்களின் வீட்டில் யாரும் இல்லை என்பதனையும் உணர்ந்து கொண்டார்கள். திரு. முத்தையா அவர்கள் தனது குடும்பத்தினரோடு ஊரைவிட்டு வெளியேறி நாயன்மார் கட்டில் குடியேறினார். சிறுபான்மையினரின் நலன்களில் அக்கறை கொண்ட நாங்களும் வெளியேறி திருநெல்வேலியில் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கி இருக்கவேண்டிய ஆபத்தான சூழ்நிலை தோன்றியது. இந்த சாதிச் சண்டையில் சிறுபான்மையினர் அதிகமாக வாழ்ந்த நிச்சாமம் என்னும் பகுதிக்கு உணவுப்பொருட்கள் செல்லாது தடுத்துவிட்டனர். இதனால் அவர்கள் உணவின்றி பெரிதும் அல்லல்பட்டனர். அவர்களின் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதோடு துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகி சிலர் மாண்டனர். இத்தகையதொரு இக்கட்டான நிலையில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிய திரு. மான் முத்தையா அவர்கள் சங்கானைப் பகுதிக்கே போகமுடியாத உயிராபத்து நிலை ஏற்றபட்டது.

இந்த நிலையில் தோழர்கள் எஸ்.ரி. நாகரத்தினம், மணியம், எம். கார்திகேயன், வீ. எம். கந்தசாமி, கே. டானியல் போன்றோர் மிகத்துணிச்சலாக நிச்சாமம் மக்களை நேரடியாகச் சென்று பார்த்து ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாது அவர்களுக்கு உணவுப்பொருட் களையும் எரிந்த வீடுகளை மீள அமைத்துக்கொள்ள தடிகள், மரங்கள், கிடுகுகள், தகரங்கள் என்பனவற்றைச் சேகரித்துக் கொண்டு சென்று கொடுத்து உதவினர். இத்தகைய துணிச்சலான வேலைகளைக் காலமறிந்து பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு செய்வதில் தோழர் கே. டானியல் முன்னின்றுழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர மான் முத்தையா அவர்கள் சங்கானையில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டபோது இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவேளையிலும், அவருக்கு உதவிக்கரம் நீட்டித் தனது தொழிலகமான ஸ்ரார் கராஜ்சிலேயே வேலையும் செய்வதற்கு ஏற்பாடும் செய்து கொடுத்த தோழமையும், நட்பும் டானியலின் உயர்ந்த பண்புகளாகும்.

1967 ஆம் ஆண்டளவில் இடம்பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச முனைப்புக்களில் முன்னைநாள் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.சி.சுந்தரலிங்கம் அவர்கள் தலைமமைதாங்கி சாதிவெறியர்களை அணிதிரட்டிக் காடைத்தனம் செய்து வந்தார். இதனை எதிர்த்துச் சமத்துவம், சமநீதி கிடைக்க ஒடுக்கப்பட்ட சிறுபான் இனத்தவரைத் திரட்டிப் போராட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகச் செயற்பட்டவர் டானியல் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதே.

ஆலயப் பிரவேச முயற்சிகள் மேற்கொண்டபோது அதனை அடக்கி ஒடுக்குவதற்காகவும், சங்கானைச் சாதிக் கலவரத்தை அடக்கவும், மக்களை அடித்து அடக்குவதில் பெயர்பெற்றவரான உடுப்பிட்டியைச் சேர்ந்த குமார் (தனக்காரச் சாதி என உயர் வேளாளரால் இழிவுபடுத்தப்படும் இனத்தைச் சேர்ந்த) என்னும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் இங்கு இடமாற்றம் செய்யப்பட்டார். தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை மேலும் அடக்கி ஒடுக்குவதில் சட்டவிரோதமாக அரசாங்க இயந்திரத்தையே பயன்படுத்தினார்கள். சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று சொல்லப்பட்டாலும் அரசியல் அதிகாரம் எல்லாமே உயர்சாதியினரிடம் குவிந்திருந்தது என்பதனை இந்தச் சம்பவங்கள் துல்லியமாக எடுத்துக்காட்டியதோடு சிறுபான்மை மக்களையும், புத்திஜீவிகளையும் ஒன்றிணைக்கவும் வழிவகுத்தது.

இதே காலப்பகுதியில் மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன் ஆலயப்பிரவேசத்திலும் தோழர் டானியல் அவர்கள் முக்கிய பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. பண்டித்தலைச்சி அம்மன் ஆலயப்பிரவேசத்திற்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் சரஸ்வதி பூசையின் போது இடம் பெற்ற ஒரு சம்பவம் காரணமாக அமைந்தது. சாதிவெறிபிடித்த ஆசிரியர்களினாலும், மாணவர்களாலும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் இருவர் தேங்காய் துருவ முன்வந்தபோது அவர்களிடமிருந்து தேங்காய்களையும், திருவலகைகளையும் பறித்து அவர்களை, இதர மாணவர்களிலிருந்து வேறுபடுத்தி "இழிசனர் கோயில் பணிகள் செய்யத்தகாத சண்டாளர்கள்" என்னும் ஆரியத்துவத்தை முன்வைத்து, எதுவும் செய்யக்கூடாதெனச் சாதியின் பெயரால் தனிமைப்படுத்திய செய்கையே மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் காரணமாக அமைந்ததெனலாம்.

இந்தக் காலப்பகுதியில் யாழ் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய சுந்தரலிங்கம், யாழ் பொலீஸ் நிலையப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய தவராசா, குமார் போன்றோர் உயர்சாதியாருக்குத் துணையாகச் செயற்பட்டார்களே ஒழிய அரசாங்கத்தின் சட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. அதற்கு மாறாக சட்டத்தைத் தமது கையில் எடுத்துக்கொண்டு சாதி வெறியர்களின் பக்கம் சார்ந்து இயங்க அவர்களும் உயர் சாதியினர் என்னும் எண்ணம் அவர்களைத் தூண்டி, தாழ்த்தப்பட்டவர்களை மேலும் அடக்கி ஒடுக்குவதிலேயே முனைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கலவரத்தின் விளைவாக பிற்பட்ட மக்களுக்கு உதவி செய்தார் என்றகாரணத்திற்காக தோழர் மான் முத்தையா அவர்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த இடத்திலும் முத்தையா அவர்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்தவர் ஒரு சிங்கள பொலீஸ் பொறுப்பதிகாரி என்பதும். இவர் பணத்தினால் விலைக்கு வாங்கப்பட்டுத் தவறாக வழி நடத்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்விதமே டானியல் அவர்களும் அவர் ஒரு எழுத்தாளர் என்பதைக்கூடக் கருத்தில் கொள்ளாது தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உயிருக்கே பயமுறுத்தப்பட்டார். அதுவும் அவர் பண்ணைக்கடலில் தூண்டிலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளை தவராசா என்னும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் கைதுசெய்யப்பட்டு பொலீஸ் நிலையத்திற்குக் குண்டுவைக்க முயற்சித்தார் என்றும், பண்ணைப் பாலத்திற்குக் குண்டு வைக்க முனைந்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டார். சிறையில் அவரை யாரும் சென்று பார்க்கவோ, உணவு உடை கொடுக்கவோ அனுமதிக்கவுமில்லை. சன்னங்கள் அற்ற வெற்றுத்தோட்ட நிரப்பப்பட்ட துப்பாக்கியால் சுவரில் சுட்டு சுண்டெலியோடு விளையாடுவதுபோன்று தோழர் கே. டானியலை உளவியல் ரீதியில் மிரட்டி அவரைச் சித்தப்பிரமைபிடிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அது மட்டுமன்றி அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது கூட அவரை வைத்திய சாலைக்குக்கூடக் கூட்டிச்செல்லாத நிலையில் வைத்திருந்துள்ளனர்.

சங்கானையில் இடம்பெற்ற சாதிக்கலவரத்தை அது "கோவியருக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கும் இடையே நடைபெறும் சண்டை" எங்களுக்கும் அதற்கும் தொடர்பில்லை என அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் தென்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவே பதிலளித்தார். பல உயிர்களைப் பலிகொண்ட இந்தச் சமூகப்பிரச்சினையை உதாசீனப்படுத்தியமையையும் முதலாளித்துவ வர்க்க நலனில் அக்கறை கொண்டுள்ள எமது தமிழ் அரசியல் வாதிகளின் சமூகப் பார்வையைப் படம் பிடித்துக்காட்டுகின்றது என்பதனையும் இந்த இடத்தில் நினைவு கூருதல் பொருத்தமானதே.

எழுத்தாளர் டானியல் அவர்கள் தான்சார்ந்த அரசியல் முதிர்ச்சி காரணமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களில் முன்னின்று போராடிய ஒரு போராளியுமாவார். அவரது எழுத்துக்கள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு, கேட்டு அநுபவித்தவற்றின் வரலாற்றுச் சான்றுகளாக உண்மைச் சம்பவங்களின் வெளிப்பாடாகக் காட்சி தருகின்றன. தமிழர் சமுதாயத்தில் புரையோடியுள்ள சாதியத்தை மாக்ஸிஸ சிந்தனைக் கண்ணோட்டத்தோடு அணுகியவர் டானியல் அவர்கள். வர்க்கப் போராட்டத்தின் சாயல் படிந்ததே அவரின் எழுத்துக்கள். அவர் இடதுசாரியாக தான் கொண்ட நோக்கத்திற்காகத் தனது போனாவை நகர்த்தியவர் என்பதனை அவரது எழுத்துக்கள் காட்டி நிற்கின்றன. தனக்கென வாழா பிறர்க்குரியாளனாக வாழ்ந்து மறைந்த தோழர் டானியல் அவர்களை நினைவு கூருதல் அவரது கனவுகளை நனவாக்க நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

**திரு. திருமதி. திருநாவுக்கரசு**

---

# சங்கானைக்கென் வணக்கம்!

சங்கானைக்கென் வணக்கம்!
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது; யாழகத்து
மண்ணிற் பலகாலம்
செங்குருதிக் கடல் குடித்துச்
செழித்த மதத்துக்குள்
வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரம் செய்யத்
தழைத்தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம்

கோயிலெனும் கோட்டைக்குள்
கொதிக்கும் கொடுமைகளை
நாயினும் மிக்க
நன்றிப் பெருக்கோடு
வாயிலிலே நின்று
வாழ்த்தும் பெருஞ்சாதி.

நாய்கள் வாலை
நறுக்க எழுந்தாய்
சங்கையிலே நீ யானை
சங்கானை - அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்!

எச்சாமம் வந்து
எதிரி அழைத்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெழுந்து நீறாக்கும்
குச்சுக் குடிலுக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் சங்கானை.
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே உன்
குச்சுக் குடிலுக்குள்
குடியிருந்த கோபத்தை
மெச்சுகிறேன்
எண்ணத்திற் கோடி
ஏற்றம் தருகின்றாய்
புண்ணுற்ற நெஞ்சுக்குள்
புதுமை நுழைக்கின்றாய்
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்
உன்னை எனக்கு
உறவாக்கி வைத்தவனை
என்னென்பேன்
ஐந்து பெருங் கண்டத்தும்
எழுந்து வரும் பூகம்பம்
தந்தவனாம் மா ஓவின்
சிந்தனையால் உன் நாமம்
செகமெலாம் ஒலிக் கட்டும்
செங்கொடியின் வீடே
சிறுமை எடுத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே
செய்தேன் உனக்கு
வணக்கம்!!!

**- கவிஞர் சுபத்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களோடு வாழ்ந்த மாமனிதர்

தமிழினத்தின் நீண்டகால வரலாற்றில் வேதகாலம் தொடக்கம் இன்றுவரை மனிதனை மனிதன் தாழ்த்துகின்ற மலட்டு மாயை, சாதிபேதம் என்ற சாக்கடைப் போக்கிலே தமிழினத்தின் சாபக்கேடாக வாழ்ந்து வந்திருக்கிறது. இதன் தாக்கத்தால் தமிழ் மக்களின் ஒரு பகுதியார் மேட்டுக்குடி மக்களாய்த் தம்மை தாமே உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஏனையோர், குடிநிலமோ மற்றும் கல்வித்தகைமையோ, பொருளாதார வாழ்க்கை வசதியோ கிடைக்காத பாமரமக்களாக இன்றும் வாழ்வது தவிர்க்க முடியாத நிலைமையாக நீடித்து நிற்கிறது. இலங்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தக்காலகட்டத்தில் தான் அமரர் திரு. கே. டானியல் அவர்கள் தோன்றினார். ஆரம்பக் கல்வியுடன் அவரது கல்வித் தகைமை நின்றுவிட்டது என்றாலும் அவரது வாழ்வியல் அனுபவங்கள் அவரைச் சமூக புரட்சிகரச் சிந்தனைக்குள் அமிழ்த்தியது.

டானியலின் சிந்தனைத் திறன், பத்திரிகைகளில் சிறுகதையாக, நாவல்களில் பெருங்கதையாக 50களின் நடுப்பகுதியில் வெளிவரத் தொடங்கின. அவற்றை வாசித்த பிற்படுத்தப்பட்ட தமிழ் மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். தம்மை அடக்கி ஒடுக்கி இம்சைப் படுத்தும் மேட்டுக்குடிமக்களின் அடாவடித் தனங்களுக்கு எதிராகச் சிந்தித்தார்கள். டானியலின் வழிகாட்டலில் ஒன்று கூடினார்கள். அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப ஆயுதமேந்தும் நிலைமைகூட ஏற்பட்டது. மேட்டுக்குடியார்களின் நெருக்குவாரத்தின் காரணமாகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களை நாடி நீதிபெறும் காலமும் ஒன்றிருந்தது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், செல்வச்சந்நிதி முருகன் கோவில் ஆகியனவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப்பிரவேசப் போராட்டங்கள் அகிம்சை அடிப்படையில் நடந்தபோது சில அசம்பாவிதங்கள் தோன்றத்தான் செய்தன என்றாலும் டானியலின் சந்தர்ப்ப வியூகங்களால் அவை தடுக்கப்பட்டு எதிர்பார்ப்புக்கள் வென்றெடுக்கப்பட்டன. கோவில்களில், உணவுச் சாலைகளில் பாடசாலைகளில் மற்றும் பொது நிறுவனங்களில் சமத்துவநிலை தோன்ற வேண்டுமென்பதே டானியல் அவர்களின் இதயத்துடிப்பாக அமைந்திருந்தது. அந்த அடிப்படையான போராட்டங்களில் எல்லாம் அவர் நினைத்தபடி அவரது வழிகாட்டு வெற்றிகண்டது. இதனால் தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந்தலைவராக நேசிக்கப்பட்டார்.

கி. மு. 3ம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டின் உரோம் பேரரசு சின்னாபின்னப்பட்டு பல மாகாண அரசுகள் அங்கே தலையெடுத்துக் காலம் ஓடிக் கொண்டிருந்தது. அப்போதைய மன்னன் விக்டர் இமானுவேல் என்பவனுக்கு மாஜினி என்ற எழுத்தாளர் ஒருவர் நண்பராய் இருந்தார். அவர் எழுத்தாற்றல் மிக்கவர். அவரது கதைகள் நாவல்கள் எல்லாம் இத்தாலி ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தன. அவரது எழுத்தாக்கங்களை இத்தாலிய மக்கள் போட்டி போட்டு வாங்கிப் படித்தார்கள். ஒற்றுமையின் அவசியம் பற்றி உணர்ந்தார்கள். அப்போது இமானுவேல் மன்னனின் பிரதம மந்திரியாய் இருந்த கவூர் என்பவர் இத்தாலி ஒன்று படுவதற்குரிய உத்வேகங்களை மக்களிடம் வளர்த்தார். இந்த வேளையில் இத்தாலிய மன்னனின் இராணுவத்தளபதியான கரிபால்டி என்பவர் படைநடத்தி எதிராக ஆட்சி நடத்திய ஏழு மாகாணங்களையும் வெற்றிகண்டு இமானுவேல் அரசனின் இறைமைக்கு வெற்றி சேர்த்தார். இதனை வரலாற்று ஆசிரியர்கள், மாஜினி இட்டமுட்டையை கவூர் அடைகாத்தார், கரிபால்டி அதனை குஞ்சு பொரிக்கச் செய்தார். என்று வர்ணிப்பார்கள்.

அவ்வாறான செயலையே டானியலும் தனி ஒருவராகச் செய்து காட்டினார், எழுதினார், தனது கருத்தை மக்கள் ஏற்கச் செய்தார். போராட்டக்களத்தில் முன்னின்று வழி நடத்தினார். அவர் எதிர்பார்த்த வெற்றி கிடைத்தது. எனவே அவர் தமது சிந்தனை, ஒழுங்கமைப்பு, செயல்வீரம் ஆகியவழிகளில் பிற்படுத்தப் பட்ட மக்களை வழிநடத்தி மக்களோடு மக்களாக வாழ்ந்து மகத்தான சமத்துவம் பெற்ற அமரர் டானியல் மக்களோடு வாழ்ந்த மாமனிதர் ஆனார்.

**க. கிருஷ்ணபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டானியல் ஒரு சமூகத்தின் வரலாறு

ஒடுக்கப்பபட்ட மக்களின் விடுதலைக்காகத் தமது எழுத்தைப் பயன்படுத்திய ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுள் கே.டானியல் குறிப்பிடத்தக்க ஒருவர். ஆழமாக வேரோடியுள்ள சாதீய வேர்களை யாழ்ப்பாணத் தீபகற்கத்து மண்ணில் அறுப்பதற்கான முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியவர் டானியல். அவர் சார்ந்து நின்று பணியாற்றிய போராட்ட இயக்கங்களும் டானியலின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியை அளித்தன. அதுமாத்திரமன்றி, ஒடுக்கப்பட்டோர் பற்றிய இலக்கியங்களை ஆக்கி அளித்ததுடன், அவற்றின் மூலமாகக் காலங்காலமாய் மேல்வர்க்கத்தினரின் அடிமைகளாக்கப்பட்டிருந்த மக்களது உணர்வோட்டங்களையும், வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளையும் உலகத்தவர்முன் வெளிச்சம் போட்டுக் காட்ட முயன்றவர் டானியல். அதேவேளையில் உயர்குடி நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரின் இழிகுணங்களையும், ஒவ்வாத செயற்பாடுகளையும் மக்கள்முன் அம்பலப் படுத்தவும் டானியல் தவறவில்லை. இவையனைத்தும் சமூக மாற்றத்துக்கான பணியாகவும், தேவையாகவும் அவரிடத்தே அமைந்திருந்தது.

டானியல் ஆளுமை பன்முகப் பரிமாணங்களைக் கொண்டது. அவரது ஆளுமையுருவாக்கத்தில் பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. பல மனிதர்களின்பங்களிப்பு கிடைத்திருந்தது. 1926-86 ஆண்டுகாலத்தையுள்ளடக்கிய வாழ்வியலில், இளமையில் வறுமையை அனுபவித்தவர் அவர். ஆரம்பக்கல்வியுடன் படிப்பை நிறுத்திவிட்டுத் குடும்பத்திற்காக உழைக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகிப் பல்வேறு அடிப்படைத் தொழில்களைச் செய்து களைத்துப் போனவர். சாதி வேற்றுமையின் கொடிய கரங்களுக்குள் நசிபட்டுக் கலங்கியவர். கொடுமைகளைக் கண்டு பொங்கியெழுந்தவர். பதினாறு வயதில் பொதுவாழ்வில் இணைந்தவர். 1948ஆம் ஆண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். சித்தாந்த வேறுபாடு காரணமாக அக்கட்சியானது பிளவுபட்ட 1964ஆம் ஆண்டுவரை, அக்கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்தவர். அதன்பின்னர் சீன்சார்புக் கம்யூனிஸ்ட்டாகத் தன்னை மாற்றிக் கொண்டு, தோழர் என்.சண்முகதாசனின்தலைமையை ஏற்றுச் செயற்பட்டவர். 1967இல் உருவான ஸ்ரார் லேத் தொழிற்சாலையில் பதினைந்து வரையிலான ஊழியர்களை வைத்து வேலைவாங்கும் அளவுக்குப் படிப்படியாகப் பொருளாதார ரீதியிலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

டானியல் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியாதரவுடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அமைப்பாளராகப் பணியாற்றியவேளையில் ஆலயப்பிரவேசம், தேநீர்க் கடைப்பிரவேசம் முதலான சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடனான டானியலின் உறவு அறுபதுகளின் முற்பகுதியுடன் நின்றுவிட்டதும் குறிப்பிடத் தக்கது. 1979 அளவில் கலை இலக்கியப் பெருமன்றம் அமைத்து □மக்கள் இலக்கியம்' என்ற பத்திரிகையின் மூன்று இதழினையும் வெளிவரச் செய்ததில் டானியலின் பங்கு பாரியது. சிறுபான்மைத் தமிழரின் உரிமைக்குரலினை எதிரொலிக்கும் பல சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலானவற்றின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் டானியல் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவை அற்ப ஆயுளில் மடிந்தமை வேறுவிடயம்.

டானியல் எழுத்தைத் தொழிலாகக் கொள்ளாது, அதை ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலையைப் பெறுவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தினார். உலக வியாபகரமானதோர் சமதர்மக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு உழைக்கும் மக்களுக்காகப் போராடினார். அவர் இலக்கியவாதி மட்டுமல்லாது, உரிமைப் போராட்டச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கு பற்றிய போராளியுமாவார். 1963இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சாகித்தியத் தமிழ்விழாவில் கூழ்முட்டை வீசியமை, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற அரச ஊழியர் மீதான தாக்குதல், மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச வன்முறைகள், மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் தினத்தன்று பொங்கல் பானைக்குள் கொண்டு சென்றகைக்குண்டு வெடித்தமை முதலான பல சிறுபான்மைத் தமிழர்களின் சாதீயத்துக்கெதிரான போராட்டங்களின் பின்னணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானியல் இருந்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. டானியல் 1971ஆம் ஆண்டு 11 மாதங்கள் வரையில் சிறையிலிருந்தவர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தடையின்போது இச்சம்பவம் நிகழ்ந்தது. சேகுவாராக் கிளர்ச்சியினால் இது ஏற்பட்டது. டானியல் எதிர்பார்த்த அரசியல் கிடைக்காதமையினால் ஏற்பட்ட விரக்தி, அவரை எழுபதுகளின் முற்பகுதியிலிருந்து அரசியலில் அதிக ஆர்வம் கொள்ளாது ஒதுங்கிருக்கச் செய்தது. அதற்காக முற்று முழுதாக அரசியலைப் புறக்கணிக்கவும் அவரால்முடியவில்லை.

டானியலின் எழுத்துப் பணியானது, ஈழத்தின் எந்தவொரு ஒடுக்கப்பட்ட தமிழ் எழுத்தாளரும் ஆற்றாத அளவுக்கு ஆகர்சிப்பும், வல்லமையும் வாய்ந்தது. யாழ்ப்பாணத்து அடித்தள மக்களிடையே பேச்சு வழக்கில் காணப்படும் நாட்டாரியல் பண்பாட்டுக்கூறுகளை உலக அரங்குக்கு முன்வைத்தமை சிறப்பான செயலாகும். மேலும், டானியலின் பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், தண்ணீர் ஆகிய 'பஞ்சமர்' வரிசை நாவல்கள் யாவும்ஒரு சமூகத்தின் வரலாற்றுப் பதிவாக நின்று, அதன் இன்பியல், துன்பியல் அனுபவங்களை எல்லைமீறாது நிதர்சனமாக்கியுள்ளன எனலாம். டானியல் எழுதிய முதல் நாவல் 1961இல் 'வீரகேசரி' யில் வெளிவந்த 'நெடுந்தூரம்' ஆகும். அது இன்னும் அச்சேறவில்லை. அது முதல் முயற்சியாதலால் வெற்றிகாணவுமில்லை. 'போராளிகள் காத்திருக்கின்றனர்' நாவல் மீனவர் சமுதாயம் பற்றியது. பூமரங்கள், சொக்கட்டான், மையக்குறி, இருளின் கதிர்கள், முருங்கையிலைக் கஞ்சி ஆகிய குறுநாவல்களைத் தந்துள்ள டானியல் இறுதியாய் வரைந்த குறுநாவலான 'சாநிழல்' பல உண்மைச் சம்பவங்களை உள்ளடக்கியபோதிலும் இன்னும் அச்சேறவேயில்லை. சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆகியன நடத்திய பிரசாரக்கூட்டங்களில் டானியல் எழுதிய நாடகங்கள் பல மேடையேறியுள்ளன. சிலவற்றுக்கு அவரது கதை பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை வானொலியில் அவரது சிறுகதைகளான தக்காளிப் பழங்கள், உலகங்கள் வெல்லப்படுகின்றன முதலியவை நாடகமாக நடிக்கப்பட்டன. டானியலின் முதற் சிறுகதை 1948இல் தூதன் பத்திரிகையில் வந்த 'பழிக்குப்பழி' அல்லது 'சோதனையின் கொடுமை' என்பதாகும். இறுதிச்சிறுகதையாக 'ஈழமுரசு' இரண்டாவது ஆண்டுமலரில் வெளியான 'மண்' (1986) அமைகிறது. 1948-1986 காலப்பகுதியில் சுமார் 150 சிறுகதைகள்வரையில் டானியல் படைத்திருக்கிறார். பல சிறுகதைகள் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தனது எழுத்தாலும், செயலாலும் தான் வாழ்ந்த சமுதாயத்தின் விடிவுக்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்டவர்தான் டானியல். அவரது எழுத்துக்களைத் தமிழில் தலித் இலக்கியத்தின் முன்னோடி எழுத்துக்கள் எனப் பலர் இனங்கண்டு கூறியுள்ளனர். சாதாரண மனிதனாகப் பிறந்து, பல்வேறு தடைகளையும் தாண்டி, சவால்களுக்கு முகங்கொடுத்து நின்று சமாளித்து, வெற்றியும் தோல்வியும் கண்டு, படிப்படியாக உயர்ந்தவர் டானியல். அதேபோல் தன் சமூகத்தையும் உயர்த்துவதற்கு முன்னின்றுழைத்தவர். 1947இல் தனது 21வயதில் பிலோமின நவமணியைக் கரம்பிடித்து சுகதுக்கங்களைப் பகிர்ந்து ஆறு பிள்ளைகளைப் பெற்று நல்லறம் கண்டவர் டானியல். இன்று அவர் எதிர்கொண்ட சாதீயச் சவால்களை அவரது பிள்ளைகள் எதிர் கொள்ளவில்லை. இரு ஆண்மக்களும் கலப்பு மணம் புரிந்துள்ளனர். எல்லாப் பிள்ளைகளும் கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புற வாழ்கின்றனர். ஆனால் டானியலின் கடைசி மூச்சும் ஒடுக்கப்பட்ட மக்களது விடிவு பற்றியே பேசியது. அத்தகைய மனித உள்ளத்தின் வரலாறு யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் வரலாறு. அவரின் வெற்றிகள் யாவும் அச்சமூகத்தின் வெற்றிகளே என்பதில் ஐயமில்லை.

**திரு. செல்லையா திருநாவுக்கரசு**
விரிவுரையாளர், ஆசிரியகலாசாலை, கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. டானியல்

ஒரு நாட்டின் வளர்ச்சி, அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவை அந்நாட்டின் வளங்களில் தங்கியுள்ளன என்பது பொருளியல் அறிஞர் கருத்தாகும். இவ் வளங்களில் மிகப் பிரதானமானது மனிதவளம். மனிதவளத்தின் வளர்ச்சி இந்நாட்டின் கல்வி முறைகளில் முக்கியமாக பாடசாலை சென்று கற்கும் "முறை சாரா" (formal education) கல்வியிலும், பாடசாலை வேளைகளுக்குப் பின்னர் ஓர் ஒழுங்கில் கற்கும் முறை சாராக் (non formal education) கல்வியிலும், தத்தமது வீட்டிலும் பொது இடங்களிலும் பெறும் முறையில் (informal education) கல்வியிலும் தங்கியிருக்கிறது. இவை எந்தத் தரத்தில், எந்த அளவில், எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தே பொது மக்களின் அறிவு, ஆற்றல், மனப்பாங்கு ஒழுக்கம் என்பன வளரும். பொதுவாக இவற்றைப் பயின்றவர் வளமிக்கவராகவும், பயிலாதவர் வளமற்றவராகவும் இருக்கிறார்கள்.

ஈழத்தில் கல்வி குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு வழங்கப்பட்டும் இன்னொரு பிரவினருக்கு மறுக்கப்பட்டும் இருந்ததை யாவரும் அறிவர். குறிப்பாக தமிழ் இனத்தின் கீழ் மட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் உயர்சாதியினரின் குடிமக்களுக்கும் கல்வி பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. பாடசாலைக் கல்வி என்பது இவர்களுக்கு ஓர் எட்டாக் கனியானது. அண்மைக்காலம் தொட்டு, 1956ம் ஆண்டுக்குப் பின்னர் இத்தடை நீக்கப்பட்டாலும் சமவாய்ப்பு இல்லாது உள்ளது. சமச்சீரற்ற கல்வி வள வசதிகள் வழங்கி வருவதை நாம் இன்றும் அவதானிக்கலாம். இந் நிலைமையால் ஈழத்தமிழரின் பல மனித வளங்கள் பயன்படாது நாசம் செய்யப் படுகிறது. நமது நாடு வறுமை ஒழிந்து வளம் செழிக்க ஒவ்வொரு ஆண் பெண்ணினதும் ஆற்றல் அதன் உச்ச நிலைக்கு வளர்த்து எடுக்கப்பட வேண்டும்.

சாதி, சமயம் பேசி, நீதிப் பிழைகளும் நியமப் பிழைகளும் காட்டி ஒரு தொகுதியினரை ஒதுக்கி வைத்தால் நம் நாட்டு அறிவு தழைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துக் கல்வி வரலாற்றில் யாழ்ப்பாணத்திற்கு முக்கிய இடமுண்டு. பல கல்விசார் விடயங்களில் யாழ்ப்பாணம் முதலிடங்களைப்பெற்று பண்டைதொட்டு புகழ் பெற்றதை நாம் அறிவோம். "முதன் முதலில் தமிழ் மொழியில் விஞ்ஞானத் துறையில் நூல் எழுதப்பட்டது யாழ்ப்பாணத்திலேயே" என காலம் சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்லாது இலங்கையில் முறையான மருத்துவக் கல்லூரி இல்லாத காலத்தில் கிட்டத்தட்ட 1848ஆம் ஆண்டளவில், ஒரு மருத்துவ நூலைத் தமிழில் வைத்தியக் கலாநிதி பி' கிறீன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார். பல கல்விமான்களையும் முற்போக்கான அரசியல் வாதிகளையும் வளர்த்த பெருமையும் யாழ்ப்பாணத்திற்கு உண்டு. 1980வரை யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள் பல இலங்கையில் முன்மாதிரியாக இருந்தன. பொதுப்பரீட்சைகளிலும், இணைப்பாடச் செயற்பாடுகளிலும் இவை முன்னிலைகளில் இருந்தன. இவற்றால் நன்மை பெற்றோரும், வளர்ச்சியடைந்தோரும் பெரும்பாலும் உயர்சாதியினரே.

தாழ்த்தப்பட்டோர் முற்காலத்தில் கல்விக்கு அருகதை இல்லாதோராகவும் தற்காலத்தில் சமவாய்ப்பு இல்லாதவராகவும் இருக்கும் நிலைக்கு யாழ்ப்பாணத்தில் நிலவி வந்த சமூக அமைப்பு முறையும் அதற்கு ஏற்ப வந்த தேசவழமையும், அதன் அடி ஒற்றி வந்த அரசியல் நிருவாகமுமே முக்கிய தடைதாங்கிகளாக இருப்பதை பல நடைமுறைகளில் நாம் அவதானிக்கலாம். எனினும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே நந்தனார் அறிவு பெற்றது போல், ஏகலைவன் வித்தை கற்றது போல ஒரு சிலர் தோன்றாமல் இல்லை.

"முறையில்" கல்வி முறையில் சாதி குறைந்த குடிமக்கள், தாழ்த்தப்பட்டோர் நல்ல வாழ்க்கை நெறிகளையும், சுத்த சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பயில சந்தர்ப்பங்களும், வாய்ப்புக்களும் குறைவாகவே இருந்தன. கடந்த நூற்றாண்டுவரை, சமய அனுட்டானமும், சமயக் கல்வியுமே மக்களுக்கு நற்போதனைகளை வழங்கும் முறைகளாக இருந்தன. ஆனால் தாழ்த்தப்பட்ட சாதியினர் சைவ அனுட்டானங்களை அனுசரிக்க அருகதை அற்றவர்களாகவும், பிள்ளையார் கதை, கந்தபுராண பாராயணம் போன்ற படிப்புக்களில் பங்கு பற்ற முடியாதவர்களாகவும் இருந்தனர். இதனால் இவ்களுக்கு சமயக் கல்வி கூட 'முறையில்' வகையாகக் கிடைக்கவில்லை. சைவப் பெரியார் வரிசையிலோ, சைவப்பிரசங்கிகள் வரிசையிலோ நாம் எத்தனை தாழ்த்தப்பட்டவர்களைக் காணமுடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுதலையாக வசதியான உயர் சாதியினரின் பிள்ளையார், கந்தசாமி, சிவன், ஆழ்வார், அம்மன் கோயில்களில் சைவ அனுட்டானங்களைக் கடைப்பிடிக்கவும், சமய அறிவைப்பெறவும் மறுக்கப்பட்ட இவர்கள், தங்கள் குலத் தெய்வங்களுக்கு வைரவர், காளிகளுக்கு கோயில்களைச் சிறு சிறு கொட்டகை அமைத்து வணங்கித் தங்கள் ஈடுபாடுகளை வன்பக்தி முறைகளில் காட்டியுள்ளார்கள். தீக்குளிப்பது செடில் காவடி எடுப்பது, கோழி வெட்டுவது, ஆட்டுக்கடாய் நேர்ந்து பலி கொடுப்பது போன்ற வன்முறைகளில் தமது பக்தியை வளர்த்தார்கள். சைவத்திற்கு மாறான அசைவச் செயல்களையும் தமது வழிபாட்டு முறைகளில் கடைப்பிடித்துள்ளதையும் காணலாம்.

அடுத்து "சமூக ஊடாட்டம்" (Social interaction) அநேகமாக சாதி மட்டத்திற்குள்ளே இருந்ததால் நல்ல பழக்க வழக்கங்களை அனுபவ ரீதியாகவும் பகிர்ந்து கொள்ள முடியாது இருந்தன. சமூக வைபவங்களோ, குடும்பச் சடங்குகளோ, மரணச் சடங்குகளோ, யாவும் சாதிரீதியாக நடைபெற்றதால், தாழ்த்தப்பட்ட மக்கள் "இழிசன"ராகவே இருந்தனர். ஈழப்போர் தொடங்கிய பின்னர் இவை ஓரளவு குறைந்திருக்கிறது. எனினும் அழிய வில்லை. இந்நிலை பலவீனப்பட்டுள்ளதே தவிர முற்றிலும் நிராகரிக்கப்பட வில்லை எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது "யாழ்ப்பாணம்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தச் சாதி அமைப்பும், இங்கு நிலவும் சாதி களுக்கிடையே உள்ள கல்வி பயிலும் சமவாய்ப்பின்மைக்கு மக்கள் சாதிரீதியாக வெவ்வேறு இடங்களில் வாழ்வதும் காரணமாக அமைகிறது. யாழ் குடா நாட்டில் பள்ளர், பறையர், நளவர் முதலிய பஞ்சமர்கள் தொட்டம் தொட்டமாக வெவ்வேறு குடியிருப்புக்களில் வசிக்கிறார்கள். இடத்தின் பெயர்கள் அங்கு வசிக்கும் மக்களின் சாதியைக் குறிக்கும் வகையான சமூகப் புவியியல் வரலாறே உண்டு. இவ் வகையான குடியிருப்பு அமைவதால் மக்களிடையே குறிப்பாக வெவ்வேறு சாதியினருக்கிடையே உள்ள ஊடாட்டங்கள் அல்லது தொடர்புகள் குறைவாகின்றது.

முறைசார் கல்வி ஈழத்தில் பாடசாலைக் கல்வி அமைப்பிலே தங்கியுள்ளது. பாடசாலைக்கு மாற்றாக வீட்டுப்பாடசாலையோ (Home school) திறந்த பாடசாலையோ (Open school) இங்கு இல்லை. பாடசாலைக் கல்வி ஆரம்பித்த காலம் தொடக்கம், பாடசாலைகளுக்கிடையே ஏற்றத்தாழ்வும், சமமின்மையும் இருந்து வருகின்றது. ஏழைகள், தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாக கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கும் பாடசாலைகள் அநேகமானவை கட்டிட, உபகரண, ஆசிரியர் வளங்கள் குறைந்தனவாகவும், மாணவர் பங்களிப்பும், பெறுபேறுகளும் மிகக் குறைந்த அளவிலும் காணப்படுகின்றன. அண்மைக்கால இடப்பெயர்வுகள் இந் நிலமையை மிக மோசப்படுத்தியுள்ளன. மக்கள் வாழ்க்கை முறை போர்க்காலங்களில் வழமைக்குத் திரும்பும் போது கல்வி முறையில் முன்னர் இருந்த சமமின்மை நீக்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

சமூகரீதியிலும் கல்வி முறையிலும் தாழ்த்தப்பட்டடோர் ஒதுக்கப்பட்டும் பாரபட்சம் காட்டப்பட்டும் வந்தமைக்கு எதிராக விழித்தெழுந்த மக்களால் அறுபதுகளில் நடாத்தப்பட்ட "தீண்டாமை ஒழிப்பு" வெகுஜன இயக்கம் இப்பிரதேசத்தில் வெகுகாலமாக வேரூன்றி இருந்த சாதிக்கொடுமைகளுக்குச் சான்றாகும்.

"கல்வி ஒரு சமூக இசைவாக்க ஊடகம்" என்பது கல்வியாளர் கருத்தாகும். அதாவது ஒருவர், அறிவு ஆற்றல்களைப் பெற்றுத் தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திச் சமூகத்தின் உயர் மட்டத்திற்கு இசைவாக்கம் பெற கல்வி குறிப்பாகப் பாடசாலைக் கல்வி ஒரு முக்கிய மூலகமாக அமைகிறது. யாழ்ப்பாணத்தில் இவ்வகையான சமூக இசைவாக்கம் ஐம்பதுகளுக்கு முன்னர் மிக அருமையாகவே இடம் பெற்றுள்ளது. அதுவும் சமயம் மாறி கத்தோலிக்க அல்லது கிறிஸ்தவ சமயத்தை ஏற்று இவர்களின் பள்ளிக்கூடங்களிலே கல்வி பெற்றவர்களே வளர்ந்தார்கள். 1950ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமுலாக்கப்பட்ட பொதுக்கல்வித்திட்டம், புலமைப்பரிசில் திட்டம், சுயமொழி மூலம் கல்வி, போன்ற நிகழ்வுகளால், வாய்ப்புப் பெற்று கல்வி கற்ற ஒரு சில தாழ்த்தப்பட்ட மக்களும் குடிமக்களும் சமூக இசைவாக்கம் பெற்றனர். இவ்வாறு கல்வி கிட்டிய மக்கள், வெளியூர்களில் அரச நிறுவனங்களிலும், தனியார் தாபனங்களிலும் தொழில் பெற்று, உறுதியான ஊதியம் எடுத்துத் தங்கள் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தினார்கள். மேலும் அவர்கள் வேலை செய்த இடங்களில் உள்ள வேறு சமூகத்தினரோடும் ஊடாட வாய்ப்புக்களும் இருந்தன. "ஆனையிறவுக்கு அப்பால் எல்லோரும் ஒண்டு" என்ற தொடர் வழக்கில் இருந்ததையும் நாம் நன்கு அறிவோம். யாழ்தேவிச் சேவை நிறுத்தப்பட்ட பின்னர் இத்தொடர் வழக்கிழந்து போய்விட்டது.

இன்றுவரை யாழ்ப்பாணத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையினராக கற்கும் எந்தவொரு பாடசாலையோ அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் வசிக்கும் குடியிருப்புக்களில் உள்ள பாடசாலையோ முழுமையான அல்லது ஓரளவு போதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறை, தளபாட உபகரணங்கள் வசதிகளையோ, ஆசிரியர் வளத்தையோ கொண்டிருக்க வில்லை. "உள்ளீடும்-விளைதிறனும்" "உள்ளீடும்-வினைப்பயனும்" என்ற நிர்வாக நியமங்களைப் பேசியும், "சமூக கேள்வியும் - வழங்கலும்" என்ற நீதி கூறியும் இப்பாடசாலைகள் அரச நிர்வாகத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இச் சூத்திரங்கள், வளமான பாடசாலைகளை மேலும் வளரச்செய்வதற்கும், கற்றோர் குடும்பங்களுக்கு மேலும் தரமான கல்வி வசதிகளை அளிப்பதற்குமே பெரும்பாலும் பயனளித்துள்ளது. நல்ல அதிபர், ஆசிரிய ஆளணி உள்ள பாடசாலைகள் வழங்கிய உபகரணங்கள் பணம், கற்றற் சாதனங்களை நன்றாகப் பயன்படுத்துவார்கள். எனவே இப் பாடசாலைகளில் உள்ளீடு மிக வினைத்திறனுடன் பயனளிக்கும். அதேபோன்று, ஊக்கம் மிகு பெற்றார், மாணவர்கள் உள்ள பாடசாலைகளில் வசதிகள் அளிக்கப்படுவதால் பெறப்படும் பலாபலனும், பயனும், குறுகிய காலத்தில் கிடைக்கும் பாடசாலைப் பெறுபேறுகள் பெருகும், மாணவர் செயற்பாடுகளும் அதிகரிக்கும். அடுத்து, இப்பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம், பெற்றார் சங்கங்கள் ஆகியவற்றில் அங்கம் வகிப்பவர்கள், தங்கள் பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளின் தேவைகளை நன்கு நியாயபூர்வமாக முன்வைப்பார்கள். தங்கள் பாடசாலைத் தேவைகளை முன்னுரிமைப் படுத்துவார்கள். அதனால் அவர்களின் கேள்விகள் நிர்வாகத்தினரின் கோவைகளில் படிகின்றன. கேட்ட வளங்களும வழங்கப்படுகின்றன.

ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் கற்கும் பாடசாலைகள் இச் சூத்திரங்களுக்கு அப்பால் இருக்கின்றன. அவைகளின் தேவைகளைச் சமூககேள்விகளாக்கி, நியாய பூர்வமாக முன்வைக்க கற்றறிந்த செல்வாக்கானவர்கள் அதிகம் இல்லை. கற்றறிந்தவர்களும், பொருளாதார வசதிபடைத்தவர்களும் தங்கள் பிள்ளைகளை வேறு இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிக் கல்வி அளிப்பதானால் அவர்களுக்குத் தங்கள் குடியிருப்புப்பாடசாலைகள் பற்றிய தேவைகள், உதவிகள் பற்றிச் சிந்திக்காது தவிர்க்கின்றார்கள். இதே நேரம் யாழ்ப்பாணத்து 'கற்ற சமூகம்' இப்பாடசாலைகளுக்கு வழங்க வேண்டிய வளங்களைத் தமது பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொண்டனர். இதனால் தாழ்த்தப்பட்ட மாணவர் பாடசாலைகள் தொடர்ந்தும் ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

க. கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியமும் கல்வியும்

அமரர் கே. டானியல் ஒரு பிரபல முற்போக்கு எழுத்தாளன். அவரைத் தமிழ் கூறும் நல்லுலகில் தெரியாதவர்களே இருக்க முடியாது. அந்தளவிற்கு அவரது படைப்பு இலக்கிய ஆக்கங்கள் முற்போக்குச் சிந்தனையாளர் மத்தியில் வியாபித்திருந்தன.

அமரர் கே. டானியல் சமூகத்தில் மிகப்பின்தங்கிய என பிற்போக்காளர்களால் கூறப்படும் "துரும்பர்" சமூகத்தில் அதாவது பச்சையாகக் கூறுவதாயின் பள்ளர், நளவர், பறையர் ஆகிய பின்தங்கிய சமூகத்தினருக்குச் சலவைத் தொழில் செய்வோர் சமூகத்தில் பிறந்தவர். இச்சமூகத்தினர் ஒருகாலத்தில் உயர் சாதி மக்கள் மத்தியில் செல்வதாயின் காவோலை கட்டி இழுத்துக்கொண்டு போகவேண்டி இருந்ததெனவும், பொழுதுபட்டபின்னரே வீதிகளில் போகவேண்டும் எனவும், இவர்கள் உயர்ந்த சாதியினரின் கண்களில் படக்கூடாதவர்கள் எனவும் என் தாயாரின் தாயார் கூறுவார். இவ் இழிநிலையைத் தவிர்ப்பதற்கு இச்சமூகத்தினர் எல்லோரும் கத்தோலிக்கராய் மாறினர் என அறியக்கிடக்கிறது. இச்சமய மாற்றத்தில் அருட் தந்தை ஞானப்பிரகாச சுவாமிகளுக்குப் பெரும் பங்குண்டு. நான் அறியத்தக்கதாக, நான் பிறந்து வளர்ந்த உடுப்பிட்டிக் கிராமத்தில், அருட்தந்தை ஞானப்பிரகாசர் முயற்சியினால் இக் கட்டாடி (வண்ணார்) சமூகத்தினரின் அயலில் காணி வாங்கி கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. இத்தேவாலயத்திற்கு எல்லாச் சமூக கத்தோலிக்க மக்களும் பூசைக்கு வருவார்கள். எந்தவித சாதிவேறுபாடுகளின்றியும் இத்தேவாலயம் இயங்கி வருவதை நான் அறிவேன்.

இச்சமூகத்தினர் கிராமந்தோறும் ஒன்று இரண்டு குடும்பங் களாகவே வாழ்ந்து வந்தனர். அமரர் கே. டானியல் நவாலிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். அக்கிராமத்திலுள்ள கிறீஸ்தவ தமிழப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டு, குடும்பத்திலுள்ள வறுமை காரணமாகத் தகப்பனாரின் சலவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்கு உதவுகரமாயிருந்து வந்தார். தான் ஆரம்ப பாடசாலையில் பெற்ற தமிழ் வாசிக்கும் திறனையும், எழுதுந் திறனையும் தகப்பனாருக்கு உதவுகரமாயிருந்தும், விருத்தி செய்யாமலில்லை. பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆகியவற்றை வாசிப்பதன் மூலம் தன் தமிழ் அறிவைப் பெருக்கிக்கொண்டார். யாழ் குடா நாட்டில் சாதியின் அடிப்படையில் இடம் பெற்ற கொலை, சண்டை சச்சரவுகளால் சமூகத்தில் பின்தள்ளப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களால் மனம் நொந்து வீறு கொண்டு எழுதத் தொடங்கினார். இதனால் முற்போக்கு அரசியல்வாதிகளின் தொடர்பு ஏற்பட்டதுமல்லாமல், கொம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை ஓர் அங்கத்தவராகவும் இணைத்துக் கொண்டு அரசியல் சமூக சேவைகளில் ஈடுபட்டார். இதன் காரணமாக அரசியல் சமூக பிரச்சனைகளைக் கருவாகக் கொண்டு எழுதத் தொடங்கினார். அவர் உயிர் நீங்கும்வரையும் எழுதிக் கொண்டே இருந்தார் என்றே கூறவேண்டும். அவர் எழுதிய சில நாவல்கள் அவர் மறைந்த பின்னரே இந்தியாவிலிருந்து வெளியிடப்பட்டன. இவர் பல்கலைக் கழகத்திற்கோ, கல்லூரிக்கோ போய்ப் படிக்காதவர். தனது ஆரம்ப நிலைக்கல்வியுடன், சமூகத்தில் இருந்து சமூகத்தைப் படித்து. சமூகத்தின் நலிந்த கீழ்நிலை மக்களுக்காக, அவர்களின் விடுதலைக்காக, தான் கொண்ட அரசியல் ஞான உந்தலினால், தனது எழுத்தாக்கங்களை அமைத்துக்கொண்டார் என்றே கூறவேண்டும். அவர் எழுதுவதில் மாத்திரமல்ல மேடைப்பேச்சில் வல்லமையுங் கொண்டிருந்தார். இத்திறன்களைக் கொண்டிருந்த ஒருவர் கல்லூரிப்படிப்பை மேற்கொள்ளாமைக்கான ஒரு காரணம் குடும்பத்தின் வறுமை நிலையாக இருந்தபொழுதிலும், இன்னொரு முக்கியகாரணம் இல்லாமலில்லை, அதுதான் சாதியம். இச்சாதியம் யாழ் குடாநாட்டில், உள்ள சமுதாயத்தின் ஒரு பகுதியினர் கல்விபெறுவதை எப்படிப் பாதித்தது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாதியத்தின் காரணமாக சமூகத்தில் பின்தள்ளப்பட்டவர்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது ஒடுக்கப்பட்டவர்கள் என்றும் ஒருகாலம் அழைக்கப்பட்டவர்கள் இன்று கௌரவமாக, எண்ணிக்கையின் பொருட்டு சிறுபான்மைத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களின் சமூக பொருளாதார, கல்வி முன்னேற்றங்களுக்காக ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட யோவெல் போல், உடுவிலைச் சேர்ந்த எஸ். ஆர். யேக்கப், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீ.எம்.பொன்னுத்துரை, அல்வாயைச் சேர்ந்த (இன்றும் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும்) கே. முருகேசு ஆகிய சமூகத்துப் பெரியோர்கள் தமிழர் மகா சபை என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இவ்வியக்கம் 1942 இல் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகா சபை என்று பெயர் மாற்றம் பெற்றது. 1960களின் பிற்பகுதியில், அரசியல் வேறும் சில காரணங்களுக்காக, மகாசபையிலிருந்து சில அங்கத்தவர்கள் பிரிந்து, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணி, திருவள்ளுவர் மகாசபை, ஆகிய இயக்கங்களை உருவாக்கிச் சிறுபான்மைத்தமிழர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்கள். எம்.சி. சுப்பிரமணியம் போன்ற கொம்யூனிஸ்ட் (மொஸ்கோ சார்பு) கட்சி ஆதரவாளர்கள் சிறுபான்மைத் தமிழர் மகா சபையுடனேயே இருந்து தொண்டாற்றி னார்கள். எஸ்.ரி. நாகரட்ணம் போன்ற கொம்யூனிஸ்ட் (சீன சார்புள்ள) அங்கத்தவர்கள், மகா சபையில் இருந்து பிரிந்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை உருவாக்கித் தொண்டு புரிந்தார்கள். ஐயம்பிள்ளை போன்ற பறைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பிரிந்து திருவள்ளுவர் மகா சபையை உருவாக்கித் தொண்டு புரிந்தார்கள். இவைகள் எல்லாம் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி தமிழின விடுதலைக்காகப் போராடத் தொடங்கியதும் ஸ்தம்பித்து விட்டன.

ஆரம்ப காலத்தில் திண்ணைப் பாடசாலைகள் மூலமாகத்தான் கல்வி பெறும் நிலைமை இருந்தது. இவற்றில் சாதியத்தின் காரணமாக சிறுபான்மைத் தமிழர் சேர்ந்து படிக்கும் நிலைமை இருக்கவில்லை. இதன் காரணமாக சிறுபான்மைத் தமிழர் படிப்பறிவு, எழுத்தறிவு இல்லாமற்றான் அக்காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். இது பற்றிய வரலாற்றுத் தகவல் ஏதும் இல்லாத நிலைதான் காணப்படுகிறது. **இது பற்றிய ஆய்வுகள் பல்கலைக் கழக மட்டத்தில் சமூகவியற் துறை சார்ந்த மாணவர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.**

சிறுபான்மைத் தமிழர்களின் கல்வி வரலாற்றைப் பொறுத்தவரையில் கிறீஸ்துவ மிஷனரிமாருக்குப் பெரும்பங்குண்டு. கிறீத்துவ மிஷனரிமார் வந்த காலத்திலிருந்துதான், சிறுபான்மைத் தமிழர் கல்வி அறிவைப் பெறத் தொடங்கியிருக்க வேண்டும். மிஷனரிமார் ஆரம்பித்த பாடசாலைகள் எல்லாவற்றிலும், சிறுபான்மைத்தமிழ் மாணவர்கள் பெரும்பான்மைத் தமிழ் மாணவர்களுடன் சமமாகக் கலந்திருந்து கற்கும் வாய்ப்பு அளிக்கப் படவில்லை. இந்நிலைமை கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் மிக மோசமாக நிலவியது. சிறுபான்னைத் தமிழ் மாணவர்கள் முன்னுக்கு நிலத்திலிருந்தோ அல்லது பின்னுக்கு வாங்கிலிருந்தோ படித்தார்கள். 1920களில் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தலைவராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970-1977களில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த அமரர் எம்.சி. சுப்பிரமணியம் அவரது வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள சேணிய தெரு மெதடிஸ்த தமிழ்ப் பாடசாலையில் சேர்க்கப்பட்ட பொழுது, நிலத்திலிருந்து படிக்கவேண்டி ஏற்பட்டது. இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத பெற்றோர் வாங்கொன்றைச் செய்து போட்டு அதில் சிறுபான்மைத் தமிழ் மாணவர்கள் வகுப்பின் பின்னுக்கு இருந்து படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார்கள் என அறியக் கிடக்கின்றது. நான் 1935-1949 வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் பாடசாலையிலும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆங்கில பாடசாலையிலும் படித்த காலத்தில் எனக்கும் என்னோடு சேர்ந்த படித்த எம் சமூக மாணவர்களுக்கும் இதே நிலைதான் இருந்தது.

தமிழ் பாடசாலையில் படித்த காலத்தில் எனக்கு ஏற்பட்ட சாதியத்தின் ஒரு பாதிப்பைக் கூறாமல் விட முடியாது. அக்காலத்தில் எமது சமூக மாணவர்கள் காற்சட்டை, மேற் சட்டை போடுவதில்லை. அப்படியானால் மற்ற சமூகத்து எல்லா மாணவர்களும் காற்சட்டை, மேற்சட்டை அணிந்துதான் பாடசாலைக்கு வருவார்கள் என்பதல்ல. சட்டை இல்லாமல் சிறு துணி அணிந்துதான் நாங்கள் போவதுண்டு. நான் ஐந்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது வருடாந்த சோதனை நாள் அன்று, எனது தாய் மாமனார் கொழும்பிலிருந்து வாங்கிக் கொண்டு வந்து தந்த ஒருசோடி காற்சட்டை, மேற்சட்டையை அணிந்துகொண்டு பாடசாலைக்குப் போனேன். பாடசாலை முடிந்து வெளியே வந்தபோது சாதித்திமிர்பிடித்த யாரோ என் சட்டை மேல் மை தெளித்துவிட்டார்கள். சாதியத்தின் பேரில் நான் அனுபவித்த தண்டனை என்றே இதைக் கூறவேண்டும்.

இன்று இந்த இரண்டு பாடசாலைகளும் ஒன்றாக்கப்பட்டு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி என அழைக்கப்படுகிறது. அன்றிருந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் எமது சமூகத்து மாணவர்கள் 1940களின் ஆரம்பத்தில் தான் முதன் முதல் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பது இன்னொரு கதை. 1944ம் ஆண்டு ஜனவரி வரைக்கும் எமது சமூகத்து மாணவர்கள் சேர்ந்து படிக்காத நிலைதான் இருந்து வந்துள்ளது. எமது சமூகத்தின் மக்களின் சமூக, கல்வி, முன்னேற்றத்திற்காக அல்வாய், வதிரி கிராமங்களைச் சேர்ந்த எமது சமூக மக்களால் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்த வடமராட்சி சமூக சேவா சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் காரணமாகத்தான் நான் உட்பட ஐந்து எனது சமூக மாணவர்கள் இப்பாடசாலையில் 1944இல் சேர்க்கப்பட்டோம். நாங்கள் எங்கள் வகுப்புக்களில் பின்னுக்கு தனியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து படிக்கும்படி விடப்பட்டோம். மற்ற மாணவர்கள் நீண்ட வாங்கு மேசைகளில் இருக்க விடப்பட்டனர். மற்றமாணவர் சமூகத்தைப் பொறுத்த வரையில் ஒரு சில பெரிய மாணவர்கள் எங்களை வெறுப்புக்கொண்டு பார்ப்பதும் எங்களை முறைப்பதும் சில வேளைகளில் சாதிப்பெயர்களைக் கூறி அழைத்துக் கேவலப்படுத்துவதுமுண்டு. வெளிச் சமூகத்தைப் பொறுத்தவரையில் ஒருசில சண்டியன்கள் சாதி சொல்லி அச்சுறுத்துவதும் உண்டு. எங்களைப் பள்ளியில் சேர்த்த ஆரம்பத்தில் கிடுகு வேலிக்கும், கிடுகால் வேயப்பட்ட வகுப்பறைக்கும் தீ வைத்துவிட்டார்கள்.

1946இல் நான் 5ஆம் வகுப்பில் இருந்து 7ஆம் வகுப்புக்கு இரட்டை வகுப்பேற்றம் பெற்றுச் சென்றபோது மலையாளியாக இருந்த அதிபர் எனக்கு வகுப்பில் முன்னுக்கு ஒரு ஓரமாக மேசை போட்டு இருக்கச் செய்தார். ஆனால் அன்று நான் மதியம் வீடு சென்று திரும்பியவேளை உயர் சாதியைச் சேர்ந்த வெறியர்களின் பிள்ளைகள் தங்களது கைகளாலேயே அது தீட்டுப்பட்டுதோ இல்லையோ தூக்கி பின்னுக்குக் கொண்டு சென்று போட்டு விட்டார்கள். நான் ஒரு அசட்டுத்துணிவில் அதிபரிடம் முறையிட்டேன். அதிபர் வந்து எச்சரிக்கை செய்து விட்டு தானே எனது மேசையை முன்னுக்கு நகர்த்தி வைத்துச் சென்றார். 1949இல் நான் இப் பாடசாலையை விட்டு விலகும் வரை அங்கு உள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளிப் பாவிப்பதற்கு எமது சமூக மாணவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. யாரிடமாவது கெஞ்சி அவர்கள் அள்ளித்தந்தால்த்தான் தாகத்திற்கு நீர் அருந்தக்கூடிய துர்ப்பாக்கிய நிலை என்போன்ற ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களுக்கு இருந்து வந்துள்ளது. ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளதனை அறிய முடிகிறது. நான் படித்த பாடசாலையில் இன்று எனது சமூகத்தைச் சேர்ந்தோர் ஆசிரியர்களாகப் பணிபுரிவதும், உப அதிபராக எனது உறவினர் ஒருவர் இருப்பதும். பெண்கள் பாடசாலையில் எனது சமூகத்தினர் ஒருவர்தான் அதிபராக இருக்கின்றார் என்பதனையும் கேள்விப்படும் போது எனது காலத்திலேயே இவ்வளவு மாற்றம் ஏற்படும் என்றதை எதிர்பார்க்கவே இல்லை. நான் இருந்த காலத்து நிலைமை இவ்வளவு கெதியாக மாற்றம் அடையும் என நான் நினைத்திருக்கவில்லை.

சிறுபான்மைத் தமிழர் பாடசாலைகளில் சேர்ந்து படிக்கும் நிலைமை, கிறீஸ்தவ மிஷனரிமார் வந்த பின்னர்தான் ஏற்பட்டது எனலாம். அவர்கள் ஆரம்பித்த பாடசாலைகளில் சிறுபான்மைத் தமிழ் பிள்ளைகள் சேர்ந்து படிக்கும் நிலைமைகள் ஏற்பட்ட பொழுதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு எல்லாப் பாடசாலைகளிலும் சம ஆசன வசதிகள் அளிக்கப்படவில்லை. இதற்கான காரணம் மிஷனரிமாரும், ஒல்லாந்தர் காலத்தில் வழக்கத்திலிருந்த தேசவழமைச் சட்டத்திற்கேற்ப நடந்துகொண்டமையும் ஆகும். இருப்பினும் சிறுபான்மைத்தமிழ்ப் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்ட்ட சில பாடசாலைகளும் யாழ் குடாநாட்டில் ஆங்காங்கே காணப்படுகின்றன. யாழ் நகர் தவிர்ந்த, மற்றய கிராமங்களிலிருந்து, சிறுபான்மைத் தமிழர் படித்து முன்னேற்றம் அடைந்திருப்பார்களேயானால், அது சிறுபான்மைத் தமிழர்களுக்கென பிரத்தியேகமாக கிறீஸ்தவ மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்துதான் என்று கூறவேண்டும். இந்த வகையில் வதிரி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை, நவாலி அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றைவிட யாழ் நகரிலுள்ள யாழ் மத்திய கல்லூரி, செம்பத்திரியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, ஆகிய கிறீஸ்தவப் பாடசாலைகள் சிறுபான்மைத் தமிழர் சேர்ந்து படிக்கும் வாய்ப்பைக் கொண்டிருந்தமையினால், சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட, மறைந்த யோவெல் போல், எஸ். ஆர். ஜேக்கப், ஜீ. நல்லையா, ஏ. பி. இராஜேந்திரா, எம். சி. சுப்பிரமணியம் ஜீ. எம். பொன்னுத்துரை, டீ. ஜேம்ஸ், வீ.டி. கணபதிப்பிள்ளை போன்ற சமூக முன்னோடிகள் உருவானார்கள்.

வடமாராட்சியைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் சமூக முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்களை உருவாக்கியதில் வதிரி தேவரையாளி சைவ வித்தியாசாலைக்கும், வதிரி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆரம்பத்தில் இப்பகுதி மக்கள் எவ்விதபாகுபாடுமின்றி கல்வி கற்கும் வாய்ப்பை வதிரி மெதடிஸ்த பாடசாலையே அளித்தது எனலாம். அந்தவகையில் அந்தப் பகுதி சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட கவிஞர் மு. செல்லையா, சாமுவேல் ஆசிரியர், க. முருகேசு, சைவப்புலவர் சி. வல்லிபுரம், ஆ.ம. செல்லத்துரை, கே.டி. மாணிக்கம் போன்றோர்களை உருவாக்கியதில் வதிரி மெதடிஸ்த பாடசாலைக்குப் பெரும் பங்கு உண்டு. இப்பகுதியில் கிறிஸ்தவர்களுக்கே ஆசிரியப்பதவி வழங்கப்பட்டமையால், இதனைப் பொறுத்துக் கொள்ளமுடியாத சூரன் ஆசாரியார், கந்தப்பு (க.முருகேசு ஆசிரியரின் தந்தை) போன்ற வைசசமயத்தவர்கள், முன்னரே அப்பகுதியில் திண்ணைப் பாடசாலைகளாக இயங்கிவந்தவற்றை ஒன்றாக்கி 1914இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரி தேவரையாளி பாடசாலை எனப் பெயர் சூட்டி ஆரம்பித்தனர். இது 1917இல் வதிரி தேவரையாளி சைவ வித்தியாசாலையாகப் பெயர் மாற்றம் பெற்று 1920இல் அரசினர் நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது. இன்று வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி என்னும் பெயரில் அரசினர் கல்லூரியாக மிளிர்கின்றது. சாதியத்திற்கும், கிறீஸ்தவ பிரசாரத்திற்கும் எதிராகத் தேவரயாளி சைவ வித்தியாசாலையை நிறுவிய முன்னோடியாக ஆசாரியார் சூரன் அவர்களது பணி நினைவுகூரப்படுகின்றது.

வடமராட்சியில் பல்வேறு இடங்களிலும் சிறுபான்மைத் தமிழர் சமூகங்கள் இருந்தபோதிலும் வதிரியில் அவர்கள் தீரத்துடன் இயங்கி இவ்வித பணிகளில் வெற்றிகாண்பதற்கு அவர்களின் பொருளாதாரப் பலமும் முக்கியகாரணி என்பதனை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இப்பகுதி மக்கள் கொழும்பு, கண்டி, காலி, கற்றன் போன்ற தென் இலங்கையின் நகரங்களில் தொழில் ரீதியாகச் சிறந்து விளங்கியதும் முக்கியமானதாகும். இந்தவகையில் பாடசாலையை ஆரம்பித்து அதற்கு முகாமையாளராக இருந்த சூரன் ஆசாரியார் அவர்களின் மறைவிற்குப்பின்னர் முகாமைத்துவப் பொறுப்பை ஏற்ற மு. சின்னத்தம்பி அவர்களையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இப்பாடசாலையின் பாரம்பரியத்தைப் பற்றிக்குறிப்பிட்ட முன்னாள் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.வித்தியானந்தன் அவர்கள் 1984இல் தனது வாழ்த்துரையில் "யாழ்ப்பாணப் பெருநிலத்தின் சிறுபான்மைத் தமிழர்களின் எழுத்துப்பாரம்பரியத்தின் பின்னணியில் வடமராட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் தேவரயாளி இந்துக்கல்லூரியை மையமாக வைத்து நோக்கற்பாலது. இந்த வகையில் வடமராட்சியின் வதிரிக்கிராமத்தைச் சேர்ந்த திரு. கா.சூரன் அவர்கள் சாதிமான்களுக்கும், கிறிஸ்தவ பிரசாரகர்களுக்கும் எதிராக தேவரயாளி சைவ வித்தியாசாலையை நிறுவிய அன்னாரது தூர நோக்கும், அதற்காக மேற்கொண்ட சமூகத் தொண்டு முயற்சியும், பணியும் மிக்க மகத்தானவை, தனித்துவமான வைபவம் அல்லாமல், விரிவான ஆய்வுக்குரிய விடயப்பரப்புடையன" என்று குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

1940களின் ஆரம்பத்தில், நான் பிறந்த உடுப்பிட்டிக் கிராமத்திலிருந்து, சாதியத்தின் காரணமாக உயர் வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளில் சேர்ந்து படிக்க முடியாததன் காரணமாக, ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ள வதிரி தேவரயாளி சைவப் பாடசாலைக்கு நடந்தும், சைக்கிளிற் சென்றும் எஸ்.எஸ்.சி. வரையும் படித்து முடித்து பின்னர் தமிழ் ஆசிரியர்களாக இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பகுதியில் பணிபுரிந்த ஒருசிலரும், சிறைச்சாலைக் காவலராகப் பணிபுரிந்த ஒவரும் எனது ஞாபகத்திற்கு வருகின்றனர்.

இருபதுகளிலும், முப்பதுகளிலும் சிறுபான்மைத் தமிழர்களிடையே விரல் விட்டு எண்ணக்கூடிய மிகக் குறைந்த அளவினரான ஆசிரியர்களே பணிபுரிந்தார்களென அறியக் கிடகட்கின்றது. அதுவும் கிறீஸ்தவர்களாக தெல்லிப்பளை, நவாலி, வதிரி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் சமயம் மாறிய ஒருசிலரே பணிபுரிந்தனர். இருபதுகளில் வதிரி தேவரயாளி சைவ வித்தியா சாலையில் மேல் வகுப்புக்களில் படித்த கவிஞர் மு. செல்லையா, க. முருகேசு, சி. வல்லிபுரம், பின்னர் ஆ.ம. செல்லத்துரை ஆகியோர், இறுதியில் சுயபாஷா பாடசாலை விடுகைத்தராதரப் பத்திர வகுப்பில் அதாவது 8ஆம் வகுப்பில் (VSLC) சித்தியெய்தி ஆசிரியர்களாகப் பணிபுரியும் வாய்ப்பைப்பெற்றார்கள். இவர்கள் சைவ மாணவர்களாக இருந்தமையால் ஆசிரிய பயிற்சிக்கலாசலைலையிற் சேர்ந்து படிப்பதில் சாதிய ஆடிப்படையில் சில பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டியிருந்தது. கவிஞர் மு. செல்லையாதான் முதன் முதலாக கோப்பாய் சைவாசிரியர் கலாசாலையிற் சேர்ந்து படித்த சிறபான்மைத் தமிழராவார். அவர் படித்த பொழுது சாதிய வேறுபாட்டிற்கமைந்தே தன் ஆசிரிய பயிற்சியை முடித்து வெளியேறினார். கலாசாலையில் இருந்து வெளியேறி 1927இல் இருந்து தேவரயாளி சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகப்பணிபுரய ஆரம்பித்தார். இந்தக் காலகட்டத்தில் ஐந்தாம் வகுப்புடன் தனது ஆரம்பக் கல்வியை இடைநிறுத்தி விட்டு தொழிலின் பொருட்டுக் கொழும்பு சென்ற சைவப்புலவர் அங்கிருந்து திரும்பிவந்து 1928ஆம் ஆண்டிலிருந்து தேவரயாளியில் ஆசிரியர் திரு. சூரன் அவர்களால் ஆசிரியராக நியமனம் வழங்கப்பட்டு சேவையாற்றினார். திரு. முருகேசு அவர்களும், திரு. வல்லிபுரம் அவர்களும் 1930ஆம் ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்றனர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1922ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் 1930 இல் சேர்ந்து படித்தமை சம்பந்தமாக எழுத்தாளர் தெணியான் 1993இல் வெளியிடப்பட்ட திரு. க. முருகேசனாரின் பவழ விழாமலரில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "1922ஆம் ஆண்டளவில் தோற்றுவிக்கப்பட்ட கோப்பாய் ஆரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைப் பிரவேசப்பரீட்சையை வருடந்தோறும் கலாசாலை விரிவுரையாளர் குழுவே நடாத்தி வந்தது. அக்குழுவினர் ஒவ்வொரு வருடமும் ஒன்று இரண்டு தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளித்துவந்தனர். ஆனால் சம ஆசன சம போசனச் சட்டம் அமுலுக்கு வந்தபின்னர், இரண்டு மூன்று வருடங்கள் பிரவேசப்பரீட்சைக்குத் தோற்றிய எந்த தாழ்த்தப்பட்ட மாணவனும் தெரிவு செய்யப்படவில்லை. இதுகுறித்து ஆசிரியர் சூரனும், தெல்லிப்பளையைச் சேர்ந்தவரும் சாதியத்திற்கெதிராக ஒடுக்கப்பட்ட தமிழர் இயக்கத்தை ஸ்தாபித்து முதலில் குரல் எழுப்பியவருமான யோவெல் போல் அவர்களும், அரசாங்கத்துக்குச் செய்துகொண்ட விண்ணப்பங்களினால் பிரவேச பரீட்சையை நடத்தும் பொறுப்பை அரசாங்கம் எடுதுக்கொண்டது. 1930இல் அரசாங்கம் நடாத்திய முதற்பரீட்சையிலேயே கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் காசாலைக்குத் திரு. சி.வல்லிபுரமும், தெல்லிப்பளை ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்குத் திரு. ச.முருகேசுவும் தெரிவு செய்யப்பட்டனர். தெல்லிப்பளையில் சமபோசன விஷயமாக எதுவித கிளர்ச்சியும் ஏற்படவில்லை. ஆனால் கோப்பாயில் பெருங்கிளர்ச்சி உண்டாயிற்று. (மேற்கோள்: புலவர் தேறல் 1990 சைவப்புலவர் சி.வல்லிபுரம்) கவிஞர் மு. செல்லையா கோப்பாய் சைவ ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற்றபொழுது சம ஆசன சமபோசன இயக்கம் ஆரம்பிக்கப்பட வில்லையென அறியக்கிடக்கின்றது. இவ்வியக்கத்தைத் திரு. யோவெல் போல் அவர்களே 1928ஆம் ஆண்டில், அமெரிக்க மிஷனரிமாரின் உதவியுடன், சகல தமிழ் அரசியல் வாதிகளையும் அழைத்து உடுவில் பெண்கள் கல்லூரியில் ஆரம்பித்து வைத்தார். இவரின் முயற்சியினால் கல்விக்கூடங்களில் சம ஆசனம் சமபோசனம் இடம் பெறுதல் வேண்டும் என்னும் பணிப்புரை அன்று கல்விமா அதிபதியாக இருந்த திரு. எல். மைக்கிறே என்னும் ஆங்கிலேயர் 1930இல் பிறப்பித்தார். **அதேசமயம் யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சாதியினர், விட்டுக்கொடுக்காது சாதி அகம்பாவத்துடன் தீவிரமாகச் செய்ற்பட்டனர். உயர்குல தமிழரின் தலைவரும், இலங்கையின் உயர் கல்விமான் என அழைக்கப்பட்டவரும், நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியுமாக விளங்கியவருமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் சமஆசன, சம போசன இயக்கத்திற்கு எதிரான நடைமுறைகள் இயக்கப்பட்டன. 1928ஆம் ஆண்டில் சேர். பொன். இராமநாதன் 79 கிராமச் சங்கப்பிரதி நிதிகளுடன் அன்றைய வெள்ளைக்காரத் தேசாதிபதியைப் பேட்டிகண்டு சாதி அமைப்பு முறையிலான பாடசாலைகளை வலியுறுத்தி, தேசவழமையின்படி தமிழர்களின் பாரம்பரியம் காப்பாற்றப்படுவது அவசியம் என வாதம் புரிந்தார். 04.11.1929 இல் 181 சைவப்பெரியார்கள் யாழ்ப்பாண றீகல் தியேட்டரில் இந்து மகாசபையின் தலைமையில் ஒன்றுகூடி கோப்பாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசினர் ஆசிரியர் கலாசாலையை உயர்சாதியினரின் தனிஸ்தாபனமாக ஆக்குமாறு தேசாதிபதிக்கு மனுச்செய்தனர்.** (மேற்கோள்: என்.கே. தர்மலிங்கம் எம்.ஏ. கீழைத்தேய கல்வியியற் சிந்தனைகள்)

கோப்பாய் சைவ ஆசிரியர் கலாசாலையிலிருந்து 1926இல் கவிஞர் திரு.சி.செல்லையா வெளியேறிய காலம் முதல், 1930இல் சைவப்புலவர் திரு. சி.வல்லிபுரம் அங்கு பயிற்சிபெற அனுமதிக்கப்பெறும் காலம்வரையுள்ள மூன்று வருடங்கள் மிகவும் முக்கியத்துவம் வகிக்கும் காலமெனக் கருதப்படுகின்றது. இக்கால கட்டத்திற்றான், அதாவது 1928இல் திரு. யோவெல் போல் சம ஆசன சமபோசன கிளர்சியை ஆரம்பிக்கின்றார். திரு. யோவெல் போல் அவர்களுடன் இணைந்து திரு. சூரன் அவர்களும், கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குத் தாழ்த்தப்பட்ட மாணவர்களும் அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றார்கள். இதே காலகட்டத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையை உயர் சாதியினருக்கு மாத்திரம் உரியதாக்கப்படவேண்டுமென 1929இல் சைவப்பெரியார்கள் தேசாதிபதியைக்கோரி நிற்கின்றார்கள். இவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் பொழுது, இக்காலகட்டத்தில் சைவப்பெரியார்கள் எச்சரிக்கையடைவதற்கு எதோ ஒரு நிகழ்வு இடம்பெற்றிருக்கவேண்டும். 1930 இல் சைவப்புலவர் சி. வல்லிபுரம் அவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அனுமதி பெறுகின்றார். இதற்கு கல்விப்பணிப்பாளரின் சம ஆசன, சம போசனம் சம்பந்தமான பணிப்புரையும், அரசாங்கம் ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையை நடாத்துவதற்கு ஆரம்பித்தமையும் காரணங்களாகின்றன என்றே கூறவேண்டும். ஆயினும் சைவப்புலவர் சம ஆசன, சம போசனப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டி நேருகின்றது.

இக்கால கட்டத்தில் அதாவது 1929இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பரீட்சையில் தேறி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 80 பேரில் திரு. க.முருகேசு அவர்கள் ஒருவர்தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர். திரு. க.முருகேசு அவர்கள் தனக்கு அனுமதி கிடைக்கும் என்றே பெருநம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் சம ஆசன, சம போசன கிளர்ச்சியின் காரணமாக, நேர்முகப்பரீட்சைக்குச் சென்றவர்கள் இருபாலைச் சந்தியில், கோப்பாய் சாமிநாதன் என்பவரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். பின்னர் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையில் சம ஆசனம், சமபோசனத்திற்குச் சம்மதமா என்ற கேள்வி கேட்கப்பட்டது. திரு.க.முருகேசு தவிர்ந்த ஏனைய 79 மாணவர்களும் சம்மதமில்லை என்றே பதிலளித்திருந்தனராம். ஆங்கிலேயரான கல்வி அதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவிடயத்தில் மிகுந்த கண்டிப்போடு இருந்தாராம். இதனால் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிலகாலம் மூடப்பட்டிருந்தது. பின்னர் சைவப்பெரியார்களின் தந்திரோபாயங்களால் சைவப்புலவர் திரு. க.முருகேசு அவர்கள் பயிற்சி பெறுவதிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் எந்த இடையூறுமின்றி கலாசாலை நடைபெற்றது. ஆனால் சைவப்புலவர் அடுத்த ஆண்டு தெல்லிப்பளை கிறிஸ்தவ கலாசாலையில் சேர்ந்து பயிற்சியைப் பெற்று தேவரயாளி சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகச் சேர்கின்றார். சைவப்புலவர் திரு. சி.வல்லிபுரம் அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து சாதிப்பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்துத் தனது பயிற்சியை முடித்துக்கொண்டு தேவரயாளியில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தார்.

சைவம் வளர்ப்பதெற்கென ஆரம்பிக்கப்பட்ட தேவரயாளி சைவ வித்தியாசாலையில் உருவாக்கப்பெற்ற சிறந்த சைவர்களான இவர்களுக்கு அந்தச் சைவமே எதிரியாகவும், அரக்கத்தனமாகவும், மனிதத்துவமற்ற முறையிலும் நடந்தும், இவர்களது சைவாபிமானம் "தாழ்த்தப்பட்ட சமூகத்தில் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியன் நான்" எனக் கவிஞர் மு.செ.அவர்களும், "தெல்லிப்பளை கிறீஸ்தவ ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட முதலாவது சைவ ஆசிரியன் நான்" என திரு. க.முருகேசு அவர்களும், "உயர்சாதியாருடன் சமத்துவமாகப் பயிற்சி பெற்ற முதலாவது சைவ ஆசிரியன் நான்" எனச் சைவப்புலவர் சி.வல்லிபுரம் அவர்களும் பெருமை பேசுமளவிற்கு இவர்களிடம் சைவம் வேரூன்றி இருக்கிறது. (மேற்கோள்: க.முருகேசனாரின் பவள மலர் -தெணியான் 1993)

இலங்கை சுதந்திரம்பெற்று எல்லோருக்கும் வாக்குரிமை என்ற அரசியல் உரிமைகிடைத்தமை சிறுபான்மைத் தமிழர்களின் அதாவது தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் கல்வி பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகி வருவதை நாம் காணக்கூடயதாகவுள்ளது. எல்லாருக்கும் வாக்குரிமை என்ற அரசியற்கோட்பாடு, அரசியல் வாதிகளைச் சமூகத்தின் எல்லாப்பகுதியினரின் கல்வி, பொருளாதார, சமூக முன்னேற்றங்கள் பற்றி சிந்திக்கத்தூண்டின. அத்துடன் தாழ்த்தப்பட்ட தமிழர் மத்தியிலுள்ள படித்தவர்களையும் இவைகள் பற்றிச் சிந்திக்கத்தூண்டின.

இந்த வகையிலேயே எம் சமூகத்து முன்னோடிகளான திரு. யோவெல் போல், எஸ். ஆர். ஜேக்கப், ஜி. நல்லையா, எம்.சி. சுப்பிரமணியம், ஜி.எம்.பொன்னுத்துரை, ஆ.ம. செல்லத்துரை, க.முருகேசு, டி.ஜேம்ஸ் போன்றோர் தூண்டப்பட்டு உருவானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையிற்தான் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதற்கான சிறுபான்மைத் தமிழர் மகாசபை, திருவள்ளுவர் மகாசபை, ஒடுக்கப்பட்ட தமிழர் மகாசபை, சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி, வடமராட்சி சேவா சங்கம், சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் போன்ற தாபனங்கள் எமது சமூக முன்னோடிகளால் உருவாக்கப்பட்டன. இவற்றுள் ஒடுக்கப்பட்ட தமிழர் மகாசபை, சிறபான்மைத்தமிழர் மகாசபை, வடமராட்சிச் சேவாசங்கம் போன்ற நிறுவனங்கள் அரசியற் கட்சி சார்பற்ற ரீதியில் ஆரம்பகாலத்தில் இயங்கின. ஆனால் காலவரையில் எம் சமூக முன்னோடிகள் அரசியல் பிரக்ஞைகளால் ஈர்க்கப்பட்டதன் காரணமாக, அரசியல் கட்சிகள் சார்ந்த இயக்கங்களாக உருவெடுத்தன. இந்த வகையில் கட்சிச்சார்பில்லாது இயங்கிவந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபை, ஐம்பதுகளின் முடிவில் திரு. எம். சி. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் கொம்யூனிஸ்ட் கட்சி சார்புகொண்டு இயங்கத் தொடங்கியது. இதன் காரணமாக, சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் நெடுங்காலமாக இருந்து தொண்டுசெய்த திரு.ஜீ.நல்லையா, ஆ.ம.செல்லத்துரை, க.முருகேசு போன்றவர்கள் விலகி சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கித் தமிழரசுக் கட்சிசார்பு கொண்டு இயங்கினார்கள். இச்சார்புகளினால் இவ்வியக்கங்கள் சிறுபான்மைத் தமிழர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஏதோ சிலவற்றைச் செய்தார்கள் என்றே கூறவேண்டும். இதைப்பொறுத்தவரையில் திரு. எம். சியின் தலைமையில் இயங்கி வந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபை, 1956இல் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து சிறுபான்மைத் தமிழர் சமூகத்திற்கு பல முன்னேற்றகரமான விடயங்களைச் செய்யக்கூடியதாக இருந்தது. இக்காலகட்டத்தில் கொம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த திரு. பொன். கந்தையாவின் அனுசரணையுடனும், அந்த நேரத்தில் கல்வி மந்திரியாக இருந்த டபிள்யூ. தகநாயக்காவின் தயவுடனும் எமது சமூகத்தவர் கல்வி பெற வசதியற்ற கிராமப் பகுதிகளில் ஏறக்குறைய 15 பாடசாலைகளை நிறுவவும், அவற்றில் ஆரம்பத்தில் மகாசபையினால் நியமிக்கப்பட்ட எமது சமூகத்தைச்சேர்ந்த ஏறக்குறைய 100 பேர் ஆசிரியர்களாக நியமனம் பெறக்கூடியதாகவும் இருந்தது. அத்துடன் இக்காலகட்டத்தில் ஏறக்குறைய 200 தராதரப்பத்திரமற்ற எமது சமூக ஆசிரியர்கள் சலுகை அடிப்படையில் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் அனுமதி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வரவசதி அளிக்கப்பட்டது. 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரிகள் சலுகை அடிப்படையில் நியமனம் பெற்றார்கள். இக்கால கட்டத்திற்தான் எம் சமூகத்தில் பலர் சத்தியப்பிரமாண ஆணையாளர்களாகவும், சமாதான நீதிபதிகளாகவும் நியமனம் பெற்றார்கள், சமூகத்தில் நிலவும் தீண்டாமை போன்ற சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கான சமூகக் குறைபாடுகள் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1960களில் உலகரீதியாக கொம்யூனிசத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இருந்து சீனசார்புள்ள திரு. கே. டானியல், எஸ்.ரி. நாகரெத்தினம் போன்றவர்கள் பிரிந்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை உருவாக்கினர்.

எவ்வாறாயினும் சாதியத்தின் பேரில், சமூகத்தில் ஒருபகுதியினர் கல்வி பெறுவது மறுக்கப்பட்டுள்ளது. சாதியத்தை இந்திய உபகண்டத்தில் உட்புகுத்தியது இந்துமதக் கோட்பாட்டைக் கொண்டு வந்த ஆரியர்தான். குறிப்பாகக் கூறுவதாயின் இந்துமதம் தான். இதனை எவரும் மறுத்துரைக்க முடியாது. கல்விதான் சாதியத்தை எதிர்க்கத்தூண்டிய முக்கிய காரணி. இந்தக் கல்வியை இந்திய உபகண்டத்திலும் சரி, இலங்கையிலும் சரி முறையாகவும், நிறுவனரிதி யாகவும் அளிக்க ஆரம்பித்தவர்கள் மேற்கத்தைய கிறீஸ்தவ மிஷனரிமார் தான் என்பது உண்மை. இதை அனுபவித்து கல்வி கற்ற மற்ற சமயத்தவர்கள் குறிப்பாக இந்துசமயத்தவர்களும் இன்று போட்டி போட்டுக்கொண்டு காலத்திற்கேற்றவாறு தங்களை சாதியத்திற்கு எதிரானவர்கள் என்று காட்ட முயற்சிக்கிறார்கள்போற் தெரிகின்றது. இப்படி அவர்கள் மாறுவது காலத்தின் தேவையென்றே கருதவேண்டியுள்ளது.

தாயகத்து அரசியல், போர்சூழல்கள் எல்லாம் கொடிகாட்டிய போதிலும் தனிமனிதனின் அகநிலை மாறவில்லையென்றே கூறவேண்டியுள்ளது. புலம் பெயர்ந்த சூழலிலும் இந்த நிலைதான் காணப்படுகின்றது. எல்லா புறநிலைகளிலும் சாதியம் வெளிக்காட்டா திருந்தாலும், விவாக விவகாரங்களில் வெளிக்காட்டத்தான் செய்கிறது. ஏன் தாயகத்திலும் சரி, புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் சரி, தாழ்த்தப்பட்டவர்களிடையே உட்சாதியம் தலை காட்டத்தான் செய்கிறதே? கல்வி, பொருளாதார, மன சோதிடப் பொருந்தங்கள் இருந்தும் சாதியப்பொருத்தம் இல்லாத காரணத்தால் விவாகங்கள் தவறிப்போவதைக் காண்கின்றோம். அந்தளவுக்கு சாதியம் மனிதனின் கலன்களின் பண்புக்கான மரபணுக்களில் (ஜீன்களில்) மாற்றம் ஏற்படுத்தியுள்ளதோ என சிந்திக்கத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கே. டானியல் சாதியத்தை அடிப்படையாகக் கொண்ட பல நாவல்களை எழுதியபொழுதிலும், அவர் தாழ்த்தப்பட்டவர் களுக்குள் தாழ்த்தப்பட்டவர் என்ற ரீதியில் தாழ்த்தப்பட்டவர்களுக் கிடையே நிலவி வந்த சாதியத்தைக் கருவாக வைத்துக் குறுங் கதைகளோ அல்லது நாவல்களோ எழுதவில்லையே என்பதுதான் எனது ஆதங்கம். இச்சாதியம் இச்சமூகத்தினரிடையே இடம் பெறும் திருமணப் பேச்சுவார்த்தைகளில் மாத்திரம் தலைகாட்டி நிற்கிறது. என்னைப்போன்றவர்கள் இதனைப்பற்றி கவலையும் வெட்கமும் அடைந்தபோதிலும், இம்மாதிரியான கைங்கரியங்களில் நாம் ஈடுபடுவதில்லை. என் குடும்பத்தில் இதற்கான சூழ்நிலை அடையாததையிட்டு மனவருத்தம் அடைகின்றேன்.

இருந்தாலும் 1959ஆம் ஆண்டு என்.கே. ரகுநாதன் கே. டானியலின் சகோதரியை மணஞ்செய்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது, யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடந்த அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 16வது மகாநாட்டில், அவர்களை நானும் எனது மனைவியும் மாலையிட்டுக் கௌரவித்ததுமல்லாமல், அவர்கள் கொழும்புக்குத் திரும்பும் வரையில் எமது விருந்தினர்களாக உபசரித்தோம் என்பதைக்கூறுவதில் பெருமைப்படுகின்றேன். மணமக்களின் சொந்தக்காரர் எவருமே அவர்களை விருந்தினராக உபசரிக்க முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. புலம்பெயர்ந்த நிலையிலும் இவ்விதமான கலப்புத்திருமணங்கள் இடம்பெற சமூகம் தயாராக இல்லாத நிலையில்தான் உள்ளது. அந்த அளவிற்கு எம்மக்கள் இடையே சாதியம் நிலை கொண்டு விட்டது. எம் சமூக இளைஞர்கள் இங்கே பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சாதிய உணர்வின்றி ஒன்றாகச் சேர்ந்து படிக்கிறார்கள். ஆனால் திருமணப்பேச்சுக்கள் வரும்போது சாதியம் குறுக்கிட்டு விலகிப்போகின்றார்கள். அத்துடன் இங்கே வெளிவரும் சில செய்திவிளம்பர ஏடுகள் மணமகன், மணமகள் தேவை எனும் விளம்பரங்களில் சாதிப்பெயர்களைக் குறிப்பிட்டு விளம்பரப்படுத்தும் அளவிற்கு இங்கேயும் சாதியநோய் பரவி வருகின்றது.

இவற்றையெல்லாம் புட்டுக்காட்டும் வகையில், இவற்றைக் கருவாக வைத்து குறுங்கதைகளோ, நெடுங்கதைகளோ, நாவல்களோ புனைய அமரர் கே.டானியல் போன்ற எழுத்தாளர்கள் இங்கு இல்லையே என்று ஆதங்கப்படுகின்றேன். சாதியத்தைச் சாடும் எழுத்தாளர்கள் துணிந்து எழுத முன்வரவேண்டும் என்பதே எனது அவா.

**- செல்வா இலங்கையன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய நுழைவுப்போராட்டங்களும் சாதியமும்

ஊர்களில் திரிகின்ற நாய்களும் தடையின்றி
உள்வந்து போகுதையே - கோவிலின்
உள்வந்து போகுதையே - நாங்கள்
உங்களைப் போலுள்ள மனிதர்களாச்சே
உள்வந்தால் என்சொல்லையே - கோவிலின்
உள்வந்தால் என்சொல்லையே

என்னும் பாடல் சுவாமி செம்மலை அண்ணலார் அவர்களால் 1934 ஆம் ஆண்டு மக்கள் அனைவரும் கோயிலுக்குள் செல்ல அநுமதிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கத்தை ஆதிதிராவிட இனத்தினரின் சார்பாக ஆங்கில ஆட்சியாளர்களுக்கு மேற்கொண்ட முறையீட்டிலிருந்து அறிய முடிகிறது.

சாதி இரண்டொழிய வேறுஇல்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் -மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி

என்று ஔவையார் பாடி இருக்கின்றார் என்றால் அவர் வாழ்ந்த சமுதாயத்தில் சாதியத்தின் கொடுமை நாற்றமெடுத்து இருந்துள்ளது என்பது புலனாகின்றது.

சாதியத்தின் தாக்கம் இன்று நேற்றல்ல பலகாலமாக ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது என்பதனை அறியமுடிகின்றது. இந்திய உப கண்டத்தில் சாதி அமைப்பு முறை வேத, உபநிடத காலத்திலிருந்தே அறியமுடிகின்றது. இந்திய உப கண்டத்தில் சாதி அமைப்பு முறை வேத, உபநிடத காலத்திலிருந்தே மிக இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது திணிக்கப்பட்டுள்ளது என்பது வேத உபநிடதங்கள் வாயிலாகவே அறியமுடிகின்றது. வர்ணாச்சாரிய முறையின் தோற்றப்பாடு ஆரியரின் நுழைவோடுதான் இந்திய எல்லைக்குள் நுழைந்து கொண்டுள்ளது எனலாம்.

வர்ணாச்சாரிய முறை பார்ப்பனர்களால் திணிக்கப்பட்டது. கோயில்கள் அமைக்கப்பட்டு அதனைச் சுற்றி குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டன. கோயில்களை அண்டிய முதல் வீதி அக்ரகாரம் எனப்பட்டது. அது பார்ப்பனியர் வாழும் தெருவாகவும் தாழ்த்தப்பட்ட சாதியினர் செல்லமுடியாத இடமாகவும் காணப்பட்டது. இதனை அண்டிச் சத்திரியர். அதனைத் தொடர்ந்து சூத்திரர். இந்தச் சூத்திரர்களுக்குள்ளும் சாதிகள். தென் ஆபிரிக்காவில் காணப்பட்ட வெள்ளைக் குடியிருப்புக்களுக்குள் கறுப்பு இனத்தினர் செல்ல முடியாது தடை விதிக்கப்பட்டிருந்தது போன்ற நிலைமையை நோக்கலாம். வெள்ளையரும் இத்தகைய பிரித்து வைக்கும் படிப்பினையை இந்திய உபகண்டத்திலிருந்துதான் கற்றிருப்பார்கள் எனத்தோன்றுகின்றது.

இலங்கையில் சாதி அமைப்பு முறை சமுதாய அமைப்போடு பின்னிப்பிணைந்த அம்சமாகக் காணப்பட்டு வந்துள்ளதோடு தொடர்ந்தும் நீடித்து நிலைத்து எம்மோடு வாழ்ந்து வருகின்றது. இந்திய சமூக அமைப்பில் காணப்படுகின்ற அளவிற்கு பார்ப்பனரது ஆதிக்கம் இலங்கையில் ஆழமாக வேரூண்டாமைக்குக் காரணம் கடலால் பிரிக்கப்பட்டுள்ள இட அமைவும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அவர்களின் குடியேற்றம் மிகக் குறைந்ததாகவும் கோயில்களை அண்டி ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள் மட்டும்தான் இருந்ததாலும் ஆதிக்கம் செலுத்தும் நிலைமை இல்லாதிருந்துள்ளது. எனினும் தம்மை உயர்சாதி எனக்காட்ட முற்பட்ட நில உடமையாளர்களின் கெடுபிடிகள் யாழ் மாவட்டத்தில் இலங்கையின் எந்தப்பாகத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமாகவே இருந்திருந்திருக்கின்றது. கொத்தடிமைகளாக, கூலிகளாக வைத்து வேலை மேற்கொள்ளும் நிலைமைதான் காணப்பட்டுள்ளது.

இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி சாதியமைப்பில் மக்கள் செய்யும் தொழில்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பரம்பரை பரம்பரையாக செய்து வந்த தொழில்கள் அவர்களைச் சாதியமைப்பைத் தோற்றுவிக்கக் காரணிகளாயிருந்துள்ளன என்பது ஆய்வாளர்களின் முடிபு.

சாதியத்தின் கொடுமைகளில் இறைவழிபாட்டுக்குக் கூட பிரித்து வைக்கும் பான்மை காணப்படுகின்றது. பறையர் குலத்தில் உதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தன் அவர்களுக்கு இறையருள் கிடைத்தும் அவர் தான் அடிமைப்பட்டிருந்த பிராமணரால் சிதம்பர தரிசனத்திற்குச் செல்வதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டார். தனது வயலில் விளைந்தவற்றை எல்லாம் அறுவடை செய்துவிட்டுப் போகும் படி, நந்தனாரின் எஜமானர் கட்டளை பிறப்பித்துத் தடைபோட்டுள்ளார். இறையருளால் அது நிறைவுபெற்றதன் பின்னர் அவர் செல்ல அநுமதிக்கப்பட்டார். ஆனால் தில்லை வாழ் அந்தணர்கள் இவரைச் சாதியத்தின் பெயரால் வழமையான வாசல்வழியே செல்வதைத் தடுத்து விட்டனர். இறை அருள் கிடைத்தென்ன பிராமணிய அருள் கிடைக்கவேண்டி இருந்தது நந்தனாருக்கு. தீக்குளித்து தனது சாதியத் துடக்கைத் தீய்த்துக்கொண்டு அதுவும் வடக்கு வாசல் வழியே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார் நந்தனார் என்றால் சாதியத்தை இறைவனுக்கும் மேலாக இருந்து நடைமுறைப் படுத்தியவர்கள், இறைவனின் கட்டளைக்கே இடங்கொடுக்க மறுத்து வந்தவர்கள் தம்மை உயர்சாதி எனக் கூறிக்கொள்ளும் இந்தப் பார்ப்பனர்கள்தான். ஈழத்து கோயில் நுழைவுப்போராட்டங்களிலும் இந்த நிலைமைகளைப் பார்ப்பனருக்கு போதியளவு பலம் இல்லாததால் உதவிக்கு அழைக்கப்பட்டவர்கள் பார்ப்பனியருக்குக் குறைந்தசாதியினர் எனப்படும் இந்தத் தவறுகளை உணர்ந்துதான் கௌதம புத்தர் அவர்கள் பார்பனர்களுக்கு எதிராக யுத்தத்தைத் தொடர்ந்தார். சமுதாயத்தை ஆட்சி செய்யும் அரச மரபினரிலும் பார்க்க உயர்ந்தவர்களாக, இறையவனின் வாரிசுகளாகத் தங்களை உயர்த்திக் கொண்டதன் விளைவே அதன் தோற்றப்பாடு. இன்று இந்தியாவில் தலித் இன மக்கள் மதம் மாற்றப்படும் அபாயம் உண்டென இந்துக்கள் ஓலம் பாடுகின்றார்கள். இறை வணக்கத்திற்கே வேறுபாடு காட்டிப் புறந்தள்ளும் அவர்கள் ஆலயங்கள் உள்ளே அனுமதிக்கும் இடங்களில் வணங்கச் செல்வதில் என்ன தவறு உண்டு. புறந்தள்ளும் மதத்தை விட்டு வா என அழைக்கும் மதத்தை நாடி பாமர மக்கள் செல்வதற்கு யார் வழி வகுக்கின்றார்கள். எல்லோருக்கும் இறைவன் பொதுவானவன் என்றால் எல்லோருக்கும் வணங்கும் உரிமை உண்டென்றால் சாதியின் பெயரால் ஆலயத்தினுக்குள் சென்று வழிபடும் உரிமையைத் தடை செய்தல் எந்த வகையிலும் நியாயமானது என்று கூறமுற்படுவது தவறானதே.

இந்திய கோயில் நுழைவுப் போராட்டங்களில் அம்பேத்கார், குத்தூசி குருசாமி, இ.வே.ரா. பெரியார், ஓமாந்தூர் ரெட்டியார், அவிநாசிலிங்கம், வைத்தியநாதையர் போன்றோர் முன்நின்று உழைத்தது போன்று யாழ்ப்பாண மண்ணில் கோயில் நுளைவுப் போராட்டங்களில் தோழர்கள் டானியல், நாகரத்தினம், செனட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியம், சண்முகதாசன் போன்றவர்கள் முன்னின்று உழைத்துள்ளனர். 1929இல் குத்தூசி குருசாமி அவர்களால் கோயில் நுழைவு இயக்கம் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுப் பெரியார் போன்றோரின் ஒத்துழைப்பையும் பெற்று இதர கோயில்களுக்கும் பரவி மக்களை விழித்தெழ வைத்தது. அவ்விதமே யாழ்ப்பாணத்திலும் பண்டித்தலைச்சி அம்மன் ஆலயம் போன்றவற்றிற்கும் ஏன் கத்தோலிக்க ஆலயங்களுக்கும் வியாபித்ததை அவதானிக்கலாம். இதில் மிகக் கடினமாக உழைத்தவர்களில் தோழர் டானியல் அவர்கள் முன்நிற்கின்றார். இந்தியாவில் பிராமணர்களும், பட்டர்களும் முக்கியமாக கோயில் நுழைவை எதிர்த்து நின்றார்கள். யாழ்ப்பாணத்தில் போதியளவு பிராமணர்கள் இன்மையால் கோயில்களை யாரும் உட்புகாமல் பூட்டி வைக்கவோ அன்றி பாதுகாக்கவோ வேளாளர்களும் அவர்களோடு இணைந்த உயர்சாதியைச் சேர்ந்தோரும் முன்னின்றனர். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக உயர்சாதியினரும் கோயில் நுளைவுப் போராட்டங்களில் ஆதரவு தந்ததோடு மட்டுமன்றி பங்காற்றியும் வந்துள்ளனர்.

வர்ணாச்சாரிய முறையினைக் கடுமையாக நடைமுறைப்படுத்தி வந்த வட இந்திய ஆரியர்கள் கோயில்களை எல்லோருக்கும் திறந்து விட, தென் இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கன்னடம் போன்ற இடங்களில் கோயில்களைத் திறந்து விட்டால், தாழ்த்தப்பட்ட சாதியினர் நுழைவதனால் அங்கு தீட்டு ஏற்படும் இதனைத் தெய்வங்கள் ஏற்றுக் கொள்ளா, எனவே அங்குள்ள தெய்வங்கள் வெளியே சென்றுவிடும் எனப் பிரசாரம் செய்து அதனைத் தடுக்க அல்லது எதிர்க்க முற்பட்டனர். இந்த அடிப்படையில் தான் தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி இடம் கொடான் என்பது போன்று நந்தனாரின் கதையும் இடம்பெற்றது. இறையருள் கிடைத்தவனையே தடை செய்தது பிராமணீயம். ஆனால் அந்தப் பிராமணீயம் மேற்கத்தேய நாடுகளில் அமைக்கப்பட்ட கோயில்களில் சாதியத்தைக் காட்டிப் பாகுபாடுகாட்டி கோயிலுக்கு வெளியே யாரையும் ஒதுக்கி வைப்பதாக இல்லை. மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படும் கோயில்களில் இந்திய பார்ப்பனர்களினால் கருவறைகளில் தெய்வங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள. தாழ்ந்த அல்லது தீட்டு உள்ளவர்கள் எனப் படுவோர் கொண்டுவரும் பணத்தில் அல்லது அவர்களின் அர்ச்சனைப் பொருட்களால் அங்குள்ள தெய்வங்கள் ஓடி ஒழிந்து கொள்ள மாட்டாவா என்று எள்ளி நகையாடத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செய்யும் தொழிலே தெய்வம்', என்றும் 'தன்தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்' என்றும் கூறி சாதியத்தைப் பாதுகாக்க முனைகின்றனர். செய்தொழிலைப் போற்றவேண்டும் ஆனால் இன்ன சாதிக்கு இன்னதொழில் தான் என்று வரையறுத்தல் நியாயமானதா அல்லது தார்மீகமானதா? என்பதனைச் சிந்திக்கவேண்டும். சாதியத் தின்பெயரால் செய்யும் தொழிலை ஒருவன் கைவிட்டு வேற்றுத் தொழிலைச் செய்வானாயின் அவன் அந்தச் சாதியில் நின்று நீங்கியவன் என்று பொருள் கொள்வதாயின் கோயில்களில் பூசைத் தொழில் செய்யாத ஏனைய பிராமணர்களைப் பிராமணர் என்று கொள்ளவும் கூடாதல்லவா. அவர்களைச் சாதியத்தில் எங்கே வைப்பது என்னும் ஒரு பிரச்சினையும் எழுகின்றது.

வெளியே நிற்பவர்கள் உள்ளே என்ன இருக்கின்றது என்பதனைப் பார்க்க விளைவதும். உள்ளே நிற்பவர்கள் வெளியே என்ன நடக்கின்றது என்பதனைப் பார்க்க விளைவதும் மனித இயல்பே. இதன் வழி ஆலயப் பிரவேசம் என்பது தடுக்கப்பட்டவர்களின் மீறலாக மாற்றம் அடைகின்றமை தவிர்க்க முடியாததே. இதற்கு ஆதரவு தருபவர்கள் நாத்திகம் பேசுபவர்களாக இருந்தால் என்ன ஆத்திகம் பேசுபவர்களாக இருந்தால் என்ன. எல்லோருக்கும் கோயில்களைத் திறந்துவிடுவதனால் எதுவுமே நடந்து விடப்போவதில்லை. மனிதர்களை மனிதர்களாக மதிக்காத மதங்கள் இருந்தென்னெ இல்லாதொழிந்தென்ன என்றுதான் எண்ணத்தோன்றும்.

கண்ணப்பன், விலங்குகளை வேட்டையாடி உண்ணும் இழிகுலத்தோனாக இருந்தும் நாயனாராக உயர்த்தியது தமிழ் வேதம். கடவுளைத் தொட்டு வழிபடும் உரிமை அவனிடம் இருந்தது. வேட்டையாடிய இறைச்சியுடன் சென்ற அவனைக் கண்டு இறைவன் ஒழித்து ஓடவில்லை. மார்க்கண்டேயனை காவுகொள்ள வந்த இயமதர்மனை உதைத்துப் பாதுகாப்பு அளித்தமைபோன்று அவனுடன் உறவுதான் கொண்டாடினார் என்கிறது கதை என்றால் தலித்துக்களை உள்ளே விட்டால் கடவுளர் ஒழிந்து ஓடிவிடுவார்கள் என்று கொள்வதில் என்ன உண்மை இருக்கின்றது.

மகாத்மா காந்திகூட இந்த வியடத்தில் பின்னுக்கு நின்றிருக்கின்றார் என்பதனை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சாடுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம். "தலித்துக்களுக்கு அரசியல் சலுகைகள் அளிப்பதை எதிர்க்கும் காந்தி இஸ்லாமியருக்கு பணமெழுதாக் காசோலையை வழங்கத் தயாராக இருக்கின்றார். இந்து அதிகார வர்க்கத்தின் போக்கு விசித்திரமாக இஸ்லாமியருடன் அதிகாரத்தைக் கையளிக்க விரும்பும் அளவிற்கு தங்கள் சூத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்ட சகோதரர்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள விரும்பவிலலை என்பதாக உள்ளது" என்று பாகிஸ்தான் பிரிவினை விவாதத்தின் போது அவர் கூறியகருத்துக்கள் கருத்தாழம் மிக்கவை. காந்தி அவர்கள் 'கரிசன்' பத்திரிகையை ஆரம்பித்தபோது அந்த மலருக்கு செய்தி அனுப்பும் படி கேட்டுக்கொண்ட போது அம்பேத்கார் "சாதியத்தின் விளைவே தீண்டத்தகாதோர் எனும் பிரிவு. இனி வரும் கடுமையான காலகட்டத்தில் இந்து சமுதாயம் உயிர்வாழ இக்கொடுமை இந்து தருமத்திலிருந்து முழுமையாக அகற்றப்படவேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தமையை அவதானிக்கலாம்.

தீண்டாமை பற்றி சுவாமி விவேகானந்தர் அவர்கள் குறிப்பிடுகையில் "எத்தகைய ஒரு கீழ்த்தர வாழ்க்கையை நாம் வாழ்கிறோம். ஒரு பாங்கி (தலித்) நம்மிடம் வருகையில் ஏதோ பிளேக்நோய் கண்டதுபோல அவரை ஒதுக்குகிறோம். ஆனால் ஒரு பாதிரி சிலகோப்பை தண்ணீரை அவர்தலையில் விட்டுவிட்டால் நமது வைதீகர் அவரை தன் உள்ளறைக்கே அழைத்துச் சென்றுவிடுவார்... 'நம் மதமே என்னைத் தொடாதே' என்பதில்தான உள்ளது ... இந்தத் திருக்கூத்துக்கள் மேலும் தொடர்ந்தால் நாம் அழிந்து படுவோம்"

மனிதனை மனிதனாக மதிக்கவேண்டும் என்ற கொள்கையை அதன் தாக்கத்திற்கு உட்பட்டு ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களால்த்தான் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்பது தோழர் டானியலின் வாழ்வு பாடம் புகட்டி நிற்கின்றது. மிகத் தாழ்ந்த நிலையில், தாழ்த்தப்பட்ட நிலையில் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்து டானியல் அவர்கள். தனது குடும்பத்தின் பொறுப்புக்களைத் தலையில் சுமந்து கொண்டு உழைத்து சமுதாய சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்துக் கொண்டு முன்னேறி வந்தவர் மட்டுமன்றித் தானே நேரில் போராட்டங்களில் கலந்தும், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வோடு ஒன்றியும் தான் பெற்ற அநுபவங்களைத் திரட்டி கதைகளாகவும், நாடகங்களாகவும் வடித்துத் தந்துள்ளார் என்றால் அவரது உளத்தில் படிந்து விட்ட நீங்காத வடுக்களும் அதற்குக் காரணிகளாகின்றன.

சாதித்துவத் தாக்கத்திற்கு உட்பட்டு அதன்பால் ஈடுபாடுகொண்டு தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தவர் தோழர் டானியல். இந்த ஈடுபாடு யாழ்ப்பாணத்து சமூகத்தில் உள்ள உயர்சாதியினருக்குச் சவாலாகவும், மனத்தில் எரிச்சலையும் ஊட்டுவனவாகவும் அமைந்திருந்தன. இதன் காரணமாக 1971ம் ஆண்டு இடம் பெற்ற ஜே.வி.பி.கிளர்ச்சியின் போது தோழர் டானியல் அவர்கள் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டமைக்கு பழிவாங்கலே காரணமாக அமைந்திருந்தது. உண்மையில் ஜே.வி.பி யினரின் அரசியற்கோட்பாடுகளோடு ஒத்துப்போகாத ஒருவரை அதன் ஆதரவாளர் எனக்கூறிக் கைது செய்தவர்கள் தமிழ் பொலீஸ் அதிகாரிகளே. இவை எல்லாம் கோயில் நுழைவுப் போராட்டத்தோடு தொடர்புடையனவாக அமைந்து விட்டன.

**ஆதியும் இல்லை அந்தமும் இல்லை**
**நீதியும் இல்லை நெறியும் இல்லை**
**சாதியும் இல்லைச் சமயமும் இல்லை**
**ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே.**

என்பது உன்னையே நீ அறிவாய் என்னும் தத்துவ ஞானி சோக்கிறட்டீஸின் உண்மைத்துவத்தை தெளியவைக்கும் இந்து தருமத்தின் தத்துவமாகும். தன்னைத் தானே அறிந்து கொண்டால் மற்றவர்களில் வேற்றுமையையோ, பேதத்தையோ, ஏற்றத் தாழ்வையோ காணமுடியாது என்பது இதன் கருதுகோளாகும். சாதியத்தின் பெயரால் யாரையும் தரம் பிரித்துவைக்கும் படி எந்த இறைவனும் சொல்லவில்லை என்பதுதான் உண்மைப் பொருள் என்று கொண்டால் கோயில் நுழைவுப்போராட்ங்களே இடம்பெற்றிருக்க வேண்டி வந்திருக்காது. அன்றியும் கோயில் நுழைவுப் போராட்டங்களைத் தடுக்கும் தேவையும் ஏற்பட்டிருக்க நியாயமும் இருந்திருக்காது. ஆண்டான் அடிமைச் சமுதாய அமைப்பு சுரண்டிலின் அடிப்படை. மனிதனை மனிதன் சுரண்டிவாழும் சமுதாயத்தின் வடிவமே சாதி அமைப்பின் தோற்றம் எனத் துணியலாம். யார் யார் எந்தத் தொழில் செய்ய வேண்டும் என்ற பகுப்பு மிக இலகுவாக நிலவுடமைச் சமுதாயத்தைக் கட்டிக்காக்க ஏற்பாடானதொன்றே. சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்குப் பொருளாதாரம் தான் அடிப்படை என்பதனை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அனைவருக்கும் பொதுவானதாக இருந்தால் யாரும் யாருக்கும் அடிப்பட்டு இருக்கவேண்டிய நியதி இருந்திருக்காது. ஏனவே பொருளுடமையின் தோற்றப்பாட்டிற்கு இத்தகய தொழிற்பகுப்பு முறைகள் அவசியமாகின்றன. இந்த அடிப்படையே காலப்போக்கில் சாதியத்திற்கு வித்திட்டதெனலாம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் தத்துவம் எமக்கு நாம் எல்லோரும் பிறப்பில் ஒருவாறே பிறக்கின்றோம். பொன், பொருள், நிலம், வீடு, தோட்டங்களை எவரும் பிறக்கும் போது கொண்டு வருவதுமில்லை சாகும்போது கொண்டுபோவதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை நாட்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி அந்த நாட்டின் சாதியத்தை அகற்றியதேயன்றி அங்கு நிலைத்துவிட்ட முதலாளித்தவ, தொழிலாளர் வர்க்கத்தைத் தோற்றுவிக்கக் காரணமாகிவிட்டது. உடையவர் பரம்பரை ஒன்றை ஏற்படுத்த அச்சமுதாயத்தில் காணப்படும் சுரண்டலே காலாகிவிட்டது.

சாதியமும், அதன் கோரப்பற்களும் களையப்படுவதற்கு பொருளாதார அமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட்டு சமுதாயத்தில் அனைவருக்கும் சமானமானதாக்கப்படும் போதுதான் அதனை அகற்றமுடியும். பொருளாதார சமத்துவத்திற்கு கால்மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோசேதுங் போன்றோரது வழிநடத்தல்கள் தீர்வாக அமையும் என்பதனை நாம் கருத்தூன்றிக் கவனித்தல் டானியல் அவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறாக அமையும்.

ஜேமன் தேசத்தில் வாழமுடியாத நிலையில் இடம்பெயர்ந்த கால்மாக்ஸ் அவர்களை அரவணைத்து அவரை தத்துவம் படைக்க உதவியவர் பெரும் ஆலை உடமையாளரான ஏங்கல்ஸ் அவர்கள். மக்களின் நண்பனான அவர் மக்களின் இன்பதுன்பங்களை நன்கு அறிந்து அவர்களின் துயரத்திற்கு விடிவுகாணும் வழியில் உழைக்க முன்னின்றவர் ஏங்கல்ஸ். கால்மாக்ஸின் கொள்கைகளை நன்கு கற்று உணர்ந்து அவரைத் தனது நண்பனாக்கி அவருக்க உதவிகள் செய்தவர். இவ்வித நற்பண்புகளைக் கொண்டவர் எமது மண் தந்த மைந்தன் டானியல் என்றால் தவறாகாது. டானியல் அவர்களின் சேவை காலத்தால் மறக்கப்படமுடியாதது. உயர்ந்த பண்பும், ஏழைகளை நேசிக்கும் பண்பும் அவரிடம் குடிகொண்டுள்ள பண்புகள். தான் பட்ட வேதனைகள், துயரங்களின் வாயிலாக அத்தகைய துன்பங்கள், துயரங்கள், அவமானங்களைச் சமுதாயத்தில் யாரும் பெறக்கூடாது என்னும் நோக்கோடு உழைத்தவர் டானியல் அவர்கள். அவரின் நாமம் என்றும் மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கும் என்பதில் தவறில்லை.

**த. சிவபாலு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறையும் தமிழும்

நவரத்தினசிங்கம் இன்றிரவு இறந்துவிட்டார். ஊரிலுள்ளவர்களில் பலர் இச்செய்தியை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நெடுநாளாக எதிர் பார்த்தது ஒன்று நடந்து விட்டது அவ்வளவுதான். மனைவியும் மூன்று பெண்பிள்ளைகளும் அழுது புலம்பும் சத்தம் மாத்திரம் அந்த இரவில் கேட்டுக் கொள்கின்றது. பாவம் அந்த மனுஷன் தன் இளமைக் காலத்தில் இரத்த வெறி சிங்கள ஆட்சியில் தமிழரின் விடிவுக்காக பறை தூக்கி அடித்து துக்கம் கொண்டாடியதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் செய்ய வில்லை. இதை சாட்டாக வைத்து அண்ணன் அக்காமார், தங்கை என்றும், உறவினர்கள் என்று பலரும் அவனை ஒதுக்கிக் கொண்டனர். அவன் அவர்களைத் தேடிப் போனாலும் அவர்களால் அவன் ஒதுக்கப்பட்டான். ஆரம்பத்தில் அவன் இவற்றை பெரிது படுத்தாவிட்டாலும், நல்லது கெட்டதென்று வாழ்க்கையில் வரும்போது வேண்டுமென்றே ஓரம் கட்டப்படுவது ஆரம்பத்தில் மனதிலே பெரிதுபடுத்தப்படாமலிருந்தாலும், அதை நாளடைவில் யோசித்து, யோசித்து மனநோயாளியாகி விட்டார்.

தமிழ் வைத்தியம், ஆங்கில வைத்தியம் என்று கடந்த மூன்று வருடங்களாக செய்து பார்த்தும் கூடியதே ஒழிய குறைந்த பாடில்லை. இப்போது மூளை பழுதாகி பைத்தியக்காரராகிவிட்டார். இப்போது இவனது அட்டகாசம் தாங்க முடிவதில்லை. சத்தம் போட்டு சிரிப்பது, அணிந்திருக்கும் ஆடையைப் பற்களால் கடித்து குதறுவதும் ஊர் எடுபடக் குளறுவதும் அன்றாட வழக்கமாகி விட்டது. சில சமயங்களில் அகோரம் தாங்கமுடியாமல் போய்விட்டால் பக்கத்து வீட்டுக்காரர்கள் சிலர் இரண்டு மூன்று அடிபோட்டு சங்கிலியால் கட்டி மரத்தோடு கட்டிவிட்டு போய் விடுவார்கள். பார்ப்பதற்கு பாவம்தான் என்ன செய்வது? அவனின் நிலமையோ அப்படி. அஞ்சாத சிங்கம் இப்போது அடங்கிப் போய்விட்டது. உற்றார் உறவினர்கள் நண்பர்கள், அரசியல் தொண்டர்கள் என்று இப்போது யாரும் அவர்கள் பக்கம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சங்கிலி கட்டு அவிழ்ந்த நிலையில் அந்த வாங்கில் படுத்தப் பட்டிருந்தது அவனது உடல். மனைவி உடலைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருக்கிறாள். சிலர் இறந்த செய்தி அறிந்து வந்துகொண்டிருக்கிறார்கள். மூத்தவள் அந்த கிராமத்து பள்ளியில் கணித ரீச்சர் வயது முப்பத்தைந்தை தாண்டி விட்டது. நடுவில் ஆசுப்பத்திரியில் நேர்ஸ் அவளுக்கும் இப்போது முப்பத்தி மூன்று வயது. கடைசியும் ஒரு ரீச்சர் அவளுக்கும் இருபத்தியெட்டைத் தாண்டிவிட்டது. இவர்கள் மூவரும் இன்னும் திருமணம் செய்யாமல் கன்னிகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பெண்பிள்ளை என்றாலே நெஞ்சிடி மூன்று பெண்பிள்ளைகளென்றால் கேட்கவும் வேண்டுமா..?

கடந்த பல வருடங்களாக மகளுக்கு திருமணம் கேட்டு அறிந்த தெரிந்த இடங்களுக்கு படியேறி வந்தான் நவரத்தினசிங்கம். மாப்பிள்ளை கேட்டுப் போன இடமெல்லாம் இவரோ, இந்த பறைஅடிச்ச குடும்பத்துக்கோ? நாங்களோ..? பெண் எடுக்கவோ...? இச் சொல்லைத்தவிர வேறு ஒரு நல்ல வார்த்தைகள் அவனின் காதுகளில் விழவில்லை. நாட்கள் செல்லச் செல்ல தன்னைத்தானே சிந்திக்கத் தொடங்கினான். தன்னை இவர்கள் ஏன் இழிவுபடுத்த வேண்டும். என்ன தவறு செய்தேன்? அவனுக்கோ ஒருவரையும் புரிந்து கொள்ளும் நிலையில் மனதில்லை. சிந்தித்து சிந்தித்துக் கொண்டே சிரித்தான். யாரை...? இந்த இழி தமிழர்களை. அவன் அழவில்லை, சிரித்தான். சிரித்தான், சிரித்துக் கொண்டேயிருந்தான். அவனால் சிரிப்பதை நிறுத்த முடியவில்லை. சிரித்துக் கொண்டேயிருந்தான். உலகத்தை மறந்தான். மறந்தே விட்டான். ஆம் இப்போது அவன் ஒரு மன நோயாளி. மகளின் திருமணம் நிறைவேறாமை இப்போது அவனின் வாழ்க்கையில் மரணத்தை ஏற்படுத்தி விட்டது.

அப்போது தமிழ் அரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்ட காலம். காங்கிரஸ் கட்சி அப்போது சிங்கள அரசின் ஒரு அங்கம். அரசாங்க மந்திரி யாழ்ப்பாணம் வருவதாக அறிந்த காங்கிரஸ் கட்சிக்கோ கொண்டாட்டம். தமிழரசுக் கட்சிக்கு திண்டாட்டம். மந்திரியையும் பரிவாரங்களையும் மேள தாளத்துடன் பலாலியிலிருந்து அழைத்து வருவதாகமுடிவு. தமிழரசுக் கட்சியோ அந்நாளை நிராகரித்து செத்த நாளாக அனுஷ்டிப்பதாக முடிவு. (அவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்ப்பது சகயம்தான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நண்பகல் மந்திரியை பலாலியில் வரவேற்க காங்கிரஸ் கட்சி பலாலிக்கு சென்று விட்டது. அதே வேளை செத்த நாளாக கொண்டாட முடிவெடுத்த தமிழரசுக் கட்சி முன்னணி இளைஞரோ நவரத்தினசிங்கம். செத்த வீடாக கொண்டாடுவதாயின் பறை அடிக்க வேண்டும். விரைந்தான் சிங்கம் திட்டிக்கு. 'டேய் சின்னான்! டேய் சுப்பன்' குரல் கேட்டு இருவரும் அந்த கொட்டிலுக்குள்ளால் வெளியே வந்தபோது 'மத்தியானம் பலாலிக்கு சிங்கள மந்திரி வாறான்' அவன் றோட்டாலே காரிலே வரும்போது நாங்க செத்தவீடு மாதிரி துக்கம் கொண்டாட வேணும்! எங்களின்ரை ஊர்வலத்திலே நீங்க ரெண்டு பேரும் பறை அடிக்க வேணும். வாருங்கோ என்ரை காரிலே...'

ஓமாக்கும்...! அவர்கள் பறையுடன் புறப்படத் தயாரானவேளை இன்னொரு காரில் தமிழ் காங்கிரஸ் கூட்டம் வந்து இறங்கியது. நவரத்தினசிங்கம் பறைத்திட்டிக்கு வந்த செய்தி இவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். டேய் நீங்கள் ஆரும் ஊர்வலத்துக்கு போய் பறை அடிச்சியளோ எளியவங்களே இருக்கிற வீடு வாசல் எல்லாம் கொழுத்தி சாம்பலாக்கி போடுவம். எங்களைத் தெரியும் தானே? எச்சரித்து விட்டு சென்று விட்டார்கள். இவர்களுக்கோ இரண்டு பக்கத்தாலும் அடி. இருவரும் பயந்து கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் கொட்டிலுக்கு முன்பு நின்ற நிழல் மரவள்ளி மரத்தின் கீழ் பறைகளை வைத்துவிட்டு இருந்து விட்டனர். இரண்டு கட்சிக் காரர்களும் வருவதும், போவதும், நிற்பதும், பின் போவதுமாகவே இருந்தனர்.

மந்திரியோ வரும் நேரமாகி விட்டது பறை அடிப்பவர்கள் வரவே இல்லை. தனது சொல்லை கேட்கவில்லை என்ற ஆதங்கம் மனதில் எழவே மீண்டும் இரண்டு நண்பர்களுடன் கோபத்தோடு திட்டிக்கு விரைந்தான். கோபமும் அடாவடித்தனங்களும் அவனோடு ஒட்டிப் பிறந்தவை. அடி தடி என்றால் அவனுக்கு கரும்பு மாதிரி. மேல்மட்டத்தில் செல்வாக்கு இருப்பதால் கீழ் மட்டத்திலுள்ள குடிமக்களை அடிக்கடி தட்டிப்பார்பதுமுண்டு. திட்டிக்கு விரைந்து வந்த சிங்கம் அங்கே சின்னானும், வல்லியும், பறையுடன் நிறபதைக் கண்டதும் மேலும் கோவம் பீறிட்டு வந்தது. 'என்னடா எளிய சக்கிலியப் பயலுகளே! பறை அடிக்க போறியளோ!' அல்லது நான் உங்களுக்கு அடிக்கவோ..?

சொல்லுங்கோவனடா!...? எளிய பயலுகளே! 'ஐயா ! எங்களை கோவியாதையுங்கோ' உங்களின்ரை ஊர்வலத்துக்கு வந்து பறை அடிச்சால் எங்களின்ரை வீடு வாசல் எல்லாம் கொழுத்தி சாம்பலாக்கி விடுவம் எண்டு வெருட்டிப் போட்டு போனவ. நீங்களோ வா, வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டால் நாங்கள் என்ன செய்யிறது 'எங்களுக்கும் எல்லோரும் வேணுமாக்கும்' எங்களை கோவியாதையுங்கோ!... அவன் சொல்லி முடிப்பதற்குள் கோபத்தால் உதடுகள் துடித்தன. கால்கள் நிலத்தில் நிற்க மறுத்தன. 'உங்களுக்கு இப்ப நல்ல திமிரடா. இஞ்சே உள்ள கொஞ்ச கஞ்சிக்கிக்கு வழியில்லாத நாயள் இப்ப சிவப்பு சட்டைக் காரங்களுக்குப் பின்னாலே சுத்திக்கொண்டு திரியுதுகள். அந்த பொறுக்கியளின்ரை வேலைதானடா இது. நீங்கள் வரயில்லை எண்டாப் போலே நான் எடுத்த முடிவை மாத்திப் போடுவன் எண்டு நினையாதையுங்கோ? 'தாடா பறையை பறைப்பயலே' பறையைத் தூக்கி காருக்குள் போட்டுக் கொண்டதும் புழுதி கிளப்பியபடி கார் ஓடி மறைந்தது.

மந்திரி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு விட்டார். தமிழரசுக் கடசியின் அந்த சவ ஊர்வலம் அந்த பெரு வீதியால் வந்து கொண்டிருந்தது. வீதி இரண்டு பக்கங்களும் ஜனங்கள் இரண்டு கட்சிகளின் 'கூத்தை' பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். நவரத்தின சிங்கம் ஊர்வலத்தின் முன்னில் பறையை தன் கழுத்திலே தூக்கிக் கொண்டு பலம் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டு வழிநடத்திக் கொண்டு அந்த கோவில் முகப்பை அடைந்து விட்டார். வந்தவர்களுக்கெல்லாம் பரமதிருப்தி செத்த வீட்டிற்கு நிறைவாக பறை அடித்தவனுக்கு பாராட்டு. 'தன்மானமுள்ள தமிழன்', 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா', மானம் காத்த தமிழ் சிங்கம், சிங்கள சிங்கக் கொடியை எதிர்த்த தமிழ் சிங்கம், சிங்கம் எண்டால் சிங்கம் தாண்டா! வீரப்பேச்சில் உச்சிகுளிர்ந்து போனான். அன்றைய நாள் அவன் ஒரு வீர நாயகன். முழு தமிழ்மக்களின் விடிவுக்காக பறை அடித்ததில் அவனுக்கு பரமதிருப்தி.

நாட்கள் செல்ல, செல்ல பறையுடன் அவனது பெயரையும் இணைத்து சிலர் அழைக்கத் தொடங்கி விட்டனர். அது தெரிந்திருந்தும் திருப்பி கேட்க முடியாதநிலை. உண்மையும் அதுதான் இப்போதுதான் மெல்ல, மெல்ல தன்னைத் தானே உணரத் தொடங்கினான். ஊரில் சிலர் அவனை ஒதுக்கத் தொடங்கிவிட்டனர். நல்லது, கெட்டது வரும்போது சொல்லாமல் வேண்டு மென்றே ஒதுக்கப்பட்டது அவனது மனதை சிறிது, சிறிதாக வாட்டத் தொடங்கியது. இப்போது அவன் முந்தியது போலல்ல, தனிமையில் நடப்பது, கதைப்பது, சிரிப்பது என்று ஒரு புதுவிதமான மாற்றங்கள் அவனில் தெரிந்தது.

மூத்த மகளுக்குத் திருமண வயதை எட்டித் தாண்டிக் கொண்டிருந்தது. மாப்பிள்ளை கேட்டு, சொந்தங்கள், தெரிந்தவர்களின் வீட்டு வாசற்படி ஏறி இறங்கினான் பலன்... ஏமாற்றந்தான். 'பறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிச்சவன் குடும்பத்திலே நாங்கள் பெண் எடுக்கவோ...!' எளிய பறை தூக்கின பயல், பறை அடிக்கிறவன் வீட்டிலே போய் மாப்பிள்ளை கேட்க வேண்டியதுதானே...? முகத்தில் அடித்தாற்போல் பலர் சொல்லிக் கொள்வது அவன் காதில் விழத் தவறவில்லை. இந்த கொடுஞ் சொற்கள் அவனைச் சிந்திக்கச் செய்தது. சொந்தங்களை எண்ணிப் பார்த்தான்! கூட வந்த நண்பர்களை திரும்பிப் பார்த்தான். தன்னை புகழ்ந்த அரசியல் வீச்சாளரைப் பார்த்தான். யாரும் இப்போது அவனருகே இல்லை. தமிழர்களை எண்ணி எண்ணி சிந்தித்து சிந்த்தித்து சிரித்தான். சிரித்தான் சிரித்துக் கொண்டேயிருந்தான். என் குடும்ப வாழ்வுக்காகவா பறை அடித்தேன். இல்லை. முழுத்தமிழனும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தானே நான் என்குலம், கௌரவம், அந்தஸ்து, எல்லாம் விட்டு பறையைத் தூக்கி அடித்தேன். இதற்காகத்தானே நான் ஒதுக்கப்பட்டேன். அதன் விளைவு இன்று வரைக்கும் அவனின் பெண்கள் மூவரும் கல்யாணம் செய்து கொள்ளாமலே கன்னிகளாக வாழவேண்டிய நிற்பந்தம் அவர்களுக்கு.

நவரத்தின சிங்கத்தின் உடல் மயானம் நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தது. வந்தவர்களில் பலர் போகும் வழியில் இடையில் வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். இப்போது கிட்டத் தட்ட இருபதுபேர் வரையில் போய்க் கொண்டிருந்தனர். இவன் ஊரில் யார் யாரை எல்லாம் ஒதுக்கிப் பார்த்தானோ அவர்களில் பலர் அவனது சவத்தின் முன்பு போய்க் கொண்டிருந்தனர்.

**கரு: கே. டானியல் - ஆக்கம்: கே. பி. லிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமில்லை

அப்போது அவர் ஒரு புதிய 'சோம செற்' காரில் டானியலின் 'ஸ்ரார் கராஜ்ஜில் வந்து இறங்கினார். பார்த்தபோது அவர் ஊருக்கு புதிசு. அப்போது நீர் இறைக்கும் யந்திரங்கள் மிகவும் தட்டுப்பாடான காலம். காரிலிருந்து நீர் இறைக்கும் யந்திரம் இறக்கப்பட்டு அதை வைத்து தள்ளுவதற்கு ஒரு வண்டில் செய்து தரும்படி வேண்டிக் கொண்டார். கிட்டத்தட்ட செய்து முடிப்பதற்கு நான்கு மணிநேரம் வேண்டும் என்றார். அவர் வெளிநாட்டிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டார். 'ஐயா யாழ்ப்பாணமோ...''? ஓ...! நான் வட்டுக் கோட்டை. நான் முப்பது வருஷத்துக்கு மேலே சிங்கப்பூரிலே இருந்தனான். இப்பதான் ஊருக்கு வந்திருக்கிறன். எப்படி எல்லாம் சிங்கப்பூர்...? சிங்கப்பூர் சிங்கப்பூர்தான் தம்பி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் தான். முப்பது வருஷத்துக்கு முன்பு யாழ்ப்பாணம் எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்பவும் இருக்குது. ரெண்டு, மூண்டு கட்டிடங்களும், கடையளும்தான் மற்றய பழக்க வழக்கங்கள் நடைமுறையள் எல்லாம் அப்படித்தான் கிடக்குது. சனங்களிலிலே ஒரு மாற்றமும் இல்லை. அப்படியே எல்லாத்தையும் கட்டிப்பிடிச்சுக் கொண்டு இருக்கினம். அவரும் வந்து இரண்டு மணித்தியாலங்களாகி விட்டன. வேலை செய்யும் பையன் ஒருவனை அழைத்து ஒரு சோடா போத்தலையும் கொடுத்து மூன்று ரீயும், ஆறு வடையும் வாங்கிவர சொன்னார். எல்லாமே வந்தன. பொதுவாக அங்கே இருக்குங் கிளாசில் அவருக்கும் தனக்கும் ரீயை ஊற்றி ஒன்றை அவரிடம் நீட்டினார். அவரின் கை அரையும் குறையுமாக நீண்டாலும் கிளாசை வாங்க மறுத்தன. 'தம்பி உன்னை ஆரெண்டு தெரியாது! என்னெண்டு வாங்கி குடிக்கிறது...?' 'என்னையா இப்பதானே சொன்ன நீங்கள் யாழ்ப்பாணத்தான் என்னமும் மாறவில்லை எண்டு, ஆனா முப்பது வருஷமா சிங்கப்பூரிலிருந்து வாழ்ந்த உங்களிலேயே ஒரு மாற்றமும் ஏன் வரவில்லை ஐயா...?' மௌனமாகி வாங்கின ரீயை குடிப்பதா? விடுவதா? என்ற போராட்டத்தில் இப்போது அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூலமும் காணியும்

காலை ஒன்பது மணியைத் தாண்டிக் கொண்டிருந்தவேளை டானியல் கராஜ்ஜின் முன்பு நண்பர்கள் சிலருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அந்நேரம் ஒருவர் தாண்டித் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும் 'இஞ்சே டானியல் எண்ட பொடியன் ஆர் தம்பிமார்...?' 'நான் தான் ஐயா' 'என்ன ஏதும் அலுவலாவோ...?' 'ஒண்டுமில்லைத் தம்பி எனக்கு இண்டைக்கு எப்படியும் ரெண்டு சூலம் அடிச்சுத்தர வேணும். என்ன சிலவெண்டாலும் பரவாயில்லை. எனக்கு இண்டைக்கு வேணும். 'ஐயா இந்த பட்டடயிலே வேலை செய்யிறவன் ஒரு குடிகாற பரதேசி அவனுக்கு நேரகாலம் எண்டு ஒண்டும் இஞ்சே இல்லை. நினைச்ச நேரம் வருவான், போவான். வாறநேரம் கண்டு கொள்ள வேண்டியதுதான். அவன் இப்ப எங்கை எண்டாலும் குடிச்சுக் கொண்டு நிற்பான். மைத்துணரை பிடித்து அவனைப் போய் எங்கை நிண்டாலும் பிடிச்சுக் கொண்டு வா என்று சைக்கிளையும் கொடுத்து அனுப்பி விட அவனும் ஒரு மணி நேரத்துக்குள் ஆளைப் பிடித்து சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்து விட்டான். 'தம்பி விஷயத்தை ஆருக்கும் சொல்லாதயுங்கோ...? மூண்டடியிலே ஒண்டும், இரண்டடியிலே ஒண்டுமா ரெண்டு சூலம் அடிச்சா போதும். நான் இப்ப அலுவலா ஒருக்கால் நல்லூருக்கு போயிட்டு ரெண்டு, மூண்டு மணிக்கிடையிலே வந்திடுவன் அவர் சென்று விட்டார். பட்டடையில் வேலை நடந்து கொண்டிருந்தது.

போனவர் திரும்பி வந்து விட்டார். 'ஐயா உங்களின்ரை வேலை எல்லாம் முடிஞ்சுது சூலத்தை ஒருக்கா பாருங்கோ...?' அவர் கையிலே எடுத்து நீள அகலம் எல்லாம் பார்த்து விட்டார். மனதுக்குள் திருப்தி. 'எவ்வளவு தம்பி ரெண்டுக்கும்' ஒரு எழுபத்தைந்து ரூபா வரும். பொக்கற்றிலிருந்து நூறு ரூபாவை எடுத்து 'தம்பி உன்ரை காசை எடுத்துப் போட்டு மிச்சத்தை பட்டடை பொடியனட்டை கொடுங்கோ தம்பி'. டானியல் சூலங்களை துடைத்து பேப்பரால் சுற்றி கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு 'ஐயா இந்த சூலங்கள் ஏதும் புதிசா கோயிலுக்கு கொடுக்க போறியளோ அல்லது ஏதும் புதிசா கோயில் கட்டியிருக்கிறயளோ...?' 'தம்பி உனக்கு என்ன விசரோ...? நான் ஏன் கோயிலுக்கு சிலவுசெய்து சூலம் கொடுக்க வேணும்? ஒண்டும் இல்லையடா தம்பி என்ரை வீட்டுக்கு பக்கத்தே ஒரு எட்டுப்பரப்பு காணித்துண்டு கிடக்குது. அதை வாங்க இப்ப பத்து வருஷமா கேட்டுக் கொண்டுதான் இருக்கிறன் கேட்க கேட்க காணி என்ன குட்டியே போடப்போகுது எண்டு சொல்லிச் சொல்லி என்னைப் பேக்காட்டிப் போட்டு இப்ப ஆரோ ஒருத்தன் வெளிநாட்டுக் கப்பலிலே வேலை செய்து போட்டு வந்தவனுக்கு விக்க போறாணெண்டு, அவன்ரை பெண்டில் சொல்லித்தான் எனக்கு தெரியும். என்னைத்தவிர வேறு ஒருத்தைனை வாங்க விடுவனே...? அப்ப நீங்க என்ன செய்ய போறியள் ? 'தம்பி அந்த காணிக்குள்ளே ஒரு அரசமரமும் ஒரு புளிய மரமும் ஏழு, எட்டு பனையும்தான் நிக்குது. இண்டைக்கு இரவுக்குள்ளே அரச மரத்துக்கு கீழே இந்த ரெண்டு சூலத்தையம் இறுக்கப் போறன். பரியாரி சின்னத்தம்பியைக் கொண்டு இரவிலே அரசிலே பேய், பிசாசு குளறு சத்தம் கண்டதாய், கேட்டதா கதை உலாவ விட்டிட்டன். சூலத்தையும் குத்தி ரெண்டு தேசிக்காயையும் குத்தி விட்டால்...? ஆரடா தம்பி இந்த காணியை வாங்கப் போறான்? இவனுக்கு எப்படி இடும்பு கொடுக்கிற தெண்டு இந்த சொத்தி நல்லையனுக்குத்தான்ரா தெரியும். அவர் சூலங்களுடன் புறப்பட்டு விட்டார். டானியலும் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

இரண்டு, மூன்று மாதங்கள் கழிந்து விட்டன. அவர் டானியலைச் சந்திக்க வந்தார். தம்பி நீ அடிச்சுத் தந்த சூலம் நல்ல வேலை செய்து போட்டுதுடா. அவன் பேசின பேச்சைவிட மூவாயிரம் குறைச்சுத்தான் காணிக்கு காசு கொடுத்து எழுதினனான். ஒரு நூறு ரூபா சிலவு, ரெண்டு சூலம், ஒரு இறுக்கு, இப்ப காணி எனக்கு...! தம்பி சில இடத்துக்கு ஆண்டவனை பாவிச்சால்தான் நாங்க நல்லா இருக்க முடியும். அது தான்ரா இந்த சொத்தி நல்லையன்.

கரு. டானியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியாணமும் கட்டாடியாரும்

அந்த அன்பர் ஒரு இலக்கியப் பிரியன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு கொழும்பில் நல்லதொரு அரசாங்க பதவியில் வேலை பார்த்து வருகின்றார். அவருக்கு டானியலின் கதைகள், நாவல்கள் என்றால் நன்கு பிடிக்கும். படிக்கும் காலத்தில் அடிக்கடி டானியலின் கராஜ்சுக்கு சென்று அரசியல், இலக்கியம் என்று மணிக்கணக்கிலிருந்து கதைத்து அறிந்து கொள்ளும் ஆர்வமுடையவர். கொழும்பிலிருந்து ஊர் வரும்போது அவரைச் சந்திக்காமல் திரும்புவதில்லை. அப்படி அவரின் மனதில் பெருமதிப்புக்குரியவராகி விட்டார்.

ஒருநாள் அந்த அன்பர் தனது திருமண அழைப்பிதழைக் கொடுத்து நிச்சயம் தன் திருமணத்திற்கு வரவேண்டும் என்ற அன்புக் கட்டளையையும் சொல்லிவிட்டு சென்று விட்டார். திருமணம் நண்பகல் பன்னிரெண்டு மணிமுதல் மூன்று மணிவரையும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. டானியல் நண்பருடன் அங்கு செல்ல நண்பகல் இரண்டைத் தாண்டிவிட்டது. மணவறையிலிருக்கும் மணமகனுக்கு முகத்தைக் காட்டிவிட்டு வந்து இருந்து விட்டார் டானியல். ஐயர் ஒரு மணி நேரமாக மந்திரத்தை இழுத்துக் கொண்டே போகிறார். நண்பரிடம் மணி எத்தனை...? என்று கேட்க மூன்றைத் தாண்டிக் கொண்டிருப்பதாக சொன்னார். தாலிகட்ட மணமகளும் வந்து விட்டார். மாப்பிள்ளையின் பக்கமாக இரண்டு, மூன்று பேர் போவதும், வருவதுமாக செல்வதைக் கண்ட டானியல் நேரே மணமகனிடம் சென்று விசாரித்தபோது 'எங்களின்ரை வழக்கத்தின்படி தாலிகட்டி ஆராத்தி எடுக்கும்போது இரண்டு பக்கத்து கட்டாடியாரும் நிற்க வேணுமாம்' எங்களின்ரை கட்டாடியார் வாறவழியிலே தவறணையிலே குடிச்சுக் கொண்டு நிற்கிறான் எண்டு சொன்னாங்கள் ஒரு பிரச்சனையும் இல்லை. கட்டாடியார் வந்ததும் தாலி கட்டிப் போடலாம் என்று சொல்லவே. 'இப்ப தாலி கட்ட உன்ரை பக்கத்துக்கு ஒரு கட்டாடி தேவை அப்படித்தானே...?' 'அப்ப நான் நிக்கிறன் நீ தாலியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு.' அவரும் பக்கத்தே நின்ற பலரும் சிரித்துக் கொண்டார்கள்.

இந்த திருமணத்தின் போது டானியல் தான் ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தை சார்ந்தவனென்றும், எப்படித்தான் படித்து பட்டம் பெற்றாலும் சில சமுதாய சம்பிரதாயங்களை உடைக்க முடியாதென்பதையும் தெளிவுபடுத்திக்காட்டியது டானியலில் சமூக பார்வையின் அளவுகோல் புரிந்து கொள்ளமுடிகின்றது.

கரு. டானியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை - வதிரி

ஈழ வள நாட்டின் ஏழைமக்கள் தோழன்
எழுத்தாளன் டானியல்

வாழுமிடம் எங்கோ வையத்து வாழுகின்ற
மனதமுள்ள இதயங்கள்

அடக்குமுறை அவலங்கள் அது எங்கு ஆனாலும்
அவ்விடமே குடியிருப்பு

குடிலாக இருந்தாலும் கூழான உணவுண்டும்
குணமாகத் துயர்கேட்பார்

படையொன்று எழுத்தாலே பாதுகாப்பு ஆகிவிடும்
படிப்பினைகள் அவையாகும்

உருவாகும் எழுத்தினிலே ஊர்வாழும் பேச்சுநடை
உடை நடைகள் படங்காட்டும்

பழிவாங்கல் நோக்கில்லை படுகொலைதான் வழியில்லை
படிப்பினையே அவரெழுத்து

பஞ்சமரும் தண்ணீரும் பாமரரும் கேட்டறிவார்
படித்தவர்களார் அறியார்

விஞ்சுபுகழ் எழுத்தெல்லாம் வித்தகர்கள் போற்றிடவே
விளங்கிடுதல் காண்கின்றோம்.

**கோவிநேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயன் கே. டானியல்

சரிநிகர்மாந்தர் உலகின் திறனியல் வாதம்தந்து
நரிநிகர்மாக்கள் தன்னைச்சாடி யதார்த்தமே - வரிந்திட
விரித்துமே சரித்திரம்காணக்கதைகள் ஆக்கி
புரிந்தவோர் மனிதநேயன் டானியலே!

பிறப்பொக்கும் மாந்தரெல்லாம் வர்ணமாய் வகுத்த
வறட்டுத் தத்துவம் தன்னைச் சாடி மனுநீதி - திறப்பென
சுறட்டுத் தனத்திலே பஞ்சமர் மிடறு நெரிந்திட
துறட்டுத் தூக்கினன் மதமடக்கடானியலே!

கற்றவன் இல்லைப் பண்டிதத் தமிழை அன்றோ
உற்றவன் சொல்லைப் பாமரத்தனத்தில் வரித்தே-பெற்றவன்
நற்றவமாந்தர் உணர நுட்பமாய் யதார்த்தம்
பற்றவராக கதையாய்யுரைத்தனன் டானியலே!

பஞ்சமர் நஞ்சலர் என்றே கஞ்சலர் கதைகள் தந்து
நஞ்சவர் விஞ்சியோர் கொடுமை உதிரமாய் -வஞ்சகர்
வெஞ்சமர் நினைவுகூர்ந்து முதன்மையின் வர்க்கம்
நெஞ்சலர் ஈனரைஇடித்துரைத்தனன் டானியலே!

உள்ளத்தே உண்மை ஒளியினை ஏற்றி என்றும்
பள்ளத்தே வீழ்ந்துழலும் பாமரர் வாழ்வு - மெள்ளவே
குள்ளமாய்த் தோண்டிப்புதைக்கும் கொடுமைகள்
வெள்ளமாய் பரவித்தந்தவன் டானியலே!

பாமரர் வாழ்வுஓங்க முனைப்புடன் முன்னே சென்று
சோதரர் சோகம் தனதென நெஞ்சம் - தாமரர்
ஏதிலர் அடிமை குடிமை நொறுக்கியே பொசுக்க
தீதிலர் தெளிவுறவுரைத்தனன் டானியலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தரை மாக்களாய் மிதித்தவர் மறுகி மாழ
வேந்தராய் வாழ்ந்தோர் ஆழ்ந்தே போக - சாந்தரை
ஏந்தாராய் எழவேஎழுதுகோலில் உணர்வை ஊட்டி
சோர்ந்தார்க்கு உழைத்தசெம்மல் டானியலே!

சாதிப்பேயை விரட்டி நொறுக்கி துகள்களாக்கி
நாதியாய் நலிந்தோர் நயங்கழழித்தோர் - பாதியாய்
சமாதியாக துணிவைத் தூவியே தூண்டிப்
பொதுவுடமை துலக்கியமேதை டானியலே!

அச்சமே அறியான் அடிமை வாழ்வு மன்பதைக்கு
துச்சமோ எழுவீர் ஆலயம் எவர்க்கும் - உச்சமோ
தீட்சதர் மறைநூல் மடமையை உணர்ந்து
இட்டவர்இழிவு சாடியதோழன் டானியலே!

தண்ணீரின் பஞ்சமாக கண்ணீரைச் சொரிந்தோர்
மண்ணினில் மாந்தராய் மருவிட -வண்ணவர்
திண்ணியராக வேண்டி எழுதி எழுதியே ஓய்ந்த
கண்ணியன் டானியல் நாமம்வாழ்க!

வெஞ்சமர் புரியவேண்டி கோவிலில் நுழைவுநாடி
அஞ்சினர் புரியக்காட்டி போரிடும் மார்க்கம் -விஞ்சி
பஞ்சமர் பரிவுதேர்ந்து இடியுரை எங்கும் தந்து
நஞ்சவர் சிறையில் வாடினான் நாமம்வாழ்க!

போரிலா உலகைக் காணநாடியே பொதுவுடமை
தாரிலா மன்னராக பாட்டாளி எழுச்சியே பாரிலே
நேரிலே காணவேண்டிப் போரினைத்தொடுத்த டானி
ஊரிலே தெரிந்தோன் உவப்பிலான் வாழ்க நாமம்!

பண்டைய தமிழர் வாழ்வின் பொதுவுடை வாழ்வு
இண்டைய தமிழன் வாழ்வில் பொதுமையாய் அண்டைய
சண்டையை தவிர்த்தே வர்க்கபேதம் இல்லா
மண்டையின் மதியையீர்ந்தனன் வாழ்கநாமம்!

த.சிவபாலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1952 முதல் நானறிந்த ஈழத்துச் சிறுகதை, நாவல் எழுத்தாளர் கிறகரி டானியல் அவர்களின் எண்ண அலைகள்

**நேரிசை வெண்பா**

முத்தாம் சிறுகதையால் முட்டறுக்கப் பஞ்சமரின்
வித்தாய் எழுதியஎம் டானியலே-தத்துவமே
பஞ்சமரின் மீட்புப் பணியுமதாய்க் கொண்டவுமை
நெஞ்சால் நினைக்கின்றோம் நின்று

மனிதம் அறியாதோர் மன்பதைகள் செய்து
தனிக்கவே சாதியினால் தாழ்த்தி - இனிமேலும்
முன்னேறாச் சாதிமுறை மூட்டும் சதிபோக்க
முன்னின் றுழைத்தீர் முனைந்து

சாதி விலங்கறுக்கச் சாடியே டானியலே
ஓதி உணரவைத்தீர் நாவலிலே - பேதிபோல்
இட்டசட்டம் பொய்யென்றே ஈட்டும் சிறுகதையால்
திட்டமாய்க் கூறினீரே தீர்ப்பு

வையம் மறவாது வானும் புகழ்ந்திடுமே
பொய்ம்மைகள் இவ்வுலகில் போக்கியதை- செய்கதைகள்
நல்லோர் மதிக்கின்ற நல்ல சமத்துவத்தை
எல்லோரும் ஏற்றிடுவீர் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை ஆசிரியப்பா

ஆயிரத் துத்தொழா யிரத்து ஐம்பத்
திரண்டு முதல்யான் கண்ட டானியல்
மிரண்ட சாது மிரள வைத்தவர்
திரண்ட மனிதக் கும்பலின் கூற்றில்

பிழைதான் பிடிக்க முடியா தென்றும்
உழைக்கும் தொழிலாள் சாதி கூறியும்
சண்டாளச் சாதிகள் புரிந்த மனிதரே
சண்டைக் கிழுத்துச் சாடினர் கிராமத்தில்

சாதிக் கொடுமை யாழில் மிளிர்ந்தது
சாதியின் பேரால் ஏழை மாணவர்
வீதியால்ச் செல்லப் புத்தகம் பறித்து
வீதியில் போட்டு எரித்துத் துரத்தினர்

பேதியாம் சாதி மனிதம் தன்னை
மதிக்க மறுத்தது மறந்தது புனிதம்
உடுக்கும் உடையைக் கொக்கியால் கிழித்து.
தடுத்தது மனித உறவைச் சாதியால்

எரித்தது ஏழை மக்கள் குடிசைகள்.
பரிவு கூறா முடியா நிலையில்
இந்தச் சாதியில் கதியை இழந்த
சொந்த மனிதரில் டானியல் ஒருவர்

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
வடக்கு ஈழத் தலைநகர் யாழில்
அடக்கும் மனிதர் சதியை ஒழிக்க
தொடக்கப் பட்ட சிறுபான் தமிழர்

சபையில் சேர்ந்தார் திறம்பட உழைத்தார்
சபையும் வளர மேலும் சாடக்
கம்யூனிஸ்ட் ஆகிக் கட்சியில் சேர்ந்தார்
கம்யூனிஸ்ட் காத்தி வைத்தி லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தோழர் அவருடன் இணைந்து
நன்றாய் நலங்குறை தமிழர் உயர
என்னும் உழைக்கும் இளவல் ஆனார்
சீரிய பேச்சும் செம்மை சார்ந்த

காரியத்திறனும் தோழர் டானியல்
வாழ்வில் திகழ செனேற்றர் நல்லையா
காழ்ப்பு அற்ற எம்.சி உடனே
சேர்ந்து ஆற்றிய சேவை யாழில்

ஓர்ந்து அறியலாம் டானியல் திறனில்
இளைஞர் சங்கம் கஸ்த்தூரி வீதியில்
விளைந்த நாளில் டானியல் ஆற்றிய
விளக்க உரையும் சாதித் திணிப்பும்

எம்மைப் போன்ற அன்றைய இளைஞர்
தம்மைக் கவர்ந்து விழிப்புறச் செய்தது
தனித்த நின்று சாதிப் போரை
இனியும் செய்ய முடியா தென்று

பட்டி தொட்டி எல்லாம் சென்று
பாட்டாளி ஏழை மக்களைத் தூண்டி
சிறுபான் மகாசபை வளரச் செய்தார்
கம்யூனிஸ்ட் கட்சி யாழில் பிரதிய

எம்மவர் பலரைச் சீனக் கம்யுனிஸ்ட்
ஆக்கி அதிலும் வெகுஜன இயக்கம்
அமைத்து மாவைக் கந்தன் ஆலயப்
பிரவே சம்போல் அனைத்தும் அன்னார்

அதீத முயற்சி என்பதை அறியலாம்
மனித முயற்சியின் எடுத்துக் காட்டாய்
இனிய டானியல் இரும்புக் கடைச்சல்
பட்டடை அமைத்து உயர்ந்தார் உயர்த்தினார்

டானியல் எழுதும் கதைகள் நாவல்
அனைத்தும் சாதியம் என்றே சாதிமான்
அனைய எழுதுனர் சாடினர் அன்று
நாட்டில் நடக்கும் அடக்கு முறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டில் எழுதின் அதுவே இலக்கியம்
என்ற இலட்சியக் கருத்தை ஏற்க
மறுத்து டானியல் எழுத்தைக் குறைவாய்க்
கூறியோர் பின்பு அவரைப் போற்றினர்

சாதி பேணிய சாதிமான் பலரே
சதியால் டானியல் வாழ்வைச் சிதைக்க
பருந்தே போன்று தருணம் பார்த்து
இருந்தே இலங்கையில் ஜேவிபி கலகம்

மூண்ட போது அவரையும் அதிலே
ஈடு பட்டார் என்றே பொய்யுரை
கூறிப் பிடித்துச் சிறையில் அடைத்தனர்
ஈற்றில் அவரின் மெய்யுரை உணர்ந்து

விடுதலை பெற்று வீறுகொள் நாவல்
பலவும் எழுதி மேன்மை பெற்றே
நிலவும் சாதிக் கொடுமை உணர்த்தினார்.
எமது இன்றைய பேரா சிரியர்

தமது முறையில் யப்பான் மொழியுடன்
ஒப்பிட டானியல் கதைகள் உதவிய
செப்பிடும் தமிழியல் வளர்ச்சி கூறுகிறார்.
இன்றைய கற்கை நெறியில் கலாநிதிப்

பட்டம் பெறுவோர் டானியல் கதைகளை
இட்டமாய் ஆய்வு செய்து வருகிறார்
ஈழத்து டானியல் பஞ்சமர் கதைகள்
காழ்ப்பை அகற்றி விழிப்பைத் தமிழர்

மத்தியில் கூறி வரலாறு அறிய
வாய்ப்பை நல்கி மொழியியல் வளர்ச்சி
கூறி நற்கும் பண்பியல் இலக்கியம்
என்றே சொல்லும் அறிஞர் பலவுளர்.

டானியல் பற்றிப் பிரெஞ்சு நாட்டில்
வண்ணைத் தெய்வம் எழுதும் பிரசுரம்
டானியல் சோ'லிஸ்ட் தானா! இல்லையா!
என்றே கட்டுரை விமர்சனம் கூறுநர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாய் டானியல் வளர்ந்த முறையும்
இன்னல் வழியில் இடர்கள் நோக்கிய
வாழ்வும் வளமும் அறிந்தால் அறியலாம்.
ஆழ்ந்த கருத்தும் அரசியல் வாழ்வும்

வீழ்ந்த மக்களை உயர்த்திய முறையும்
தனது தேட்டம் பகிர்ந்து சமூகம்
எனதே மனிதம் வளர்க்க என்றே
வாழ்ந்த சோஷலிஸ்ட் என்பதும் சரியே

வேட்டி கட்ட முடியா நிலையிலும்
காட்டிய சமூக உணர்வின் விழிப்பை
நண்பர் மார்க்கு நயன்பட உரைத்தார்
எண்ணிய கருமம் நேரந் தவறாமை

எளிமை வாழ்வு நண்பர்க் கினிமை
தெள்ளிய கதையால் அரசியல் விளக்கம்
கொள்ளும் மனிதர் டானியல் மறவார்.
டானியல் இந்தியா சென்றார் இறந்தார்.

டானியல் சாதி அமைப்பைச் சாடிய
முறையில் வேறெவர் தானும் அவரின்
குறைவை நிவர்த்தி செய்யப் பின்னர்
இல்லை என்ற தகவலைத் திருவும்

தங்க வடிவேல் மாஸ்டர் நண்பர்
பலரும் இரங்கல் விழாவிற் கூறினர்.
நல்லவன் நண்பன் தோழன் டானியல்
தொல்லை தந்த சாதி அமைப்பைத்

தகர்த்து தமிழரில் நலிந்த மக்களை
பகடைக் காய்களாய் பாவித்த பலரை
இகத்தில் எழுத்தால் செயலால் உயர்த்திய
உத்தமன் என்றும் வாழ்வான்
இத்தரை விடிவெள்ளி டானியல் என்றுமே!

**ம. செல்வராசா அலெக்ஸ்சாந்தர்**
முன்னாள் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிப்பு இயக்கம்

## (அன்று முதல் இன்றுவரை)

இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே குறிப்பாக வட பகுதியில் நிலவி வரும் சாதி அமைப்பு முறைக்கு எதிராக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளுக்கான இயக்க பூர்வமான காலத்தை "சுமார் ஐம்பது ஆண்டு காலம்" என்று ஓரளவுக்குக் குறிப்பிடலாம். இந்த ஐம்பது ஆண்டு காலத்திற்கு முன்னால் இதன் கோர ரூபம் எப்படி இருந்திருக்கும் என்பதனை இந்த ஐம்பது ஆண்டு காலக்குறிப்புகளைக் கொண்டு கணக்கெடுத்துக் கொள்வது யாருக்கும் கடினமாக இராது.

பரிணாம வளர்ச்சிக் கணக்கெடுப்பில் இருந்து பார்க்குமிடத்து நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பின் பிறப்போடு இந்தச் சாதி அமைப்பு முறையும் பிறப்பெடுத்ததென்று குறிப்பிடுவது பொருத்தமாயினும் இங்கு இந்தச் சாதி முறைக்கு எதிரான பொது இயக்கங்கள் பிறப்பிக்கப்பட்ட காலத்தைக் கணக்கிற் கொண்டுதான் இதன் வயது ஐம்பது ஆண்டுக்குக் கணக்கிடப்படுகிறது.

தமிழ் மக்கள் தங்கள் பாரம்பரியப் பிரதேசம் என உரிமை கொண்டாடும் பிரதேசங்களுள் கேந்திரப் பிரதேசமாகக் கணிக்கப்படும் வடபிரதேசம் எங்கும் உள்ள கிராமப்பிரிவுகளுக்குச் சென்று உன்னித்து ஊடுருவிப் பார்த்தால் இந்தச் சாதி அமைப்பு முறையின் சின்னங்களைத் தரிசிக்கமுடியும். கிராமங்களின் அமைப்பு முறையும், ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளும், அவர்கள் வசிப்பிடங்களுக்குச் செல்லும் பாதைகளும், அவர்கள் வாழும் நிலங்களும், அவைகளைச் சுற்றியுள்ள பிரதேச நிலங்களின் நிலத் தோம்புப் பெயர்களும், ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பெரு ஆலயங்களும், குளங்களும், கிணறுகளும், மடங்களும், வேறும்பல சரித்திரச் சின்னங்களும், கால் நடைகளின் பட்டிக் குறிகளும், வீதிப் பெயர்களும், கிராமப் பெயர்களும், பேச்சு முறைகளும், பழக்கவழக்கங்களும், நன்மை தின்மை வைபவங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளும், மிகவும் தீண்டப்படாதாருடன் தொடர்பு கொள்வதற்காகச் சங்கடப் படலையோடு கூடிய படிலைத் தலை வாயிலும், அதற்குச் சற்று முன் வரிசையில் (உள்ள சாதியினருடன் பேசிக் கொள்வதற்காக அமைந்த) சவுக்கண்டியும், தம்மோடொத்தவர்கள் மட்டும் உள்ளே வர வசதியாக அமைக்கப்பட்ட நாற்சார வீடும் நடு முற்றமும், பாரம்பரிய பெருஞ்சாதி மனிதர்களின் சாதி அமைப்பு முறையினை அனுசரித்து அமைந்த ஞாபகச் சின்னங்களாக இருப்பதைத் தெளிவாக உணர முடியும்.

இந்தச் சாதி அமைப்பு முறைக்கும் அதன் வெறியாட்டங்களுக்கும் சவாலாகத் தலையெடுத்து வந்த எதிர்ப்புச் சாதனங்களுடன்தான் சாதி எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதெனலாம்.

1915- 18ம் ஆண்டுக்கிடைப்பட்ட பகுதியில் சுன்னாகத்தைச் சேர்ந்த வி. எம். கந்தையா என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளியான 'ஆதி திராவிடன்' என்ற மாத இதழுடன் இந்தச் சாதி எதிர்ப்பு இயக்கம் மெது மெதுவாக ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் இந்த 'ஆதி திராவிடன்' அடிப்படையில் சமய சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டிருந்தமையால் சாதி எதிர்ப்பு இயக்கத்தில் இது பிரதானப்படுத்துமளவுக்குத் தலை நிமிர்ந்து நிற்கவில்லை. இதைத் தொடர்ந்து 1920-25 கால இடைவெளியில் சூ. எ. சின்னப்பு என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'மேல் நோக்கம்' என்ற பத்திரிகை ஒரு படி முன்னேறிச் சாதிக் கொடுமையின் தன்மைகளை ஆத்மார்த்தக் கருத்துக்களோடு சேர்த்துக்கொண்டதும், அந்தவேளை அச்சுத்தொழிலில் பயிற்சி பெற்று இன்றும் ஈழகேசரி பொன்னையா என்று கௌரமாக அழைக்கப்படும் பெரியார் 'முன்னேற்றம்' பத்திரிகையை நெறிப்படுத்தியதும் குறிப்பிடக்கூடியனவாகும். இந்தக் கால கட்டத்தில் தீவிரமான சாதி ஒழிப்பு இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு துணிச்சலுக்கு இலக்கணமாக விளங்கிய அமரர் யோவேவ் போல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட "ஜனதர்ம போதினி" என்ற பத்திரிகையும், அப்பத்திரிகை மூலமாகப் போராட்டமயமான கருத்துக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட 'ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கமும்' தான் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் ஓர் அத்தியாயத் தொடக்கமாய் அமைந்தது எனலாம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் பட்டுவந்த இன்னல்களுக்கு எதிராக எழுந்து நின்று குரல் கொடுக்கும் பணியில் ஒப்புதல் தெரிவித்துக் கொண்டவர்களில் முக்கியமானவர்களாக இருந்தவர்களுள் அன்று இராமநாதன் கல்லூரி ஆசிரியராக இருந்த ருத்திரகோடீஸ்வர ஐயர், மத்தியூஸ் பாதிரியார், யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் லொக்கூட்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்னல் பாதிரியார் ஆகியோர் குறிப்பிடக்கூடியவர்களாவர். அவ்வேளை இந்துக் கல்லூரி ஆசிரியராக இருந்து நெவில்ஸ் செல்லத்துரை அவர்களைத் தலைவராகவும் அமார் யேக்கப் ஸ்ரீகாந்தி அவர்களைச் செயலாளராகவும் கொண்டு உதயமாகிய "ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கத்திற்கு" மேலே குறிப்பிடப்பட்ட நால்வரும் போஷகர்களாக இருந்தமையிலிருந்து அன்று தொடக்கம் இன்றுவரை சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டும் தன்னந்தனியனாக நிற்கவில்லை என்பதும், காலத்துக்குக் காலம் நல்லெண்ணம் கொண்ட மக்கள் பலரும் ஒத்தாசை நல்கியுள்ளனர் என்பதும் புலனாகின்றது.

இந்தப் போஷகர்களில் மூவர் வெள்ளையர்கள் ஆதலால் அவர்கள் பிரதானப்படுத்தபடவில்லையாயினும், உருத்திர கோடீஸ்வர ஐயரைப் பொறுத்தவரை அவர் சாதித் தமிழர்களின் கண்டனங்களுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் இலக்காக வேண்டியதாயிற்று. இதேபோல் இந்த ஸ்தாபனத்தின் தலைமகனாகிய யோவேல் போல் எண்ணற்ற எதிர்ப்புகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் முகங்கொடுத்துப் பெருமையைச் சம்பாதிக்கத் தவறவில்லை.

1927ம் ஆண்டுக் கால கட்டத்தில் இலண்டனிலிருந்த தனது நண்பர்மூலமாக இலங்கை வாழ் ஒடுக்கப்படட மக்களின் பிரச்சினைகளை, இலண்டனில் குடியேற்ற நாடுகளின் பிரச்சினைகளைக் கவனிக்கவென நிறுவப்பட்ட சபைக்குத் தெரிவித்ததில் அமரர் யோவேல் போல் அவர்கள் எடுத்த முயற்சியின் பலாபலனாக டொனமூரைத் தலைவராகக் கொண்டு இலங்கைக்கு வந்த அறுவர் அடங்கிய கமிஷனாகும். 'வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்தல்' என்ற கொள்கையின்கீழ் அன்று குடியேற்ற நாடுகளின் காரியதரிசியாக இருந்த அமெரி என்ற M.P. யினால் நியமிக்கப்பட்ட இந்த டொனமூர்க் கமிஷனுக்கு எதிர்ச்சாட்சியமளிக்க சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இலண்டன் மாநகரம் சென்றதிலிருந்துதான், "பஞ்சமச் சாதியிடம் வாக்குக் கேட்டுச் சாதிமான்கள் யாசகம் போவாரோ?'' என்ற கேள்வி சாதிமான்களிடையே ஆக்ரோஷமாக எழுந்து சாதி அடக்குமுறைகள் கோர வடிவங்களை எடுத்தன, என்பது முக்கிய கவனத்துக்குரியதாகும். பின்னர் இங்கே வந்த டொனமூர் கமிஷன் "வயது வந்தோருக்கு வாக்குரிமை'' கிடைப்பதன் மூலம் பல உரிமைகளை அவர்கள் அடைய வழி பிறக்கும் என அறிக்கை மூலம் பிரகடனப்படுத்தியபோதும் உள்நாட்டு அரச இயந்திரங்களைப் பெருஞ்சாதியினரே ஆளுமை நடத்திவந்தமையால் ஒடுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களால் எதிர்பார்க்கப்பட்டவைகள் நடந்தேறவில்லை. பதிலுக்கு அடக்குமுறைகள் அதிகரித்தன. அரசு இயந்திரங்கள் தீவிரமடைந்தன. விதானை, உடையார், மணியகாரன் என்ற பதவிகளில் குந்தியிருந்தவர்கள், காவல் படையினைச் சேர்ந்தவர்கள், சிவில் சேவை அதிகாரம் வகித்தவர்கள் உட்பட சகல பிரிவினரும் தேச வழமைச் சட்டத்தின் அடிப்படையில் துரித கதியில் செயற்படத் தொடங்கினர். இவைகளைத் தாக்குப் பிடிக்க முடியாத ஒடுக்கப்பட்ட மக்கள் மதமாற்றம் போன்ற குறுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதனால் ஒரு சில சிறிய அளவிலான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின என்பது உண்மையே.

அந்தக் காலத்துத் திண்ணைப் பள்ளிகளுக்குள் கூட அமைதி கிடைக்கப்பெறாத மக்களுக்குப் பிற மதப் பாடசாலைகள் சற்று வழிவிட்டன. சுற்றுச் சார்புகளை மீறிப் பாடசாலைகளுக்குச் சென்ற பலர் தண்டிக்கப்பட்டனர். இம்சிக்கப்பட்டனர்.

பகிரங்க வீதிகளில் தலைநிமிர்ந்து நடமாடத் தடை - சுடலைகளில் பிணம் சுடத் தடை - பொது ஸ்தாபனங்களின் உள்நுழையத்தடை - சுதந்திரமான வாகனப் போக்குவரத்துக்குத் தடை - கோவிற் பக்கம் செல்லத்தடை - மேளம் அடிக்கத்தடை - மீசை விடத்தடை - கடுக்கன் அணியத் தடை - குளங்களில் குளிக்கத் தடை - பந்தல் போட்டு வெள்ளை கட்டத்தடை - முழங்கால் மட்டத்திற்குக் கீழ் வேட்டி அணியவும், மேல் அங்கி அணியவும், சால்வை போடவும் தடை - வண்டில் ஆசனத்தட்டில் ஏறியிருக்கத் தடை - புகைவண்டியின் ஆசனங்களில்,. பஸ் ஆசனங்களில் இருக்கத்தடை - கடை போன்றவை வைக்கத்தடை - செய்த வேலைக்குக் கூலி கேட்கத்தடை - குழந்தைகளுக்கு நல்ல பெயரிடத் தடை - பால்மாடு வளர்க்கத்தடை - விறுமர், அண்ணமார், காளி, பெரியதம்பிரான், வீரபத்திரர், வைரவர், நாச்சிமார், காத்தவராயர் ஆகிய தெய்வங்களின் பெயர்களை விட ஏனைய பெயர்களில் கோவில்களை அமைக்கத்தடை - குடை பிடிக்கவும், வெள்ளை வேட்டி அணியவும், செருப்பு அணியவும், பெண்கள் குடுமி போட்டுக் கொள்ளவும் தடை - தாவணி போடத்தடை, தங்கத்தாலி, நகை நட்டுக்கள் அணியத் தடை, இப்படித் தடை வரிசையோ கணக்கற்றவை. இவை யாவும் தேச வழமை என்ற மதிப்பீட்டுக்கு உட்பட்டவையாகவே கணிக்கப்பட்டன.

சர்வசன வாக்குரிமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் இராமநாதன் துரை அவர்கள் இலண்டன் சென்றிருந்தபோது அவரைத் தலைவராகக் கொண்டிருந்த சைவ சித்தாந்த சபைக்குத் தற்காலிகத் தலைவராக, ஆறுமுக நாவலரின் மருமகனாகிய த. கைலாசபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அப்போது பரமேஸ்வராக் கல்லூரியில் சைவ சிந்தாந்த அறக் கல்விப் போதனைக்காக மாநாடு ஒன்று நடாத்தப்பட்டது. அப்போது திரு. யோவேல் போல் அவர்களால் உந்தப்பட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டோர் சிலர், தாமும் சைவ சித்தாந்த அறக்கல்வியைப் பெற வேண்டும் என்று கோரி, மாநாட்டு மண்டபத்திற்குள் நுழைய முற்பட்டபோது, "நிரந்தரத் தலைவர் இல்லாத போது இதை அனுமதிக்க முடியாது" என மாநாட்டுத் தலைவர் கைலாயபிள்ளை மறுக்கவே, அறக்கல்விக்கு அனுமதி கேட்டுப் போயிருந்த ஒடுக்கப்பட்டோர், அவரின் மறுப்பை எழுத்தில் பெற்று, டொனமூர்க் கமிஷனுக்கு தந்தி மூலம் இலண்டனுக்கு அனுப்பிவைத்தனர். அந்த வேளையும் உயர்சாதியைச் சேர்ந்த நாகநாதி அதிகாரம், இலங்கைச் சட்டசபை உறுப்பினராக இலண்டனில் இருந்த தம்பிமுத்து ஆகியோர் இந்த மக்களுக்கு ஆதரவாய் இருந்தனர். நம்மவர் துணிந்து செயற்பட்டமையால்தான் இராமநாதன் துரை அவர்களின் இலண்டன் பிரயாணம் தோல்வியில் முடிந்ததெனலாம்.

1930ம் ஆண்டுக்காலப் பகுதியின் ஹண்டி. எச். பேரின்பநாயகத்தைத் தலைவராகவும், செனட்டர் நாகலிங்கம், ஒறேற்றர் சப்பிரமணியம், கலைப் புலவர் நவரத்தினம், ஏ.எஸ். கனகரத்தினம் ஆகிய முக்கியஸ்தர்கள் உட்பட ஒடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி களையும் உள்ளடக்கிய இளைஞர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் தோன்றியது.

இந்த ஸ்தாபனம் பல தேசியப் பிரச்சினைகளைக் கொண்டிருந்தபோதும், சாதி ஒழிப்பு விவகாரத்தில் பெருமளவு செயற்பட்டு, "சம ஆசனம் - சம போசனம்" என்ற கொள்கையை ஏற்று நாடெங்கும் பிரச்சாரங்களில் ஈடுபட்டது. அப்போது இவர்களுக்குச் சாதிமான்களால் கிடைத்த எதிர்ப்புகள் பெருமளவாகும். இதன் பிரசாரத்திற்கென தமிழக தமிழறிஞர் திரு. வி. க. அவர்கள் அழைக்கப்பட்டு, சமபந்தி சமபோசனப் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டதும் அவர் திரும்பிப்போன மறுகணமே அவர் பேசிச் சென்றதும், சம ஆசன நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதுமான பல பாடசாலைகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. வசாவிளான் வடமூலை, ஒட்டகப்புலம், சுளிபுரம், புன்னாலைக்கட்டுவன், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் சுமார் 14 பாடசாலைகள் சாதி வெறியர்கள் வைத்த தீயில் வெந்து சாம்பராயின.

1931ல் வரவிருந்த ஆட்சிமன்றத் தேர்தலைத் தமிழர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைக்காகப் பகிஷ்கரிக்கத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்துவந்த வாலிபர் காங்கிரசினர், அவ்வேளை சாதி வெறியர்களின் கோபாக்கினிக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. இந்தக் காலகட்டத்தோடு வீறுகொண்டெழுந்து நின்ற சாதி வெறியர்கள் கிராமப் புறங்கள் எங்கும் தங்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். அத்தாக்குதல்களுக்கு முதன்முதலில் பலியிடப்பட்டவன் புத்தூர்ப்பகுதியைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டவன் ஒருவனாகும். பீதி மிகுதியால் பனை மரத்தில் ஏறி இருந்த ஒரு அப்பாவிப் பஞ்சமன் மரம தறித்து வீழ்த்தப்பட்டு - கொல்லப்பட்டு - அந்த மரத்தின் அடியிலேயே கொழுத்திப் பிடி சாம்பராக்கப்பட்டான். ஏனைய கிராமப் புறங்களில் இல்லாத அளவில் புத்தூர்ப்பிரதேசத்தில் நில ஆதிக்கமுறையும், சாதி ஒடுக்கு முறையும் மேலோங்கியிருந்தன என்பதற்கு இன்றும் அழியா அடையாளச் சின்னங்கள் பல உண்டு. பல பாரம்பரிய குடும்பங்களின் பழைய நால்சார் வீடுகளில் இன்று வரை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பல்லக்குகளும், வீட்டு முற்றங்களின் நீள வரிசைகளில் சுற்றுவட்டாரத்தில் உண்டாக்கப்பட்ட பல அளவுகள் கொண்ட பொருக்குப் பட்டையற்ற நேர்மரங்களும் இன்றைய அமைப்புக்குச் சற்று வேறுபட்ட, சற்று உயர்ந்த அமைப்பிலுள்ள ஏர்க் கலப்பைகள் இடம் பெற்றுள்ளதும் இன்றும் நாம் பார்க்கக்கூடிய சின்னங்களாகும். அக்காலத்தில் பல்லக்கு முதலி குடும்பம் என்படுவோர் தங்கள் பிரயாணத்திற்குப் பயன்படுத்திய பல்லக்குகளைச் சுமந்து செல்லக் கோவியர் சமூகத்தினரை அமர்த்தி வைத்துக் கொண்டிருந்ததையும், ஊரிலுள்ள பஞ்சமர்களிடையே ஏற்பட்ட குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்க, அளவான மரத்தைப் பார்த்து அவர்களைக் கைகொடுக்க வைத்துச் சவுக்கடி கொடுத்து தர்பார்த்தன வழக்கத்தையும் மாட்டுக்குப் பதிலாக, அடிமை மனிதனை ஏரில் பூட்டி, உழுது பயிரிட்டமையையும் இந்த அடையாளச் சின்னங்கள் இன்றும் நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன.

கலியாணப் பெண்களுக்குச் சீதனம் கொடுக்கும்போது அந்தச் சீதன வரிசையில் ஒரு கோவியனும், ஒரு பள்ளியும் நிச்சயமாக இடம் பெற்றே தீரவேண:டும் என்பது இறுக்கமான நடைமுறையாயிருந்தது.

இந்தக் குடும்பங்களின் மரண வீடுகளில் தொண்டு வேலைகள் புரியும் வரிசைகள் சில இன்றுவரை இருந்து வருவதைக் காணலாம்.

இயற்கை மரணத்தை எதிர் நோக்கி நிற்கும், நயினார் அல்லது நயினாத்தி மரணப் படுக்கையிற் கிடக்கும்போது கண், வாய் பொத்த, கோவியன், அல்லது கோவிச்சி காத்திருக்க வேண்டும். மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்த பின்பு சகல தொண்டு வேலைகளையும் கோவியக் குடும்பம் செய்து முடிக்க வேண்டும். மரணித்தது ஆணாக இருப்பின் 'பரியாரி' என்று இவர்களால் அழைக்கப்படும் அம்பட்டன் பிணத்துக்குச் சவரம் செய்வதும், 'கட்டாடி' என்று அழைக்கப்படும் வண்ணான் தனது சேவைகளைச் செய்வதும் முதன்மையான அடிமைத் தனத்தொண்டுகளாகும். இவைகளுக்குப் பின்பு பிரேத ஊர்வலத்தில் நடைமுறை வரிசை பார்ப்பதற்கே மனங்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கட்டை கத்தி அடுக்கும் பள்ளர் பச்சையான கட்டை குத்திகளைச் சுமந்து கொண்டு முன்னே செல்ல, அதை அடுத்து மாராயச் சாதிப்பெண்கள் குடமூதி நடக்க, அதை அடுத்து 'சாம்பான்' என்ற பறையன் பறை கொட்டிச் செல்ல, அதன் பின்னே வண்ணான் நில பாவாடை விரித்து வர நான்கு கோவியர்கள் பாடை காவியும், நாலு கோவியர்கள் மேலாக்குப் பிடித்தும் வர, கடைசியில் பரியாரி என்ற அம்பட்டன் பாடைக்குப் பொரி எறிந்து நெருப்புச் சட்டி தூக்கிவரும் காட்சி சாதி முறையின் பூரண வெளிப்பாடாகும். சகல விதமான அடிமை குடிமை முறைகளோடு நடந்து வந்த வைபவ முறைகளில் பெரிய அளவு மாற்றங்கள் எதுவுமே இல்லாது இன்றுவரை அவை நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

ஒடுக்கப்பட்ட ஊழியர் சங்கம் சற்று விரிந்து பரந்ததன் பலாபலனாய் 1940ம் ஆண்டில் ஒடுக்கப்பட்ட சகல மக்கள் பிரிவினரையும் உள்ளடக்கிய சிறுபான்மைத் தமிழர் மகாசபையாக பரிணமித்தது.

அன்று சமூக சிறுசிறு இயக்கங்களோடும், தனித்தனியாகவும் இருந்து செயற்பட்டு வந்த எஸ்.ஆர். யேக்கப் காந்தி, ஆ. ம. செல்லத்துரை, ரீ. ஜேம்ஸ், வீ. ரீ. கணபதிப்பிள்ளை, எம் சி. சுப்பிரமணியம், எம். ஏ. சி. பெஞ்சமின், எஸ். நடேசு, ஜீ. நல்லையா, வீ. ரி. அரியகுட்டிப் போதகர், ஜீ. எம். பொன்னுத்துரை, யோனா, யே. ம. ஆசீர்வாதம், எம். வி. முருகேசு, விஜயரட்ணம், பேப்பர் செல்லையா, ஏ. பி. இராஜேந்திரா ஆகியோர்களையும் உள்ளடக்கிக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் உடனடியாகவே பல சாதிக்கொடூர நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. வில்லூண்டி மயானத்தில் முதலி சின்னத்தம்பி சுட்டுக்கொல்லப்பட்டதும், பூநகரியில் நடந்த சாதி வெறியினால் மூவர் உயிர் இழந்ததும் 26 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதும் இந்தக் காலகட்டத்தில் தானாகும்.

யாழ்ப்பாணத்து நீதிமன்றத்தில் முதலி சின்னத்தம்பியின் வழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைக்கு வந்தபோது நியாய துரந்தரர்கள் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு முதலி சின்னத்தம்பிக்கான பக்கத்துக்கு வழக்காட மறுத்தபோது திரு. தர்மகுலசிங்கம் அவர்கள் ஒருவர் மட்டுமே சாதிமான்களின் கட்டுப்பாட்டை உடைத்துக்கொண்டு வழக்குரைக்க முன்வந்தார். இதன்மூலம் தனது நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டபோதும் மகாசபைக்கு அது போதுமான ஆதரவாகப் படாமையால் கொழும்பு நீதிமன்றத்துக்கு வழக்கை எடுக்க அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த சிங்கள நியாய துரந்தரர்கள் உதவியோடு முயற்சித்து வெற்றி கண்டதுடன் கொழும்பு விசாரணையில் மூவர் தண்டிக்கப்படவும் வைத்தனர். இதேபோன்றே பூநகரிக்கொலை, வீடெரிப்பு வழக்குகள் கண்டி நீதிமன்றத்தின் பின்பு கொழும்பு நீதி மன்றத்திலும் விசாரணைக்கு எடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். அப்போதைக்கப்போது அவ்வப்பகுதிகளில் நடந்த சாதி அடக்குமுறைத் தாக்குதல்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் மூலம் இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியாதென்பதைச் சிறிய அளவில் இவர்கள் உணர்ந்து கொண்டமைதான் சில அரசியல் இயக்கங்களுக்கான ஆதரவுக்குரலையும் இவர்கள் வைக்க முற்பட்டமைக்கான காரணமாயிற்று. இந்த முயற்சியின் முதலாவது பலனாகச் சங்கானையைச் சேர்ந்த பொன்னர் என்பவர் கிராமச் சங்க உறுப்பினர் ஆகவும் பளையைச் சேர்நத செல்லையா என்பவர் கிராமச் சங்க உறுப்பினராகவும் வந்தனர். கிராமச் சங்க உறுப்பினர் பொன்னர் முதல்முதல் கிராமச்சங்கக் கூட்டத்திற்குச் சென்ற போது கைத்தறி நெசவுக் கிடங்குபோலக் கிடங்கு அமைத்து அதிலே கால் செருகிக்கொண்டு உட்காரும்படியும், செல்லையா சென்றபோது, தென்னைமர அடிக்குற்றி ஆசனமாக வைக்கப்பட்டிருந்தமையும் தமிழர்களின் ஜனநாயக அமைப்பு முறையின் சரித்திரத்தில் குறைந்த பட்சம் பித்தளை எழுத்துக்களாலேனும் பொறித்து வைக்கப்பட வேண்டியவையாகும். அத்தோடு அந்தக்காலகட்டத்தோடு ஒட்டிய ஐந்தாண்டு இடைவெளியில் எரிக்கப்பட்ட வீடுகள் என்று கணக்கை நிரைப்படுத்தினால் அவை

| | | |
|---|---|---|
| பூநகரி | - | 26 |
| காரைநகர் | - | 10 |
| கரவெட்டி | - | 14 |
| ஊர்காவற்றுறை | - | 5 |
| பருத்தித்துறை (சல்லி) | - | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்பொல்லை, கரவெட்டி மேற்கு, கலட்டி, கட்டுவன், இளவாலை, நாரந்தனை மேற்கு, பளை, அல்லைப்பிட்டி, புத்தூர், சங்கானை மொத்தமாக 65 இற்குக் குறையாதுதான் அமையும்.

இந்த இடைக்காலத்தின் சாதி வெறி நடவடிக்கைகளில் பலியான உயிர்கள் என்று குறிப்பிடும்போது -

| | | |
|---|---|---|
| பண்டித்தலைச்சி | - | 3 |
| பூநகரி | - | 3 |
| சண்டிலிப்பாய் | - | 1 |
| வில்லூண்டி | - | 1 |
| ஊரெழு | - | 1 |
| நயினாதீவு | - | 1 |
| பருத்தித்துறை - சந்தாத்தோட்டம் | - | 1 |
| காரைநகர் | - | 1 |
| கொருடாவில் | - | 1 |
| புத்தூர் | - | 1 |
| கோண்டாவில் | - | 1 |
| புன்னாலை | - | 1 |
| கம்பர்மலை | - | 1 |

இக்கட்டுரைக்குள் அடக்கப்படாத 68க்குப்பின் சம்பவங்களால் இழக்கப்பட்ட உயிர்கள் பற்றிய குறிப்பு:

| | | |
|---|---|---|
| சங்கானை | - | 3 |
| கன்பொல்லை | - | 3 |
| கரவெட்டி | - | 3 |
| அச்சுவேலி | - | 1 |
| சண்டிலிப்பாய் | - | 1 |
| பளை | - | 2 |
| மிருசுவில் | - | 1 |

என நிரைப்படுத்திக் கொள்ளலாம்.'

உயிர்ச்சேதமற்ற துப்பாக்கிச்சூடு, வாள்வெட்டு, கத்திக்குத்து, எலும்புமுறிவு, மானபங்கம் ஆகியவை என்று குறிப்பிடும்போது யாழ்ப்பாணக்குடாநாட்டில் எத்தனை சிறு கிராமங்கள் உள்ளன என்று கணக்கெடுத்து சிறு நகர் எத்தனை இருக்கிறது என்று பார்த்து இரண்டையும் சேர்த்துக் கணக்கெடுத்துச் சராசரி 75 இனால் பெருக்கினால் வரும் எண்ணிக்கை எதுவோ அதுதான் உத்தேச ஆனால் சரியான கணக்காகும். இந்தக் காலகட்டத்தில் விசேடமாக நடைபெற்ற இன்னொன்று குறிப்பிடப்படவேண்டியதாகும். சோல்பரிப் பிரபு தலைமையிலான ஒரு கமிஷன் இந்தச் சாதி அடக்குமுறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைக்காக நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷனுக்குச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் ஒரு விபர வியாக்கியானக் கொத்துச் சமர்ப்பித்திருந்தனர். இந்த வியாக்கியானக் கொத்துச் சமர்ப்பிக்கப்பட்டதுதான் தாமதம், அப்போது பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் மகாசபையினரை சென் சார்ள்ஸ் பாடசாலையில் சந்தித்து அந்த வியாக்கியானக் கொத்தை மீளப்பெறும்படியும் தான் சகல சாதிப்பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க ஆவன செய்வதாகவும் கூறினார். இதை மகாசபையினர் நிராகரித்தனர். அதன் பின் மகாசபையினர் சோல்பரியால் அழைக்கப்பட்டனர். பத்துப்பேர் கொண்ட ஒரு குழு கொழும்பு சென்று விபரக்கொத்தின் வியாக்கியானத்தைத் தெளிவு படுத்தியதன்மேல் சோல்பரி இதை ஏற்றுத் தனது யாழ்ப்பாண வருகையின்போது சாதி ஒடுக்குமுறைக்குட்பட்ட ஒரு கிராமத்தைத் தனக்குக் காட்டும்படியும் கேட்டு இந்தக் காரியத்தைத் தான் வந்து பார்க்கும்வரை ரகசியாமாக வைத்திருக்கும்படி கூறினார். குறிப்பிட்டபடி சோல்பரி யாழ்ப்பாணம் வந்தபோது நெல்லியடிச் சந்தியில் பொன்னம்பலம் அவர்களால் பெருவரவேற்பு ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு முடிந்த பின் இரகசியத்திட்டத்தின்படி பருத்தித்துறை வாடிவீட்டிலிருந்து சோல்பரி பிரபுவை மகாசபையினரைச் சேர்ந்த எம். சி. சுப்பிரமணியம், டீ. ஜேம்ஸ், வீ. ரீ. கணபதிப்பிள்ளை ஆகியோர் அழைத்துச்சென்று கன்பொல்லைக் கிராமத்தைக் காட்டினர். இரண்டொரு நாட்களுக்கு முன் சாதி வெறியர்களினால் தீயிடப்பட்டுப் புகைந்து கொண்டிருந்த வீடொன்றையும், சோல்பரி பார்த்துக்கொண்டு திரும்பியபின் குறிப்பிட்ட மூவரும் பஸ் எடுப்பதற்காக நெல்லியடிக்கு வந்தனர். இவைகளை அவதானித்திருந்த சாதி வெறியர்கள் மூவரையும் சிறைப்பிடித்து எம். சி. சுப்பிரமணியம் அணிந்திருந்த கதர் சால்வையாலேயே சுற்றி மூவரையும் கட்டி நைய்யப்புடைத்து பட்டப்பகலில் நெருப்பு வைக்க முற்பட்டனர். அந்தவேளை தற்செயலாக டாக்டர் பஸ்தியான் என்பவரும் மூன்று பொலிசாரும் காரில் வந்தபோது சாதி வெறியர்களின் தீவைப்பு முயற்சி முறியடிக்கப்பட்டு மூவரும் காப்பாற்றப்பட்டனர். இந்தச் சம்பவம் இன்று பகிரங்கப்படுத்தப்படுவதை சாதித்தமிழர் பரம்பரையாக வந்தவர்கள்கூட விரும்பமாட்டார்கள்.

1949 செம்படம்பர் 14ம் திகதி அப்போதைய உள்நாட்டு மந்திரியும் கிராம அபிவிருத்தி மந்திரியுமாயிருந்த ஒலிவர் குணத்திலக அவர்கள் இந்துக்கோவில்களில் பலியிடுதல் நிதி நிர்வாகம் பற்றியும் தனக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த குற்றச்சாட்டுகளை யோசிக்கக் கீழ் சமைபயிலும், மேல் சபையிலும் அங்கத்தவர்களான தமிழ் உறுப்பினர்களை அழைத்துச் சம்பாசித்தார். அப்போது திரு. சி. சிற்றம்பலம் இவைகளை விட ஒரு பகுதியினரைக் கோவிலுக்குள் விடாது தடுத்து வைத்தல் பெருங்குற்றம். எனவே இதை முதல்ப் பிரச்சினையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப் பிரேரிக்க செனட்டர் பெரிய சுந்தரம் இதை ஆதரிக்க இந்த ஆலய வழிபாடு விடயம் பற்றித் தனியாக விசாரிக்க ஒரு கமிசன் நியமிக்கிறேன் எனக்கூறி வாய்மூலம் நேருக்கு நேராகவும் எழுத்து மூலமாகவும் கமிசனுக்குச் சாட்சியங்கள் அளிக்கப்பட்டன. வடக்கில் சுமார் அறுபது ஸ்தாபனங்களினதும் கோவில் நிர்வாகிகள் குருக்கள் என்ற விதத்தில் 80 பேர்களினதும் வசதி படைத்த கொழும்பு வாசிகளின் ஸ்தாபனங்கள் 13இனதும் தனியானவர்கள் 12 போரினதும் சாட்சியங்கள் பதிவாகின. ஆலயப் பிரவேசத்தை ஆதரித்த விதத்தில் யாழ்ப்பாணம் காந்தி நிலையம், மனோகரா சேவா சங்கம், சுன்னாகம் தாழ்த்தப்பட்டோர் ஐக்கிய சங்கம், தேவரையாளி சைவ கலைஞான சபை, பருத்தித்துறை திராவிடர் கலைமன்றம், ஆகியவை தர்க்க ரீதியான முறையில் ஆலய வழிபாட்டை வலியுறுத்தி நின்றன. அத்துடன் வடபகுதியிலுள்ள ஸ்தாபனங்களையும், தனி மனிதர்களையும் தவிர்ந்த ஏனைய ஸ்தாபனங்களும் தனி மனிதர்களும் நூற்றுக்கு நூறு இந்தத் தர்க்க நியாயங்களுக்குச் சார்பாகவே சாட்சியமளித்துள்ளனர். இதற்கு மாறாகச் சாட்சியம் கொடுத்தவர்களுடைய தர்க்க நியாயங்களுள் தாழ்ததப்பட்ட மக்கள் மனிதப் பிறவிகள் அல்லர், என்ற கருத்துக்களே பொதுவில் பரவலாக இடம்பெற்றிருந்தன.

இந்த விசாரணைக்குப் பின்னால் கனகரட்ணம் கமிஷன் கொடுத்த அறிக்கை முடிவால் ஏற்பட்ட மாற்றத்தில் முக்கியமாக அன்றைய அரசாங்க அதிபரான சிறீகாந்தா, நீதிபதியான சிறீஸ்கந்தராசா, மானிப்பாய் வைரமுத்தர் ஆகியோர் உட்படப் பலர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் 50ம் ஆண்டுக்காலத்தில் நல்லூர்க் கந்தசாமி கோவிலைத் திறக்க வைத்ததெனலாம். இதைத் தொடர்ந்து 56ம் ஆண்டுக்கால வரை ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்கள் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைமையின் கீழ் வரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததுடன், இலங்கையில் நடந்த அரசியல் மாற்றத்தையும் பயன்படுத்திச் செயற்பட ஆரம்பித்து, இளம் தலைமுறையினரையும் சற்று உள்ளடக்கிக் கொண்டது.

முதன்முதலில் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இந்து சமய வழிமுறைகளில் தமக்கென பாடசாலை ஒன்றை அமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் வதிரியைச் சேர்ந்த கா. சூரன் என்பவர் எடுத்த விடாமுயற்சியால் 1914ம் ஆண்டிலேயே வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி அமைக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து கல்வி அடிப்படையான முயற்சிகள் எடுக்கப்பட்டதும், அப்பகுதி மக்கள் மேலும் முன் செல்ல உதவியதெனலாம்.

1940 - 41 கலப் பகுதியில் டீ. ரீ. சாமுவேலைத் தலைவராகவும் கவிஞர் செல்லையாவைக் காரியதரிசியாகவும், சைவப் புலவர் வல்லிபுரத்தைத் தனாதிகாரியாகவும் கொண்டு தொடக்கப்பட்ட வடமராட்சி சமூக சேவா சங்கம், வடமராட்சிப் பகுதியில் தொடக்கப்பட்டபோது அப்பகுதியைச் சேர்ந்த பல உயர்சாதி இந்துக்களும் அதற்கு ஆதரவளித்து உற்சாகப்படுத்தினர்.

1944 - 46ம் ஆண்டுக் காலத்தில் அச்சங்க மாநாடொன்றில் தலைமை உரையாற்றிய டாக்டர் பசுபதி என்பவர் 'தாழ்த்தப்பட்ட மக்களைக் கோவிலுக்குள் அனுமதிக்காத வரையில் நான் இன்றிலிருந்து கோவிலுக்குள் போகமாட்டேன்' என்று சபதம் எடுத்துக்கொண்டார். இந்தச் சபதத்தை அவர் தம் உயிர் உள்ளவரை - நீண்ட காலம் கடைப்பிடித்தே வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற பல சம்பவங்கள் மறப்பதற்கரியனவே!

1956ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் மகாசபையின் இணைக்காரியதரிசிகளாகப் பொறுப்பேற்றுக்கொண்ட இ.வி. செல்வரட்ணம், கவிஞர் பசுபதியு திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் எடுத்துக்கொண்ட நடைமுறை வேலைகளுக்கு நாடெங்குமிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளிலிருந்த ஆதரவு கிடைத்தது. அதன் பெறுபேறுகளாக 14க்கு மேற்பட்ட பாடசாலைகள் அமைய வழி பிறந்தமையாலும், அந்தக்கால வடபகுதி முதலாவது பாராளுமன்ற உறுப்பினரான பொன் கந்ததையா அவர்களின் துணிவான, நேரடியான ஒத்துழைப்புக் கிடைத்தமையாலும் இந்த இளைய தலைமுறையினர் மேலும் உற்சாகமுடன் செயற்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் குரலின்கீழ் பல சாதியினரையும், பல மதத்தினரையும் பெருவாரியாகக் கலந்து கொள்ள வைத்த அனுபவத்திலிருந்துதான் 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' பிறப்பிப்பிக்கப்பட்டதாகும். பல் பிற்போக்காளராலும், தமிழர் அரசியல் இயக்கங்களாலும் ஒருமுகமாக இந்த எழுச்சி எதிர்க்கப்பட்டபோது பெருஞ்சாதித் தமிழர் வழிவந்த திரு. என். சண்முகதாசன் அவர்களால் தலைமை தாங்கப்பட்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த எழுச்சியை ஏற்று ஒத்துழைப்புத் தர முன்வந்ததோடல்லாமல் ஆக்கபூர்வமான காரியங்களில் நேரடியான ஒத்துழைப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கியது. இந்தச் செயற்பாடு அதுவரை திறக்கப்படாது யாழ்நகர் எங்குமிருந்த தேனீர்க் கடைகளையும், யாழ் நகருக்கப்பால் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் தேனீர்க்கடைகளையும் திறப்பதற்கு வாய்ப்பளித்தது. மகாசபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களில் இருந்துதான் பொதுவான ஒரு அரசியல் உணர்வையும், சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் பங்கையும், ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியெங்கும் பரப்பமுடிந்தது.

ஆரம்ப காலத்தில் செனற் சபையில் ஏ. பி. இராசேந்திரா அவர்களுக்கு நியமனம் கிடைத்த பின்னும் சிறிதளவேனும் நகர்ந்து கொடுக்காத சாதிமுறையில் சற்றுத் தளர்ச்சி ஏற்பட்டது. இந்தத் தலைமையின் நடவடிக்கைகளுக்குப் பின்புதான் என்பதைத் துணிந்து கூறிவிடலாம். இதே போன்ற பிற்காலப் பகுதியில் திரு. ஜீ. நல்லையா அவர்களுக்குப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்தபோதும், ஒடுக்கப்பட்ட மக்களால் எதிர்பார்க்கப்பட்ட பலாபலன்கள் கிடைத்து விடவில்லை. இதிலிருந்து அரசாங்க மட்ட நியமனங்களைவிட இயக்க ரீதியான காரியங்களும், நடவடிக்கைகளுமே உரிமைகளை வென்றெடுக்கக் கூடியனவென்பது புலனாயிற்று.

திருவாளர்கள் சுப்பிரமணியமும், நல்லையாவும் பதவிகள் பெறாத காலத்தில் மக்கள் பெற்றுவந்த பேறுகளை அவர்கள் பதவி வகித்த காலங்களில் பெற முடியவில்லை. இதை அவர்களே ஒப்புக்கொள்வர்.

56க்கும் 66க்கும் இடையே உள்ள காலப்பகுதியில் சமூக ரீதியில் சலுகைகளைப் பெறும் முயற்சியில் சற்று வெற்றிகாண முடிந்ததேயன்றி அந்தச் சலுகைகளால் சமூகக் கொடுமைக்குத் தீர்வு காணமுடியவில்லை. இதற்கான காரண காரியங்களைத் தேடிப் பிடிப்பதில் அரசியல் கோட்பாடுகளுக்கூடான முயற்சிகள் நடந்தன. இதன் பிரதிபலிப்பாகவே 57ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமூகக் குறைபாடுகள் நீக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது சட்டமாக்கப்பட்டபோது சாதிக் கொடுமைகளிலிருந்த முற்றாக விடுபட இது வழிவகுக்கும் எனப் பலரும் நம்பினர். ஆனால் அந்தச் சட்டம் ஒரு பரீட்சார்த்த முன்னறிவித்தல்போலவே நிலப் பிரபுத்துவ கெடுபிடிக்குட்பட்ட அரசு யந்திர சேவையாளர்களின் ஆளுகைக்கு உட்பட்டுத் தானாக அட்டை போலச் சுருண்டு கொண்டது.

இந்த நிலைமையை நன்கு உணர்ந்துகொண்ட இளம் சந்ததியினர் 1966 அக்டோபர் 21ல் 'சாதி ஒழிப்புச் சட்டத்தை அமுல் நடத்து' என்ற சுலோகத்தைத் தூக்கிப் பிடிக்க ஆயிரக்கணக்கிற் திரண்டு சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாண நகரை நோக்கிப் புறப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மேல் குண்டாந்தடிப் பிரயோகம் செய்யப்பட்டது. பலர் காயமுற்றனர். சிலர் சிறை பிடிக்கப்பட்டனர். ஆயினும் திட்டமிட்டபடி ஊர்வலம் நகர்வரை எழுச்சி பொங்க வந்தே சேர்ந்தனர்.

அந்த ஊர்வலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடன் என்றுமில்லா விதத்தில் வேறு சமூகத்தினரும் கலந்து கொண்டனர்.

1964ம் ஆண்டு காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஸ்தபானங்களின் ஐக்கியத்தில் அச்சுவேலியில் நடந்த மாநாடும், அந்த மாநாட்டில் கலந்து கொண்டு, "ஆறு மாத காலத்துள் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்" என் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அவர்கள் தந்த வாக்குறுதியும், காலம் சென்ற கோப்பாய் எம்பி. திரு. எஸ் வன்னியசிங்கம் அவர்கள் 61ல் ஸ்ரான்லிப் பாடசாலை வட்ட மேசை மாநாட்டில் தந்த வாக்குறுதியும் பற்றிய தாற்பரியங்களும் 1965ல் ஏற்படுத்தப்பட்ட முக்கிய இயக்கத்தினால் இணுவில் கந்தசாமி கோவிலில் இருந்து திருவாளர்கள் நல்லையா, சுப்பிரமணியம் முதலானோர் தலைமை தாங்கி நடாத்தப்பட்ட - முற்று முழுதாகத் தாழ்த்தப்பட்ட மக்களையே கொண்ட - மௌன ஊர்வலமும் அத்தோடொத்த பல காரியங்களும், மீளாய்வு செய்யப்பட்டு, "தியாகங்களுக்கஞ்சாத விட்டுக்கொடாத போராட்டம் ஒன்றே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடியது" என்ற கொள்கையில் வெகுஜன இயக்கம் நெறிப்படுத்தப்பட்டது. இந்த நெறிப்படுத்தலின் அடிப்படையில் ஆலயப் பிரவேச இயக்கங்கள், தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் நாடெங்கும் விரிவடைந்தன. இந்தப் போராட்டங்கள் இழப்புகள் பலவற்றுக்கும் உட்பட்டதாயிற்று. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை இயக்கங்கள் காலத்தில் இந்த மக்களுக்கு ஒத்தாசையாக இருந்த தமிழ்த் தலைவர்களும், பிரமுகர்களும் தந்த ஆதரவுக்கு முற்றும் வேறுபட்ட விதத்தில் அப்போதைக்கப்போது உரிமைப்போர் நடந்த இடங்களுக்கு நேராகச் சென்று ஆலோசனை கூறியும் உற்சாகமளித்தும் இலங்கையில் சகல பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை விளங்க வைத்தும் சிங்கள சாதாரண மக்களின் அனுதாபத்தைப் பெற்றுத் தந்தும் இன்றுவரை தொடர்ச்சியாக வெகுஜன இயக்கத்தின் நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தியும் வரும் என் சண்முகதாசன் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் மனதில் நிரந்தர இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் அதே வேளை சாதி வெறியர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும் இருக்கிறார் என்பது விசேஷமாகக் குறிப்பிடக்கூடியதாகும்.

66 - 78 இற்கிடையிலுள்ள காலப்பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்ட வெற்றிகள் முன்னை காட்டப்பட்ட 30 ஆண்டுகால இயக்க வழியில் இந்தப் பன்னிரண்டு ஆண்டுகாலம் குறுகியதாயினும் இந்தக் குறுகிய காலத்தில் சாதிக்கப்பட்ட காரியங்கள் விகிதத்தில் மிக மிக தாக்கமானதும் நிரந்தரமானதுமாகும். இந்தக் குறுகியகாலப் பலாபலன்களை அரை நூற்றாண்டு காலப் பலாபலன்களுடன் ஒப்பிடுவதில் கருத்துவேறுபாடு யாருக்குமே இருக்க முடியாது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகள்

மாவிட்டபுரம் கந்தன், மட்டுவில் பண்டித்தலைச்சி அம்பாள், செல்வச்சந்நிதி முருகன், வல்லிபுர ஆழ்வார் ஆகியவைகள் உட்பட பல பகுதிகளின் ஆலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டதும் எவ்வளவு சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவங்களோ அதே அளவுக்குப் பிரசித்தி பெற்றவையே தேனீர்க்கடைகள் பொதுநிலையங்கள் திறக்கப்பட்ட சம்பவங்களும் பொதுக்கிணறுகள் புளக்கத்திற்கு விடப்பட்ட செயலுமாகும்.

1968 - 78க்கிடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் மக்களின் மனதிற்கு வலிந்து கொண்டுவர வேண்டியதில்லை. ஏனேனில் இவை மிகச் சமீபத்திலே நடந்த பத்து ஆண்டு காலச்சம்பவங்கள் ஆகும். அதற்காக ஒரு வரலாறு பிறக்க இருக்கிறது. அந்த வீர வரலாறு ஒடுக்கப்பட்ட மக்களின் பல நூறு சந்ததியினருக்கும் வழிகாட்டியாகவே நிற்கப்போகின்றது. இந்த இடையில் சாதிக்கொடுமையின் வேள்வித்தீக்குப் பதினொரு ஒடுக்கப்பட்ட வீரர்கள் பலியிடப்பட்டனர். பொருட்சேதம், இரத்தச் சேதம கணக்கிட முடியாதவை. இந்தத் தியாகங்கள் யாவையும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஐம்பது ஆண்டுகாலத் தியாகங்களை விட மேலானவை என்பதற்குப் பின்னேவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாறு சான்றுதல் பகரும். இச்சிறு கட்டுரைக்குள் அவைகளை எல்லாம் அடக்க முடியாது.

இந்தப் பத்தாண்டு காலத்துள் ஒடுக்கப்பட்ட மக்களாலும் அதற்கு ஆதரவு தந்த சக்திகளாலும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோயில்கள் நான்கு உட்படப் பலவும் தேனீர்ச் சாலைகளும் பொது நிலையங்களும் வெல்லப்பட்டன.

"தியாகங்களுக்கஞ்சாத விட்டுக்கொடாத போராட்டமே முடிவான விடுதலையைத் தர வல்லது என்ற வழியில் முன்னேறிச் செல்லத்துடிக்கும் மக்கள் பரப்பில் மாற்றங்களை வரவேற்கும் சகலரும் இணைந்து கொள்ள கடமைப்பட்டவர்களாகின்றனர்.

**கே. டானியல்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.டானியல் மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் நாட்டில் நடந்த பஞ்சமர் நூல் இலக்கிய விமர்சனக் கூட்டத்தில் கே டானியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் நாட்டில் நடந்த பஞ்சமர் நூல் இலக்கிய விமர்சனக் கூட்டத்தில் இலக்கிய நண்பர்களுடன் கே டானியல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.டானியல்



கே. டானியலின் மனைவி.
மனோன்மணி பிலோமினம்மா



ஸ்ரார் கராஜ்ஜில் கே. டானியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org